# A TAMIL
# UNIVERSAL PRAYER BOOK.

## சர்வ சமய சமரசமான
# பிரார்த்தனைமாலை.

---

இஃது
கோயமுத்தூர் - கலாநிதி பத்திராசிரியரும் ஆஸ்திக
மதசித்தாந்தம் அல்லது மதவிருக்ஷம் என்னும்
பூலோக பிரபல மதங்களின் சரித்திரம்
ஆரியர் வேதசாரசங்கிரகம் என்னும்
இந்து பைபில் பலிஜவம்ச புரா
ணம் தக்ஷண இந்தியாசரித்
திரம் முதலான கிரந்
தங்களின் கர்த்த
ராகிய சே
லம் பக
டால

நரசிம்மலு நாயுடு,
அவர்கள் தொகுத்து

சென்னை:
B. O. A. பிரசிலும்,
கிச்சினர் அச்சுக்கூடத்திலும்
பதிப்பித்தனர்.

---

1912.

# A TAMIL

# UNIVERSAL PRAYER BOOK.

## சர்வ சமய சமரசமான

# பிரார்த்தனைமாலை.

இஃது

கோயமுத்தூர் - கலாநிதி பத்திராசிரியரும் ஆஸ்தீக
மதசித்தாந்தம் அல்லது மதவிருக்ஷம் என்னும்
பூலோக பிரபல மதங்களின் சரித்திரம்
ஆரியர் வேதசாரசங்கிரகம் என்னும்
இந்து பைபில் பலிஜவம்ச புரா
ணம் தக்ஷிண இந்தியாசரித்
திரம் முதலான கிரந்
தங்களின் கர்த்த
ராகிய சே
லம் பக
டால

நரசிம்மலு நாயுடு,

அவர்கள் தொகுத்து

சென்னை :

B. O. A. பிரசிலும்,
கிச்சினர் அச்சுக்கூடத்திலும்
பதிப்பித்தனர்.

1912.

# முகவுரை.

ஸ்ரீ பரமேஸ்பரனை நாடி பக்தியோடு பிரார்த்தனை செய்வதில் பரத கண்டத்தா ராகிய இந் நாட்டார் பிரபஞ்சத்தில் சிறந்தவர்கள் ஆனால் அப்படி செய்யும் பிரார்த்தனைகள் பாட்டுகளாகவே இருக்கின்றன. அப்பாடல் ரூபமான, பிரார்த்தனைகளை பெரும்பான்மையான, பாமரர் பாடம் செய்து அவற்றின் பொருள் அறிந்து பிரார்த்தித்தல் அபூர்வம்.

இக்குறைவை நீக்கும் பொருட்டு பெங்களூரில் இருந்த எனது ஆப்த சிநேகிதராகிய ஸ்ரீசுபேதார் மேஜர் பஹதூர். டி. சி. அப்பாவுபிள்ளை அவர்களுடைய கோரிக்கையின்படி 1875ஷு பிர்ம்மப்பிரபாவம் என்னும் பெயரால்ஒவ்வொருவரும் காலதேச வர்த்தமானங்களைத் தழுவி பேரானந்த பெருங்கடவுளை மனப்பூர்வமாய் பிராத்திக்கத் தக்க பிர்ம்மோபாசன பத்ததி பிரார்த்தனைகள் என்னும் புத்தகத்தை தொகுத்துக்கொடுத்தனன். அதை அவர் சொந்த செலவில் அச்சிட்டு வெளியாக்கினர். ஆயினும் அது பெரிய புஸ்தகமாயிருந்தபடியால் சாதாரண ஜனங்களுடைய உபயோகத்தைக் கருதி இடைக்கிடை பல பிரார்த்தனை சிறு புத்தகங்கள் பதிப்பித்து வெளியாக்கினேன். அவைகளைக் கண்ணுற்ற எனது உண்மைத் தோழரும் சிறந்த தேசாபிமானியும் மதாபிமானியும் ஜனாபிமானியும் பரோபகாரியுமாக பிரகாசித்த பெங்களூர் ஸ்ரீமத் தர்மரத்னாகரம் ராய் பஹதூர் ஆ. நாராயணசாமி முதலியாரவர்கள் பார்த்து அப்பிரார்த்தனைகளோடு புராதன சைவ, வைணவ,பிரார்த்தனை பாடல்களைச் சேர்த்தல் நலமென்று குறிப்பிக்க, அக்குறிப்பை அறிந்து சில பாடல்களைத் திரட்டி பிரார்த்தனை

மாலையென்னும் பெயரால் ஒருபுத்தகத்தைப்பதிப்பித்தனன் அப்புத்தகத்தின் பெரும்பான்மையான பிரதிகளை அம் முதலியாரவர்களே வாங்கி தமது பெங்களூர், காஞ்சீபுரம் முதலான விடங்களில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் தமது தர்ம பாடசாலைகளின் மாணுக்கர்களுக்கு பகுமானமாகக் கொடுத்து உதவினர் பிறகு அப்பிரார்த்தனை புத்தகங்களை பலர் கேட்டுவந்தாலும் அவைகளைப் பதிப்பித்துக்கொடுக்க ஆவகாசம் இன்மையால் தயங்கலானுர்கள்.

அனந்தரம் ஆரியர் சத்தியவேதம் இரண்டாம்பாகம். முதல் ப்ருதியைச்சார்ந்த பிரார்த்தனைகாண்டத்திற்கு நான் சேர்த்த பிரார்த்தனைகளும் பாடல்களும் சர்வ சமய சமரசமானவைகளாக இருந்தமையால் அவைகளை திரட்டியும் அவைகளோடு பெண்கல்வி நீதிவிஷயமாகப் பதிப்பித்த கலியாணப்பாட்டுகளில் சிலவற்றையும், எனதுதிவ்வியதேச யாத்திரைசரித்திர புத்தகத்திலிருந்து சிலசமயோஜிதபிரார்த்தனைகளைச் சேர்த்தும் பிரார்த்தனையின் லக்ஷணம் யென்பதைப் பற்றி நான் 1888ஸு கோயமுத்தூர் பிர்ம்மோர்ச்சவ காலத்தில் செய்த உபந்நியாசத்தை சங்கிரிகித்து இப்புத்தகத்திற்கு மகுடமாகவைத்தும் வெளியாக்கினேன்.

இதைப்படிக்கும் பெரியோர்கள் இதிலுள்ள குறைவு குற்றங்களை க்ஷமித்தும் இதில் சேர்க்கக் கூடாதவை இன்னவையென்றும் இன்னும் சேர்க்கவேண்டியவை இன்னதென்றும் தெரிவித்தால் வந்தனத்தோடங்கீகரித்து இரண்டாம் பதிப்பை தக்கபடி பதிப்பிக்க சித்தமாக இருக்கின்றனன்.

கோயமுத்தூர்
கலாநிதி ஆசிரமம்
7-6-1912.

சே. ப. நரசிம்மலு நாயுடு.

## பிரார்த்தனைமாலையின்

# அட்டவணை.


| | | | |
|---|---|---|---|
| பிரார்த்தனையின் லக்ஷணம் | 1 | | 12 |
| அந்தரங்க பிரார்த்தனை | | | 13 |
| குடும்ப ,, | | | 13 |
| ஜனசமூஹ பொது ஜனபிரார்த்தனை | 14 | 137 | 34 |
| ஏகாந்த ,, | 15 | 154 | 36 |
| பிரார்த்தனைக்கு காலம் | | | 15 |
| ஸ்தோத்திரம் | 16 | 142 | |
| வந்தனம் | 17 | 144 | 145 |
| தியானம் | 17 | 145 | |
| வேத பிரார்த்தனைகள் | 17 | 20 | 147 |
| சந்தியாவந்தன ,, | | 20 | 26 |
| மஹா பாரத ,, | | 26 | 27 |
| மஹா பாகவத ,, | | 27 | 28 |
| பகவத் கீதை ,, | | 29 | 30 |
| தியானஸ்தோத்திர நாமாவளி | | 30 | 34 |
| நிர்வாண தந்திர ,, | | | 35 |
| ஆளவந்தார் பிரார்த்தனைகள் | | 36 | 37 |
| ஷெ நித்திய பிரார்த்தனைகள் | | 37 | 39 |
| காலை வந்தனம் | | 39 | 40 |
| மாலை வந்தனம் | | 40 | 44 |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள் | | 44 | 45 |
| திருநாவுக்கர சுவாமிகள் | | 45 | 46 |
| மாணிக்க வாசகர் | | 46 | 47 |
| பட்டிணத் தடிகள் | | | 49 |
| நம்மாழ்வார் | | 49 | 50 |

| | | |
|---|---|---|
| திருமங்கை யாழ்வார் | 50 | 52 |
| தாயுமானவர் | 53 | 66 |
| திரு வருட்பா | 66 | 74 |
| சமரச கட்டளைக் கலித்துறைகள் | 74 | 75 |
| தேவ காயத்திரி | 75 | 79 |
| போற்றி யந்தாதி | 79 | 81 |
| போதுப்பள்ளி யெழுச்சி | 82 | 85 |
| பிர்ம்ம பஜனை கீதங்கள் | 97 | 98 |
| ஷை விவாக காலத்தில் பாடத்தக்கவை. | 98 | 107 |
| வருஷ உற்சவ காலபிரார்த்தனை | 152 | 161 |
| ஏகாந்த பிரார்த்தனை | 161 | 164 |
| இங்கிலீஷ் பிரார்த்தனை | 165 | 168 |
| பொதுஜன சமாஜ பிரார்த்தனை | 136 | 137 |

ஸ்ரீ

# பிரார்த்தனைமாலை.

வினா—பிரார்த்தனை என்பதென்ன?

விடை—பிரார்த்தனை என்றால்-நமக்கிருக்கும் குறைவுகளை நீக்கிக் கொள்ளவும், இல்லாதவைகளைக் கொடுக்கும்படிக்கும், பிறரை வேண்டிக்கொள்வதாம். இங்கு பிரார்த்தனை எனில், பரமேசுவரனுடைய கட்டளையைக் கடந்து நாம் செய்த குற்றங்களுக்காக அநுதாபப்பட்டு அப்பாவங்களை மன்னித்தருளவும்; ஆத்மோஜீவனத்திற்கு வேண்டிய சத்தியம், சாந்தம், பக்தி, பரிசுத்தம், முதலானதுகளைக் கொடுக்கவும்; துர்மார்க்கங்களுக்கெல்லாம் மூலமான காமக்குரோதாதிவலைகளுக்குட்படாமல் விலக்கவும்; சன்மார்க்கமாக வாழ சக்தியைக் கொடுக்கவும் (பரமேசுவரனை) ஹிருதயபூர்வமாக வேண்டிக் கொள்வதேயாம். இந்தப் பிராத்தனையானது ஸ்தோத்திரம், வந்தனம், தியானம், அநுதாப முதலான பல அங்கங்களையுடைய ஈஸ்வரோபாசனையின் ஒரு அங்கமாம்.

வினா—ஈசுவரோபாசனையின் ஓரங்கமாகிய பிரார்த்தனையானது ஆரியவர்த்தத்தில் ஆதியானதா? அல்லது மத்தியகாலத்தில் கிறுஸ்து முதலான மதங்களினு லுண்டாகியதா? அவைகளைப் பற்றி சற்று விவரமாகச் சொல்லுங்கள் கேட்போம்.

விடை—இப்பிரபஞ்சத்திற்கு சிருஷ்டிகர்த்தனும், பிரபுவும் உண்டென்னும் நம்பிக்கை எங்கெங்கு உண்டோ, அங்கெங்கெல்லாம் ஈசுவரோபாசனை பிரார்த்தனை ஆதிமுதல் இன்றளவும்

இருக்கிறதாக உலகசரித்திரம் முறையிடுகின்றது. காடு கரடு பர்வத பிரதேசங்களி லிருக்கும் கல்வியறிவுஞ் சீர்திருத்தமு மற்ற மூடர் முதல், நாடு நகரங்களில் வசிக்கும் ஜனசமூகத்தாரும், தத்தம் கல்விகேள்விகளுக் கேற்றபடி, தம்மைச் சிருஷ்டித்துப் பாதுகாக்கும் பரமேஸ்வரனை பூஜித்து வருவது இப்போதும் பிரதியக்ஷம். மரனவஜாதியார் வீடுவாசல்களைக் கட்டிக் கொள்ளத் தெரியாதிருந்த காலத்தில், கடவுளை காடு வனாந்திரங்களில் வணங்கி பூஜித்தவர்கள், வீடுவாசல்களைக் கட்டத் தெரிந்தபிறகு தத்தம் கடவுளுக்கும் கோயில் கோபுரங்களையுங் கட்டி வணங்க ஆரம்பித்தார்கள்; ஆகையால், பிரார்த்தனையானது சிருஷ்டிகாலமுதல் இருந்து வருகிறதென்பது திண்ணம். நாகரீகமற்ற மனுஷர்கள் தம்மையாளும் அரசர் முதலான பிரபுக்களை வணங்கி பிரார்த்திப்பதற்கு முந்தியே, ஈசுவர பிரார்த்தனை இருக்கிறதாக பிரபல நூல்கள் ஸ்பஷ்டமாகுகின்றன.

நமது நாட்டார்களின் நான்கு வேதங்களில் ஒன்றாகிய ரிக்து வேதத்தின் பெரும்பாகம் ஈசுவர பிரார்த்தனை யேயாகும். அப்பாட்டுகளினால் சுரங்கள் ஜனித்து, அவற்றால் சங்கீத முண்டாகியது. அக்காலத்திய ஆரியர்கள் பாலியதசையி லிருந்தபடியால் தமக்கு எதெது சிறப்பும், மகிமையும் பெற்றதாகத் தோன்றிற்றோ, அவைகளைத் தேவதாம்ஸங்களாகக் கொண்டும், சூரிய சந்திராதிகளையும், மற்றும் அக்கினி வாயுவாதி பஞ்ச பூதங்களையும் பிரார்த்தித்து வந்தார்கள். பிறகு கல்வியும் ஞானமுஞ்சற்று விருத்தியாக, அச்சூரிய சந்திரர்கள் ஈசுவரனுடைய நேத்திரங்களாக பாவித்துப் பாடிப்பிரார்த்தித்தும், கடைசியில் அச்சூரிய சந்திராதிகளும், மற்ற பிரபஞ்சப் பொருள்களைப்போல படைக்கப் பட்டவைகள் எனக் கண்டு கொண்டு, அவைகளை வணங்காமல் விட்டு, அவைகளை எல்லாம் படைத்த அப்பரமேசுவர னொருவனையேபாடிப் பிரார்த்தித்தார்கள். அன்றியும் ஆதியிலுள்ள ஆரியர்கள் அஞ்ஞானதசையி லிருந்தபோது சுயலாபதுரந்தரர்களாகி தமக்கும், தமதுமனைவி மக்களுக்கும், தமது குக்கிராமங்களுக்கும் வேண்டிய இகலோக சுக லாபங்களையே முக்கியமாகக்கருதி, அவைகளுக்காக பலி, யாகம் காணிக் கைகளால் தமது குலதெய்வங்களைப் பிரார்த்தனை செய்து வந்ததைப்பற்றி அதர்வணாதி வேதங்களில் வெளியாகின்றது. பிறகு நாளேற நாளேற கல்வியும் ஞானமும் விருத்தியாகவே, தாம் முன்

வணங்கிவந்த குத்சித கிராமதேவதை, காணிக்கை, பலி, யாக முதலான பூஜைகளை விட்டொழித்தும்; இப் பிரபஞ்சங்களை எல்லாம் படைத்தழித்தாக்கவல்ல ஏக பரமாத்துமாவே பரமபிதாவாக நம்பியும், அவரால் படைக்கப்பட்ட யாவரும் சகோதர சகோதரிகளெனக் கொண்டும், தம்முடையவும், தம்மைப்போன்ற பிறருடையவும், பொது நலத்துக்கு பாடுபட்டுழைக்கவும் பிரார்த்தித்தார்கள்; ஆகவே, பிரார்த்தனையானது இந்நாட்டில் ஆதிகாலந்தொட்டு இருக்கிறதே யொழிய இடையில் இதர மதஸ்தர்களால் கற்பிக்கப்பட்டுவந்ததன்று.

வினு—இப்போதைய மனிதர் போதுமான கல்வியறிவைப் பெற்றிருப்பதால், தமது குறைவு குற்றங்களைத் தம்து புத்தியின் வலிமையால் நீக்கிக்சொள்ளக் கூடுமல்லவா? ஆகவே இனிப் பிரார்த்தனை என்னத்திற்கு?

விடை—இக்காலத்திய மானிடர் எவ்வளவு கற்றவர்களாக பிரகாசிக்கினும், மானிடரென்று உடம்பெடுத்த ஒவ்வொருவரும் அபரிபூரணரும், பரதந்திரர்களு மாகையால்; தமக்கு வேண்டிய இகபரசாதனங்களை முற்றும் பெற்றுய்வது அபூர்வம்; ஆகவே, சர்வசக்தியும், சர்வஞானமும், சர்வகாருண்யமு முடைய பரமேசுவரனைத் தம்முள் உண்டாகும் பயங்கரமான ஆசாபாசங்களை விட்டொழிக்கவும், சத்கருமங்களை அநுஷ்டிக்கவும் வேண்டிய புத்தியையும், சக்தியையும் பிரசாதிக்கும்படி உண்மையாக பிரார்த்திக்க வேண்டும்.

வினு—கடவுள் சர்வசக்தியும், சர்வஞானமும், சர்வகாருணியமுமுடையவ ரென்று சொல்லுகிறீர்கள்; அப்படியானல், அவர் நம்முடைய குறைவு குற்றங்களைத் தாமே கண்டு அவைகளை நீக்கிவிடக் கூடுமல்லவா?

விடை—ஆம்! நீக்கக்கூடும்; ஆனல், பிரபஞ்சத்தில் பிள்ளைகளுடைய குறைவு குற்றங்களைப் பற்றி தமது பிதாமாதாக்களிடம் சொல்லி அவைகளுக்காக மன்னிப்பைப் பெறுவதனுடன், அவர்களுடைய மனது நிம்மதியை யடைந்து, இனியப்படிப்பட்ட குறைவு குற்றங்களைச் செய்ய பயப்படுவது பிரத்தியக்ஷமல்லவா? நமக்குச் சம்பவிக்கும் கஷ்டநிஷ்டூரங்களை

நமது ஆப்தர்களிடம் சொல்லி முறையிடுவதில் நமக்கு துக்க சாந்தியும், சந்தோஷமு முண்டாகிறதல்லவா? அதே மாதிரியாகவே, நமது பரமபிதாவும், பரம சிநேகிதனுமாகிய பரமாத்துமாவினிடம் பிரதி நிமிஷமும் செய்யும் பிரார்த்தனையினால் தெரிவிப்பதில் மனச் சந்தோஷமும், தைரியமும், ஈசுவர பக்தியும் தினே தினே அதிக மதிகமாகப் பரிசுத்தனாகிப் பாவகாரியங்களை விட்டொழிக்க அநுகூலமாகு மல்லவா? சத்தியம், சாந்தம், சுவாமிபக்தி முதலான குணச்சிறப்புகளைப் பெற்றிருக்கும் ஒரு பெரிய மனுஷனுக்கு முன்பாக ஒரு துஷ்டன் அடிக்கடிபோய் நின்றால், அத்துஷ்டனுக்கு அப்பெரிய மநுஷனுடைய பரிசுத்த நடவடிக்கைகளைக் காணுந்தோறும், அத்துஷ்டனுக்குப் பயமுண்டாகித், தனது துஷ்ட எண்ணங்களும், கருமங்களும் மாற்றம் பெற்றுக்கொண்டேவர, அப்பெரிய மனுஷன்மீது பிரியமு முண்டாக்கச் செய்வது சஹஜமேயல்லவா? அதே மாதிரியாகவே. பாவ தாபங்களால் பிடிபெற்றவர், அப்பாவ தாபங்களைப் போக்கவல்ல பரமேசுவரனிடம் அடிக்கடி உண்மையான பிரார்த்தனைகளைச் செய்து, தமது ஆத்மாவை அப்பரமாத்மாவிடம் தத்தம் செய்யுந்தோறும், அந்த ஆத்மா பரமேசுவரனுடைய ஞானநேத்திரத்திற்கு முன்பாக நேர் நேராக நின்று முறையிடுகையில், அப்பாவ தாபங்கள் போவதோடு; இனி அப்படிப்பட்ட பாவங்களைச் செய்ய பயத்தை யுண்டாக்கு மல்லவா? மேலும் பரமாத்துமாவை நாடி நித்தியபிரார்த்தனை செய்யாதவனைப் பார்க்கிலும், நித்திய பிரார்த்தனையைச் செய்பவன் காமக்குரோதாதி வலைகளிற் சிக்காமல் எச்சரிக்கையாக இருக்கக்கூடும்.

மானவஜாதியார் தமது பாவத்திலிருந்து தம்மைநீக்கும்படிக்குச் செய்யும் பிரார்த்தனைகளே அவர்களை அப்பாவங்களுக்குத் தூரத்தில் விலகியிருக்கச் செய்யும்; அன்றியும் தமது பாவத்தைப் போக்கும்படி அடிக்கடி பிரார்த்திப்பதனால், அவர்களை அப்பாவ வழிகளில் போகாதிருக்கும் படியான சக்தியை யுண்டாக்கும்; ஆகவே, மனுஷருடைய பிரார்த்தனைகளால் அவர்கள் பாவகாரியங்கலிருந்து விடுவிக்கப் படாதபக்ஷத்தில், அப்பாவகாரியங்கள் அவர்களைப்பிரார்த்தனையிலிருந்து விடாதிருக்கும்படி செய்கின்ற தல்லவா? பாவங்களிலிருந்து நீக்கும்படி ஹிருதய பூர்வகமாக பிரார்த்திப்பதும்,

அப்பாவகாரியங்களையே மறுபடியு மறுபடியும் செய்வதுமாகிய இரண்டுகாரியங்களையும் ஏககாலத்தில்செய்ய சாத்தியமாகாது. இரண்டில் யாதாவதொன்றை விடவேண்டும். பரிசுத்தனாக வேண்டுமென்று பிரார்த்தித்தால் பரிசுத்தனாக வேண்டும், இன்றேல், ஹிருதய பூர்வகமான பிரார்த்தனை இல்லாதகாலத்தில் பாவியாகவாவது ஆகவேண்டும். பிரார்த்தனை நிஜமானதும், நிஷ்கபடமானதுமாகும் பக்ஷத்தில், பக்தி விசுவாசத்தினால் மனவலிமை பலப்பட்டு, மனுஷனுக்கு வேண்டியதை அடையச் சக்தியுண்டாக்குமென்பது திண்ணம்.

மானவஜாதியார் பாவகர்மங்களினால் நிறைந்து பரமாத்துமாவுக்கு வெகுதூரத்தில் இருப்பதால், பலஹீனர்களாக இருக்கிறார்கள்; ஆகவே, அப்பாவகர்மங்களை நீக்க சக்தியைக் கொடுக்கவும், கஷ்ட நிஷ்டூரங்களிலிருந்து விடுபட்டு ஆறுதலையடையவும், மனப்பூர்வகமான பிரார்த்தனையைச் செய்யவேண்டும். பரமேசுவரன் பிரபஞ்சத்தின்பொது பிதாவாகவும், பிரபுவாகவும், இருப்பதால், அவருடைய மக்களாகிய மானிடர் பிரார்த்தனை செய்வது இயற்கையேயாம். பிரதி நிமிஷமும், பிரதி தினமும் செய்யும் பிரார்த்தனைகள் ஜீவாத்துமாவுக்கும் பரமாத்துமாவுக்கும் இருக்கும் பிதாபுத்திர சம்பந்தத்தை பலப்படுத்தியும், உலகாடம்பரங்களால் உண்டாகும் ஆசாபாசங்களைக் கிரமேண நீக்கியும், பாவபந்தங்களை விட்டொழிக்கவும் செய்யும்; ஆகையால், பிரார்த்தனையானது பலஹீனர்களுக்குப் பலத்தையும், பேடிகளுக்குத் தீரத்துவத்தையும், ஆசையற்றவர்களுக்கு அக்கரையையும், மூடர்களுக்கு விவேகத்தையும், துஷ்டர்களுக்கு நற்குணத்தையும், கஷ்டங்கள் சம்பவிக்கும்போது அவைகளைச் சகிக்கச் சக்தியையும், காமக்குரோதாதிகள் ஹிருதையத்தைப் பாவ வழிகளில் இழுக்கும்போது அவைகளைத் தடுத்து விலக்கிக் கொள்ளவும் செய்யும் என்பது திண்ணம்! திண்ணம்!!

வினா—பிரார்த்தனை செய்தால் பரமேசுவரன் நமக்கு வேண்டியவைகளெல்லாவற்றையும் கொடுப்பாரா?

விடை—ஒரு குடும்பத்தில் பெற்றோருக்குப் பலபிள்ளைகள் இருக்கிறதாகவும், அவர்களிற் சிலர்பால்குடிக்கும் குழந்தைகளாகவும், சிலர் இரண்டு மூன்று வயதுள்ள வர்களாகவும், சிலர் ஐந்தாறு வயதுள்ள வர்களாகவும், சிலர் பத்துப் பதினைந்து வய

துள்ளவர்களாகவும், இன்னும் பலர் பற்பல வயதுடையவர் களாயிருப்பதாகவும் கொள்வோம். அப்பிள்ளைகள் தத்தமக்கு வேண்டியவைகளைப்பற்றி பெற்றோர்களிடம் பிரார்த்தித்தால், அப்பெற்றோர்கள்: தம் மக்களின் வயது, யோக்கியதை, புத்தி முதலானவைகளை நிதானித்து, அவர்களுக்கு இன்றியமை யாதவைகளை மாத்திரம் கொடுத்தும், அவர்களுக்கு உபயோக மற்றவைகளையும், அவர்களுக்கு அபாய முண்டாக்குபவைக ளையும் கொடாதிருத்தல் பிரதியக்ஷ மல்லவா? அதே மாதிரி யாகவே, பரமாத்துமாவானவர் தமதுமக்களாகியமானிடர் கர்ப் பத்தில் பிண்டமாகியது முதல் அவர்கள் பிரபஞ்சத்தில் ஜனி த்துச் சாகும்வரையில் வேண்டிய பலவித உணவுகளையும், உடை களையும், போஷிக்கப் பிதாமாதாக்களையும், போகிக்கப்பெண்டு பிள்ளைகளையும், சரசமாடச் சிநேகிதர்களையும், சுகிக்கச்சம்பத்து களையும், கீர்த்திகளையும்; வியாதிகளை நீக்கச் சீதோஷ்ணங்களை யும், வருஷாதி ரிதுக்களையும், திவ்விய ஔஷதங்களையும் மற் றும் மனிதர் இவ்வுலகத்தில் இகலோக சுகமாக உள்ளநாள் உள்ளவரையில் அனுபவிக்கத்தக்க பலபேறுகளை எல்லாம் சிருஷ்டித்திருப்பதால்; அவைகளைப்பற்றி பிரார்த்தித்தால் பிர யோஜன மற்றதேயாகும்; ஏனெனில், இப்பிரபஞ்சத்தில் மனுஷருக்கு இகலோக சுகத்திற்கு இன்றியமையாத சாதன ங்களைப் பரமேசுவரர் மானவ ஜாதியாரனைவருக்கும் பொது வாக முன்பே படைத்திருக்க, அவைகளைக் காலதேச வர்த்த மானங்களைத் தழுவித் தக்கபடி உழைத்து அனுபவிக்க வேண் டியது கடமையாக இருக்கிறது. ஆனதுபற்றியே சிலர் ஒவ் வொருவருடைய கடமையையும், கிருஷியையும் ஒருவித புதுப் பிரார்த்தனை என்று எண்ணுகிறார்கள். அந்தக் கிருஷியைவி ட்டுச் சோம்பேரிகளாக சுவாமியைப் பிரார்த்திப்பதினால் பல னடையக் கூடுமோ? கிருஷிசெய்யாமல் தனதானியக் கீர்த்தி கள்கிட்டுமோ? சுகாதாரங்களை நாடாமல் பிராத்தனையினால் பலனும், ஆரோக்கியமும் கிட்டுமோ? இப்படியே மனுஷர் இவ்வுலக சுகத்துக்கு வேண்டியவைகளை எல்லாம் தக்கபடி யனுபவிக்கவேண்டிய பொருள்களையும், புத்தியையும், பெற் றிருக்க, சோம்பலினால் அவைகளைத் தக்கபடி உபயோகிக்க கிருஷிசெய்யாமல் விட்டு, கடவுளைப் பிரார்த்தித்தால் அக்கட வுள் அப்பிரார்த்தனையைக் கேட்டுவந்து சோம்பலுள்ள மனு

ஷருக்கு வேண்டிய இகலோக சுகங்களுக்கேற்ற கிருஷிகளைச் செய்து கொடுப்பாரோ? ஒருவனுடைய காலில் யாதாவது ஒரு கூரியமுள் தைத்தால், அவன் அம்முள்ளைப் பிடுங்கிவிட்டு, அவ்விடத்திற்குயாதாவது அனுகுணமான மருந்தைப்போடாமல், கடவுளே! என்காலில் முள்தைத்து நோவெடுக்கிறதென்று அழுது பிரார்த்தித்தால் கடவுள் வந்துஅந்த முள்ளைப்பிடுங்கி மருந்து போடுவாரோ? பிடுங்க மாட்டாரல்லவா? ஆகவே, மானிடர் இகலோக சுகத்தைக்கருதி பிரார்த்தனைசெய்வதானது வாலிபர், புத்தி குன்றியவர்கள் செய்யும் பிரயோஜனமற்றபிரார்த்தனையே யாகும்.

இனி பிரயோஜனமாகும் உண்மையான பிரார்த்தனை எதுவெனில், அத்யாத்மிக ஞானத்தைப் பற்றியும், அத்யாத்மிக் பலத்தைப் பற்றியும், அத்யாத்மிக பரிசுத்தத்தைப் பற்றியும், அத்யாத்மிக சுகங்களைப் பற்றியும், பரமேசுவரனை நாடி ஆத்மபூர்வகமாகச் செய்யும் பிரார்தனையேயாம். அதாவது-மானிடர் எங்தெந்த பாவங்களைச் செய்து, அவற்றிற்காக அநுதாபப் பட்டும், தாம் செய்யும் சத்காரியங்களுக்குப் போதுமான சக்தியற்றிருந்தால், அச்சக்தியைப் பிரசாதிக்கும்படிக்கும், தமக்கிருக்கும் குறைவு குற்றங்களையறிந்து அவைகளை க்ஷமிக்கும்படிக்கும், செய்யும் பிரார்த்தனையே உண்மையான பிரார்த்தனையாகும்.

வினா—கடவுள் அசஞ்சலன் என்று சொல்லி இருக்க, அவருடைய இயற்கையான கருத்தையும், கருமத்தையும், இடையில் நம் மிஷ்டப்படி பிரார்த்தனைகளுக்காக மாற்றுவாரோ?

விடை—பரமேசுவரன் நிஸ்சலன் என்பது உண்மையே; ஆகவே அவருடைய கருத்தையும், கருமத்தையும் இடையில் நமது பிரார்த்தனைகளுக்கு மாற்றமாட்டார் என்பது உண்மையே ஆயினும், மனுஷர் ஹிருதய பூர்வகமாகவும், சிரத்தையாகவும், மாநிர்மல மாகவும், ஆத்ம சுகத்தைத் தரும்படியாகவும், மனோதுக்கத்தை நீக்கும்படியாகவும், செய்வதுகூட அவருடைய ஸ்திரமான கருத்தும், கருமமுமாகவும் இருக்கின்றன.

பிரார்த்தனைகளினால் ஜீவாத்துமாவுக்கு பரமாத்மாவோடு சம்பந்தம் ஸ்திரமாகும் பக்ஷத்தில், அந்தபரம சம்பந்தத்தினால், பரமா

த்துமாவினிடமிருந்து கருணையாதி கல்யாண குணாமிர்த பிரவாஹம் கிறுகச் சிறுக ஜீவாத்துமாவுக்குள் பிரவேசித்து, அதைச் சுத்தப்படுத்தி நிர்மலமானதாகச் செய்துவிடு மல்லவா? அவருடைய கருத்தும். கருமமும் நம்முடைய சுகத்தைக் கருதியவைகளாகையால், அவைகளை நமது புத்திசாமார்த்தியத்தினால் அவரது இயற்கையையநுசரித்துக் கிருஷிசெய்து யனுபவிக்க வேண்டுமென்பதே அவருடைய கருத்தாம்; எப்படியெனில்,

பரமேசுவரன் படைத்த இந்த உலகம், ஆதியில் பயங்கரமான பருவதங்களாலும், நதிகளாலும், காடு வனாந்திரங்களாலும், வெட்டவெளிகளாலும் நிறைந்திருந்து. இப்படிப்பட்ட இயற்கையையுடைய இந்த உலகத்தில், மநுஷர் தமது புத்தி யுக்திகளினால் வனாந்திரக்காடுகளை யெல்லாம் பரப்பி, அவைகளில் சுகமாக வாழ்ந்துய்யத்தக்க வீடு வாசல்களையும், கோயில் கோபுரங்களையும் கட்டிக்கொண்டு வாழவும், பட்டினியாகச் சாகாதபடி பயிர் பச்சைகளை விளைவித்து உண்ணவும். திகம்பரிகளாகத் திரிந்து குளிர் காய்ச்சலினால் கஷ்டப்படாமல், துணிமணிகளை நெய்துக் கொள்ளவும், இப்படியே இவ்வுலக சுகத்துக்கு இன்றியமையாச்சாதனங்களை ஈசுவரனுடைய இயற்கையை யநுசரித்துச் செய்துக்கொள்வதோடு; சிலர்; தமது மனவலிமையின் விருத்தியினால் பயங்கரமான சமுத்திரங்களைச் சுலபமாகத்தாண்டிப் போய்வரக் கப்பல்களையும், தூரமென்பதைப் பற்றிச் சிந்திக்காதபடி போய்வரும் புகைவண்டிகளையும், க்ஷணப்பொழுதில் க்ஷேமசமாச்சார மறியத்தகக்க தந்தித் தபால்களையும், பிரம்மாண்டமான ஆறுகளைக்கடக்க அணை, பாலங்களையும்; பயங்கரமான காற்றையும் வசப்படுத்தி விண்ணுலகில் பக்ஷிகளைப் போல போய்வர ஆகாய விமானங்களையும், ககனத்திலாடும் சூரிய சந்திராதி அண்ட கோளங்களை விவரமாக அறிய தூரவீக்ஷணிக்கண்ணாடிகளையும், சூக்ஷ்ம வஸ்துக்களை யறிய அணுதரிசனிக் கருவிகளையும், மற்றும் மானிடருடைய இகலோக சுகவாழ்வுக்கின்றியமையாத பலசாதனங்களை எல்லாம் இயற்கைக்கு விரோதமாகாமல் அதைத்தழுவியே தமது உபயோகத்துக்குத் தக்கபடி செய்துக்கொண்டு வருவது பிரதியக்ஷம். உதாரணமாக,

ஒரு சட்டியில் ஒரு புஷ்பச்செடியைவைத்து விளைவிக்கிறோம். அத்தச்செடி கடவுளுடைய இயற்கைப் பிரமாணங்களினால்விளைகின்

றது. அந்தச்செடிக்கு ஜலம், உஷ்ணம், வெளிச்சம், காற்று முதலான இயற்கை சாதனங்கள் இன்றி யமையாதவையன்றோ. அவ்வித சாதனங்கள் அற்று மறைவான விடங்களில் அச்செடியைவைத்தால், அச்செடி தினே தினே வளர்விலும், வடிவிலும் வருணத்திலும், குறைவுபட்டுக் கெட்டுப் போதல் பிரதியக்ஷமல்லவா? அதே செடியை அச்செடிக்கேற்ற ஜலம், காற்று, உஷ்ணம், வெளிச்சம் முதலானதுகள் கிடைக்குமிடத்தில் வைத்தால், அச்செடி தினே தினே பல்கிப் பெறுகிப் பலவர்ணம் பெற்றுப் பூத்துப் பழம் தருகிறதல்லவா? இப்படிச் செய்வதனுல், நாம் கடவுளுடைய இயற்கைக் கருத்தையும், கருமத்தையும் மாற்றவில்லை, அவரும் மாற்றவில்லை; ஆனுல், அவருடைய இயற்கைக் கருத்தையும், கருமத்தையும் தழுவி கிருஷி செய்வதனுல் நமக்கு வேண்டிய பலன் கிடைக்கின்றது.

சிலர், மழை வருஷிக்கவேண்டு மென்று பிரார்த்திக்கிருர்கள். அவர்களிஷ்டப்படி அவர்களிருக்கும் இடத்தில் மழைபெய்வித்தால், அவர்களுக்குச் சற்று தூரத்திலிருப்பவருக்கு பிரதிகூலமாகவும், ஆபத்தாகவு முடியக்கூடும். இக்கஷ்டத்தை மழைக்காக பிரார்த்திப்போர் அறியார்கள். சிலர், பூகம்பம், பேதி, பிளேகு, பஞ்ச முதலான பயங்கர சம்பவங்களுண் டாகாதபடிக்கும், தமக்கும், தம்மனைவி மக்களுக்கும் வியாதி வியாகூலம் மரணமுண்டாகும் காலங்களிலும் அவைகளை நிவர்த்திக்கப் பிரார்த்திப்பதும் சஹஜமே. ஆனுல், அவைகளால் பிற்காலத்தில் பிரபஞ்சத்திற்கும், அதன் பிரஜைகளுக்கும் உண்டாகும் சுகிர்தங்கள் இன்னவை என்று அறியாத ஜனங்களுடைய அறிவற்ற பிரார்த்தனைகளுக்கு, சர்வ ஞானமுள்ள கடவுள் தமது இயற்கைக் கருத்துகளையும், கருமங்களையும் இடையில் மாற்றுவரோ? ஒருவனுடைய காலில் முள் தைய்த்துக் கொண்டு; கடவுளே நோய் பொருக்கக்கூட வில்லையே, என்று பிரார்த்தித்தால், அந்த நோயை சகிக்கும்படியான சக்தியையும், சாந்தத்தையும் கொடுப்பாரே யொழிய, கடவுள் வந்து காலில் குத்திக்கொண்டிருக்கும் முள்ளைப் பிடுங்குவாரென் றெதிர்பார்ப்பது புத்தியில்லாமையே யல்லவா?

இப்படிச் செய்வது உண்மையான பிரார்த்தனைகளாகுமோ? உண்மையான பிரார்த்தனை எதுவெனில், கடவுளுடைய இயற்கைக் கருத்தையும், கருமங்களையும், தழுவி இகலோக சுகத்திற்கு

வேண்டிய கிருஷிகளைச் செய்தும், அநுபவிக்கவிடாமுயற்சியையும், சக்தியையும், மனவலிமையையும் பிரசாதிக்கும் படிக்கும்; பிறகு இவற்றிற்கு மேலான பரலோக சுகத்திற்கு வேண்டிய சக்தி, சத்யம், சாந்தம், பரிசுத்த முதலான திவ்விய குணங்களால் ஆத்மோனஸ்திதியை யடைவிக்கும்படிக்கும் செய்வதேயாம் இப்படிப்பட்ட உண்மையான பிரார்த்தனை செய்பவர்களுடைய ஞான நேத்திரங்களுக்கு ஜகதீசுவரன் பிரதியக்ஷமாகி, அப்பாகவதர்களுடைய பிரார்த்தனைகளுக்காகப் பலன்களைக் கொடுப்பார் என்பது திண்ணம்.

இகலோக சுகத்தைக்கருதி மானிடர் தமது மனவலிமையினால் பூதாதிகளைத்தம்வசப்படுத்தி, அவைகளால்தமக்குவேண்டிய உதவிகளையடையும் படியான சக்தியுண்டாகி இருக்கையில், இனிச்சர்வ சக்தியும், சர்வஞானமும், சர்வகாருண்யமு முடைய பரமாத்துமாவை உண்மையாகப் பிரார்த்தித்து அவருடைய அருளைப் பெறுவோர் எவ்வளவோ அற்புதகாரியங்களைச் செய்யக் கூடுமல்லவா? அப்படியே அநேக அற்புதங்களைச் செய்திருக்கிறார்கள். இன்றும் அப்படியே செய்து வருகிறார்களாகையால், உண்மையான பிரார்த்தனையானது அத்யாத்மிக சம்பந்தமானதேயன்றி, கடவுளுடைய இயற்கைக்கருத்தையும், கருமத்தையும் மாற்றுவ தன்றாம்.

வினா—அப்படியானால் சிலர் இரவும் பகலும்பிரார்த்தனை செய்து கொண்டே இருக்க, பலனைப்பெற்றார்கள் இல்லையே. அதற்குக் காரணமென்ன?

விடை—உலக மெய்ப்புக்காகச் சிலர்கண்களை மூடிக்கொண்டு, கைகளை எட்டிய வரையில் தூக்கிகொண்டும், பாடி யாடிப் பிரார்த்திப்பது உண்மையான பிரார்த்தனையல்ல. விபூதி ருத்திராக்ஷங்களையும், நாமம் துளசி மாலைகளையும் தரித்தும், பழம் தேங்காய் தூப தீபங்களை விக்கிரகங்களுக்குக்காட்டியும், பூஜிப்பது உண்மையான பிரார்த்தனைகளல்ல. ஆடு கோழிகளை வெட்டியும், அக்கினி குண்டங்களிலாடிப் பாடிக் குதிப்பதும், உண்மையான பிரார்த்தனையல்ல, இவைகளெல்லாம் உலகப் பகட்டெனான மோசமான வீண் பிரார்த்தனைகளேயாகும்; ஆகவே அப்பிரார்த்தனைகளினால் பலன் கிடைக்கவே மாட்டாது. முன்னொருக்கால் த்ரௌபதியின் சீலையை இராஜசபையில்அவி

ழ்த்தபோது, அந்த த்ரௌபதி தனது மானத்தைக்காக்க, ஒருகையில் சீலையைப் பிடித்துக்கொண்டும், மற்ற ஒருகையில் கிருஷ்ணனையும் பிரார்த்திக்க, அவளுடைய மானாபிமானத்தையறிந்து, அது உண்மையான பிரார்த்தனை யல்லவென்று உதவி செய்யாதிருக்க, பிறகு ஷை த்ரௌபதி தனதுமானாபிமானத்தை மறந்து, இருகைகளால் அபயம் தர வேண்ட, அவளுடைய உண்மையான பிரார்த்தனைக் கிரங்கி மானத்தைக் காத்ததாகக் கதைகளிற் கேட்டிருக்கிறோ மல்லவா? இதனால் உண்மையான பிரார்த்தனையின் பலன் பிரதியக்ஷமாகும்? உண்மையான பிரார்த்தனையினால் அல்லவா பிரகலாதனும், மார்க்கண்டேயனு மகிமை பெற்றார்கள். உண்மையான பிரார்த்தனைகளினால் இக்காலத்திலும் அநேகர்கொடிய புலி சிங்க முதலான வைகளையும், இராஜாதி ராஜர்களையும் வென்று, ஜயவீரர்களானதன்றியில், தமது சக்திக்கு மிஞ்சின அநேக தருமங்களையும் செய்வித்து, உலகத்தாருக்குப் பேருதவிகளைச் செய்யவில்லையா? ஆனது பற்றி யன்றோ, அழுத பிள்ளைக்கு பால் கிடைக்கும் என்றும், கேட்டால் கொடுக்கப்படும் என்றும், தட்டினால் திறக்கப்படும் என்றுதிய பழமொழிகளைப் பெரியோர் அநுபவத்தாற்கண்டு சொன்னார்கள்; ஆகவே, உண்மையான பிரார்த்தனையே பலனைத்தருமேயன்றி பொய்ப் பிரார்த்தனைகள் பலனைத் தரா.

வினா—மானிடருக்குப் பிரார்த்தனை இன்றியமையாததா?

விடை—ஆம். பிரார்த்தனையே பிரஜைகளுக்கு பிராணன். பிரார்த்தனை யற்ற மதம் உப்பற்ற பதார்த்தம்போலாகும். மானிடர் பரதந்திரிகளும், துர்ப்பலருமாகையால், உலகஆசாபாசங்களை வெல்லுவதற்கு அவர்களுடைய கேவலமான சக்தி போதாது, அவைகட்கு வேண்டிய சக்தியை உண்மையான பிரார்த்தனையினாலேயே பெறவேண்டும். பிரதி நிமிஷமும், பரமேசுவரனுடைய சமீபத்தை யடைந்துய்ய பிரார்த்தனையைவிட சுலபமும், சிறந்த வழியுமில்லை. மானிடரின் கஷ்ட நிஷ்டூரங்களை மறந்து, அபயம் பெற்று ஆத்மசாந்தியை யடைவதற்குப் பிரார்த்தனையை விடச்சிறந்த சாதன முண்டோ? மனுஷன் இவ்வுலகத்திலும், மற்றெவ்வுலகத்திலும் அடையக் கூடிய உத்கிருஷ்ட

மான ஆநந்தங்களை எல்லாம் பிரார்த்தனைகளினாலேயே யடையக்கூடும். ஆன்றுபற்றியே பட்டிக்காட்டில் வசிக்கும் படிப்பும் பகுத்தறிவு மற்றவர்களும் பிரார்த்தனை செய்கிறார்கள். அவர்களைப்பார்த்து ஏன் பிரார்த்தனை செய்கிறீர்களென்று கேட்டால் அதற்குபதில் சொல்லத் தெரியார்கள். அப்படிக்கிருந்தும்பிரார்த்தனையை செய்யாமலிரார்கள். அதுமானிடரின் இயற்கையாம், கெட்ட எண்ணங்களையும், கெட்டச் செய்கைகளையும் பஞ்சாகப் பறக்கடிப்பதும் உண்மையான பிரார்த்தனையேயாம். சித்த சுத்தியுடனே பிரார்தித்தால் அப்பிரார்த்தனையிலிருந்து எழும்போதே ஆத்மோ ஜீவனம் கிடைத்து நூதன பலமும், தைரியமும், சந்தோஷமும், பரிசுத்தமு முண்டகும். ஆகவே, பிரார்த்தனையே இகலோக சுகத்தையும், பரலோகசுகத்தையும் கொடுக்கச் சுலபமும் சிறந்ததுமான சாதனம். பரமார்த்திப் பக்தியோக மிதுவேயாம். மற்ற மோக்ஷசாதனங்களான யோகமும், ஞானமுதலான படிகளில் சுகமடையக் கல்வியறிவிற் சிறந்த சிலரால் மாத்திரம் கூடும், பிரார்த்தனையோ எந்த ஜாதியாரும், எந்த மதத்தாரும், எந்த ஸ்திதியிலுள்ள கல்விஞான மற்றவர்களும், சாதாரணமான ஏழைகளும் சுகமடையக்கூடும். இப்பிரார்த்தனையின் பெருமையை இந்நாட்டார் மாத்திரமல்ல பூலோகத்தில் பிரபலமான கிறுஸ்து, மகமதியர் முதலான மதஸ்தர்கள் யாவரும் எவ்விடத்திலும், எக்காலத்திலும் பிரார்த்தனையைச் செய்துவருவது பிரத்தியக்ஷம். இம்மட்டோ? உன்னத பருவதங்களும், அகன்ற ஆறுகளும், பிரார்த்தனையால் பரமனைப் பாடிக்கொண்டே இருக்கின்றன. காணும் கந்த மூலங்களும்; பறக்கும் பக்ஷிகளும், கிரிமிகிடங்களும், தமக்கு வேண்டியவைகளைப் பெற்றுய்ய தத்தம் பாஷைகளில் தம்மைப்படைத்தபரமேசுவரனைப் பிரார்த்தித்துக்கொண்டே இருக்கின்றன, ஆகவே, பிரார்த்தனை மானிடருக்கு இன்றியமையாத சாதனம் ஆகையால் அனைவரும்பிரார்த்தனையைச் செய்யவேண்டும்.

வினா—இப்பிரார்த்தனைகளில் பற்பல வகுப்புகளுமுண்டோ?

விடை—ஆம் உண்டு, அவை அந்தரங்கமல்லது இரகஸியப்பிரார்த்தனை, குடும்பப் பிரார்த்தனை, ஜனசமூஹப் பிரார்த்தனை, பொதுஜனசமாஜப் பிரார்த்தனை ஏகாந்தப் பிரார்த்தனை என்றாதி பலவகுப்புகளு முண்டு.

வின—அவற்றின் விவரங்களைச்சற்றுசங் கிரஹமாகச் சொல்லுங்கள் கேட்போம்.

விடை-1-வது அந்தரங்கபிரார்த்தனை என்றால்-பிரதிதினமும்காலை மாலைகளிலும், அர்த்தராத்திரி காலங்களிலும், நிற்கும்போதும் நடக்கும்போதும், தம்முள்ளிருக்கும். பரமாத்துமாவோடு சந்தித்து நேர் நேராகச் செய்யும் பிரார்த்தனையேயாம்.மனிதருடைய குறைவுகுற்றங்களை பிறர் அறியும்படி பகிரங்கமாகச் சொல்லி பிரார்த்தனை செய்ய கூச்சப்படுபவரெல்லாம் இந்த அந்தரங்க பிரார்த்தனையின் மூலியமாக தனியேயக பரமபிதாவிடம் இரகிஹியமாகச் சொல்லி, தமது குறைவு குற்றங்களை நீக்கும்படி முறையிடுவதாம். இந்த அந்தரங்க பிரார்த்தனைக்கு குறிப்பான இடம் காலமுதலானவை இருக்க வேண்டுமென்கிற நியமமில்லை. எந்த விடத்தில், எக்காலத்தில், பாவ எண்ணங்களும், பாவ கருமங்களுமுண்டாகு மென்று தோன்றுகிறதோ, அப்போதே அவ்விடத்தில் தமது அபயகர்த்தாவாகிய ஜகதீசுவரனிடம் முறையிட்டு, அப்பாவ எண்ணங்களையும், பாவ கர்மங்களையும்,நசிக்கும்படி செய்யும்படி பிரார்ததிப்பதேயாம். இந்த அந்தரங்க பிரார்த்தனையானது படுக்கும்போதும், அர்த்தராத்திரியிலும், காலையிலும், மாலையிலும், மத்தியானத்திலும், மனைவிமக்கள் முதலான ஜனசமுகத்தாரோடு இருக்கும் போதும், வெளியிலும், வேலையிலும், மற்றெங்கிருக்கினும், யாது செய்யினும், அப்போதெல்லாம் தமக்கு வேண்டிய பலவரங்களையும் பிரசாதிக்கும்படி, பிறறறியாமல் பரமாத்துமாவிடம் நேர் நேராக நின்று இரகசியமாகச் செய்வதாகையால்; இப்பிரார்த்தனை மற்றெல்லாவித பிரார்த்தனைகளிலும் சிறந்ததாம்.

2—வது குடும்பபிரார்தனை என்றால்—ஒருகுடும்பத்தைச்சார்ந்த நாயகனும், நாயகியும், மக்களும் மற்றபந்துக்களும் கூடிசெய்யும் பிரார்த்தனையாம், இக்குடும்ப பிரார்த்தனையே பகிரங்கபிரார்த்தனைக்கு மூலமும், முதன்மையானதாகும். இந்த பிரார்த்தனையினால் குடும்பங்களுக்கு பரிசுத்தமும், ஐகமத்தியமும், க்ஷேமமும், சுகமுமுண்டாகும். இதனால் முக்கியமாக மக்களுக்கு பிதாமாதாபுந்துக்களுடையபெருமையறியும் தன்மையும், பக்தியும், பிரியமுதலான குணங்களு முண்டாகும். இதனால் குடும்ப

ங்களைச் சார்ந்த பந்துக்களுக்குள் அன்யோநிய சிநேக பந்தமு ம்பலப்படும். இதனல் குடும்பங்களிலுள்ள துஷ்டர்கள் சாதுக்களாவார்கள், புத்திஹீனர் அறிவாளிகளாவார்கள், ஈசுவர பக்தியுள்ளவர்களுமாவார்களாகையால், இப்படிப்பட்ட குடும்பங்கள் பூலோக சுவர்க்கலோகங்களாகப் பிரகாசிக்கும். இப்படிப்பட்ட குடும்பபிரார்த்தனைகளில்லா குடும்பங்களில் புருஷன் பிரம்ம மதமும், பெண்டுகள் விகிரகவீண் பக்திமதமும், மக்கள் மனம்போனபடி நடக்கும் துர்மதமும் உண்டாகி, இஹபர சுகத்தையடைய இடையூறுகளுண்டாகு மாகையால், இல்லறத்தாருக்கு குடும்பபிரார்த்தனை இன்றியமையாததேயாம்.

3—வது ஜனசமூஹபிரார்த்தனை என்றால், குடும்ப பிரார்த்தனைக்கு வந்து சேராத சில சிநேகிதர்கள் கூடிசெய்யும் பிரார்த்தனையாம். இந்தப்பிரார்த்தனையினால், ஒரேவித கருத்தும், கருமமுடையவர்கள் யாதாவதொரு வீடு அல்லது கோயில் முதலான விடங்களில் கூடி தமது ஆத்மாக்களை பரமாத்துமாவினிடம் சந்திக்கச் செய்வதேயாம். இப்படிப்பட்ட பிரார்த்தனைகள் சிநேகிதர்களுடைய ஹிருதயங்களைக் குளிர்ச்சிசெய்தும், அடிக்கடி மாறும் தன்மையுள்ள பக்தியை, மாறாதபடி உறுதிபடச் செய்தும், அன்பருக்குள் அநுதாப அந்நியோந்நியத்தையும் உண்டாக்கி உலகில் சுகமாக வாழச்செய்வதாம்.

4—வது பகிரங்கமான பொதுஜன சமாஜ பிரார்த்தனை என்றால், பரமேசுவரன் ஒருவனே உலகபிதாவென்றும், அவரால் படைக்கப்பட்ட மானவஜாதியார் யாவரும், சகோதர சகோதிரர்களென்றும், எண்ணுபவரெல்லாரும் யாதாவது ஒரு கோயில் அல்லது மடத்தில், குறித்ததினத்தில், கூடி தமது பொதுவாகிய பரமபிதாவை பிரார்த்திப்பதேயாம். மானவஜாதியார் எப்போதும் பரஸ்பர சம்பந்த சகாயத்தினலே சுகமடைய வேண்டியவர்களாகையால், அவர்களுக்கு பொதுவான சமாஜ பிரார்த்தனை அவசியகரமானதாக விருக்கிறது. பொதுஜன சமாஜபிரார்த்தனைக்குப் பெரியோர், சிறியோர், பெற்றோர், பெண்டுகள், கற்றோர், கசடர், கனவான், தனவான், தரித்திரர் முதலான பல வகுப்பார்கள் எக்காலத்தில், ஓரிடம் கூடி, ஒருவர் க்ஷேமத்தை ஒருவர் நாடி, தமது பொதுப் பிதாவாகிய

பரமேசுவரனைத் துதித்துபாடி பிரார்த்தனை செய்வதனால், அச்சமாஜத்தாருக்குள் துவேஷாதி குணங்கள் நீங்கி, பரஸ்பரசகோதர சகோதரி நேசமும், ஐக்கியமு முண்டாகி, பரோபகார குணங்களும், ஐகமததியமும், அன்யோநிய சஹாயங்களும், சற்குணங்களும், பரமேசுவரபக்தியும் பிரபலப்படும்.

[illegible]—வது ஏகாந்தபிரார்த்தனை என்றால்,—உலக ஆசாபாசங்களிற்சிக்கித் தவிப்போர், தமதில்லிடங்களை விட்டும், பர்வத பிரதேசங்களுக்கும், நதிதீரங்களுக்கும், சிங்கார வனங்களுக்கும், தனியாகப்போய் அங்கு சிலநாள்கள் தங்கி பரமேசுவரனுடைய இயற்கை யற்புதங்களைக்கண்டு வியந்து, தமது ஆசாபாசங்களை நீக்க ஸ்துதித்து பிரார்த்திப்பதாம். இதுவே ஏகாந்தசேவையாம்.

வினா—பிரார்த்தனையைச் செய்வதற்கு காலம், இடம், முதலான சாதனங்கள் அவசியமோ?

விடை—எங்கும் நிறைந்து, எப்போதும் நான்! நான், என்று பிரகாசிக்கும் பரமேசுவரனை பிராத்தனைசெய்ய காலம், இடமுதலான சாதனங்களனுவசியமே. எங்கு,எப்போது,மனது.துலியமடைந்து,பரமேசுவரனை பிரார்த்தனைசெய்ய, காலம் இடமுதலான சாதனங்களனு வவியமே. எங்கு எப்போது மனது துலியமடைந்து, பரமேசுவரனை யணுகி, பிரார்த்திக்கிறதோ அந்தக்காலமும், அந்த இடமுமே பிரார்த்தனைக் கேற்றகாலமாகும்; ஆயினும்,பிரதிதினமும் அருணோதயத்திற்கு முன்எழுந்தும்,சுத்தமாக ஸ்நானம்செய்தும்,சுத்தமான உடைகளைதரித்தும்,சுத்தமானவிடத்திலிருந்தும், மனதைப் பொறிப்புலன்களின் வழியேபோக விடாமல் நிலைநிறுத்தியும்,தமக்குள் அந்தர்யாமியாக இருக்கும் ஜகதீசுவரனை தியானித்தும், அன்று தாம் எண்ணும் எண்ணிக்கைகளும்,புரியும் தொழில்களும் பரிசுத்தமானவைகளாக இருக்கும்படி பிரார்த்தித்தும், பிறகு உலக உத்தியோக வியாபாரங்களில் பிரவேசித்தும்; மறுபடியும் மாலைப்பொழுதில் ஸ்நானம் செய்தாகிலும், அல்லது கால் கை முதலானதுகளைசுத்திசெய்துக்கொண்டும்,சுத்தியானவிடத்தி அமர்ந்தும், தாம் அன்றுசெய்த நடவடிக்கைகளிலும்,எண்ணங்களிலும் எவ்வளவு நியாமமானவை? எவ்வவு அனியாயமான

வை? என்பவற்றைப்பற்றி சிந்தித்தும், தாம் பிசகிப்போனவை களைப்பற்றி க்ஷமிக்கும்படிக்கும்,இனி அப்படிப் பிசகிப்போகாதபடி வண்மையையும், மன உறுதியையும், பரிசுத்தத்தையும் பிரசாதிக்கும்படிக்கும், அநுதாபசாதனங்களோடு பிரார்த்தனைசெய்தால், அச்சாதனங்க ளனுகூல மானவைகளே யாகும்.

வினா—ஈசுவரோபாசனையைச் சார்ந்த ஓர் அங்கமாகிய பிரார்த்தனையைப்பற்றி இவ்வளவுதூரம் சொன்னதற்கு சந்தோஷமே; ஆனால், ஈசுவரோபாசனையைச்சார்ந்த ஸ்தோத்திரம், வந்தனம் தியானம்,என்னும் பல அங்கங்களின் கருத்தை சங்கிரகமாக அறிவிக்கவேண்டும். என்ன? சகலலோக இராஜாதி ராஜனும், ஜகத் பிதாவுமாகிய சர்வேசுவரன் ஸ்தோத்திரப்பிரியனா? அவரை ஸ்தோத்திரிப்பதில் அவருக்கு யாதாவது பிரயோஜன முண்டோ?

விடை—சர்வேசுவரன் ஸ்தோத்திர பிரியனல்லன். மனுஷருடைய ஸ்தோத்திரங்களினால் அவருக்கு பிரயோஜனமில்லைதான். ஆயினும், நாம் இவ்வுலகில் பறக்கும் பறவைகட்கு யாதாவது இறையைப்போட, அது நன்றியறிந்து அடிக்கடி வந்து இரகுகளாலும் முகங்களாலும் நம்மை ஸ்துதிக்கவில்லையா? ஒரு நாய்க்குட்டிக்கு யாதாவதொருவர் இறை போட்டால் அது நன்றியறிந்து தனது வாலையாட்டி முகத்தையுங்காட்டி ஸ்துதிக்கவில்லையா? கேவலமான அற்பபிராணிகள் தமது உபகாரிகளுக்கு நன்றிகாட்டி ஸ்துதிக்கையில், மானிடர்-கர்ப்பத்திலிருந்து முதல் பிரபஞ்சத்தில் ஜனித்து சாகுமளவும் வேண்டிய உணவு முதலானதுகளையும், மற்றும் வேண்டிய சகல சுகங்களையும் பரமபிதாவாகவும், சிநேகிதனாகவும் இருந்து வலிய உதவிசெய்யும் பரமேசுவரனுக்கு நன்றியறிந்த ஸ்துதியைச் செய்யாவிடில் மானிடத்தன்மைக் கொக்குமோ? ஆகையால் கருணாமயனான கடவுளை ஸ்தோத்திரம் செய்தல் நமது கடமையாம், ஆகவே.

ஸ்தோத்திர மானது, கடவுளது குறைவற்ற காருண்ணியத்தையும், நித்திய லக்ஷணங்களையு முன்னி, நமது பக்தி, சிரத்தைகளை வெளியிடுகையாம்.

வந்தனமானது, நமது உடலையும், உயிரையும், சம்ரக்ஷணை செய்யும், அவரது அளவற்ற கருணையைக் கருதி நமக்குள்ள நன்றி யறிவைத் தெரிவிக்கையாம்.

தியானமாவது, ஈசுவரனுடைய, ஸர்வ வியாபகத்துவம், ஸர்வஞ்ஞத்துவம், ஸர்வ காருணியத்துவம், ஸர்வ நிர்மலத்துவம், என்பவற்றைச் சிந்தித்து, அவரது அதிஸமீப ஸாந்நித்யத்தைமனக் கண்ணால் காணமுயலுகையாம்.

இவ்வுபாசனையின் நோக்கம், நமதுள்ளத்தில் ஆழ்ந்த ஈசுவர பக்தியும், நிஷ்கபடமான நன்றியறிவும், பூரணமாய் வியாபித்து, ஈசுவர ஸாந்நித்தியத்தை உணரவேண்டுமென்னும் ஆசைநிறைவேறி, பாப பந்த நிவாரணேச்சை பரி பூர்த்தியாயின், முடிவு பெற்றதாகும். சில காலங்களில் இவற்றில் சில அதிகரித்தும், சில குறைந்தும் நிகழும். எப்படி யெனில், எதிர்பாராத நன்மை ஒன்றை அடையப்பெறின், நன்றியறிவு அதிகப்படும்; துக்கமும் துன்பமும் அதிகப்படுங்காலத்தில் பிரார்த்தனை அதிகப்படும். இவ்வித சமயோசித உணர்வேழுச்சியுண்டாவது இயற்கை; அதைத் தடுப்பது தீங்கு.

ஆனால் ஸமாஜி கோபாசனையில் பக்திக்குரிய பலவித உணர்ச்சிகள் எழுச்சியுற்று திருப்தியடையும் படிக்கு இந்த நான்கங்களும் நிறைந்திருத்தல் வேண்டும்.

வினா—இத்தேசத்தின் ஆதி ஆரியர்களும், மத்திய காலத்தாரும் தற்காலத்தாரும் செய்த பிரார்த்தனைகளிற் சிலவற்றைச் சொல்லுங்கள் கேட்போம்.

விடை—அப்படியே சொல்லுகிறோம் கேள்:—

## ஆரியர் வேதபிரார்த்தனைகள்.

### ருக்வேதம் 1-127-ல்

“ விஸ்வா சாம் த்வா விசாம் பக்திம் ஹவா மஹேஸர் வாஸாம் ஸாமாநம் தம்பதிம் புஜே ஸத்ய கீர்வஹஸம்புஜே ”

எமது குடும்பத்தின் குலதெய்வமே! பொது வானவனே! குடும்பத் தலைவனே, ஸத்திய ஞான லோலனே, நினது அருளை நாடி வணங்கச் சித்தமாகிறோம்-என்றும்.

O Lord of all our homes, common to all, the householders guardian. Thee we invoke for bliss. O Bearer of true hymns!

அதர்வண-வேதம் IV-32-6-ல்.

அயமுதே அஸம்யுவ நர ஹர்வர்ன்டேம் பிரதீசீந: ஸஹ ே ரேவிசுவ தவந்.

சர்வ சக்தியும், சர்வ காருணியமு முள்ள ஈசனே! இங் கேவருக, நான் உன்னுடையவன், என்னிடம் வருவாய்,

Come hither, I am all Thine own, come, come to me, O Mighty, All-bestowing Lord.

யஜுர்வேதம்—36-2-ல்

யந்மே இந்திரம் சக்ஷுஷோ ஹிருதயஸ்ய. மநஸோ வாதிதுருண்ணம். வ்ருஹஸ்ப திர்மே தத்து திராது சம்நோ புவது புவநஸ்ய யஸ்பதி:

எனது கண்ணினுலும், மனதினுலும், ஹிருதயத்தி லும் எவ்வித குறைவு குற்றங்களைச் செய்திருக்கினும், பரமேசுவரன், அவைகளை தக்கபடி திருத்துவாராக, உலக ரக்ஷகனுகிய அவர் நமக்குக் கருணையை பிரஸாதிப்பாராக.

May the Lord set right whatever great defects I have of eye or mind or heart. May He, the Protector of the world, be gracious to us.

ருக்குவேதம் 11-27-11-ல்

அதிதே மித்ர வருணோதா மிருள யத்வோ வயம் சகுரு மா, கச்சிதாக: உர்வஸியா மபயம் ஜயோதிரிந்திர மா கோ தீர்க்கா அபி, அநசத்தமிஸ்ரா :

OFFICE OF THE REGISTRAR OF BOOKS.
REGISTERED
4 - JAN 1913
MADRAS.

ஓபகவானே! நாங்கள் உனது கட்டளைகளுக்கு விரோதமாக எவ்விதபாவங்களைச் செய்திருக்கினும் க்ஷமிப்பாய்! பயமற்ற பரிபூரண பிரகாசத்தை யடையச் செய்வாய்! அக்ஞானத்தினால் எவ்வித பாவமும் செய்யா திருப்போமாக.

Forgive us O Lord, howsoever we have sinned against Thee. May I obtain boundless. Light attended with fearlessness. May we never fall a prey (to sin) in the darkness (of ignorance.)

### காயத்திரி.

ஓம் பூர்பு வஸ்வஹ தத்ஸவிதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்ய
தீமஹி தீயோ யோனஹ ப் பீசோதயாத்

### வேதஸ்துதி.

ஸஹஸ்ரசீர்ஷந்தேவம், விஸ்வாக்ஷம் விஸ்வஸம்புவம்
விஸ்வம் நாராயணந் தேவ மக்ஷரம் பரமம் பிரபும்
விஸ்வதஹ பரமம் நித்யம் விஸ்வம் நாராயணர் கிம் ஹரீம்
விஸ்வ மே வேதம் புருஷஸ்தத்விஸ்வ முப ஜீவதி
பதிம்விஸ்வஸ்யாத்மே ஸ்வரார்கம் ஸாஸ்வதர்கம் சிவமச்சுதம்
நாராயணம் மஹா க்ஞேயம் விஸ்வாத்மாநம் பராயணம்
நாராயண பரம்பிரஹ்மம், தத்வம் நாராயணஹ பரஹ
நாராயண பரொஞ்சோதி ராத்மா நாராயண : பரஹ
யச்சகிஞ்சித் ஜகத்ஸர்வம் தியஸ்மின் திருஸ்யதே,
சுரூயதே பிவா

அந்தர்பஹித்ஸ தத்ஸர்வம் வியாப்யந் நாராயணஸ்திதஹ
அநந்தமவ்வியயம், கவிற்கிம் சமுத்ரேந்தம் விஸ்வஸம்புவம்
பத்மகோஸ ப்ரதீகாஸம் ஹார்த்யந்தோப்யமுகம்
அதோ நிஷ்டியாபி தஸ்யாந்தே நாப்யா முபரிதிஷ்டதி
ஹ்ரொர்தயந் தத்விஜாநீயாத் விஸ்வவியாய தகம்மஹத்

ஸந்தத்ர்கம் ஷிருபிஸ்துலம் பத்யாகோச ஸங்கிபம்
தஷியாந்தேஷு ஷிரகும் சூக்ஷ்மம் தஸ்மின் ஸர்வம்
ப்ரதிஷ்டிதம்
தஸ்ய மத்யே மஹாநக்னிர் விஸ்வார்சினர் விஸ்வதோமுகஹ
ஸோக்ரபுக் த்விபுஜந்திஷ்டன் ஹாரமஜாஹக்கவி;
ஸந்தாபயதிஸவந்தேஹ மாபாத தலமஸதகம்
தஸ்யமத்யே, வன்ஹி சிகா ணியோர்த்வ வியவஸ்திதஃ
நீலதோயதமத்யஸ்த வித்யுல்லே கேவபாஸவாஃ
நீவாரசூகவக்தன்வி பீதாபாஸய தனுபமா
தஷியா சிகாயா மத்யே பரமாத்மாவ்யவ ஸதிரஃ
ஸபிரமஹ் ஸஷிவஸேந்தர சோக்ஷர பரமசுவராட்
ஹிருதுகம் சத்யம பரம்பிரம: புருஷம் க்ருஷ்ண பிங்களம்
ஊர்த்வரேதம் விரூபாக்ஷம் விசுவரூபாயவைநமஃ

## சந்தியாவந்தந பிரார்த்தனைகள்.

### இந்திரியஸ்பரசமந்திரம்

ஓம் வாஅக் வாஅக், ஓம் பிராண:—ஓம் சக்ஷு.—சக்ஷுஃ—ஓம் சுரோத்ரம் சுரோத்ரம், ஓம்நாபிஃ—ஓம் ஹ்ருதயம். ஓம் கண்ட— ஓம் சிரா. ஓம் வாஹுப்யாம் யப்ம்யஸோவலம், ஓம் கரத்வ கரபுரஷ்டே.

ஓ பரமாத்மாவே! நான் மனதறிய எனது ஐயம்பொறிகளாலும், ஐயம்புலன் களினலும், ஹிருதயத்தினலும் கண்டத்தினலும், வார்த்தைகளினலும், சிரசினலும், எண்ணத்தினலும், கரங்களினலும், கருமங்களினலும், ஜனியேந்திரங்களாலும், எவ்வித பாவமும் செய்கிறதில்லை என்று பிரதிக்கினை செய்கிறேன்—

## பிரஹ்ம கிருபையை நாடுதல்,

### மார்ஜனமந்திரம்.

ஓம் பூஃ புநாது ஷிரஸி, ஓம்புவா புநாது நேத்ரேயோ ஓம் ஸ்வஃ—புநாதுகண்டே. ஓம் மஹஃ புநாது ஹிருதயே,

ஓம் ஜந:—புநாது நாய்யாம்:, ஓம் தப:—புநாது பாதயோ, ஓம், ஸத்யம் புநாது புந சிரஸி, ஓம் ஸ்ம்பிரஹ்ம புநாது ஸர்வாத்ர.

ஓ! பரமபுருஷனே, நீ எல்லா பிராணிகளுக்கும் ஜீவாதாரமான வனுகையால்; எனது சிரசை புனிதமாக்குவாய். நீ சகல சாதுக்களையுங் காப்பவனுகையால்; எனது கண்களை புனிதமாக்குவாய். நீ பிரபஞ்சங்களை ஆளுபவனுகையால்; எனது கண்டத்தை புனிதமாக்குவாய். நீ மஹானுகையால், எனது ஹிருதயத்தை புனிதமாக்குவாய். நீ பிரபஞ்ச சிருஷ்டி கர்த்தாவாகையால், எனது ஜனியேந் திரயங்களை புனித மாக்குவாய்-நீ ஞானஸ்வ ரூபனுகையால், எனது கர சரணங்களை புனிதமாக்குவாய்-நீ சத்யனுகையால் எனது மூளையை புனிதமாக்குவாய்—நீ எங்கும் நிறைந்தவனுகையால், என்னையும் என்னைச் சுற்றி இருக்கும் இடங்களையும் புனிதமாக்குவாய்.

## சந்தியாவந்தந பிரார்த்தனைகள்.

---

### ஆசமனம்.

ஓம் அச்சுதாயநம:, ஓம் அநந்தாயநம:, ஓம் கோவிந்தாயநம:,

ஓம் கேசவாயஸ்வா:, ஓம் நாராயணுயஸ்வா:, ஓம் மாதவாயஸ்வா:, ஓம் கோவிந்தாயநம:, ஓம் விஷ்ணவேநம:, ஓம் மதுசூதநாய நம:, ஓம் திரிவிகரமாயநம:, ஓம் வாமநாயநம:, ஓம்ஸ்ரீதராயநம:, ஓம் ஹிருஷி கேசாயநம:, ஓம் பத்மநாபாயநம:, ஓம்தாமோதராய நம:, ஓம்சங்கர்ஷணுயநம:, ஓம் வாசுதேவாயநம:, ஓம் பிரத்யும்மனுயநம:, ஓம் அநிருத்தாயநம:, ஓம் புருஷோத்தமாயநம:, ஓம் அதோக்ஷயாயநம:, ஓம் நாரசிம்மாயநம:, ஓம் அச்சுதாயநம:, ஓம் ஜநார்தனுயநம:, ஓம் உபேந்திராயநம:, ஓம் ஹரயேநம:, ஓம் ஸ்ரீ கிருஷ்ணுயநம:.

### பிராணுயாமம்.

ஓம் பூ: ஓம்புவ: ஓம் ஸுவ: ஓம் மஹ: ஓம் ஜந: ஓம் தப: ஓம் ஸத்யம், ஓம் தத்ஸ விதுர்வரேண்யம், பர்கோ தேவஸ்ய தீமஹி தியோயோந: பிரசோதயாத்—ஓமாபோஜ்யோதீரசோமிருதம் பிரஹ்ம, பூர்புவஸ்வரோம்.

### பொருள்.

ஓம் பூ:=ஸர்வபரிபூரணனாகியும், ஓம் புவ:=ஸர்வ சிரேஷ்டனாகியும், ஓம் சுவ:=சோபன சுகஸ்வரூபனாகியும், ஓம் மஹ;=ஸர்வ பூஜநீயனாகியும். ஓம் ஜந:=ஸர்வ ஜனகமாகியும், ஓம் தப:=ஞானஸ்வரூபனாகியும், ஓம் ஸத்யம்=ஸத்தியஸ்வரூபனாகியும், ய:=எந்த சவித்ரநாமத்தைக்கொண்ட பரப்பிரஹ்மம ந:=நம்முடைய, திய:=புத்திகளை, பிரசோதயாத்=பிரேரேபனைசெய்கிருனோ, தத்=அந்த பிரசித்தியான, ஸவிது:=பிரேரேபகனாகிய, தேவஸ்ய=பகவானுடைய, வரேண்யம்=அனைவராலும்விரும்பத்தக்க, பர்க்க=பாவத்தை நசிப்பிக்கும் தேஜஸை, தீமஹி=தியானிக்கிறோம், அந்த தேஜஸு ஓம்=பிரணவ பிரதி பாத்தியமான,] அப:=பரிபாலன சக்தி சம்பன்னனும், ஜ்யோதி:=பிரகாஸஸ்வரூபத்தையும், அமிருதம்=மரண ரஹிதமான, பிரஹம=ஸர்வ பரிபூரணத்தை, பூர் புவ: சுவ:=பூலோக, புவர்லோக, சுவர்லோகாந்தரியாமியாக இருக்கிறது.

### சுருத்துறை.

சிருஷ்டி ஸ்திதி லய காரணபூதனாய், திரிலோக வியாபியாய், எமது மனோவிருத்திகளைப் பிரேரேபிக்காநின்ற ஓ பரமாத்துமாவே, உன்னைத் தியானிப்போமாக. எவன் யாவற்றையும் விளங்கச்செய்கிறானோ, எவன் எல்லாவற்றையும் ரக்ஷிக்கிறானோ, எவனிடத்திநின்று யாவும் ஜனிக்கின்றனவோ, எவனிடத்து யாவும் மீண்டு லயிக்கின்றனவோ, எவன் மோக்ஷத்தின்பொருட்டு எம் மனோவிருத்திகளைச் சன்மார்க்கத்தில் பிரவர்த்திக்கும்படி உதவுகின்றானோ: அப்படிப்பட்ட திவ்ய சவிதாவாகிய தேஜோமயனே! உன்னை மேன்மேலும் கொண்டாடித்தொழுவோமாக.

### மார்ஜனம்.

ஓம், ஆபோஹிஷ்ட மயோபுவ: தான ஊர்ஜே ததாதன மஹீரணாயச்சக்ஷசே யோவஸ்ஸிவதமோரஸ: தஸ்யபாஜயதேஹந: உஸதீரிவ மாதர: தஸ்மா அரங்கமாமவ: யஸ்ஸக்ஷயாயஜின்வத அபோஜனயதாசந:

### பொருள்.

ஆப:=ஆப்நாமுத்தை யடைய பரப்பிரம்மமே, மயோபுவ:=சுககர்த்தனாகிய வனே, ஹி=உண்மையாகவே, ஸ்த=ஆவாய், தா:-

அப்படிப்பட்ட நீ, ந:=எம்மை, ஊர்ஜே=ஞானரசத்தின் நிமித்தம், ததாதன=இருக்கவை.

எனெனில்,—

மஹோரணாய=திவியமங்களமான, சக்ஷஸே=தரிசனத்திற்காக, ய:=எ, சிவதம அநந்தகலியாணமாகிய, வ:=உனது சம்பந்தமாகிய, ரஸ:=அமிர்தரசமுண்டோ! தஸ்ய=அப்படிப்பட்டதற்கு, ந:=எம்மை, இஹ=இவ்வுலகத்திலேயே, பாஜயத=அநுபவிப்பதற்கு, அருளாய்ச்செய்யும், உஸதீ=விரும்பும் மக்களுக்கு, மாதர: + இவ=தாய்மார்களைப்போல் (அநுபவிக்கச்செய்யும்) தஸ்யே=அப்படிப்பட்ட அமிர்தரசத்திற்காக, வ:=உம்மை, அரம்=மிகவும், கமாம=சேருகிறோம். யஸ்ய=பாவத்தினுடைய, க்ஷயாய=நசிப்பிதற்கு, ஜின்வத=பிரியத்தையடையச்செய்யும், ச=மேலும், ஆப:=ஓ பகவானே, ந:=எம்மை, ஜநயத=பிறப்பியும், (என்றால் ஞானயுக்தர்களாகச் செய்யும்)

**கருத்துரை.**

பரமேசுவரன் (நமது பாவத்தைப்போக்கி) ஞானமோக்ஷத்தையருள்வாராக-என்பதாம்.

---

## பிராதக்கால பிரர்சன மந்திரம்.

சூரியஸ்ச மாமன்யஸ்ச மந்யுபதயஸ்ச மன்யுகிரதேப்ய:, பாபேப்யோ ரக்ஷந்தாம்-யத்ராத்ரிய பாபமகார்ஷம்-மநஸா வாசாஅஸ்தாப்யாம்-பத்ப்யா முதரேண சிஸ்ஞ,-ராத்ரிஸ்ததவலும்பது - யத்கிஞ்ச் துரிதமையி-இதமஹம், - மாமமிர்தயோநௌ - சூர்யேஜயோதிஷிஜு-ஹோமிஸ்வா:

இம்மந்திரத்திற்கு ருஷி நாராயணர், சந்தசு பிரகிருதி, 84-அக்ஷரங்களுடையது.

**பொருள்.**

சூரிய=சூரியநாமகனாகிய பரப்பிரம்மம், ச=மேலும், மந்யு=குரோதத்தை நசிக்கச்செய்யும் பரபிரமம், ச=மேலும், மந்யுபதய=குரோதத்திற்கும் பாதிகளான ராகாதிகளும் நசிக்கச்செய்யும் பரம்பிரம்மமே, மந்யுகிருதேப்யம்=குரோதத்தினால் செய்யப்படும், பாபேப்ய=பாவங்களை, மா=என்னை, ரக்ஷம்தாம் = இரக்ஷிப்பாயாக, யத்=எ, பாபம்=பாவத்தை, ராத்ரியா=இராத்திரி காலங்களில்

மனசா=மனதினலும், வாசா=வாக்கினலும், அஸ்தாப்யாம்=கைகளினலும்,பதாப்யாம்=பாதங்களி னலும், உதரேண=வயற்றினலும், சிஸனு=குஹியத்தினலும், அகார்சியம்=செய்தேனே, தத்= அதை, ராத்திர=ராத்திர நாமக பரப்பிரம்மமே. அவலும்ருது= நசிக்கச்செய்வாயாக, யத்கிஞ்ச=எவ்வளவு கொஞ்சமானபோதிலும் துரிதம்=பாவத்தை, மை=என்னிடம் (இருக்கிறதோ)=தம்=இந்த பாவங்களே, மாம்=அந்த பாவங்களுக்குக் கர்த்தனுகிய என்னை, அஹம=நான், அமிர்தயோனௌ=சாஸ்விதபதவிக் காதாரமான, சூர்யே=பகவத்சம்பந்தமான, ஜ்யோதிஷி=தேஜஸி னிடத்தில், ஜுஹோமி=ஹோமம்செய்கின்றேன், சுவாஹ என்னை சமர்ப்பித்துக்கொள்ளுகிறேன்.

## சருத்துரை.

சூரியநாமகனும், எனது குரோதத்தை நசிக்கச்செய்யும் ஓ பரமாத்துமாவே! எனது குரோதங்களைப் போக்குவாய். இராத்திரி என் மனதினலும், வாக்கினலும், கரசரணங்களினலும், வயிற்றினலும், குஹியத்தினலும் என்னென்ன பாவங்களைச் செய்தேனே; அவைகள் எவ்வளவு கொஞ்சமாகவிருக்கினும் உடனே நசிக்கச் செய்து, என்னை நின்தேஜோமயமான சன்னிதானத்தில் ஆத்ம ஹோமம் செய்கிறேன். எனது பாவதாபங்களை நசிக்கச்செய்து ரக்ஷிப்பாயாக.

## மத்தியானத்தில் செய்யவேண்டிய பிராசனமந்திரம்,

ஆப புநந்து ப்ருதுவீம் பூதாபுநாதமாம் புநந்து பிரஹ்மணஸ்பதிர் பிரஹ்மபூதாபுநாதுமாம், யதுச்சிஷ்டமபோஜ்யம்-யத்பாதுஸ்சரிதம் மம ஸர்வம் புநந்து, மாமாபோ ஸதாஞ்ச பிரதிக்கிரஹய ஸ்வாஹ.

இந்த மந்திரத்திற்கு பூதரிஷி, அஷ்டிசந்தர்ஆபோருஷிரனுஷ்டுப்சந்த.

## பொருள்.

ஆப=அமிர்தரசம், புருதிவீம்=மஹாபூதவிகாரத்ம சரீரத்தையும், புநந்து=பவித்திரம் செய்வாயாக, பூதா=பவித்திரமாக்கப்பட்ட, ப்ருதுவி=சரீரம், மாம்=என்னை, புநாது=பவித்திரம் செய்வதாக, பிரஹ்மணஸ்பதி=பரமாத்மா, புநந்து=பவித்திரம் செய்வதாக, பூதா=பவித்திரமான, பிரஹ்ம = வேதம், மாம்=என்னை, புநாது=பவித்திரம் செய்வதாக, யத்=எந்த, உச்சிஷ்டம்=பிறரு

டைய சம்பந்தமாகி செய்தனுபவிக்கப்படுகிறதோ, தத்=அந்தபாவம், (என்ருல் பிறருடைய பொருளை யெடுப்பதனுலுண்டாகும் பாவம்) அபோஜீயம்=புசிப்பதற் கர்ஹமாகிய பதார்த்தங்களை புசிப்பதாலுண்டாகும் பாவமும், யத்=எந்த, துஸ்சரிதம்=துஷ்டாசரணையான பாவமும், மம=என் சம்பந்தமான, ஸாவம்=சகலமான பாவத்தையும், அசதாம்=அந்த புருஷர்களுடைய சம்பந்தமான, பிரதிகிரஹம் + ச=பிரதிகிரகத்திஞல், மாம்=என்னை, ஆப=என்னும் சப்தநாமகனுன பரமாத்துமா, புகந்து=பவித்திரம் செய்வராக, ஸவா=ஆத்மசமர்ப்பணம் செய்வேனுக,

### கருத்துரை.

ஓ அமிர்தஸ்வரூபனே! இன்று மத்தியானம் பிறருடைய பொருளை துராகிர்தமாக எடுத்ததினுலுண்டாகிய பாவத்தையும், புசிக்கத்தகாதவைகளைப் புசித்ததினுலுண்டாகிய பாவங்களையும், துஷ்டர்களிடம் சஹவாசம் செய்ததினுலுண்டாகிய பாவங்களையும் போக்கிக்கொள்ள எனது ஆத்மாவை நினது சன்னிதானத்தில் சமர்ப்பிக்கிறேன், இரக்ஷிப்பாயாக.

---

### சாயங்காலத்தில் செய்யவேண்டிய பிரதான மந்திரம்.

அக்ஙிஸ்ச மாமங்யஸ்ச மங்நுபதயஸ்ச மங்யுகர தேய்ய, பாபேப்யோ ரக்ஷந்தாம்-யதஹ்ந பாபமகார்ஷம்-மநஸாவாசா ஹஸ்தாப்யாம்-பத்ப்ய முதரேண சிஸ்நா-அஹஸ்த்த வலும்புது-யத்கிஞ்ச துரிதம்மயி-இதமஹம் மாமமிர்தயோநௌ ஸத்யேஜோதிஷி ஜுஹோமிஸ்வாஹா.

,இந்த மந்திரத்திற்கு யஞ்ஞாவல்கியரிஷி, பிரகுரிதி சந்தசு

### இதன்பொருள்.

யத்—எந்த பாபத்தை, ஆஹ்ன—பகலில், அகார்ஷம்—செய்தேனே, ஆஹ:—,ஆஹோநாமக பரப்பிரம்மம், தத்—அந்தபாவத்தை,அவலப்புது—போக்குவாயாக—ஸதியே ஜாதிஷ்—ஸத்தியநாமக பரப்பிரம்மத்தில் ஜுஹோமி — ஸமர்பிக்கிறேன் என்பதாம். மற்றவைகளுக்கு காலவந்தனத்தில் எழுதப் பட்டிருப்பதால் அந்த அர்த்தத்தை அன்வயமகக் கொள்ளவேண்டும்.

**கருத்துரை.**

அக்கினி நாமத்தினால் ஜ்வலிக்கும் ஹேஜகதீசா! நான் இன்று பகலில் மனதினாலும், வாக்கினாலும், காசர்ஞாதிகளினாலும், வயிற்றினாலும், குஹியத்தினாலும் எச்சேர்ந்தப் பாவங்களைச் செய்தேனோ; அந்தப்பாவங்களைப் போக்க தேஜோமயமான நின் சன்னிதியில் எனது ஆத்துமாவை ஹோமம் செய்கிறேன், கருணையுடன் பவித்திரமாக்கி பாதுகாப்பாயாக.

---

## மஹாபாரதம்.

ஜிதேந்திர ஸ்தோத்திரம். சாந்தி பருவம், 37-43-ல்.

---

தேவ்நாம் தாநவா நாம்ச, ஸாமாந்ய மாதி தைவதம்,
ஸர்வதா சரண த்வந்தம், விரஜாமி சரணம் தவ.

இதன் கருத்து.

தேவாதி தேவனும், போஷகனுமாகிய உன்னடியை பணிந்து அடைக்கலம் புகுகின்றேன்,

யச்சபரா தாங் க்ருதவாந் அஜாநாத் புருஷோத்தம
மதபக்த இதி தேவேச ததசாவம் க்ஷந்துமர்ஹஸி.

ஓ பரமபுருஷனே! எனது அக்ஞானத்தினால் செய்யவேண்டியதை விட்டும், செய்யத்தகாததைச் செய்ததனாலுண்டான எல்லாவித பாவங்களை க்ஷமிப்பாய், நான் நின்து அடிமையும், பக்தனுமல்லவா?

பாஹி பாஹி ஜகந்நாத க்ருபயா பக்தவஸ்சல
அநாதோ அஹமதந்யோஹ மக்ருதார்த கதஞ்சந.

பிரபஞ்சத்தின் கர்த்தனே! பக்தர்களின் பரமபந்துவே! உதவியற்றும், சுகமற்றும், சக்த்தியுமற்ற என்னை உனது கிருபையால் இரக்ஷிப்பாய் இரக்ஷிப்பாய்! சுவாமி.

பக்த்யை களப்ய:, புருஷோத்தமோ அஸவ்,
ஜகத் ப்ர ருதிஸ்திதி நாசஹேது:.

அகிஞ்சநோ அநந்யகதி: சரண்யா
க்ருஹாணமாம்க்லேசிநா மம் புஜாக்ஷ.

நீ சிறந்த பிரபு! நீ உண்மையான பக்தியினாலன்றி அடையக் கூடாதவன். நீ இந்த பிரபஞ்சத்திற்கு ஆதிகாரணன், அதையாதரிப்பவனும், அழிப்பவனும் நீயன்றோ! உலக ரக்ஷகனே! நான் திக்கற்றவன். உன்னைவிட யாதொரு உதவியுமற்றவன், என்னை உனது ரக்ஷணசாயையில் வைத்து எனது வியாகூலத்தை நீக்குவாயாக.

மஹாபாரதம்-சாந்திபருவம், 337-43-ல்.

ஜிதந்தே புண்டரீகாக்ஷ நமஸ்தே விஸ்வபாவந
நமஸ்தேஸ்து ஹ்ருஷிகேச மஹாபுருஷபூர்விஜ.

ஓ பரமாத்மாவே! நினது காருணியத்திற்கும், கவுர்வத்திற்கும் விலகி இருந்து இப்போது தான் உனது காருணியத்தையும், ஆசர்த்தையும் அறியலானேன். இந்த உலகமெல்லாம் உனது இராஜியமாக இருக்கிறது. நான் எவ்வித சக்தியு மற்றவன். எனது ஆத்மபூர்த்தியான வந்தனங்களை அங்கீகரிப்பயாக. பொறிபுலன்களையடக்கியாளும் ஓ ஈசனே. நீ சர்வவல்லமையும் முதற்காரணனுமாகி இருக்கிறாய்.

---

பாகவதம். VIII-32-2-ல்

---

யஸ்மிந்நிதம் யதஸ்சேதம் யேநேதம் இதம்ஸ்வயம்
யோஅஸ்மாத் பரஸ்மாச்ச பரஸ்கம்ப்ரபத்யே ஸ்வ
[யம்புவம்.

இந்த பிரபஞ்சம் யாரால் நியமிக்கப்பட்டிருக்கிறதோ? யாரிடமிருந்து அது ஜனித்ததோ? யாரால் அது சிருஷ்டிக்கப்பட்டு அதற்குள் அந்தர் பூதமாக இருக்கிறானோ! யார் காரணகாரியங்களுக்கு வேறானவனாக இருக்கிறானோ! அந்த சுயம்புவினிடம் அடைக்கலமடைகிறேன்.

### பாகவதம்—VIII 32-2-ல்

ஒம்! நமோ பகவதே தஸ்மை யத ரதிச்சி தாத்மகம்
புருஷாயாதி பீஜாய பரேசாயாபி மஹி.

யார் வணங்கத்தக்கவனே, எல்லாருக்கும் மனசாக்ஷியைக்கொடுப்பவனே? பிரபஞ்சத்திற்கு ஆத்மாவானவனே? பிரபஞ்சத்திற்காதிகாரணமானவனே? எல்லாச்சிறப்பும் பொருந்திய பகவானே அவனை தியானிப்போமாக.

---

### இராமாயணம்—யுத்தகாண்டம்—117-12-30-ல்

ஏ த்வாம் தேவம் த்ருவம் பக்தயா, பஜந்தே புருஷோத்தமம்
ப்ராபநுவந்தி ஸதாகாமா நிஹலோகே பரத்ரச.

சிரேஷ்ட பிரபுவும், நிரந்தர மகிமையுள்ளவனே! (யார்) உன்னை சிரத்தையுடன் வணங்குகிறவர்களே போதுமான பிரதிபலனைப் பெற்று, இகபர சுகங்களை யடைகிறார்கள். ஆகையால், உனது பக்தனாகிய என்னை இரக்ஷிப்பாயாக.

### இராமாயணம்—யுத்தகாண்டம்—18-33-ல்

ஸக்ருதேவ பிரபந்நாய தவாஸ்மீதி சயாதே
அபயம் ஸர்வ பூதேப்யோ ததாப்யே தஹர்தம்மம.

உன்னை உண்மையாக சரணாகதியடைந்து, நின்னிடம் அடைக்கலம் புகுவோரை யாதரிப்பவனாகையால், நான் உன் சரணமடைந்தேன். என்னை எல்லாவித தீங்குகளிலிருந்தும் இரக்ஷிப்பாயாக.

## பகவத்கீதையின் பிரார்த்தனைகள்.

# 11வது அத்தியாயம்.

42-43-44-வது சுலோகங்களில்.

யச்சா பஹாஸார்த்த மஸத்க்ருதோ விஹாரசய்யாஸந
[போஜநே ஷு
ஏகோதவாப்யச்யுத்தத் ஸமக்ஷம் தத்மபேயத்வாமஹ
[மப்ரமேயம்.

பிதாஸி லோகஸ்ய சராசரஸ்ய பூஜயஸ்ச குருர் கரீயாந்
நத்வத் ஸமோஸ்த்ய ப்யதிகஃ குதோந்யோ லோகதரே
[யப்ய ப்ரதிமப்ரபாவ.

தஸ்மாத் ப்ரணம்ய ப்ரணிதாய காயம் ப்ரஸாதயேத்வாம
[ஹமீச மீட்யம்
பிதேவ புத்ரஸ்ய ஸகேவஸ்க்யுஃ ப்ரியாஃ ப்ரியாயார்ஹஸி
[தேவஸோடூம்.

இவற்றின் சாதாரண அநுதம்.

மகானுபாவா! நீ அப்பிரமேய னென்றுணராமால், தனிமையாயும்-பிரர் முன்னிலையிலும், பரிகாசார்த்தமாய்ப் பலசமயங்களில் திரஸ்கரித்துப் பேசின அபராதங்களைத் தயைசெய்து க்ஷமிக்கவேண்டும்.

நீ சமானமற்ற பிரபாவமுடையவன். சராசராத்மகமான எல்லாபிராணிகளுக்குந்தந்தை. பூசிப்பதற்கருகன். பரமகுரு. சுவர்க்க மத்திய பாதாலலோகங்களிலுனக்குச் சமானர் இலர். அதிகனெவ்விடத்திலிருந்து வருவான்?

ஸ்தோத்திரத்திற் கருகனான உனக்குச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எனக்குப் பிரசன்னனாக வேண்டுமென்று பிராத்திக்கின்றேன். சுயம்பிரகாசா! நான்செய்த எக்குற்றங்களையும் புத்திரனு

டைய குற்றங்களை க்ஷமிக்குந் தந்தையைப்போலவும், தோழனுடைய குற்றத்தைப் பொறுக்குஞ் சிநேகனைப்போலவும், மனைவியின் குற்றத்தைப்பொறுக்கும் புருஷனைப்போலவும் என்னை க்ஷமிக்க வேண்டும்.

---

## தியானஸ்தோத்திர சதநாமாவளி.

1 ஓம் கேசவாய நம:—பிரவர்த்தியில் பிரம்ம விஷ்ணு ருத்திரனாகவும், லயத்தில் ஏகபரமாத்துமா வாகவு மிருப்பவனே.
2 ,, நாராயணாய நம:—நரர்களுக்கு ஆச்ரியமானவனே.
3 ,, மாதவாய நம:—மவுன தியானாதிகளா லடையுமவனே.
4 ,, கோவிந்தாய நம:—இந்திரியங்களை நடத்துபவனே.
5 ,, விஷ்ணுவே நம:—எதிலும் புகுந்துவியாபியமானவனே.
6 ,, மதுசூதாய நம:—அசுரசுபாவத்தை நசிக்கச் செய்பவனே.
7 ,, திரிவிக்கரமாய நம:—சகல ஜனங்களிலும் இருப்பவனே.
8 ,, வாமநாயன நம:—வேதங்களினால் புகழ்ப் பெற்றவனே.
9 ,, ஸ்ரீதராய நம:—கீர்த்தியை வகித்திருப்பவனே.
10 ,, ஹிருஷிகேசாய நம:—இந்திரியங்களை நியமிப்பவனே.
11 ,, பத்மநாபாயநம:—ஹிருதய கமலத்தி லிருப்பவனே.
12 ,, தாமோதராயநம:—சுத்த மனதினால் கிராஹியமானவனே.
13 ,, ஸங்காரஷ்ணாய நம:—பாவ நிர்மூல மாக்குபவனே.
14 ,, வாசுதேவாய நம:—சகலாத்ம ஸ்ரூபவனே,
15 ,, பிரத்யும்நாயநம:—சுவயம் ஜோதிஸ்வரூப மானவனே.
16 ,, அநிருத்தாயநம:—அந்தராஹித மானவனே.
17 ,, புருஷோத்தமாயநம:—சகல ஜீவர்களிலும் சிரேஷ்டனே.
18 ,, ஆதோவச்சுரயநம:—இந்திர யங்கோசரனே.
19 ,, நாரசிம்ஹாயநம!—எவ்விதத்திலும் நாசமடையாதவனே.
20 ,, அச்சுயுதாயநம:—எது நசித்தாலும் நீ நசியாதவனே.
21 ,, ஜநார்த்தநாயநம:—ஜனன மரணங்களை போக்குபவனே.
22 ,, உபேந்திராயநம:—பரமைஸ்வரிய முடையவனே.
23 ,, ஹரியே நம:—பாவங்களை போக்குவோனே.
24 ,, கிருஷ்ணாயநம:—மநதை ஆநந்தமாக்குபவனே.
25 ,, பூதாத்மனே நம:—பூதங்களுக்கு ஆத்மாவானவனே.

26 ,, பரமாத்மநே நம:—தனக்கோ ராத்மா வற்றவனே.
27 ,, புருஷாயநம:—குணானுபவத்தைத் தருபவனே.
28 ,, ஸாக்ஷிணேநம:—பக்தர்களுக்கு பிரதியக்ஷ மானவனே.
29 ,, க்ஷேத்ரஜ்ஞாயநம:—சகல சரீரங்களையும் அறிபவனே
30 ,, அக்ஷராயநம:—எப்போதும் குறைவு படாதவனே.
31 ,, யோகாயநம:—சரீர ஜெயமடைய உபாயமானவனே.
32 ,, ஸ்ரீமதேநம:—சகல சுந்தரமானவனே.
33 ,, ஸர்வாயேநம:—சகலத்திலும் வியாபித்திருப்பவனே.
34 ,, சிவாயநம:—மங்களகரமானவனே.
35 ,, ஸம்பவாயநம:—எப்புறத்திலும் தோன்றுபவனே.
36 ,, பிரபவாயநம:—உக்கிருஷ்டமானவனே.
37 ,, ஈஸ்வராயநம:—ஐஸ்வரிய முடையவனே.
38 ,, ஸ்வயம்புவேநம:—தானாக பிரகாசிப்பவனே.
39 ,, ஸம்பவேநம:—சுகத்தைத் தருபவனே.
40 ,, ஆதித்யாயநம:—சூரியமண்டலத்திலு மிருப்பவனே.
41 ,, அப்ரமேயாயநம:—அளவிடபடாதவனே.
42 ,, விஸ்வகர்மணேநம:—எல்லா கருமமுஞ் செய்பவனே.
43 ,, ஸாஸ்வதாயநம:—சதா ஜகத்வியா பாரம் செய்பவனே.
44 ,, பரபூதாயநம:—எப்போதும் அழியாதவனே.
45 ,, பாவித்ராயநம:—யாதிலுந்தட்டாத பரிசுத்தமானவனே.
46 ,, ஈஸாநாயநம:—சகலத்திற்கும் தலைவனாக இருப்பவனே.
47 ,, பிராணாயநம:—ஜீவர்களின் உஜ்ஜீவனமானவனே.
48 ,, சிரேஷ்டாயநம:—கொண்டாடத் தக்கினவனே.
49 ,, பிரஜாபதியேநம:—பிரஜைகளுக்குத் தலைவனானவனே.
50 ,, விக்கிரமாயநம:—கண்டிக்கும் சக்தியுடையவனே.
51 ,, ஆத்மவதேநம:—நின் மகிமையிலிருப்பவனே.
52 ,, ஸரணாயநம:—பிராணிகளுக்கு உபாயமானவனே,
53 ,, ஸர்வேஸ்வராயநம:—சர்வத்திற்கு மீசனே.
54 ,, ருத்ராயநம:—அன்பரை ஆநந்ததிவாழ்த்துவோனே.
55 ,, அமிருதாயநம:—மரண மற்றவனே.
56 ,, வேதாயநம:—ஞானஸ்வரூபமானவனே.
57 ,, அதீந்தராயநம:—சகல ஐஸ்வரியமுள்ளவனே.
58 ,, ஸத்யபராகிரமாயநம:—இந்திரியங்களை கடந்தவனே.
59 ,, அசிலாயநம:—தூக்க மற்றவனே.
60 ,, விபுவே நம:—எங்கும் பறந்தவனே.

61 ,, அப்ரமேயாத்மநே நம:—அளவிடப்படாதவனே:
62 ,, விஷிஸ்டாயநம:—மஹா பெரியவனே.
63 ,, அஸோகாயநம:—சோகமற்றவனே.
64 ,, ஸரபாயநம:—சகல சரீரங்களில் ஜீவிப்பவனே.
65 ,, ஹரியேநம:—பாவங்களை போக்குவோனே.
66 ,, தேவாயநம:—பிரகாசமுடைவனே.
67 ,, பரமேஸ்வாரயநம:—பாபமகற்றுவோனே.
68 ,, க்ஷமாயநம:—ஸாந்தஸ்வரூபனே.
69 ,, மநோஹராயநம:—மனதிற்குரம்மியனே.
70 ,, ஆதிதேவாயநம:—ஆதிபிரகாசனே.
71 ,, மஹாதேவாயநம:—பிரபலபிரகாசனே.
72 ,, அநந்தாத்மனேநம:—ஆத்மாக்களுக்கு சுகமளிப்பவனே.
73 ,, ஆநந்தாயநம:—சந்தோஷ மளிப்பவனே.
74 ,, ஸத்யதர்மிணேநம:—நித்திய தருமத்தைத் தருபவனே
75 ,, ஸதாநந்தாயநம:—சதா சுகமளிப்பவனே.
76 ,, பூர்ணயநம:—நிறைவானவனே.
77 ,, அவ்யக்தாயநம:—பூதங்களிள் மறைந்திருப்பவனே.
78 ,, அசலாயநம:—அசைக்க முடியாதவனே.
79 ,, சுந்தராயநம:—அழகுடையவனே.
80 ,, அசிந்தயாயநம:—நிரூபிக்க்கூடாதவனே.
81 ,, அணுவேநம:—அதிசூக்ஷம மானவனே.
82 ,, மஹாதேவாயநம:—மஹத்தானவனே.
83 ,, பிராணத்ருதேநம:—உஜ்ஜீவன மளிப்பவனே.
84 ,, ஏகாத்மனே நம:—தனியேகமானவனே.
85 ,, பூதாத்மனே நம:—பூதங்களுக்கு ஆத்மாவானவனே.
86 ,, சித்தாய நம:—நிறந்தரமானவனே.
87 ,, அமோகாயநம:—பழுதாகாதவனே.
88 ,, விஜயாயநம:—சிரேஷ்ட்டஜய மானவனே.
89 ,, ஹம்ஸாய நம:—அன்னமயமானவனே.
90 ,, பிரதாபனாயநம:—பரிசுத்தமானவனே.
91 ,, வரதாயநம:—பக்தர்களுக்கு வரமளிப்பவனே.
92 ,, புரந்தராயநம:—அக்ஞானத்தைப் பிளந்தவனே.
93 ,, லக்ஷிமிவதேநம:—சகலசம்பத் துள்ளவனே.
94 ,, ராமாயநம:—மனோ இரம்யமானவனே.
95 ,, பிரணவாயநம:—ஓங்காரமானவனே.

96 ,, அனந்தாயநம:—எங்கும் நிறைந்தவனே.
97 ,, லோகநாதாயநம:—உலககர்த்னே
98 ,, சுலோசநாயநம:—பிரகாசமானவனே.
99 ,, அமிர்தாயநம:—சரச மற்றவனே.
100 ,, ஆனந்தாயநம:—சுகரூப மானவனே.

(என்னை இரக்ஷிப்பாயாக.)

ஆவகாச முள்ளவர்கள் இந்த தியானஸ்தோதிர சதநாமவளிகளை வாசித்து, அவற்றின் அருத்தங்களை யறிந்து, அவற்றால் பரமேசுவரனுடைய பலகுணானுபங்களைப் பற்றி சிந்தித்து தியானித்தால் சுகிர்தமுண்டாகும்.

## ஸ்துதி.

நித்யம் நிரஞ்சநம் சுத்தம் நிஷ்களம் சாந்தமவ்யயம்
நிர்விகாரம், நிராகாரம், பரபிரஹ்மம் நமாம்யஹம்.

## இதன்கருத்து.

நித்யனாகியும், நிரஞ்சனனாகியும், களங்கமற்றவனாகியும், சாந்தனாகியும், நாசரஹிதனாகியும், நிர்விகாரியாகியும், இருக்கும் பெரும் பேருடையானுக்கு நமஸ்காரம்.

## நிர்வாண தந்திரம்.

1. நமஸ்தே நமஸ்தே ஜகஜன்மஹேதோ
நமஸ்தே நமஸ்தே மஹாகீர்த்தி கேதோ
நமஸ்தே நமஸ்தே மஹா புண்ய ஸேதோ
நமஸ்தே நமஸ்தே நமஸ்தே மஹேஸா

2. நமஸ்தே நமஸ்தே தயா ஸார சிந்தோ
நமஸ்தே நமஸ்தே பிரபன்னைக பந்தோ
நமஸ்தே நமஸ்தே மஹா தேவ சம்போ
நமஸ்தே நமஸ்தே நமஸ்தே மஹேஸா

3. நமஸ்தே நமஸ்தே மஹா விக்கின ஹாரின்
நமஸ்தே நமஸ்தே மஹா துக்கஹாரின்

நமஸ்தே நமஸ்தே மஹா பாப ஹாரின்
நமஸ்தே நமஸ்தே நமஸ்தே மஹேஸா

4. நமஸ்தே நமஸ்தே ஸதாநந்த பூதே
நமஸ்தே நமஸ்தே ஸகா மோக்ஷ பாணே
நமஸ்தே நமஸ்தே ஸதாநந்த மூர்த்தே
நமஸ்தே நமஸ்தே நமஸ்தே மஹேசா.

இதன் கருத்து.

1. பிரபஞ்ச சிருஷ்டிக்குக் காரணமானவனுக்கு நமஸ்காரம், பெரும் புகழ்பெற்றுபிரகாசிக்கிறவனுக்கு நமஸ்காரம். சம்சாரசாகரத்தைத்தாண்டுவோருக்கு சேதுவைப்போன்ற பரமேசுவரனுக்கு நமஸ்காரம் நமஸ்காரம்.

2. தையாசாகர மானவனுக்கு நமஸ்காரம். நம்பினோருக்கு முக்கியமானபந்துவாகுவோனுக்கு நமஸ்காரம், பெரியவனும், சுகத்தை தருபவனுக்கு நமஸ்காரம்

3. பெரிய விக்கினங்களை நீக்குபவனுக்கு நமஸ்காரம், பெரியகஷ்டங்களை நீக்குவோனுக்கு நமஸ்காரம், பெரியபாவங்களை போக்குவோனுக்கு நமஸ்காரம்.

4. எப்போதும் சத்யசுகைஸ்வரிய முடையவனுக்கு நமஸ்காரம், பக்தர்களுக்கு மோக்ஷத்தைத் தருபவனுக்கு நமஸ்காரம், சாந்தஸ்வரூபனுக்கு நமஸ்காரம். ஓ மஹாபிரபுவே! நமஸ்காரம், நமஸ்காரம்.

---

## பொதுஜனப்பிரார்த்தனை.

(மஹாநிர்வாணதந்திரம்.)

1. ஓம் நமஸ்தே ஸதேதே ஜகத்காரணாய,
நமஸ்தே சிதே ஸர்வ லோகாச்ரயாய,
நமோ த்வைத தத்வாய முக்தி ப்ரதாய,
நமோ பிரஹ்மணே சாச்வதாய.

2. த்வமேகம் சரண்யம் த்வமேகம் வரேண்யம்,
த்வமேகம் ஜகத்பாலகம் ஸ்வ ப்ரகாசம்,
த்வமேகம் ஜகத் கர்த்ருப்ர ஹர்த்ரு,
த்வமேகம் பரம் நிச்சலம் நிர்விகல்பம்.

3. பயாநாம் பயம் பீஷணம் பீஷணாநாம்,
கதிஹ் ப்ராணிநாம் பாவனம் பாவநாநாம்,
மஹோச்சைஹ பதாநாம் நியந்த்ருதவ மேகம்,
பரேஷாம் பரம் ரக்ஷணம் ரக்ஷணாநாம்.

4. வயம் த்வாம் ஸ்மராமோ வயம் த்வாம் பஜாமோ,
வயம் த்வாம் ஜகத் ஸாக்ஷி ரூபம் நமாம,
ஸதேகம் நிதானம் நிராலம்ப மீசம்,
பவாம்போதி போதம் சரண்யம் வ்ரஜாம.

(பிருஹதாரண்யம்.)

5. அஸதோமா ஸத்கமய, தமஸோமா ஜ்யோதிர்கமய,
மிருத்யோர்மா அம்ருதங்காமய, ஆவிரார்வீம ஏதி
ருதாயத்தே, தக்ஷணம் முகம் தேநமாம்பாஹிநித்யம்.

(இதன்கருத்து.)

1. ஸத்ஸ்வரூபனும், ஜகத்காரணனும் ஆகிய உனக்கு நமஸ்காரம், தியான ஸ்ரூபனும, ஸர்வலோக ஆஸ்ரயனும் ஆகிய உனக்கு நமஸ்காரம். ஒப்புயர்வான இரண்டாவது வஸ்துவற்றவனும், முக்தியளிப்பவனு மாகிய உனக்கு நமஸ்காரம்; பெரிய பொருளும் சகல வியாபியும், நித்யனும் ஆகிய உனக்கு நமஸ்காரம்.

2. நீ ஒருவனே அடைக்கலஸ்தானமானவன், நீ ஒருவனே பூஜநீயன்; நீ ஒருவனே உலகத்தைக் காப்பவன், தானாக விளங்குகிறவன்; நீ ஒருவனே உலகத்தைப் படைத்துக் காத்தழிக்க வல்லவன்; நீ ஒருவனே மேலானவன், சலனமற்றவன், விகார ரஹிதன்.

3. நீ சகல பயங்கர வஸ்துக்களுக்கும் பயங்கரன், பயாநகவஸ்த்துகளுக்கும் பயாநகன்; உயிர்களுக்கு துணை, பரமபாவநன், நீ

ஒருவனே மிகுந்த உயர்பதவிகளையும் ஆள்பவன், சர்வசிரேக்ஷடன் மஹா ரக்ஷகன்.

4. நாங்களுன்னை ஸ்மரிக்கின்றோம், நாங்களுன்னைத் துதிக்கின்றோம், உலக சாக்ஷிரூபனாகிய உன்னை நாங்கள் நமஸ்கரிக்கின்றோம், சத்தியஸ்வரூபனும், ஒருவனும், ஆச்ரயஸ்வரூபனும், அவலம்பரகிதனும், யாவற்றையும் நடத்துகிறவனும், ஸம்ஸாரக்கடலை கடக்க மரக்கலமும் ஆகிய உன்னை சரணடைகின்றோம்.

5. ஒ நாயகனே! எம்மை அசன்மார்க்த்தின்று நீக்கி சன்மார்க்கத்வத யடையச் செய்வாய்; எம்மை அஞ்ஞான இருளினின்று விடுவித்து சுஞ்ஞான ஒளியை அடையச்செய்வாய், அனித்திய நிலையினின்று நித்திய பதவியை அடைய யருள்வாய். ஒ ஸவப்ரகாசனே, எம்மருகில் பிரகாசிப்பாய், ஒ துக்கத்தைப் போக்கடிப்போனே உனது கருணையாகிய முகத்தினால் எம்மை எப்பொழுதும் காப்பாற்றுவாய். ஒ அளவற்ற சத்தியஸ்வரூபனே? நினது ஆஸ்திகத்துவத்தை எமக்குத் தெரிவித்தருள்வாய். நீ கருணாநிதியாகையால் எம்மை எப்பொழுது நின் கிருபா சமுத்திரத்தில் அமிழ்த்துவாய்.

---

## ஆளவந்தார் ஸ்தோத்திரங்கள்.

---

### உத்ருதம் - சுலோகம்.

அசிந்தியா மவயக்த மகந்த மவ்வியம்
விபும் பிரபும் பாவித பூதபாவநம்
த்ரைலோகிய விஸ்தார விசாரதாரகம்
ஹரிம் ப்ரபந்நோ ஸ்மிகதிம் மஹாத்மநாம்.

இதன் கருத்து.

இப்படிப்பட்டவன், அப்படிப்பட்டவனென்று, எண்ணக் கூடாதவனாகியும், அறியக்கூடாதவனாகியும், அந்த மற்றவனாகியும், நாசமற்றவனாகியும், எல்லாவற்றிலும் பிரகாசிப்பவனாகியும், சர்வ சக்தி

புடையவனுகியும், சர்வ ஞானமுடையவனுகியும், உலக சிருஷ்டிக்குக் காரணமான வனுகியும், மஹாத்மாக்களுக்கு ஆசிரயமானவனுகியும், பாவங்களைப் போக்குபவனுகியும் இருப்பவனுக்கு நமஸ்காரம்.

த்வமேவ மாதாச பிதாத்வ மேவ
த்வமேவ பந்தஸ்ச ஸகா த்வமேவ
த்வமேவ வித்யா திரவணத்வமேவ
த்வமேவ சர்வம் மமதேவ தேவ.

எனக்கு நீயே தாயும், நீயே தந்தையும், நீயே சிநேகிதனும் நீயே பந்துவும், நீயே வித்தையும், நீயே தருமமும், மற்றெல்லாம் நீயே யாகையால், உன்னை நமஸ்கரிக்கிறேன்.

நதர்ம நிஷ்டோ ஸ்பமி நசாத்ம வேதி
நபக்திமாமஸ் வச்சரணா விந்தே
அகிஞ்சநோ நங்யகதி ச்சரண்ய
தத்பாதமூலம் சரணம் பிரபத்யே.

நான் தர்ம நிஷ்டனல்லன், ஆத்ம வேதியாகேன், உனது பக்தனுமல்லன், கேவலமானவன்; ஆகையால், என்னை இரக்ஷிக்கவேண்டுகிறேன்.

---

## நித்ய பிரார்த்தனைகள்.

கரசரண க்ருதம்வா கர்மவாக்காய ஜம்வா
சிரவண நயநஜம்வா மாநஸ வா பாராதம்
விஹித மவிஹிதம்வா ஸர்வமேதச்சமஸ்
ஜயஜய கருணப்தே ஸ்ரீமஹாதேவ தேவ.

### இதன் கருத்து.

ஹே, மஹாதேவா? கை கால் களினுலும், வாக்கினுலும், தேகத்தினுலும், செவி, கண்களினுலும், மநசினுலும், சாஸ்திர விரோதத்தினுலும், மற்றெவ விதங்களினுலும் செய்த குற்றங்களை க்ஷமிப்பாயாக, ஜயாதிபதியே! உனக்கு நமஸ்காரம்.

பதாப்யாம் காரப்யாம் மநசாச வாசா
சித்தேந த்ருக்பியாம் சிரசாச பக்தியா
அஷ்டாங்க கைர்தேவ ப்ரணுயமாம்
கரோமி விஷ்ணே த்வமிம் கிருஹாணி.

இதன் கருத்து.

பாதங்களினுலும், கைகளாலும், மனசினுலும், வாக்கினுலும், சித்தத்தினுலும், கண்களினுலும், சிரசினுலும், பக்தியற்று, எட்டங்கங்களினுலும் செய்த சகல குறைவு குற்றங்களையும் க்ஷமிப்பாயாக. எங்கும் நிறைந்த எம்பெருமானே, உனக்கு நமஸ்காரம், நமஸ்காரம்.

---

## பிரார்த்தனைகள்.

## வசந்ததிலகா விருத்தங்கள்.

ஹேதேவதேவ பகவம் ஸ்வம ஹீச வந்தியம்
ஸ்தேசக்த யோ பரிமிதா பரிபாந்தி விஸ்வ
அதியத்வ தீய சரணுப்ஜ மஹாம்பிரணமியாம்
ஸ்தோஷியே ஸமஸ்த சுக்தம் பாமே.சு வாமதாம்.

ஓ பகவானே! நீ, நமஸ்கரிக்கப்படத் தக்கவனுக இருக்கிறுய், உனது சக்தி உலகபரிபாலனம் செய்து வருகின்றது; ஆகவே நான் இப்போது நின் திருப்பாதங்களை பணிகின்றேன, எனக்கு எல்லாவித சுகங்களையும் பிரசாதித்தருள்வாயாக, உனக்கு நமஸ்காரம், நமஸ்காரம்.

ஹேவிஸ்வ பாலக விபோ த்வமஜ ஸமர்த்த
ஏவம் மமோ பரிதயாங்குரு தேவ தேவ
த்வத்பாத பங்கஜ யுகேமம மாநசம்
மாமுத்தரஸ்வ பவதாசரணம் ப்ரபத்யே.

இதன் கருத்து.

பிரபஞ்ச பரிபாலகனுன பகவானே! பிரபுவே! நீ பிறப்பற்றவனும், சகல சக்திமானுமானவன என்மீது கருணை புரிந்து என

துமனதை நின் திருப்பாதக் கமலத்திலிருத்தி, பாவக்கடலைக் கடக்க அருள் புருவாயாக.

## காலைவந்தனம்.

லோகேச சைதந்ய மாயாதிதேவ
மாங்கலிய விஷ்ணே பாவதா ஞயைவ
ஹிதாய லோகஸ்ய தவபிராயார்த்தம்
ஸம்ஸார யாத்ர மதுவர்த யிஷ்யே.

### இதன் கருத்து.

உலகங்களை நியமிக்கும் ஓ பரமேசுவரனே! ஞானஸ்வரூபமானவனே, சர்வ பிரகாச முள்ளவனே, மங்களஸ்வரூபனே, ஸர்வவியாபகனே, உனது கட்டளையின்படி உலகத்தில் சுகமும், அன்பும் பெற்றுய்ய பிரார்த்திக்கின்றேன்.

## சரணுஷ்டகம் - காலைவந்தநம் - வசந்ததிலகம்.

ஹேவிஸ்வ வந்திய பஜதாம் பரிபாலகஸ்வாம்
தாஸஸ்ய்ததேந்ய புருஷஸ்து நசாஸ்ரயோஸ்தி
ஆதார மேவ விருத்யே தவ ஸந்ததந்தம்
மாம்பாஹி தேவ பகவன் சரணுகதந்தே.

பிரபஞ்சத்தாரால் நமஸ்கரிக்கத்தக்கவனே, உன்னை சேவிப்பவரை பரிபாலனம் செய்யப்பட்டவனன்ருே? கேவலமான என்னை ஆதரிக்க வேறு யாருமில்லை; ஆகவே, உனது ஆதாரத்தையே ஹிருதயத்தில் சதா விரும்பி ஸ்துதிக்கிறேன். உனது சரணத்தைத் தழுவி இருக்கும் என்னை இரக்ஷிப்பாயாக.

பாபாநிமே சகல தோஷயுதாநி நாதா
துஷ்டஸ்பாவ மகிலஞ்ச நிவார யேச
ஸம்சார சாகர மஹாபடபாந லச்ச
மாம்பாஹி தேவ பகவந் சரணுகதந்தே.

### இதன் கருத்து.

ஓ சுவாமி! எனது பாவங்கள் பயங்கரமானவை, சகல துஷ்டசுபாவத்தையும், தப்பிதங்களையும், நீக்குவாய். சம்சார சாகரத்

திலுண்டாகும் துக்கத்தைப் போக்குவாய். உனது சரணத்தைய டைந்த என்னை இரக்ஷிப்பாயாக.

ஹேதேவ தேவ சரணாகத வத்சலோசி
காருண்யசிந்து ரசிதேஷி காரவலம்பம்
நாரம்புந ஸ்வசிரஸர் மகசா நமாமி
மாம்பாஹி தேவ பகவர் சரணாகதர்தே.

இதன் கருத்து

ஹேதேவா! நீ நம்பினவர்களிடம் பிரீதியுள்ளவன், தயாசமுத்திரன், உனது திருகரங்களை எனக்காதாரமாகக் கொடுப்பாய்! எனது சிரசினாலும், மனதினாலும், வணங்குகின்றேன். உனது சரணத்தையடைந்த என்னை ரக்ஷியும் சுவாமி.

---

## சாயரக்ஷையில் செய்யவேண்டிய பாபக்ஷய ஸ்தோத்திரங்கள்:

ஜகந்நாத ஹேதேவ தேவாதிபத்வாம்
க்ருதாபஞ்சலி பிரார்த்தயேஹநமஸ்தே
தயாகாத சித்தே மதீயந்து ஸர்வம்
க்ஷமாஸ்பராதம் ப்ரபோ பாஹ்யநாதம்.

இதன் கருத்து

பிரபஞ்சத்தின் கர்த்தனாகிய பரமேசுவரனே, ஸ்வயம் பிரகாசமானவனே, தேவதேவர்களுக்கும் பிரபுவானவனே, யான் உன்முன் கைகூப்பிக்கொண்டு பிரார்த்திக்கிறேன். உனக்கு நமஸ்காரம். ஒ தயாநிதி, ஓ தீரனே, எனது அபராதங்களை க்ஷமித்து திக்கற்றவனாகிய என்னை ரக்ஷிப்பாயாக.

மஹாகர்ம பாஸைர் நிபத்தோஸ்மி தேவ
மஹாத்கால சக்ரேண கிராஹ்யோஹ மேவ
மஹாபாப ராசேல்க ப்ரவாஹே பத்மதம
க்ஷமஸ்வா பராதம் ப்ரபோ பாஹ்யநாதம்.

## இதன் கருத்து.

ஓ மஹாதேவா! நான் மஹா கர்மங்களினால் கட்டுபட்டவன், காலசக்கிரத்தினால் பிடிக்கப்பட்டவன். பெரிய பாவ சமுத்திரத்தில் விழுந்தவன்; இப்படிப்பட்ட ஏழை ஆகையால், எனது அபராதங்களை க்ஷமித்து பாதுகாப்பாயாக.

ப்ரபோபாஹி மாம்பாஹி மாமபாஹி தேவ
மமப்ராண தாதாஹி தாதாத்வ மேவம்
தவா நுக்ரஹேண வசவுகியம் லபேயம்
க்ஷமஸ்வா பராதம் ப்ரபோ பாஹ்யநாதம்.

## இதன் கருத்து.

ஓ தீராதிதீரனே, என்னை ரக்ஷிப்பாய், என்னை காப்பாய், நீ எனக்கு பிராணனைக் கொடுத்தவன், போஷிப்பவன், உன்னாலேயே சுகத்தையடைகின்றேன். ஆகையால், எனது அபராதங்களை க்ஷமித்து இரக்ஷிப்பாயாக.

த்வயா சேதிதம் கோடிசோ பக்த கஷ்டம்
அதிப்ரேம குர்தவா தயா தாந தத்தம்
தவதீய சிரயாத்பிராப்ய தே பூர்ண காமம்
க்ஷமஸ்வாபராதம் பிரபோ பாஹ்ய நாதம்.

## இதன் கருத்து.

ஓ! தயாநிதியே! உன்னால் தயை தானம் கொடுக்கப்படுகிறது. பக்தர்களுடைய கஷ்டங்களை அநேகவிதங்களாக கண்டிக்கப்படுகிறன. உனது கிருபையால் பக்தர்களுக்கு குறைவற்ற இஷ்ட லாபங்கள் உண்டாகின்றன. ஆகவே, ஏழையாகிய எனது அபராதங்களை க்ஷமித்து ரக்ஷிப்பாயாக.

த்வதீயாம் ஹிருதா கேவலாசாந் ததேயம்
த்வகிரேம் ஹாதீந பாஷாம் ததேயம்
மஹாபாப ராசவ் மதீயே நலோகியம்
க்ஷமாஸ்வபராதம் ப்ரபோ பாஹ்ய நாதம்.

## இதன் கருத்து.

ஹே பிரபுவே! நீ எனது கோரிக்கைகளை நிறைவேற்றுவாயென்று மனதிற்கொண்டிருக்கிறேன். உனது மஹிமையைபற்றி எனது கேவல வாக்கினால் ஸ்மரிக்க முடியுமோ? ஆகவே, என் பாவங்களைக்ஷமித்து பாது காப்பாயாக.

த்வமே வாஸி கர்தா த்வமேவாஸி பர்தா
க்ருபாளோ ப்ரபோ த்வம் ஸமஸ்தார்தி ஹர்த
அஹம் நப்ர பச்யாமி தத்வ ஸமர்த்தம்
க்ஷமாஸ்வபராதம் ப்ரபோ பாஹ்யநாதம்.

## இதன் கருத்து.

ஓ! சிருஷ்டிகர்த்தனே, பிரபஞ்ச போஷகனே, ஏ! தாயா நிதியே, ஓ தீரனே, எவ்வித கஷ்டங்களையும் நீக்குபவன் நீ யல்லவோ? நான் எவ்வளவு கேவலமானவன் பாராய்? எனது அபராதங்களை க்ஷமித்து ஆதரிப்பாயாக.

அஹம் ரிக்திபக்த ஸ்தவயா ரக்ஷணீயோ
பவாப் தவ் நிமக்நே ஸ்ய்ய தஸ்தார ணீய
ஸமுத்தார யத்வம் ப்ரபோ தைநிய வம்தம்
க்ஷமாஸ்வாபராதம் பிரபோ பாஹ்யநாதம்.

## இதன் கருத்து.

ஓ அநாதரக்ஷகா, நான் உன்னிடம் ரக்ஷணையைப்பெற்றுய்ய எதிர் பார்க்கிறவன், சம்சார சாகரத்தில் மூழ்கினவன். ஆகையால் அந்தச் சாகரத்திலிருந்து என்னை எடுத்து, எனது அபராதங்களை க்ஷமித்து ஆதரிப்பாயாக.

ஸதா ஸர்வதாமே பலம் தத்வ தீயம்
கிருபாளோ மஹாசங்கடே பாலநீயம்
விலாபம் வினமாம் வேத்கோம தீயம்
க்ஷமாஸ்வாபராதம் ப்ரபோ பாஹ்யநாதம்.

இதன் கருத்து.

ஓ அதீந்திரயனே, எனது பலனெல்லாம் உன்னைச் சார்ந்தது; ஆகவே, எனது கஷ்டங்களை நீக்குவாய். எனது துக்கத்தைப் போக்கடிப்பாய். எனது அபராதங்களை க்ஷமித்து ஆதரிப்பாயாக.

யதா திரக்ஷயஸே கர்மமூலம் மதீயம்
ததா பாப்யஹம் கோகிருத்வாத ரேயாம்
கிருதம்னோ மயா ஸ்ரேய சம்மாம் ஸதாத்வம்
க்ஷமாஸ்வாபராதம் பிரபோபாஹ்யநாதம்.

இதன் கருத்து.

ஓ கருணாநிதி, நீ எப்போது எனது கர்மங்களை காண்கிறுயோ அப்போதே எனது பாவங்களின் சுவரூபத்தையறிகிறாய். எதனாலந்த பாவங்களை போக்குவேனோ அறிகிலேன். எவ்வித புண்ணியங்களையும் செய்ய சக்தியற்றவன். ஆகையால் எனது அபராதங்களை க்ஷமிப்பாயாக.

ப்ரபோ! ஹேப் ரபோ! ஹே ப்ரபோ! ஹேப்ரபோ!
அஹம் த்வஸ்மீபே நமாமி ப்ரபோஹே
விநா நாஸ்தி மோக்ஷகோ நியோ புவந்தம்
க்ஷமாஸ்வபராதம் ப்ரபோ பாஹிய நாதம்.

இதன் கருத்து

ஓ பிரபுவே! நான் உன் சமீபத்தில் நமஸ்கரிக்கின்றேன். உன்னைவிட எனக்கு வேறு இரக்ஷகனில்லை, ஆகவே, எனது அபராதங்களை க்ஷமிப்பாயாக.

அதி ப்ரேம பாவை ரஹம்சிந்த யாமி
இதம்சுவல்ப வாகியம் தவாகிரேவா தாமி
நசை வாஸ்ரயே நியந்த வைவாச்ரயாமி
ப்ரபோக்ரிம் ப்ரபோத்வாம் ப்ரபோத்வாஸ்ரயாமி.

இதன் கருத்து.

ஓ பிரபுவே! நான் ஆழ்ந்த அன்பினால் தியானிக்கிறேன். எனது கேவலமான மழலை வார்த்தைகளால் உன்னைத் துதிக்கின்

றேன். இனி உன்னைவிட்டு எவரையும் துதியேன். உனது திருப்பாத கமலங்களில் ஆசிரயத்து நமஸ்கரிக்கின்றேன். ஆகையால் எனது அபராதங்களை க்ஷமிப்பாயாக.

---

வினா—இனித்தமிழ் நாட்டுக் கவிகளுடையவும், ஞானிகளுடையவும், பிரார்த்தனை கீதங்களிற் சிலவற்றைச் சொல்லுங்கள் கேட்போம்?

விடை—அப்படியே சொல்லுகிறோம் கேளும்.—

## தமிழ்நாட்டுக்கவிகளும், ஞானிகளும்
## இயற்றிய
## பிரார்த்தனை கீதங்கள்.

## ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்தோத்திரம்.

தேசிக - தோடிராகம்.

---

மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப்பாதமே மனம்பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேனினிப் பிறவாத தன்மை வந்தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க் கறையூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவா வுனைநான் மறக்கிலுஞ் சொல்லுநா நமச்சிவாயவே.

ஓவுநா ளுணர் வழியு நாளுயிர் போகு நாளுர் பாடைவேற்
காவுநாளிவை யென்ற லாற்கரு தேன் கிளர் புனற்காவிரிப்
பாவுதண்புனல் வந்திழி பரஞ்சோதிபாண்டிக் கொடுமுடி
நாவலா வுனை நான் மறக்கிலுஞ் சொல்லு நாமச்சிவாயவே.

எல்லையில்புக ழெம்பிரானெந்தை தம்பிரா னென்பொன் மாமணி
கல்லையுந் திளவம்பொழிந்திழி காவிரி யதன்வாய்க்கரை
நல்லவர்தொழு தேத்துஞ்சீர்க்கரை யூரிற்பாண்டிக் கொடுமுடி
வல்லவா வுனைநான்மறக்கிலுஞ் சொல்லுநா நமச்சிவாயவே.

அஞ்சினார்க் கரணாதி யென்றடி யேனுநான் மிக வஞ்சினேன்
அஞ்சலென்றடித் தொண்டனேற்கரு ணல்கினாய்க்கழ கின்றதென்

பஞ்சின்மேலடிப் பாவைமார் குடை ந்தாடுபாண்டிக் கொடுமுடி
நஞ்சணிகண்ட னான்மறக்கிலுஞ் சொல்லுநா நமச்சிவாயவே.

விரும்பிநின்மலர்ப் பாதமேநினைந்தேன் வினைகளும் விண்டன
நெருக்கிவண் பொழில் சூழ்ந்தெழில்பெற நின்றகாவிரிக்கோட்டி
டைக்
குரும்பை மென்முலைக் கோதைமார்குடை ந்தாடுபாண்டிக் கொ
[டுமுடி
விரும்பனே யுனை நான்மறக்கிலுஞ் சொல்லுநா நமச்சிவாயவே.

---

## திருநாவுக்கரசுசுவாமிகள் தேவாரங்கள்.

இராகம் - சங்கராபரணம்.

இருநிலனாய்த்தீயாகிநீருமாகியியமானனாயெறியுங்காற்றுமாகி
யருநிலையதிங்களாய்நாயிறாகி யாகாசமாயட்டமூர்த்தியாகிப்
பெருநலமுங்குற்றமும்பெண்ணுமாணும் பிறருருவந்தம் முருவுந்தா
[மேயாகி
நெருநலையாயின்றாகி நாளையாகி நிமிரபுன்சடையடிகணின்றவாறே.

மண்ணாகிவிண்ணாகிமலையுமாகி வயிரமுமாணிக்கந்தானேயாகிக்
கண்ணாகிக்கண்ணுக்கோர்மணியுமாகிக்கலையாகிக் கலைஞானந்
தானேயாகிப்.
பெண்ணாகிப்பெண்ணுக்கோராணுமாகிப் பிரளத்துக்கப்பாலோ
[ரண்டமாகி
எண்ணாகியெண்ணுக்கோரெழுத்துமாகி எழுஞ்சுடராயெம்மடிக
[ணின்றவாறே.

தீயாகிநீராகித்திண்மையாகித்திசையாகியத்திசைக்கோர்தெய்வ
[மாகித்
தாயாகித்தந்தையாய்ச் சார்வுமாகித்தாரகையுநாயிறுந்தண்மதியு
[மாகித்
காயாகிப்பழமாகிப்பழத்தினின்ற விரதங்கணுகர்வானுந்தானேயாகி
நீயாகிநானாகிநேர்மையாகிநெடுஞ் சுடராய்நிமிர்ந்தடிகணின்றவாறே.

அப்பனீயம்மைநீயையனுநீ யன்புடையமாமனுமாமியுநீ
யொப்புடையமாதருமொண்பொருளுநீ யொருகுலமுஞ்சுற்றமு
மோரூருநீ

துய்ப்பனவுமுய்ப்பனவுந்தோற்றுவாய்நீ துணையாயென்னெஞ்சந்
[துறப்பிப்பாய்நீ
யிப்பொன்னீயிம்மணிநீயிம்முத்துநீயிறைவனீயேறூர்ந்தசெல்வனீயே.

திருவேயென்செல்வமேதேனேவானோர் செழுஞ்சுடரே செழுஞ்சு
[டர்நற்சோதிமிக்க
வுருவேயென்னுறவே யென்னூனே யூனின்னுள்ளமேயுள்ளத்
[தினுள்ளேநின்ற
கருவேயென்கற்பகமே கண்ணேகண்ணிற்கருமணியே மணியாடு
[பாவாய்காவா
யருவாயவல்வினைநோயடையாவண்ண மாவடுதண்டுறையுறையும
மரரேறே.

ஆட்டுவித்தாலாரொரு வராடாதாரே யடக்குவித்தாலாரொருவ
[ரடங்காதாரே
யோட்டுவித்தாலாரொருவரோடாதாரே யுருகுவித்தாலாரொரு
[வருருகாதாரே
பாட்டுவித்தாலாரொருவர் பாடாதாரே பணிவித்தாலாரொருவர்
[பணியாதாரே
காட்டுவித்தாலாரொருவர்காணாதாரே காண்பாரார்கண்ணுதலாய்க்
[காட்டாக்காலே

---

## ஸ்ரீமாணிக்கவாசகர் — திருவாசகம்.

இராகம் - காம்போதி.

கீதமினிகுயிலே கேட்டியே லெங்கள்பெருமான்
பாதமிரண்டும் வினவிற்பாதாள மேழினுக்கப்பாற்
சோதிமணிமுடிசொல்லிற் சோல்லிறந்துநின்றதொன்மை
யாதிகுணமொன்றுமில்லாணந்த மிலான்வரக்கூவாய்.

சுந்தரத்தின்பக்குயிலே சூழ்சுடர்ஞாயிறுபோல
வந்தரத்தேநின்றிழிந்திங்கடிய வராசையருப்பான்
முந்து நடுவு முடிவுமாகிய மூவரறியாச்
சிந்துரச்சேவடியானைச்சேவகனைவரக்கூவாய்.

செழுக்கமலத் திரளனநின்சேவடிசேர்ந்தமைந்த
பழுத்தமனத்தடியருடன் போயினர்யான்பாவியேன்
புழுக்கணுடைப்புன் குரம்பைப்பொல்லாக் கல்விஞானமிலா
வழுக்குமனத்தடியே னுடையாயுன்னடைக்கலமே

---

## அச்சோப்பதிகம்.

### கலிவிருத்தம்.

இராகம் - கேதாரம்.

முத்திநெறி யரியாத மூர்க்கரோடு முயல்வேனைப்
பத்திநெறி யரிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
வத்தமெனக் கருளியவா றார்பெறுவாரச்சோவே.

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்று மில்லாத கூத்தன்றன் கூத்தையெனக்
கறியும்வண்ண மருளியவா றார்பொறுவாரச்சோவே.

பொய்யெல்லாமெய்யென்று புணர்முலையார்போகத்தே
மையலுறக்கடவேனை மாளாமே காத்தருளித்
தையலிடங்கொண்டபிரான் றன்கழலேசேரும்வண்ண
மையனெனக்கருளியவா றார்பெறுவாரச்சோவே.

மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டுவிழக்கடவேனை
யெண்ணமிலாவன்பருளி யெனையாண்டிட்டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீ றணிவித்துத் தூய்நெறியேசேரும்வண்ண
மண்ணலெமக்கருளியவா றார்பெறுவாரச்சோவே.

பஞ்சாயவடிமடவார் கடைக்கண்ணாலிடர்ப்பட்டு
நெஞ்சாயதுயர்கூர நிற்பேனுன்னருள்பெற்றே
னுய்ஞ்சேனுடையா னேயடியேனைவருகவென்
றஞ்சேலென்றருளியவா றார்பெறுவாரச்சோவே.

வெந்துவிழுமுடற்பிறவி மெய்யென்றுவினைபெருக்கிக்
கொந்துகுழற்கோல்வளையார் குவிமுலைமேல்வீழ்வேனைப்
பந்தமறுத்தெனையாண்டு பரிசறவென்றுரிசமறுத்
தந்தமெனக்கருளியவா றார்பெறுவாரச்சோவே.

தையலார்மையலிலேதாழ்ந்து விழ்க்கடவேனைப்
பையவேகொடுபோந்து பாசமெனுந்தாழுருவி
யுய்யுநெறிகாட்டுவித்திட் டோங்காரத்துட்பொருளை
ஐயனெனக்கருளியவா றார்பெறுவாரச்சோவே.

சாதல்பிறப்பென்னுந் தடஞ்சுழியிற்றடுமாறிக்
காதலின்மிக்கணியிழையார் கலவியிலேவிழுவேனை
மாதொருகூறுடையபிரான் றன்கழலேசேரும்வண்ண
மாதியெனக்கருளியவா றார்பெறுவாரச்சோவே.

செம்மைநலமறியாத சிதடரொடுந்திரிவேனை
மும்மைமலமறுவித்து முதலாயமுதல்வன்றா
னம்மையுமோர்பொருளாக்கி நாய்ச்சிவிகையேற்றுவித்த
வம்மையெனக்கருளியவா றார்பெறுவாரச்சோவே.

செத்திடமும்பிறந்திடமுஞ் சாகாமலிருந்திடமு
மித்துணையும்றியாதா ரறியுமறிவெவ்வறிவோ
வொத்தநிலத்தொத்தபொருளொருபொருளின்பெரும்பயனை
யத்தனென்னக்கருளியவா றார்பெறுவாரச்சோவே.

படியதனிற்கடினசித்தம் பசுபாசந்தவிரவிடுங்
குடிமையிலேதிரிந்தடியேன் கும்பியில்வீழாவண்ண
நெடியானுநான்முகனு நீர்காண்றுங்காணவொண்ணா
வடிகளெனக்கருளியவா றார்பெறுவாரச்சோவே.

பாதியெனுமிரவுறக்கிப் பகலெனக்கேயிரைதேடி
வேதனையிலகப்பட்டு வெந்துவிழ்க்கடவேனைச்
சாதிகுலம்பிறப்பறுத்துச் சகமறியவெனையாண்ட
வாதியெனக்கருளியவா றார்பெறுவாரச்சோவே.

## பட்டினத்தடிகள்.

### மன்னிப்பு வேண்டல்.

இராகம் - பைரவி.

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையு நினையாப் பிழையுநின் னஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருளும் கச்சி யேகம்பனே.

சொல்லால் வருங்குற்றஞ்சிந்தனை யால்வருந் தோடஞ்செய்து
பொல்லாத தீவினை பார்வையிற் பாவங்கள் புண்ணிய நூல்
அல்லாத கேள்வியைக் கேட்டிடுந் தீங்குகள் யாவுமற்
றெல்லாப் பிழையும் பொருத்தருளாய் கச்சி யேகம்பனே.

கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங்கோள்கள்
கல்லாமற் கைதவரோடிணங் காமற் கனவிலும் பொய்
சொல்லாமற் சொற்களைக் கேளாமற் றோகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே.

---

## திருவாய்மொழி - நம்மாழ்வார்.

விருத்தம் - பண் - முதிர்ந்தகுரிஞ்சி - தாளம் - ஏமொத்து.
கமாசுராகம் - ஆதிதாளம்.

உயர்வற வுயர்நல முடையவன் யவனவன்
மயர்வற மதிநல மருளினன் யவனவன்
அயர்வறு மமரர்க ளதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழு தெழென் மனனே.

மனனக மல மற மலர் மிசை யெழுதரும்
மனனுணர் வள விலன் பொறி யுணர் வவையிலன்

இனனுணர் முழுநல மெதிர்நிகழ் கழிவினும்
இனனிலனென் னுயிர்மிகு நரையிலனே.

இலனது வுடையனி தெனநினை வரியவன்
நிலனிடை விசும்பிடை யுருவின னருவினன்
புலனொடு புலனல னொழி விலன் பரந்த வந்
நலனுடை யொருவனை நணுகினம் நாமே.

நாமவ னிவனுவன வளிவளுவளெவன்
தாமவ ரிவருவர துவிது வுதுவெது
வீமவை யிவை யுவை யவை நலந்தீங்கவை
யாமவை யாய வை யாய்நின் றவவரே.

அவர்வர் தம தமதறி வறிவகை வகை
அவரவ ரிறையவ ரெனவடி யடைவர்கள்
அவரவ ரிறையவர் குறைவில ரிறையவர்
அவரவர் விதிவழி யடையநின் றனரே.

---

## திருமங்கையாழ்வார் - கலிவிருத்தம்.

முகாரி ராகம் - அடதாளம்.

தாயேதந்தை யென்றுந் தார மேகிளை மக்க ளென்றும்
நோயேபட் டொழிந்தே னுன்னைக் காண்பதோ ராசையினல்
வேயேய் பூம்பொழிற் சூழ் விரையார் திரு வேங்கடவா
நாயேன் வந்தடைந்தே நல்கியா ளென்னைக் கொண்டருளே.

மானேய் கண்மடவார் மயக்கிற்பட்டு, மாநிலத்து
நானே நானுவித நரகம்புகும் பாவஞ் செய்தேன்
தேனேய் பூம் பொழிற்சூழ் திரு வேங்கடமாமலை,
நானுய் வந்தடைந்தே னடியேனை யாட் கொண்டருளே.

கொன்றேன் பல்லுயிரைக் குறிக்கோளொன் றி லாமையினல்
என்றேனுமிரந்தார்க் கினிதாகவுரைத் தறியேன்

[library stamp] ...சென்னை-600 008.

குன்றே மேகமதிர் குளிர்மா மலைவேங்கடவா
அன்றேவந்தடைந் தேனடியேனையாட் கொண்டருளே.

குலந்தா னெத்தனையும் பிறந்தே யிறந்தெய்த் தொழிந்தேன்
நலந்தானொன்றுமிலே னல்லதோறஞ் செய்துமிலேன்
நிலந்தோய்நீண் முகில்சேர் நெறியார் திருவெங்கடவா
அலைந்தே வந்தடைந் தேனடியேனை யாட்கொண்டருளே.

எப்பாவம் பலவுமிவையே செய்திளைத்தொழிந்தேன்
துப்பாநின்னடியே தொடர்ந்தேத்தவுங்கற்கின்றிலேன்
செப்பார் திண் வரைசூழ்திரு வேங்கடமாமலைய, யென்
அப்பாவந் தடைந்தே னடியேனை யாட்கொண்டருளே.

---

எழுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்,

சங்கராபரணம் - திரிபுடைதாளம்,

வாடினேன் வாடிவருந்தினேன் மனத்தால் பெருந்துயரிடும்பையிற் [பிறந்து
கூடினேன் கூடி யிளையவர்தம் மோடவர்தருங்கல வியேகருதி
ஓடினே னோடி யுய்வதோர்பொருளா லுணர் வெனும் பெரும்பதம் [தெரிந்து
நாடினேனாடி நான் கண்டுகொண்டேன் நாராயணாவென்னுநாமம்.

ஆவியேயமுதேயென நினைந்துருகி யவரவர் பணைமுலைதுணையாப்
பாவியேனுணரா தெத்தனை பகலும் பழுது போயொழிந்தன நா [ள்கள்
தூவிசேரன்னந் துணையொடு புணருஞ்சூழ் புனற்குடைந்தையே [தொழுயதன்
நாவினாலுய்ய நான் கண்டு கொண்டேன் நாராயணா வென்னுநாமம்.

எம்பிரா னெந்தை யென்னுடைச் சுற்ற மெனக்கர செ்னனுடைவா [ணாள்
அம்பினா லரக்கர் வெருக்கொள நெருக்கிய வருயிர் செகுத்த வெம் [மண்ணல்.

வம்புலாஞ்சோலை மா மதிட்டஞ்சை மாமணிக் கோயிலேவணங்கி
நம்பிகாளுய்ய நான் கண்டுகொண்டேன் நாராயணா வென்னுநாமம்.

கற்றிலேன் கலைகளையு புலன்கருதுங் கருத்துளே திருத்தினேன்
[மனத்தைப்
பெற்றி லேனதனுற் பேதையேனன்மை பெருநிலத்தாருயிர்க் கெல்
[லாஞ்
செற்றமே வேண்டித் திரிகு வேன்றவிர்ந்தேன் செல்கதிக்குய்யுமா
[றெண்ணி
நற்றுணையாகப் பற்றினே னடியேன் நாராயணாவென்னுநாமம்,

குலந்தருஞ்செல்வந் தந்திடுமடியார் படுந் துயராயினவெல்லாம்
நிலந்தரஞ்செய்யும்நீள் விசும்பருளு மருளொடு பெருநில மளிக்கும்
வலந்தருமற்றுந்தந்திடும் பெற்றதாயினு மாயின செய்யும்
நலந்தருஞ்சொல்லை நான்கண்டுகொடேன் நாராயணா வென்னுநா
[மம்.

---

நம்மாழ்வார் - இராகம் - சங்கராபரணம்.

திருமானான்முகன் செஞ்சடையா னென்றிவர்களெம்
பெருமான் றன்மையை யாரறிகிற்பார் பேசியென்
ஒருமா முதல்வவூழிப்பிரா னென்னை யாளுடைக்
கருமாமேனியனென் பேனென் காதல்கலக்கவே.

முனியேநான் முகனேமுக்கணப்பா வென்பொல்லாக்
கனிவாய்த்தாமரைக்கட் கருமாணிக்கமே யென்கள்வா
தனியேனாருயிரே யென்றலைமிசையாய்வந்திட்
டினிநான் போகலொட்டே னென்று மாயஞ்செய்யே
[லென்னையோ

---

# தாயுமானவர்பாடற்றிரட்டு,

## பன்னிருசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

### இராகம்தோடி.

அங்கிங் கெனாதபடி யெங்கும்ப்ர காசமா
யானந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
யகிலாண்ட கோடியெல்லாந்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாமனின்றதெது சமயகோ டிகளெலாந்
தந்தெய்வ மெந்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
வெங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு முள்ளதெதுமேல்
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெதுவது
கருத்திற் கிசைந்ததுவே
கண்டன வெலாமோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ் சலிசெய்குவாம். (1)

ஊரனந் தம்பெற்ற பேரனந்தஞ் சுற்று
முறவனந் தம்வினையினால்
உடலனந் தஞ்செய்யும் வினையனந் தங்கருத்
தோவனந் தம்பெற்றபேர்
சீரனந் தஞ்சொர்க்க நரகமு மனந்தநற்
றெய்வமு மனந்தபேதம்
திகழ்கின்ற சமயமு மனந்தமத னான்ஞான
சிற்சத்தியா லுணர்ந்து
காரனந் தங்கோடி வருஷித்த தெனபவன்பர்
கண்ணும் விண் ணுந்தேக்கவே

கருதரிய வானந்த மழைபொழியு முகிலைநங்
கடவுளைத் துரியவடிவைப்
பேரனந் தம்பேசி மறையனந் தஞ்சொலும்
பெரியமௌ னத்தின்வைப்பைப்
பேசருமனந்தபத ஞானவா னந்தமாம்
பெரியபொருளைப்பணிகுவாம். (2)

அத்துவித வத்துவைச் சொப்ரகா சத்தனியை
அருமறைகண் முரசறையவே
அறிவினுக் கறிவாகி யானந்த மயமான
ஆதியை யநாதியேக
தத்துவ சொரூபத்தை மதசம் மதம்பெறாச்
சாலம்ப ரகிதமான
சாசுவத புட்கல நிராலம்ப வாலம்ப
சாந்தபத வ்யோம நிலையை
நித்தநிர் மலசகித நிஷ்ப்ரபஞ் சப்பொருளை
நிர்விஷய சுத்தமான
நிர்விகா ரத்தைத் தடத்தமாய் நின்றொளிர்
நிரஞ்சன நிராமயத்தைச்
சித்தமறி யாதபடி சித்தத்தி னின்றிலகு
திவ்யதே சோமயத்தைத்
சிற்பர வெளிக்குள்வளர் தற்பரம தானபர
தேவதையை யஞ்சலிசெய்குவாம். (3)

வாசகயிங்கரிய மன்றியொரு சாதன
மனோவாயி நிற்றும்வண்ணம்
வாலாய மாகவும் பழகியறி யேன்றுறவு
மார்க்கத்தி னிச்சைபோலே
நேசானு சாரியாய் விவகரிப் பேனந்த
நினைவையு மறந்தபோது
நித்திரைகொள் வேன்றேக நீங்குமென வெண்ணிலோ
நெஞ்சந் துடித்தயருவேன்

பேசாத வானந்த நிட்டைக்கு மறிவிலாப்
பேதைக்கும் வெகுதூரமே
பேய்குண மறிந்திந்த நாய்க்குமோரு வழிபெரிய
பேரின்ப நிட்டையருள்வாய்
பாசாடவிக்குளே செல்லாத வர்க்கருள்
பழுத்தொழுகு தேவதருவே
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூரணனந்தமே. (4)

பூதலய மாகின்ற மாயைமுத லென்பர்சிலர்
பொறிபுல னடங்குமிடமே
பொருளென்பர் சிலர்கரண முடிவென்பர் சிலர்குணம்
போனவிடமென்பர் சிலபேர்
நாதவடி வென்பர்சிலர் விந்துமய மென்பர்சிலர்
நட்டநடு வேயிருந்த
நாமென்பர் சிலருருவ மரமென்பர் சிலர்கருதி
நாடிலரு வென்பர் சிலபேர்
பேதமற வுயிர்கெட்ட நிலயமென் றிடுவர்சிலர்
பேசினரு ளென்பர்சிலபேர்
பின்னுமுன் னுங்கெட்ட சூனியம தெனபர்சிலர்
பிறவுமே மொழிவரிவையார்
பர்தாச மாய்மன து சஞ்சலப் படுமலார்
பரமசுக நிஷ்டைபெறுமோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணனந்தமே. (5)

ஆசைக் கொரளவில்லை யகிலமெல் லாங்கட்டி
யாளினுங் கடன்மீதிலே
ஆணைசெல வேநினைவ ரளகேச னிகாாக
வம்பொன்மிக வைத்தபேரும்
நேசித்து ரசவாத வித்தைக்க லைந்திடுவர்
நெடுநா ளிருந்தபேரும்

நிலையாக வேயினுங் காயகற் பம்தேடி
னெஞ்சி புண்ணுவ ரெல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பதும்
உரங்குவது மாகமுடியும்
உள்ளதே போதுநா ஞெனனக் குளறியே
யொன்றைவிட் டொன்றுபற்றிப்
பாசக் கடற்குளே வீழாமன் மனதற்ற
பரிசுத்த நிலையையருள்வாய்
பார்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணுனந்தமே. (6)

நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய் நிராமயமாய்
நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமாய் துரியநிறை
சுடரா யெல்லாம்
வைத்திருந்த தாரகமா யானந்த மயமாகி
மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்றவொன்றைச் சுகாரம்பப்பெருவெளியைச்
சிந்தை செய்வாம். (7)

யாதுமன நினைவுமந்த நினைவுக்கு நினைவாகி
யாதின் பாலும்
பேதமற நின்றுயிருக் குயிராகி யன்பருக்கே
பேரா னந்தக்
கோதிலமு தூற்றரும்பிக் குணங்குறியொன் றறத்தன்னைக்
கொடுத்துக் காட்டும்
தீதில்பரா பரமான சித்தாந்தப் பேரொளியைச்
சிந்தை செய்வாம். (8)

பெருவெளியா யைம்பூதம் பிறப்பிட.மாய்ப் பேசாத
பெரிய மோனம்

வருமிடமாய் மனமாதிக் கெட்டாத பேரின்ப
　　மயமாய் ஞானக்
குருவருளாற் காட்டிடவு மன்பரைக்கோத் தறவிழுங்கிக்
　　கொண்டப் பாலும்
தெரிவரிதாய்க் கலந்த தெந்தப் பொருளந்தப் பொருளினை
　　யாஞ் சிந்தை செய்வாய். (9)

இகபரமு முயிர்க்குயிரை யானெனதற் றவருறவை
　　யெந்த நாளும்
சுகபரிபூ ரணமான நிராலம்ப கோசரத்தைத்
　　தூரிய வாழ்வை
அகமகிழ வருந்தேனை முக்கனியைக் கற்கண்டை
　　யமிர்தை நாடி
மொகுமொகென விருவிழிநீர் முத்திறைப்பக கரமலர்க்கண்
　　முகிழ்த்து நிற்பாம். (10)

சாதிக்குலம் பிறப்பிறப்புப் பந்தமூத்தி யருவிருவத்
　　தன்மை நாமம்
ஏதுமின்றி யெப்பொருட்கு மெவ்விடத்தும் பிரிவறநின்
　　றியக்கஞ் செய்யும்
சோதியைமாத் தூவெளியை மனதவிழ நிறைவான
　　தூரிய வாழ்வைத்
தீதில்பர மாம்பொருளைத் திருவருளே நினைவாகச்
　　சிந்தை செய்வாம். (11)

இந்திரசா லங்கனவு கானலினீ ரெனவுலக
　　மெமக்குத் தோன்றச்
சந்ததமுஞ் சிற்பரத்தா லழியாத தற்பரத்தைச்
　　சார்ந்து வாழ்க
புந்திமகி ழுறநாளுந் தடையறவா னந்தவெள்ளம்
　　பொலிக வென்றே
வந்தருளுங் குருமௌனி மலர்த்தாளை யநுதினமும்
　　வாழ்த்தல் செய்வாம். (12)

பண்ணே னுனக்கான பூசையொரு வடிவிலே
பாவித்திறைஞ்ச வாங்கே
பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்தியப்
பனிமல ரெடுக்கமனமு
நண்ணே னலாமலிரு கைதான் குவிக்கவெனின்
நாணுமென் னுளநிற்றிநீ
நான்கும்பி டும்போ தரைக்கும்பி டாதலா
னுள்பூசை செய்யன்முறையோ
விண்ணே விணுதியாம் பூதமே நாதமே
வேதமே வேதாந்தமே
மேதக்க கேள்வியே கேள்வியாம் பூமிக்குள்
வித்தே யவித்தின் முளையே
கண்ணே கருத்தேயெ னெண்ணே யெழுத்தே
கதிக்கான மோனவடிவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே. (13)

துள்ளுமறியாமனது பலிகொடுத் தேன்கர்ம
துஷ்டதே வதைகளில்லை
துரியநிறை சாந்த தேவதையா முனக்கே
தொழும் பனன் பபிஷேகநீ
ருள்ளுறையி லென்னுவி நைவேத்தியம் ப்ராண
னேங்குமதி தூபதீபம்
ஒருகால மன்றிது சதாகால பூசையா
வொப்புவித் தேன்கருணைகூர்
தெள்ளிமறை வடியிட்ட வமுதப்பிழம்பே
தெளிந்ததேனே சீனியே
திவ்யரச மியாவுந் திரண்டொழுகு பாகே
தெவிட்டாத வானந்தமே
கள்ளனறி வூடுமே மெள்ளமெள வெளியாய்க்
கலக்கவரு நல்லவுறவே

கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே. (14)

வானாதி பூதமா யகிலாண்ட கோடியாய்
மலையாகி வளைகடலுமாய்
மதியாகி யிரவியாய் மற்றுளவெ லாமாகி
வான்கருணை வெள்ளமாகி
நானாகி நின்றவனு நீயாகி நின்றிடவு
நானெனப தற்றிடாதே
நானா னெனக்குளறி நானாவி காரியாய்
நானறிந் தறியாமையாய்ப்
போனால திட்டவலி வெல்லவெளி தோபகற்
பொழுதுபுகு முன்கண்மூடிப்
பொய்த்துயில்கொள்வான் றனையெழுப்பவசமோவினிப்
போதிப்ப தெந்தநெறியை
ஆனாலு மென்கொடுமை யனியாய மனியாய
மார்பா லெடுத்துமொழிவேன்
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே. (15)

பொய்யினேன் புலையினேன் கொலையினே னின்னருள்
புலப்பட வறிந்துநிலையாப்
புன்மையேன் கல்லாத தன்மையே னன்மைபோற்
பொருளலாப் பொருளைநாடும்
வெய்யனேன் வெகுளியேன் வெறியனேன்சிறியனேன்
வினையினே னென்றென்னைநீ
விட்டுவிட நினைவையேற் றட்டழிவ தல்லாது
வேறுகதி யேதுபுகலாய்
துய்யனே மெய்யனே யுயிரினுக் குயிரான
துணைவனே யிணையொன்றிலாத்
துரியனே துரியமுங் காணா வதீதனே
சுருதிமுடி மீதிருந்த

ஐயனே யப்பனே யெனுமறிஞ ரறிவைவிட்
டகலாத கருணைவடிவே
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே. (16)

வெந்நீர்பொ ருதென்னுடல் காலின்முட் டைக்கவும்
வெடுக்கென் றசைத்தெடுத்தால்
விழியிமைத் தங்ஙனே தண்ணருளை நாடுவேன்
வேறொன்றை யொருவர்சொல்லி
அந்நோ வையோவென் முகம்வாடி நிற்பதுவும்
ஐயநின் னருளறியுமே
ஆனாலு மெத்தப் பயந்தவன்யானென்னை
யாண்டைநீ கைவிடாதே
இந்நோ மென்றிலை யுடற்சுமைய தாகவும்
எடுத்தா விறக்கவென்றே
எங்கெங்கு மொருதீர்வை யாயமுண் டாயினும்
இறைஞ்சுசுக ராதியான
தொன்னீர்மை யாளர்க்கு மானிடம் வகுத்தவருள்
துணையென்று நம்புகின்றேன்
சுத்தநிர்க்குணமான பரதெய்வமே பரஞ்
சோதியே சுகவாரியே. (17)

அண்டமுடி தன்னிலோ பகிரண்ட மதனிலோ
அலரிமண்டல நடுவிலோ
வனனடுவி லோ வமிர்த மதி நடுவி லோவன்பர்
அகமுருகி மலர்கடுவித்
தெண்டமிட வருமூர்த்தி நிலையிலோ திக்குத்
திகந்தத்தி லோவெளியிலோ
திகழ்விந்து நாதநிலை தன்னிலோ வேதாந்த
சித்தாந்த நிலைதன்னிலோ
கண்டபல பொருளிலோ காணாத நிலையெனக்
கண்டசூ னியமதனிலோ

காலமொரு மூன்றிலோ பிறவியிலை தன்னிலோ
கருவிகர ணங்களோய்ந்த
தொண்டர்க ளிடத்திலோ நீவீற்றிருப்பது
தொழும்பனேற் குளவுபுகலாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே.

எந்நாள் கருணைக் குரித்தாகு நாளெனவும்
என்னிதய மெனேவாட்டுதே
எதென்று சொல்லுவேன் முன்னேடுபின் மலைவறவும்
இற்றைவரை யாதுபெற்றேன்
பந்தமா னதிலிட்ட மெழுகாகி யுள்ளம்
பதைத்துப் பதைத்துருகவோ
பரமசுக மாவது பொருப்பரிய துயரமாய்ப்
பலகாலு மூர்ச்சிப்பதோ
சிந்தையா னதுமறிவை யென்னறிவி லறிவான
தெய்வநீ யன்றியுளதோ.
தேகநிலை யல்லவே யுடைகப்பல் கப்பலாய்த்
திரையாழி யூடுசெலுமோ
சொந்தமா யாண்டநீ யறியார்கள் போலவே
துன்பத்தி லாழ்த்தன்முறையோ
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே

இனியேதெமக்குனருள் வருமோ வெனக்கருதி
ஏங்குதே நெஞ்சமையோ
இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்
றெண்ணவோ திடமில்லையே
அனியாய மாயிந்த வுடலைநா னென்றுவரும்
அந்தகற் களாகவோ

ஆடித் திரிந்துநான் கற்றதுங் கேட்டதும்
அவலமாய் போதன்றோ
கனியேனும் வறியசெங் காயேனு முதிர்சருகு
கந்தமூ லங்களேனும்
கனல்வாதை வந்தெய்தி னள்ளிப் புசித்துநான்
கண்மூடி மௌனியாகித்
தனியே யிருப்பதற் கெண்ணினே னெண்ணமிது
சாமிநீ யறியாததோ
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே

சந்ததமும் வேதமொழி யாதொன் று பற்றினது
தான்வந்து முற்றுமெனலால்
சகமீ திருந்தாலு மரணமுண் டென்பது
சதாநிஷ்டர் நினைவதில்லை
சிந்தை யறியார்க்கிது போதிப்ப தல்லவே
செப்பினும் வெகுதர்க்கமாம்
திவ்யகுண மார்க்கண்டர் சுகராதி முனிவோர்கள்
சித்தாந்த நித்யரலரோ
இந்திராதி தேவதைகள் பிரமாதி கடவுளர்
இருக்காதி வேதமுனிவர்
எண்ணரிய கணநாதர் நவநாத சித்தர்கள்
இரவிமதி யாதியோர்கள்
கந்தருவர் கின்னரர்கண் மற்றையர்க ளியாவரும்
கைகுவித்திடு தெய்வமே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே.

---

காடுங் கரையு மனக்குரங்கு
கால்விட் டோட வதன்பிறகே

ஓடுந் தொழிலாற் பயனுளதோ
வொன்றாய்ப் பலவா யுயிர்க்குயிராய்
ஆடுங் கருணைப் பரஞ்சோதி
யருளைப் பெறுதற் கன்புநிலை
தேடும் பருவ மிதுகண்டீர்
சேர வாருஞ் சகத்தீரே.

---

ஈாக முறவு கலந்துண்ணக்
கண்டீ ரகண்டா காரசிவ
போக மெனும் பேரின்பவெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக வுருவாய்க் கிடைக்குதையோ
வின்புற் றிடநா மினியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேர வாருஞ் சகத்தீரே.

---

பராபரக்கண்ணி சுருக்கம்.

சீராருந் தெய்வத் திருவருளாம் பூமிமுதற்
பாராதி யாண்ட பதியே பராபரமே.
கண்ணாரக் கண்டோர் கருப்பொருள்கா ணுமலருள்
விண்ணா டிருந்த வின்ப வெற்பே பராபரமே.
சிந்தித்த வெல்லாமென் சிந்தையறிந் தேயுதவ
வந்த கருணை மழையே பராபரமே.
ஆராவமுதே யரசே யாநந்த வெள்ளப்
பேராறே மோனப் பெருக்கே பராபரமே.
ஆரறிவா ரென்ன வனந்தமறை யோலமிடும்
பேரறிவே யின்பப் பெருக்கே பராபரமே.
உரையிறந்த வன்பருளத் தோங்கொளியா யோங்கிக்
கரையிறந்த வின்பக் கடலே பராபரமே.

எந்திக்குந் தானாகி யென்னிதயத் தேயூறித்
தித்திக்கு மானந்தத் தேனே பராபரமே.
திக்கொடுகீழ் மேலுந் திருவருளாம் பொற்பறிந்தோர்
கைக்குள்வளர் நெல்லிக் கனியே பராபரமே.
முத்தே பவளமே மொய்த்தபசும் பொற்சுடரே
சித்தேயென் னுள்ளத் தெளிவே பராபரமே.
கண்ணே கருத்தேயென் கற்பகமே கண்ணிறைந்த
விண்ணே யாநந்த வியப்பே பராபரமே.
வாக்காய் மனதாய் மனவாக் கிறந்தவர்பால்
தாக்காதே தாக்குந் தனியே பராபரமே.
பார்த்தவிட மெல்லாம் பரவெளியாய்த் தோன்றவொரு
வார்த்தைசொல்ல வந்த மனுவே பராபரமே.
வானந்தம் மண்ணினந்தம் வைத்துவைத்துப் பார்க்க
வெனக் கானந்தந் தந்த வரசே பராபரமே.
அன்பைப் பெருக்கியென தாருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே யிறையே பராபரமே.
வானமெல்லாங் கொண்ட மௌனமணிப்
பெட்டகத்துக் கானபணி யான வணியே பராபரமே.
ஓடு மிருநிதியு மொன்றாகக் கண்டவர்கள்
நாடும் பொருளான நட்பே பராபரமே.
போதாந்தப் புண்ணியர்கள் போற்றிசய போற்றியெனு
வேதாந்த வீட்டில் விளக்கே பராபரமே.
ஈநந் தருமுடல மென்னதியா னென்பதற
வானந்தம் வேண்டி யலந்தேன் பராபரமே.
சுத்த வறிவாய்ச் சுகம்பொருந்தி னல்லாலென்
சித்தந் தெளியா தென்செய்வேன் பராபரமே.
மாறாவனுபூதி வாய்க்கினல்லா லென்மயக்கந்
தேறாதென் செய்வேன் சிவமே பராபரமே.
தாகமறிந் தின்பநிட்டை தாராயே லாகெடுவேன்
றேகம் விழுந்திடினென் செய்வேன் பராபரமே.

அப்பாவென் னெய்ப்பில்வைப்பே யாற்றுகிலேன்
போற்றியென்று, செப்புவதல்லால் வேறென்
செய்வேன் பராபரமே.
பாராயோ வென்னைமுகம் பார்த்தொருகா லென்கவலை
தீராயோ வாய்திறந்து செப்பாய்பராபரமே.
ஓயாதோ வென்கவலை யுள்ளே யானந்தவெள்ளம்
பாயாதோ வையா பகராய் பராபரமே.
ஓகோ வுனைப்பிரிந்தார் உள்ளங் கனலில்வைத்த
பாகோ மெழுகோ பகராய் பராபரமே.
கடலமுதே தேனே யென்கண்ணே கவலைப்
படமுடியா தென்னைமுகம் பார்நீ பராபரமே.
உள்ளமறிவாயுழப்பறிவாய் நானேழை
தள்ளிவிடின்மெத்தத் தவிப்பேன் பராபரமே.
எண்ணாதவெண்ணமெலா மெண்ணியெண்ணி யேழை
நெஞ்சம், புண்ணாகச்செய்ததினிப் போதும்பராபரமே
ஆழித்துரும்பெனவே யங்குமிங்கு முன்னடிமை
பாழிற்றிரிவதென்ன பாவம் பராபரமே.
கற்றவறிவாலுனைநான் கண்டவன்போற் கூத்தாடிக்
குற்றமென்றென்னெஞ்சே கொதிக்கும்பராபரமே.
ஐயாவுனைக் காண்பா னாசைகொண்ட தத்தனையும்
பொய்யோ வெளியாய் புகலாய் பராபரமே.
பாசம்போய் நின்றவர்போற் பாராட்டியானலு
மோசம்போனேனுன் முறையோ பராபரமே.
நன்றறியேன் றீதறியே னென்று நின்றவனூர்
என்றறியேனு னேழையென்னே பராபரமே.
கொல்லா விருதங்குவலைய மெல்லா மோங்க
எல்லாருக்குஞ்சொல்வ தென்னிச்சைபராபரமே.
உன்னை யலங்கரித் துன்ன ழகைப் பாராமற்
றென்னை யலங்கரித்தேனேனோ பராபரமே.
எவ்வுயிருமென் னுயிற் போலெண்ணி யிறங்கநின்
றெய்வக் கருணையருள் செய்வாய்பராபரமே.

எல்லாரு மின் புற்றிருக்கச் செய்வதுவே
அல்லாமல் வேறொன்று மறியேன் பராபரமே.

## திருவருட்பா.

---

அண்டங்கள் பலவாகி யவற்றின்மேலு
மளவாகியளவாத வதீதமாகிப்
பிண்டங்களனந்தவகை யாகிப்பிண்டம்
பிறங்குகின்றபொருளாகிப் பேதந்தோன்றும்
பண்டங்கள்பலவாகி யிவற்றைக்காக்கும்
பதியாகியானந்தம் பழுத்துச்சார்ந்தங்
கொண்டெங்கு நிழல்பரப்பித் தழைத்தஞானக்
கொழுங்கடவுட் டருவாகிக் குலவுந்தேவே.

---

வானேயவ்வா னுலவுங் காற்றேகாற்றி
வருநெருப்பே நெருப்புறுநீ ரடிவேநீரிற்
றானேயுப்புவியேயப் புவியிற்றங்குந்
தாபரமேசங்கமமே சாற்றுகின்ற
வூனேயவ்வுயிரே யுள்ளொளியே யுள்ளத்துணர்வே
யவ்வுணர்வு கலந்தூறுகின்ற
தேனேமுக்கனியேசெங்கரும்பே பாகின்றீஞ்சுவையே
சுவையனைத்துந் திரண்டதேவே.

---

உலகனைத்துமுழுதாகி யாங்காங்குள்ள
வுயிராகியுயிர்க்குயிரா மொளிதானாகிக்
கலகநிலையறியாத காக்ஷியாகிக்
கதியாகி மெஞ்ஞானக் கண்ணதாகி

யிலகுசிதாகாசமதாய்ப் பரமாகாச
வியல்பாகியிணையொன்று மில்லாதாகி
யலகிலறிவானந்த மாகிச்சச்சி
தானந்தமயமாகி யமர்ந்ததேவே.

---

உலகமெலாந்தனிநிறைந்த வுண்மையாகி
யோகியர்தம்மனுபவத்தி னுவப்பாயென்றுங்
கலகமுறா உபசாந்த நிலையதாகிக்
களங்கமற்றவருண்ஞானக் காட்சியாகி
விலகுலுறாதுப நிட்டவானந்தமாகி
மீதானத்தொளிர்கின்ற விளக்கமாகி
விலகுபராபரமாய்ச்சிற் பரமாயன்ப
ரிதயமலர்மீதிருந்த வின்பத்தேவே.

---

வித்தாகிமுளையாகி விளைவதாகி
விளைவிக்கும் பொருளாகி மேலுமாகிக்
கொத்தாகிப்பயனாகிக் கொள்வோனாகிக்
குறைவாகிநிறைவாகிக் குறைவிலாத
சத்தாகிச்சித்தாகி யின்பமாகிச்
சதாநிலையா யெவ்வுயிர்க்குஞ் சாக்ஷியாகி
முத்தாகி மாணிக்கமாகித்தெய்வ
முழுவயிரத் தனிமணியாய் முளைத்ததேவே.

---

பொன்னாகிமணியாகிப் போகமாகிப்
புறமாகியகமாகிப் புனிதமாகி
மண்ணாகிமலையாகிக் கடலுமாகி
மதியாகியிரவியாகி மற்றுமாகி

முன்னாகிப்பின்னாகி நடுவுமாகி
முழுதாகிநாதமுற முழங்கியெங்கு
மின்னாகிப்பரவியின்ப வெள்ளந்தேக்க
வியன்கருணை பொழிமுகிலாய் விளங்குந்தேவே.

---

பொற்குன்றேயகம்புறமும் பொலிந்துநின்ற
பூரணமேயாரணத்துட் பொருளேயென்றும்
கற்கின்றோர்க்கினியசுவைக் கரும்பே தேனே
கற்பகமேகற்பகத்தீங் கனியேவாய்மைச்
சொற்குன்றா நாவகத்துண் மாறாவின்பந்
தோற்றுகின்ற திருவருட்சீர்ச் சோதியேவிண்
ணிற்கின்றசுடரே யச்சுடருள்ளோங்கு
நீளொளியே யவ்வொளிக்கு ணிறைந்ததேவே.

---

கோவேயென்குணக்குன்றே குன்றாஞானக்
கொழுந்தேனே செழும்பாகே குளிர்ந்தமோனக்
காவேமெய்யறிவின்ப மயமேயென்றன்
கண்ணேநற்கருணையாங் கரும்பேவானத்
தேவேயத்தேவுக்குந் தெளியவொண்ணாத்
தெய்வமேவாடாமற் றிகழ்சிற்போதப்
பூவேயப்பூவிலுறு மணமேயெங்கும்
பூரணமாய் நிறைந்தருளும் புனிதத்தேவே.

---

வேதாந்தநிலையாகிச் சித்தாந்தத்தின்
மெய்யாகிச்சமரசத்தின் விவேகமாகி
நாதாந்தவெளியாகி முத்தாந்தத்தி
னடுவாகிசவனிலைக்கு நண்ணாதாகி

மூதாண்டகோடியெல்லாந் தாங்கிநின்ற
முதலாகிமனோதீத முத்தியாகி
வாதாண்டசமயநெறிக் கமையாதென்று
மௌனவியோமத்தினிடை வயங்குந்தேவே.

எண்சீரடியாசிரிய விருத்தம்.

ஐயாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டு, மடிமுடி கண் டெந்நாளுமநுபவித்தல்வேண்டும்,—பொய்யாதவாய்மைகளே புகன்றிடுதல்வேண்டும், புகன்றபடி புகன்றபடி புரிந்திடுதல்வேண் டும், - எய்யாத வருட்சோதி யென்கையுறல்வேண்டு மிறந்தவுயிர் தமைமீட்டுமெழுப்பியிடல்வேண்டும், - நையாதவண்ணமுயிர் காத் திடுதல்வேண்டும் நாயகனின் றனைப்பிரியா துறுதலும் வேண்டு வனே.

அம்மாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல்வேண்டு மாணவ மாதியமுழுது முறுத்துநிற்றல்வேண்டு, -மிம்மாலைத்தத்துவங்களெல் லாமென்வசத்தே யியங்கியொருதீமையுமில் லாதிருத்தல்வேண்டு- மெம்மானுன் வேண்டுதல்வேண்டாமையறல் வேண்டு மேகசிவபோ கமீது போகமுறல்வேண்டுந்,- தம்மானத்திருவடிவிலெந்தாயுநானுஞ் சார்ந்துகலந்தோங்குகின்ற தன்மையும் வேண்டுவனே.

அண்ணாநான் வேண்டுதல்கேல்டருள்புரிதல்வேண்டு மழியாத தனிவடிவம் யானடைதல்வேண்டுங், கண்ணாரநினையெங்குங் கண் டுவத்தல்வேண்டுங் காணுதகாட்சியெலாங் கண்டுகொளல்வேண்டும், புண்ணாரநின் றனையே பாடியுறல்வேண்டும் பரமானந்தப்பெருங்கூத் தாடியிடல் வேண்டும், உண்ணாடியுயிர்களுறுந் துயர்தவிர்த்தல்வே ண்டு முனைப்பிரியாதுறுகின்ற வுறவதுவேண்டுவனே.

அரைசேநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல்வேண்டு மருட் பெருஞ்சோதியைப்பெற்றே யகமகிழ்தல் வேண்டும்,- வரைசேரெவ் வுலகமுமோ ரொழுக்கமுறல்வேண்டும் மடிந்தாரைமீளவுநான் வரு வித்தல் வேண்டும், புரைசேருங் கொலைநெறியும் புலைநெறியுஞ்சிறி தும் பொருந்தாமலெவ்வுயிரும் புரிந்துவத்தல்வேண்டு, - முரைசேர்

மெய்த்திருவடிவி லெந்தாயு நானுமொன்றாகி யெஞ்ஞான்றுமோங்குதல் வேண்டுவனே.

நாதாந்தத்திருவீதி நடந்துகடப்பேனோ ஞானவெளிநடுவின்ப நடந்தரிசிப்பனோ,-போதாந்தத் திருவடியென் சென்னிபொருந்திடுமோ புதுமையறச் சிவபோகம் பொங்கிநிறைந்திடுமோ,- வேதாந்த சித்தாந்த சமரசமும் வருமோ, வெறுவெளியிற் சித்தசிவ வெளிமயந் தானுறுமோ,-பாதாந்தவரைநீசு மணக்கமன்றிலாடும் பரமர்திரு வுள மெதுவோ பார்க்கிலறிந்திலனே.

படமுடியாதினித்துயரம் படமுடியாதரசே, பட்டதெல்லாம் போதுமிந்தப் பயந்தீர்த்திப்பொழுதென், னுடலுயிரா தியவெல்லாம் நீயெடுத்துக்கொண்டுன் னுடலுயிராதியவெல்லா முவந்தெனக்கேயளிப்பாய், வடலுறுசிற் றம்பலத்தே வாழ்வாயென் கண்ணுண் மணியே, யென்குருமணியே, மாணிக்கமணியே, நடனசிகாமணியே யென்னவமணியே, ஞான நன்மணியே, பொன்மணியே நடராஜ மணியே.

வாழையடி வாழையென வந்ததிருக்கூட்ட மரபினில்யானொருவனன்றோ வகையறியேனிந்த, வேழைபடும் பாடுனக்குந் திருவுளச்சம்மதமோ விதுதகுமோ, விதுமுறையோ விதுதருமந்தானோ, மாழைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால்யானுனக்கு மகனலனோ நீயெனக்கு தாய்த்தந்தையலவோ, கோழையுலகுயிர்த்துயரமினிப் பொறுக்கமாட்டேன், கொடுத்தருணின் னருளொளியைக் கொடுத்தருளிப்பொழுதே.

படமாட்டேன் றுயர்சிறிதும் படமாட்டேனினிநான் பயப்படவுமாட்டேனும் பதத்துணையே பிடித்தேன், விடமாட்டேனேமாந்து விடமாட்டேன் கண்டீர் மெய்ம்மையிது நும்மாணை விளம்பினனும்மடியேன், கெடமாட்டேன் பிறர்மொழிகள் கேட்டிடவுமாட்டேன், கிளரொளியம் பலத்தாடல் வளரொளிநும் மல்லால், நடமாட்டேனென்னுளத்தே நான்சாகமாட்டே னல்லதிருவருளாலே நான்றானனேனே.

எல்லாஞ்செய் வல்லதெய்வ மெங்குநிறை தெய்வமென்னுயிரிற் கலந்தெனக்கே யின்பால்குந்தெய்வம், நல்லார்க்கு நல்லதெய்

வம் நடுவானதெய்வம், நற்சபையிலாடுகின்ற நடராசத்தெய்வங், கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுந்தெய்வங் காரணமாந் தெய்வமருட் பூரணமாந்தெய்வம், செல்லாத நிலைகளெலாஞ் செல்லுகின்ற தெய்வம் சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம், தன்னைநிகரில்லாத தனித்தலைமைத் தெய்வம், வாயாரவாழ்த்துகின்றோர் மனத்தமர்ந்த தெய்வம், மலரடியே சென்னிமிசை வைத்தபெருந்தெய்வம், காயாகிகனியாகிக் கலந்தினிக்குந் தெய்வங் கருணைநிதித் தெய்வமுற்றுங் கடட்டுவிக்குந் தெய்வம், சேயாக வெனைவளர்க்குந் தெய்வமகா தெய்வம் சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

என்னிதயக் கமலத்தே யிருந்தருளுந்தெய்வ மென்னிரண்டு கண்மணிக்கு ளிலங்குகின்ற தெய்வம், பொன்னடியென் சென்னியிலே பொருந்தவைத்த தெய்வம், பொய்யாததெய்வமிடர்செய்யாத தெய்வ, மன்னியமல்லாததெய்வ மறியாத தெய்வ மவ்வறிவக்கறிவ மென்னன்பான தெய்வம், சென்னிலையிற் செம்கபாருளாய் திகட்கின்றதெய்வம், சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

---

## அருள் விளக்க மாலை.

### எண் சீரடி யாசிரிய விருத்தம்.

அருள்விளக்கேயருட்சுடரேயருட்சோதிச்சிவமே, யருளமுதே யருணிறைவே யருள்வடிவப்பொருளே. யிருள்கடிந்தென்னுளமுழுது மிடங்கொண்டபதியே, யென்னறிவே யென்னுயிரே யெனக்கினியவுறவே, மருள்கடிந்த மாமணியே மாற்றறியாப்பொன்னே, மன்றிலநடம்புகின்ற மணவாளாவெனக்கே, தெருளளித்த திருவாளா, ஞானவுருவாளா தெய்வநடத்தரசே நான்செய்மொழி யேற்றருளே.

கைக்கிசைந்த பொருளேயென், கருத்துக்கிசைந்த கனிவே, கண்ணேயென் கண்களுக்கே கலந்திசைந்தகணவா, மெய்க்கிசைந்த

கனியே பொன்மேடையிலென்னுடனே, மெய்கலந்ததருணத்தே விளைந்த பெருஞ்சுகமே, நெய்க்கிசைந்த வுணவே யென்னெறிக்கிசைந்தநிலையே, நித்தியமே யெல்லாமாஞ்சத்தியமேயுலகில், பொய்க்கிசைந்தார்காணாதே பொதுநடஞ்செய்யரசே, புன்மொழியென்றிகழாதே புனைந்துமகிழ்ந்தருளே.

தனித்தனி முக்கனி பிழிந்துவடித்தொன்றாய்க்கூட்டிச், சர்க்கரையுங் கற்கண்டின் பொடியுமிகக்கலந்தே. தனித்தநறுந்தேன்பெய்து பசும்பாலுந் தேங்கின்றனிப்பாலுஞ் சேர்த்தொரு தீம்படிப்பிடியும்விரவி, யினித்தநறு நெய்யளைந்தே யிளஞ்சூட்டினிறக்கி, யெடுத்தசுவைக்கட்டியினு மினித்திடுந்தெள்ளமுதே, யநித்தமறந்திருப்பொதுவில் விளங்குநடத்தரசே. யடிமலர்க்கென் சொல்லணியாமலங்கலணிந்தருளே.

உருவெளியே யுருவெளிக்குள்ளுற்றவெளியுருவே, யுருநடுவும் வெளிநடுவு மொன்றானவொன்றே, பெருவெளியே பெருவெளியிற் பெருஞ் சோதிமயமே, பெருஞ்சோதிமயநடுவே பிறங்குதனிப்பொருளே, மருவொழியாமலரகத்தேவயங்கு மொளிமணியே, மந்திரமே தந்திரமே மதிப்பரியாமருந்தே, திருவொழியாதோங்கு மணிமன்றினடத்தரசே, சிறுமொழியென்றிகழாதே சேர்த்துமகிழ்ந்தருளே.

---

என்னுயிரு மென்னுடலு மென்பொருளும் யானே, யிசைந்து கொடுத்திட வாங்கியிட்டதன் பின்மகிழ்ந்தே, தன்னுயிருந்தன்னுடலும், தன்பொருளுமெனக்கே, தந்துகலந்தெனைப் புணர்நத்தனித்த பெருஞ்சுடரே, மன்னுயிருக்குயிராகியின்பமுமாய் நிறைந்தமணியே. யென்கண்ணே யென்வாழ்முதலே மருந்தே, மின்னிய பொன்மணிமன்றில் விளங்குநடத்தரசே, மெய்யுமணிந்தருள்வோ யென்பொய்யு மணிந்தருளே.

நல்லார்சொல்லோ காந்தப்பதிகள்பலகோடி, நாட்டியதோர் போதாந்தப்பதிகள் பலகோடி, வல்லார்சொல்கலந்த நிலைப்பதிகள் பலகோடி. வழுத்துமொரு நாதாந்தப்பதிகள் பலகோடி, யில்லாந்த வேதாந்தப்பதிகள் பலகோடி, யிலங்குகின்ற சித்தாந்தப்பதிகள் பலகோடி, யெல்லாம்பேரருட்சோதிற்தனிச் செங்கோல்நடத்துமென்னரசே யென்மாலையினிது புனைந்தருளே.

கல்லார்க்குங் கற்றவர்கும் களிப்பருளும் களிப்பே
காணார்க்குங் கண்டவர்க்குங் கண்ணளிக்குங் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்குஞ் சுரர்களுக்கும் நலங்கொடுக்கு நலமே
எல்லார்க்கும் பொதுவில் நடமிடுகின்ற சிவமே
என்னரசே யான்புகழு மிசையு மணிந்தருளே

---

தனிச்சிறியேன் சிறிதிங்கே வருந்தியபோததனைத்
தன்வருத்த மெனக்கொண்டு தரியாதக்கணத்தே
பனிப்புறவம் வருத்தமெலாந் தவிர்த்தருளிமகனே
பயமுனக் கென்றென்னைப் பரிந்தணைத்தகுருவே.
இனிப்புறுநன்மொழிபுகன்றென் முடிமிசை நின்மலர்கா
இணையமர்த்தியென்னையாண்ட வென்னுயிர்நற்றுணையே
கனித்தருங் கனியேயென் கண்ணேசிற்சபையில்
கலந்தநடத்தரசே யென்கருத்துமணிந்தருளே

---

கண்ணேகண்மணியே கருத்தேகருத்தின்கனிவே
விண்ணேவிண்ணிறைவே சிவமேமெய்பொருளே
தண்ணேரொண்மதியே யெனைத்தந்ததாயாகிநியே
யுண்ணேருளவளாளியே யெனக்குண்மையுரைத்தருளே
வளியேவெண்ணெருப்பே குளிர்மாமதியேகனலே
வெளியேமெய்ப்பொருளே பொருள்மேவியமேனிலையே
யளியேயற்புதமே யமுதேயறிவேயரசே
யொளியேயுத்தமனே யெனகுண்மையுரைத்தருளே

---

அன்பேயென்னரசே திருவம்பலத்தாரமுதே
யென்பேயுள்ளுருக்க கலந்தென் றுளிந்தருளே

யின்பேயென்னறிவே பரமேசிவமேயெனவே
யுன்பேரோதுகின்றே னெனக்குண்மையுரைத்தருளே:

## சமரச கட்டளைக்கலித்துறை.

அறிதற்கரிய பரம்பொருணின்னையறிந்தமென
நெறிதப்பிய பலபொய்மதப்போய்நெடும்போர்புரிந்து
தறிபட்டலையுஞ்செயல்கண்டுமெவ்வவர்தந்தமது
வெறிவிட்டுனைத்தொழக் கற்காததென்ன விசித்திரமோ.

இரும் புவனங்களுமெண்ணில் சராசர பேதங்களும்
விரும்பிபப்டைத்து நிலைபெறச்செய் விளையாட்டுடையான்
அரும்பத்தருள்ளத் துறைந்து சுகாநந்தமாக்குமருட்
பரம்பொருளானவ னொருவனவன்றாள்பணிகுவமே.

தொல்லைப் பழம்பொரு ளுன்னைத்தொழாது துணித்தகருங்
கல்லை யிரும்பினைச் செம்பினை மண்ணினைக் கட்டையுரு
வெல்லைக் குறியை யிந்நாள் வரைபோற்றி யிருக்குமெமக்
கொல்லைக் கதிவருமோ வுரையா யெங்கட்குத்தமனே !

பாவத்தொழில் புரிந்தித்தனை நாளையிப் பாரினில் வீண்
போவித்தயந்தோ கணமேனு நிச்சலபுந்தியுடன்
ஆவித்துணையெங்க ளாராவமுதை யருட்கடலைச்
சேவித்திலோமென்ன செப்புவோ மெங்கள் சிற்றறிவே.

காதலனே ! யருட்கார்முகிலே யெங்கள் கண்மணியே !
கோதறுநற் குணக்குன்றே பெரும்புகழ் கொண்டவனே !

நீதறவன் பரைத்தேற்றும் சுகாநந்தத் தெள்ளமுதே!
நீதரவேண்டு மெந்தாய்! நின்பா லன்புநிலை பெறவே,

---

## தேவகாயதிரி பொருள்.

### ஆசரிய விருத்தங்கள்.

சிருட்டி திதிசம்ஹாரகருத்ருகா மோக்ஷமருள்சர்வக்கியசர்வசக்தா.
சத்ஸ்வரூபா திருசியசன்மார்க்க நெறியருள்சச்சிதாநந்தரூபா, [லும்,
நிருவிகற்பப்பொருளே நித்தியநிர்மல புருஷா நினையெங்களன்பினா
நின்பொருட்டாய்பலநீதிபடுசெயலாலும் நித்தமும்பணிகின்றனம்.
திருட்டிதிதிலயமானசீர்படுந்தொழிலரசே திரிலோகவியாபியாகி,
தினகரன்முதலாகயாவையும்ஆள்கின்ற திவ்வியதேஜத்திரட்டே,
திருமருவுகருணையொடுஎம்மனோவிருத்திகளைச் சீராக ஏவுகின்ற,
திவ்வியசவிதரவேநினை தியானித்தென்னாளுமெஞ் சிந்தையிலிருத்த
[வருளாய்.

---

எத்தேவனீங்குள்ளயாவற்றையுண்டாக்கி யவையும்ரக்ஷிப்பனோ,
எவனிடத்திங்குள்ளயாவுஞ்சனிக்குமோ யாவுமீண்டும்லயிக்கும்,
அத்தேவனாயபரமாத்மனேயல்லவோ அருமையோடுஎமதுமனதை,
அரியமோக்ஷம்பொருட்டாயசன்மார்க்கத்தில் அன்புடனேஏவுகின்
[றான்,
பக்தியோடுவாதலின் அப்பரமசவிதாவின் பரமபதமென்மேலுமே,
பாடித்துதித்தாடிபரவசமதாய்மனம் பற்றவகைதேடுவோமே,
சுத்தபரிபூரணமதானபெருஜோதியும் சூரியதேஜங்கடந்த,
சுகமருள்புரிகின்றஞானஒளிவீசுஞ் சுயபிரகாசனைநினைகுவாம்.

---

புருஷோத்தமாமஹாபுருஷனாகியதேவ புனிதனேநினதருளையே,
பூர்ணமாய்நாடியெப்புனைகளையும்கைவிட்டு புன்மதி அகன்றுபின்,
[னும்.

சிருட்டியிலடங்கும் பூதங்களைதொழாமலுஞ் சத்தியமார்க்கத்தில்தா
[னெஞ்.
சித்தம்பிரவர்த்திக்கசிந்தையில் குடிகொண்டு செம்மலேகாத்தருளு
[வாய்
சருவசாங்கேதமதாயகருமங்களை சாங்கமாய்விட்டொழித்து,
சாசுவதபதமுடையசாமிநினையொருவனையே சரணமடைகின்ற
[மய்யா,
சருவவல்லமையுள்ளகர்த்தனேமுக்தனே மைரக்ஷாத்பரப்பிரமனே,
சகலபாபங்களின்னின்றெமைதவிர்த்தருள்சாந்தபதமானதெய்வமே

---

## காலை வந்தனம்.

### எண்சீர்கழிநெடிலாசிரிய விருத்தம்.

ஐய்ந்தாயபொறிகளும் அருமையாம்கரணமு மடங்கியானுரங்குமிர
ஆதாரமற்றவெனை யாபத்துவாராது ஆதரித்தருள்தேவனே! [வில்
செய்காரியங்களால் பொய்யுடலயர்ந்திட சுழித்தியாம்சுகவேதுவ
கருமேந்திரியங்களும்ஞனேந்திரியங்களும்பாதுகாத்துப்புதுக்கி,[ல்,
கைவிடாதிரவெலாம் கொடுமைவந்தணுகாது காப்பாற்றிநின்றுபின்
[னும்,
காலைபோழ்தினில்பேதை துயினின்றெழச்செய்த கருணைவெள்ளப்
[பெருக்கே !
மெய்ம்மயிர்சிலிர்க்கஉன் துய்யதிருவடிகளைச் சேர்ந்தென்சிரம்பணி
[ந்து,
கரையிலாவன்பொடுங் கைகூப்பிநின்றடிமை காலைவந்தனஞ்செய்கி
[ன்றேன்

## மாலை வந்தனம்.

### எண்சீர்கழிநெடிலாசிரிய விருத்தம்.

கரியமேகங்களே வருஷித்ததென்னவே கடையனுமென்றன்மீது!
கருணைப்பிரவாகம் பொழிந்திடும்தெய்வமே கருதரியசர்வேசனே

அரியவாழ்நாளிலொரு பெரியநாள்கழியவே அந்திபொழுதானதில்
அடிமையுன்பாதார விந்தமணுகித்தொழ ஆனசுற்சமயமய்ய! [வில்.
பிரியமுடனுதலால் இன்றுநானுற்றபல பெருநன்மையாவுமுன்னி,
பெற்றசுகஞானமொடு மற்றபொருள்யாவையும் ஈய்ந்ததுன்கருணை
[யென்றே,

தேரியவசமோ? இதையெளிதில்அரியச்செய்த பேசரியபேரின்பமே,
பெதையிப்பெருநன்றி என்றுமறவாமலே பெருமையாய்த்தொழவரு
ளுவாய்,

## வறுமையில்

### ஆசிரியவிருத்தம்.

ஆபத்திலும் அதிகசம்பத்லும் பெரிய தான சுகதுக்கமெதிலும்,
ஆத்மகோடிகளுட னனுப்பொழுது மிடைவிடாதய்யநீ விற்றிருப்
[பாய்,

பூபதிகடனையொத்த பொருளுளோர்மீதிலும் பொறுமையுளவறி
[யர்மீதும்,

பொதுவாயளாவிடும்ரதத்துவமுள்ள பூரணவருட்பெருக்கே,
மகாதாபத்திரியங்களைப் பொருமையுடனும் சதசுத்தசந்தோஷமொ
[டுசஹித்து,

தாழ்வுற்ற வென்ஸ்திக்கலையாது என்றுமுன்சாரில் சஞ்சரிக்க
[வுதவி,

பாபத்திலுளழ்கின்றபாவியே னென்னையும் பரிவுடன் காத்தருள்
[வாய்.

பாராதியெங்களுந் தண்ணருள்வகுத்திடும் பரமானபேரின்பமே.

## செல்வத்தில்

### ஆசிரியவிருத்தம்.

பெருமிதமுளச்செல்வ பேற்றைக்கொடுத்ததெனை
பெருநரகிலாழ்த்தவன்றே.

பேசரியவறநெறியில் பேரின்பமுறவலவொ
பெரியதாய்தனமீந்தனே.
கருணைப்பிரவாகமழை வருஷிக்குமேகமே
கருதரியசர்வேசனே,
கரையிலாவன்பினொடு நீயருள்செல்வத்தை
காத்தீய்யும்வகையுணர்த்தாய்
அருமையொடு பெற்றதாயென்னவே என்னருகில்
அநுதினமுமநின்றபயனே.
ஆனதோர் செல்வத்தை யாண்டுலக வாழ்க்கையை
அனுபவிக்கும் பற்பல
தருமவழியாவையும் தவருதுயான்கற்று
தக்கபடி யொழுகிமேலும்,
தனகனத்தால்பெரும் கருவமடையாதபடி
தயவுடன் காத்தருளுவாய்.

## இரட்சணார்த்தம்.

### ஆசிரியவிருத்தம்.

பரிசுத்தனுகி பாராதி படைத்திடும்
பரலோகவெமதப்பனே,
பாரிலெமைசூழ்ந்திடும் பாமரம்மோகாதி
பலதீமையால் பயந்து,
அரிதரியநினகருட் பாதமேகதியென்
றடைக்கலம் புகுமடியருக்,
கய்யநினதபய கரமல்லாது புக்கிடம்
ஆனவேறுதவியுண்டோ,
பரிதாபமின்றியே பாவமும்பழிகளும்
பாழ்நெஞ்ச மறியச்செயும்
பாவியேமெம்மனே பிரமரத்தைசற்றேனும்
பாரில்சுகிக்கச்செய்,

பரிவுடன்காக்கு நினதருடளம் பலவாய்ப்
        பரஞ்சோதொளிர்ப் பதும்மன்றி.
பண்பாய்சாதனம் பார்க்கவேறில்லையே
        பரிபூரணானந்தமே.

## தைரியத்தின் பொருட்டு.

நிர்ப்புதமெனப் படருமோகபாசங்களால்
        நிலையற்று வாடுகின்றோம்,
நின்பாதகமலமே கதியென்றுநாடினோம்
        நிஷ்களங்கப் பிரமனே,
சர்வவல்லமையுள்ள கர்த்தனே முக்தனே
        சகலசாம்பிராஜ்ஜியமுளனே,
சர்வேசனினதாவி யாலெமைச்சிறப்பித்து
        சகலபற்றுகளு மறவே,
அர்ப்புதமதாலவளரு மளவற்றகொடுமைகளை
        ஐயமில்லாது வெல்ல,
ஆனமனவூக்கமும் ஆண்மையுந்தருள்
        அன்புகூர்ந் தெமரப்பனே,
தர்மமறியாதபல கர்மிகள்சேவையும்
        தகையற்றநீச சேர்க்கை,
தரைமீதிலெமைவென்று தாழ்த்தாமலெங்கணும்
        தைரியம் அருள்புரிகுவாய்.

## போற்றித் திருவந்தாதி.

அறனெறிக் குகந்தாய் போற்றி-அருமறை புகுந்தாய்போற்றி
சரதமா நிலையாய் போற்றி - சமரச குருவே போற்றி
உரமிகு முலகுக் கெல்லாம் - ஒருதனிப் பொருளே போற்றி
அரனய னரியென்றோதும் - ஆதியே போற்றிபோற்றி.

---

ஆதியே வமலா போற்றி - யைந்தொழிற் புரிவாய் போற்றி

நீதியே நிகரே போற்றி - நிறைவளர் சுடரே போற்றி
வாதியே யேழையுற்தன் - வலிமிகுங் கழலே போற்றி
சோதியா தருளல்வேண்டும் - சுருதியின் இறைவா போற்றி.

---

இறைவனே போற்றியிந்த - ஏழைபங்காளா போற்றி
குறைவிலா நிறைவேபோற்றி - குவலயத் தருவே போற்றி.
கறையிலாக் கடலே போற்றி - கடைநடு முதலே போற்றி
இறைமலி பாதம் போற்றி - ஈசனே போற்றி போற்றி.

---

ஈசனே யென்னமாயம் - இத்தரைமீதி லெம்மை
கூசலா லலையவிட்டு - கூடி நின்றுடுகின்றாய்
பாசமாம் பற்றைநீக்கி - பழவினை முழுதுமாற்றி
ஊசலற் றிருக்கவுள்ளம் - உகந்தரு ளருவே போற்றி.

---

உருவமா யன்பர்தங்கட் - குருதுய ரகலநாடி
திருவள ரபயமீய்ந்து - தெரிவரி சுகமும்நல்கி
தெருளுரு மிம்மைதனிலே - திடம்பெற வருளுந்தேவா
ஒருவரந் தரவுமக்கு - வூக்கமு மிலேயேபோற்றி.

---

ஊக்கமா யெங்குஞ்சென்று - வுலகவர்க் கன்புசெய்து
தீக்கருமங்கள் நீக்கி - திருவருள் சுரக்கச்செய்து
தூக்கமுந் தொலைத்துயானே - தூயவில்லறத்திற்சேரும்
பாக்கிய முதவவேண்டும் - பரமனே யெந்தைபோற்றி

---

எந்தையே யிருளுக்கெல்லாம் - எழிற்சுட ரொளியுளானே
முந்தினுள் முதலாயெம்மை - மும்மலக் குழிபிற்றூக்கி
விந்தையா யன்னையார்தம் - விரிவிலாக் கருவிற்றேக்கி
வந்தது போதுமையா வாகைசேரேகாபோற்றி.

ஏகனை யெங்குந்தானாய் - எண்ணிய கருமத்தோனாய்
பாகமா யுயிர்கட்கெல்லாம் - பாங்குட னமுதீவோனாய்
தேகனை யடியர்தம்மை - தேடியே வருவாயன்றோ
ஆகையா லுந்தன்பாதம் - அடைக்கல்மையா போற்றி.

---

ஐயனே அரசேயெந்த - னப்பனே யொப்பிலாத
மெய்யனேயென றென்னாளும் - மேவினேன் கூவினேனான்
வையகத் துன்னையன்றி - வருமிடம் வேறுமுண்டோ
உய்யவே யபயந்தாரும் - ஒருவனே போற்றிபோற்றி.

---

ஒருவனே வுயர்வேயென்றும் - உயர்விலாக் குறைவே
[யென்றும்
உருவனே யருவனென்று - ஒன்றிய சமயத்[தோர்கள்
பிரியமாய் துதிகொண்டாடும் - பெருமிதக் குன்றேயெந்தன்
உருவருவில்லாதுற்ற - ஓமெனும் வெளியேபோற்றி.

---

ஓமெனும் வெளியேயுண்மை - உகந்தருச்சிக்கச் செய்தே
ஈமமதென்னே வென்று - நினைவருந் தனையனேனை
பாமரர்க்கயலினின்று - பகர்ந்திட வேண்டுமெனறேன்
ஆமெனுந் திருவேயென்றும் - ஔவிய மகற்றிபோறறி.

---

ஔவியம் பேசேலென்று - ஔவையா ரருளிச்செய்தார்
செவ்விய மனத்திற்சேரும் - சிறுமைகளனைத்து முந்தன்
கவ்வுதலன்றி வேறு - காரண மில்லையென்றேன்
அவ்வித மிருக்கவேண்டும் - அருள்புரி அரசேபோற்றி.

# பொதுப்பள்ளியெழுச்சி.

## ஆசிரிய விருத்தம்.

பரிதியி னெருசிறு மதிர்வரும் வவளியே
பலவணுத் தீரளின மிலகுறு முறையே
கருதரு நினதருட் கதிர்வர அடியேங்
கரணமும் புவனமும் புரணமதுறவே
உருவற விழுங்கிய வுறக்கம்விட் டெழுந்தோம்
உன்னருள் பரவிட வுவந்திவ ணிருந்தோம்
இருதயத் தினிச்சகம் எறிடு முன்னம்
எம்பெருமா னெம்முள் ளெழுந்தருளாயே.

---

ஒன்றிய விவேகமா முயர்குணம் போக
உண்பது முடுப்பது மேகதி யாக
நின்றுழ லாவகை நெஞ்சினீ நின்று
நிஷ்கள சித்தமே சக்கதி யென்று
நன்றுடன் தீதுணர் நடுநிலைப் பேறே
நல்கிய நின்னருட் கென்னஸக மாறே
இன்றுமத் தொல்லரு ளண்மையுவர்தாள
எம்பெருமா னெம்முள் ளெழுந்தருளாயே.

---

கன்றெனைத் தீதென நீடு நின்று
நல்லொளி காட்டியுஞ் செல்லலற் றின்று
நின்றனம். கடுதமி யொன்றிடக் கட்டி
நிறுத்திய கயிற்றை யவிழ்த்தும்பின் றட்டிக்
கன்றைநற் றாயிடம் விடுத்திடு மாறே
காட்டிய நல்வழி கூட்டிவை பேறே

என்றுநின் னல்லரு ளன்றியொன் றெய்தேம்
எம்பெருமா னெம்முள் ளெழுந்தருளாயே,

---

சித்தநற் சுத்தியே முத்தியின் வித்தாத்
தேற்ற நீ தந்துயபின் சிற்றின்பம் பற்றுத்
தத்துறு வேமையிச் சழக்கிற் கைதூக்கிச்
சடத்துவம் போக்கிநின் றன்வய மாக்கி
நித்தமென் திரிவித கரணநன் னெறிக்கே
நின்றிட வமைத்தரு ளின்றிதிற் குறுக்கே
எத்தனை வரினுங்கே டத்தனை யுங்காத்
தெம்பெருமா னெம்முள் ளெழுந்தருளாயே.
தப்பரும் பலதொழிற் சாகர நடுவே

---

சடலமென் சிறுதோணி விடவொருப் படுவேம்.
முப்பெருங் குற்றமா மூன்றுள வோட்டை
மொழிமுதற் றுணைகளோ வொழிகில சேட்டை.
எப்புறம் பார்க்கினுந் தப்பருங் கேடே
எங்ஙனந் துழாவியா மெய்துவம் வீடே
எப்பிணி னின்னரு ளிளவணி யீவான்
எம்பெருமா னெம்முள் ளெழுந்தருளாயே.

---

நித்திரை செயுமனை நெருப்புறப் படையும்
நெருங்க, விட் டேகுவார் நெஞ்சக்கிடையும்,
உத்திகொண் டோடுநாய்க் கொருமுழங் கூட்டி
போச்சிடுங் கல்லும்போ லூக்கம் பாராட்டியும்
சித்தத்துஞ் செறியாது தீவினை வெருவிச்
சேட்டித காமாதிக கூட்டமுற் றெருவி

இத்தகை யெம்பணி முற்றிடும் வண்ணம்
எம்பெருமா னெம்முள் ளெழுந்தருளாயே.

---

நல்லது கண்டுமற் றல்லது பற்றும்
நாணறு சங்கற்ப நலிபடை சுற்றும்;
எல்லையிலா வெளி மானதக் கோட்டை;
இந்திரியப்படையிதிற் செயுங் கேட்டைச்
சொல்லவோ வாயிலே; சூழிருண் மூலஞ்
சுதந்தர மற்றுளஞ் சோர்ந்திடுங் காலம்
இல்லையுன் னருளொளி லெங்ஙன முய்வோம்
எம்பெருமா னெம்முள் ளெழுந்தருளாயே.

---

வெங்கதிர்ச் செல்வனுந் திங்களும் விண்ணும்
வீசுமாசுகங் கனல் விரிபுனன் மண்ணுந்
தங்குநின் னாணையிற் றந்தொழிற் பாணஞ்
சந்ததம் புரிவபோ லெந்தனு காணந்
துங்கநல் லறவழி தங்கிநின் றெழுக
சுதந்தர மடியேங்க ளகங்கர நழுவ
இங்குநின் றெல்லரு ளீந்தளித் திடுவான்
எம்பெருமா னெம்முள் ளெழுந்தருளாயே.

---

குணக்கெழு கதிரவன் குடக்கடை முனமே
குறுபபு செய்தழித்திடுங் கொடுவினை வினமே
கணக்கிட வெளிதல கருத்திடைக்கூடிக்
கவலைசெய் யவலமோ கணங்கணங் கோடி.
பிணக்குறு முளத்தினி லொழுக்கிவை போகப்
பேரருட் காந்தத்தி னேரிரும் பாக,

இணக்கிகின் பதந்தர விதுவொரு தருணம்
எய்பெருமா னெம்முள் ளெழுந்தருளாயே.

---

தங்கிய விருளிற்சஞ் சரிக்குமின் மினியாச்
சலிக்குஞ்சர் பேதாமே சதமென மதியா
சங்கைகொ ளுளத்தராத் தலைதடுமாறுந்
தருக்கிகன் போம்வழி யொழித்திது காறும்
பொங்கிய கருவமும் புலமையும் விடுத்தோம்
புத்தியிற் பத்தியே மொருளென வடுத்தோம்
இங்குமற் றெளி யேங்கட்கிந்நெறி போதும்
எம்பெருமா னெம்முள் ளெழுந்தருளாயே.

---

## இராக தாளங்களோடு பாடத்தக்க பிராஹ்மபஜனை கீதங்கள்.

---

இராகம்-பூபாளம் தாளம்-சாபுதாளம்.

**பல்லவி.**

மனமே! எழுந்திராய்!

**அநுபல்லவி.**

எழுந்திராய் மனமே—எழுதக்தோ வேளை
எழுந்திராய் மனமே—எழுந்திராய்!

**சரணங்கள்.**

சகல லோகங்கட்கு சுவாமி யொருவனென்று
சப்திக் குங்கால மிதோ எழுந்திராய்!
அகிலவிநோதனை யாத்மாவி லேயறியும்
அக்காலம் வந்ததிதோ எழுந்திராய்!
ஏகமே வாத்துவீ தீயமெனச்சேவல்
எங்குங் கூவுதந்தோ எழுந்திராய்!
சோகங்களை விட்டு [illegible]பதற்கிதுவேளை
சீக்கிரமுடனே [illegible]
பிரம்ம கிரு[illegible]மென பல
பக்ஷிகள் பாடுதே [illegible]ராய்!
கர்வங்களை விட்[illegible] தழுவென

காற்றும் வீசுதிதோ எழுந்திராய்!
மூட பக்தியென்னுமுதிர்ந்த பனித்துளிகள்
முழுதும் நீங்குததோ எழுந்திராய்!
காடாந்த காரமா மஞ்ஞானங்கடந்தது
கடுகி கண்டு நீ எழுந்திராய்!
நானு மதங்களாம் நக்ஷத்ரங்கள் யாவும்
நலிந்து வெளுத்தன எழுந்திராய்!
நானே பிரம்மமென்னும் நானுமதங்கூட
நசித்து போகுதிதோ எழுந்திராய்!
இகபரஞ் சுகந்தர இதோ பிரம்மஞானம்
இனி யாகிலும் பார்த்து எழுந்திராய்!
சகல கலைகளுடன் சூரியன்போ லுதித்தது
சந்துஷ்டியுட நீ எழுந்திராய்!

---

தர்பார்ராகம்—ஆதிதாளம்.

**பல்லவி.**

தினமே சுப தினமாமம் - உன்னை நினைக்கும்
தினமே சுப தினமாம்.

**அனுபல்லவி.**

அகங்கார மமகாரம் அனைத்தையும் விட்டொழித்து
அற்புத மிகுமுன்றன் அன்பை யடையுகின்ற. (தினமே)

**சரணங்கள்.**

அனந்தவெளியிலுள்ள அணுவிலற்பத்தினையும்
அசைக்கத்திறமில்லா யாம் அருள்பரமே! யுன்றன்
அன்பைப்பற்றிநிற்கில் அகண்டஐசுவரியமெல்லாம்
அடையக்கூடுமென்று அகத்தில்மகிழ்கின்ற. (தினமே)

வலியோர்தசையைகண்டு வயிறுயெரியாமலே
எளியோர்துன்பநிலையை எமதுநிலையோடொப்பிட்டு
இறையுங்காரணமின்றி இவ்வளவளித்தவுன்
உரிமைக்கருணைதன்னை உள்ளுறத்தொழுகின்ற. (தினமே)

அரசர்முதலியோரும் அடைவதற்கரிதான
ஸுகம்சாந்திமுதலான சிறந்தபொருள்களெல்லாம்
எளியோரில்எளியோர்க்கும் உகந்துதந்தருள்கின்ற
அருள்நிதியாமுன்னை அன்பாகதொழுதேத்தும், (தினமே)

### கனடாராகம்—அடதாளசாப்பு.

**பல்லவி.**

பஜிநீ பஜி ஸதா பகவானே.

**அனுபல்லவி.**

உசித பிரஹ்மா நந்தம் உமக்குண்டு நீதம்.

**சரணங்கள்.**

நிர்மலத் தியான நிஷ்டையைக்கூடி
கர்மத்தை முற்றும் கரைக்கவழி தேடி. (பஜிநீ)
ஏகனே நாடி இன்பத்தில் ஆடி
மோகத்தைச் சாடி முத்தனேப் பாடி. (பஜிநீ)
இதயம் அதிலே இலங்கிய நாதனே
நிதமுந் துதித்து நீக்குவாய் வேதனே. (பஜிநீ)

---

### காம்போதிராகம்—ஆதிதாளம்.

**பல்லவி.**

எல்லாம் வல்ல பரப்பிரஹ்மம் ஒன்றே தெய்வம்
என்றே துதிசெய்வாம்.

**அனுபல்லவி.**

சொல்லால் அடங்காத வெளிமுதல் பூமிமற்ற
துலங்கும்சராசரங்கள் இலங்கும்படி அமைத்த
(எல்லாம்)

**சரணங்கள்.**

கடந்த ஞானிகள் உள்ளக் கருத்தினில் கண்டது
காணாத மானிடர் ஆராய விண்டது
தொடரந்த ஞானிகள் நாமம் அமிர்தம்போல் உண்டது
சுத்தமுத்தர்கள் தொழப் பிரத்தியக்ஷங் கொண்டது.
(எல்லாம்)

ஆதி மறைக்குள்ள ஓதிப் பதிந்தது
அணுவுக் கணுவாகி அங்கங்கே கதித்தது
சோதிச் சுடரெனத் தொன்மையோர் மதித்தது
தொண்டர்கள் எல்லோரும் தொழுது துதித்தது.
(எல்லாம்)

காரண காரியம் இரண்டையும் மேயது
கற்பனை உளத்திற்குக் காணமல் போயது
பூரண மாய் ஓங்கும் ஓங்கிப்பேர் போயது
பூதலத் தோர் உள்ளம் புகுந்துமெய் ஆயது.
(எல்லாம்)

சங்கராபரணராகம்—ரூபகதாளம்.

பல்லவி.

ஸத்யம்ஞானமனந்தம் - ப்ரஹ்ம - ஸாந்தம்சிவமாநந்தம்.

அனுபல்லவி.

நித்யம்விபும் - ஸர்வ - கதம்ஸுஸூக்ஷ்மம்
அத்யந்ததினைய - பரமம்நிதானம். (ஸத்யம்)

சரணங்கள்.

ஏகோதேவஸ்ஸர்வ - பூதேஷுகூடா:
ஸர்வவியாபீஸர்வ - பூதாந்தராத்மா
கர்மாதியக்ஷஸ்ஸர்வ - பூதாதிவாஸ:
சாக்ஷிசேதாகே - வலோநிர்குணஸ்ச. (ஸத்யம்)

அபாணிபாதோஜ - வனேக்ரிஹீதா
பஸ்யத்யக்ஷஸ்ஸ - ச்ருணோத்தியகர்ண:
ஸவேத்திவேத்தியம்ந - சதஸ்யாஸ்திவேத்தா
தமாஹுரக்கியம்பு - ருஷம்மஹாந்தம். (ஸத்யம்)

தேத்யானயோகானு - கதாஅபஸ்யன்
தேவாத்மஸக்திம்ஸ்வ - குணைர்நிகூடாம்
ய:காரணாநிநி - கிலானிதானி
காலாத்மயுக்தா - ந்யதிதிஷ்டத்யேக: (ஸத்யம்)

## வந்தனம்.

கலியாணிராகம்—ரூபகதாளம்.

பல்லவி.

சத்துச்சித் தாநந்தப் பொருளாகிய தேவா
சரணம் மகாநுபாவ.

### அனுபல்லவி.

நித்திய மாய்ச் செழுத்து நிறைந்த சர்வா தார
நிருல உலகுந் தரும்  நிமல சாக்ஷாத்கார.
(சத்துச்)

### சரணங்கள்.

எள்ளுக்குள் எண்ணெய் போல்  எப்பொருளிலும் தானே
இருந்தும் அரூபியாகி  ஏகமாய் நின்றோனே
விள்ளும் சத்வகுணத்தில்  விளங்கும் எம்பெருமானே
வேண்டும் அடியார் உள்ள  வீட்டில் வசிக்கும் கோனே.
(சத்துச்)

அஞ்ஞானம் எனும் இருட்  டறையுள் கிடந்து தீயே
அனைய துயரங்களில்  அழுந்தும் எமக்கு நீயே
மெய்ஞ்ஞான ஒளிதந்து  விளக்கி இன்பருள் வாயே
விளங்கும் நின் அருள் அல்லால்  வேறொன்றும் இல்லைதாயே.
(சத்துச்)

சிற்றறிவால் செய்த  தீமையைப் பொருத்திந்த
சிறுவர் சிறுமிகட்குத்  திவ்விய ஞானம் பொருந்த
முற்றும் தயை செய்தெங்கள்  முயற்சிகள் எல்லாம் முந்த
முழுவரம் தந்தருள்வாய்  முதல்வனாகச் சிறந்த.
(சத்துச்)

---

## தியானம்.

---

செஞ்சுருட்டிராகம்—ரூபகதாளம்.

### பல்லவி.

சிந்தனை செய்வாய்  மனமே
சிந்தனை செய்வாய்.

### அனுபல்லவி.

இந்த வெளிமுதல்  ஆம் பூ தங்களை
எல்லாம் படைத்த மெய்  இன்பக் கடவுளை. (சிந்தனை)

### சரணங்கள்.

அண்ட கோடி நிறைந்  தப்புறத்திலும் தோய்
அசலனாகு நித்ய  அவயக்த ரூப மாய்

கண்டம் இல்லாத அகண்டனை அன்பாய்
கலந் தின்ப முற கசிந்து விரைவாய்.
(சித்தனை)

சரங்கள் அசரங்கள் இரண்டையும் படைத்து
தன் உரு காட்டாமல் தனித்துவியாபித்து
சிரத்தாம் விளங்கும் சித்தனை உள்ளது
நிலைத்திட வேறே நினையாமல் வைத்து.
(சித்தனை)

அறிவுக் கறிவாகும் அண்ணலை விண்டு
அறிந்தவன் அமிரதன் ஆவான் எனக் கண்டு
குறியற்று விளங்கிய குணநிதி யின் தொண்டு
குறையாமல் நாளும் குறிப்பாய்ச் செய்துகொண்டு.
(சிந்தனை)

---

சங்கராபரணராகம்—ஆதிதாளம்

பல்லவி.

என்னென்போமெம்மதியை பரமனே,
எதென்போமெம்விதியை.

அனுபல்லவி.

உன்னைநினையாதே யொழித்தோமெம் வாழ்நாளை,
மன்னும்வழியறியா ஏயங்கலானோமிவ்வேளை. (என்)

சரணங்கள்.

அன்னையாயெங்களை யன்போடெடுத்தணைத்து
துன்னியதுயர்களைத் துடைத்தின்பம்தருவித்து
நன்னெறிதனிற்செல்ல நாடோறுங்கற்பித்து
சொன்னநன்றிமறந்து சுத்தப்பாவிகளானோம். (என்)

எல்லாம்படைத்தளித்த வல்லவநீயிருக்க
பொல்லாவர்ச்சைகளையே போற்றியலைந்தோமே
சொல்லவரிதாமுன்றன் ஸ்வரூபத்தையுணராமல்
பல்லூழிகாலமும் பாமரரானோமே. (என்)

சத்தியமுந்தருமமும் சாற்றித்திரியாமல்
நித்தியத்துவமருளும் நின்செயல்புரியாமல்
பத்தியின்றிவெளிவேடம் பூண்டதனிற்பயனும்
முத்தியுங்கிடைக்குமென மோசம்போகவானோமே. (என்)

### தோடி ராகம்—ரூபகதாளம்.

#### பல்லவி.

அஞ்சலிசெய் தடிதொழுவோம் - அசலனையே
தஞ்சமாய் மதித்தொழுவோம்.

#### அனுபல்லவி.

துஞ்சித் துயர்கள் எல்லாந் தூரத் தொலைத்திட
அஞ்சல் என்றருள்புரி அமலனை அணுகிட. (அஞ்சலி)

#### சரணங்கள்.

ஆதாரமான மெய்யன் - ஜகம்வளர்க்கும்
மாதாவாய் நிற்குந்துய்யன்.
தீதாம்நெறியானோரைத் திருப்பி நன்னெறி சேர்பான்
தாதா உலகுக் கவன் தானே அளித்துக் காப்பான். (அஞ்சலி)

கருணை செய்திடு நாதன் - கசடருக்குங்
கர்த்தவயம் உரைபோதன்
மருவிப் பணியும் எங்கள் மனதிருள் அற்றிட
பருத்த பரிதி எனப் பரன் ஒளி உற்றிட. (அஞ்சலி)

நிரந் தரந் துதிசெய்வோம் - அவனருள்
வரந்தர நாம் உய்வோம்
பரமபதந் தன்னை நம் பாவந்தீர்த் தருள் கூர
பிரஹ்மதருமத்தைப் பிரிவற நாம்சேர. (அஞ்சலி)

---

### ஆஹிரிராகம்—மிஸ்ரமதாளம்.

#### பல்லவி.

எனிரங்கா யோ எம்பெருமானே
எனிரங்கா யோ.

#### அனுபல்லவி.

எனிரங்காயோ தீனர்களின்மீது
தேனினும் இனிதாமுன் ஞான அமுதூட்ட. (எனி)

#### சரணங்கள்.

கோனே குணநிதியே மோன அருள் வடிவே
ஈனம் தவிர்த்த தெம்மை ஆனந்தம் அடைவிக்க. (எனி)

இருமையிலும் நீயே அருமையாம் துணையென
பெருமை மேவு நின் அடி மருவிய எம்மீதில். (எனி)

இரும்பாம் நெஞ்சினராகி பெரும்பாவச்செயல்களை
விரும்பிச் செய்த எம்மேல் கிரம்பச் சினந் தாயோ. (எனி)

ஆசை என்னும் கயிற்றில் ஊசல் ஆடும் மனம்
ஈசனும் உன்னைவிஸ் வாசிக்க இல்லைஎன்றே. (எனி)

நாச உடம்பினிற் பாசம் வைத்தளவின்றி
மோச மாதிகள் செய்து மாசுற்றவர்கள்என்றே. (எனி)

புத்தியிற் சிறிதும் நின் சிந்தை யில்லாமலே
பந்தஸம்சாரத்தில் நொந்தலைந்தோம்என்றே. (எனி)

இந்த கடமைகளை ஆய்ந்துணராமலே
நேர்ந்த படிக்கெல்லாம் சாய்ந்துழன்றோம்என்றே. (எனி)

---

## தோத்திரம்.

---

உசேனிராகம்—ரூபகதாளம்.

பல்லவி.

ஈன்றளிக்குங் மூலகாரண ஓ ஓ பரம!
இன்பம் அருள் உதார பூரண.

அனுபல்லவி.

தோன்றும் அம்பரத்திற்கும் பரமாகித்
தொண்டர் உளங் குடி கொண்ட ஓ நாரண. (ஈன்ற)

சரணங்கள்.

உருவில்லா திலங்கு ஜோதியே ஓ ஓ அசிந்திய!
உயிருக் குயிரான ஆதியே
திருவுளமலர்ந் தடியர்க் கெங்கணும்
தீரம் தந்தருள் கருணை் போதியே. (ஈன்ற)

மாயும் மனிதர் மதத்தில் வீழாமல் ஓ ஓ புனித!
மண்ணிற் சிற்றின்பக் கடலில் ஆழாமல்

பேய றிவினைப் பிளாந்து நின்பதம்
    பெறும்வகை காட்டு பேதித்துத் தள்ளாமல் (ஈன்ற)

அடி நடு முடிவில்லாததெய்வமே ஓ ஓ உன்றன் !
    அருள் இல்லாமல் யாது செய்வமே
கொடியவை செய்திடினும் மன்னித்துக்
    கொள்ளாவிடின் பின் பெங்ஙனம் உய்வமே. (ஈன்ற)

---

யதுகுலகாம்போதிராகம்—சாப்புதாளம்.

பல்லவி.

பேராகந்தப் பெங்கடலில் மூழ்கப்
பிரமா யருள் புரிவாய்.

அனுபல்லவி.

பாரிற் றுன்பங்கட்குப் பயர்துநின்னடியினை
சேரு மடியாரைத் தேற்றி யபயந்தந்து (பேரா)

சரணங்கள்

பூரியர் தொடர்ப்பையெப் போதும் காடாமலே
பேரறிவாளர்நட் பென்றும் விடாமலே
சீராம் நன்னெறிதனில் சென்று நின்னேவலே
நேராய் செலுத்தியுனை நேசிக்க வறிவீந்து
(பேரா)

அஞ்ஞான விருளினில் அழுந்தி மயங்கு மெம்மை
சுஞ்ஞான வொளிகாட்டிச் சுகவழியினிற் செம்மை.
துர்ஞானப் பகைஞரால் மேனிலையில் சேர்ந்து
மெய்ஞ்ஞானிகள்பெறும் மேனிலையில் சேர்த்து
(பேரா

உலக வின்பங்களில் ஒன்றும் நிலையில்லை
அலகிலாத் துன்பத்தில் ழ்த்தும் பெறுந்தொல்லை
பலகாலு மனுபவ ப்பட்டும் அறிவில்லை
சலசித்தரா தலின் சார்தோம் நீயேரில்லை
(பேரா)

நீலாம்புரிராகம்—அடதாளசாப்பு.

**பல்லவி.**

கோனே குணநிதியே நீ கைவிடில் நான்,
காணேனே கதியோன்றும்.

**அநுபல்லவி.**

தேனே தெவிட்டாவமுதே பாலே ஜசியாமருந்தே. (கோனே)

**சரணங்கள்.**

நன்மைக்கே நீயிந்தமனம் நலமேநாடமல் நின்று நஞ்சாம் வழியைத் தேடி நாசம் விளைகின்றதே. (கோனே)

நீரிற்குமிழி போன்ற நிலையற்ற இம்மைச்சுக, நிழலையே தாவி நின்று நின்று நின்றன் பத மறந்தேன். (கோனே)

நீதியே நிறைகடலே நீசனுமென் செயலைநீக்க மிக வன்புடன் நித்திய சுக மளிப்பாய் (கோனே)

---

தேசிகதோடிராகம்—ரூபகதாளம்.

**தீபதைகண்ணிகள்.**

பரம வீசனே ! ஒ ! பக்தர் நேசனே !
உரைத்து நின்புகழ் உள மகிழ்கிறோம்.

அரிய வன்னையே ! ஒ ! அருட் பெருக்கமே !
பிரிய குன்றமே ! ஒ ! எமைப் பெற்ற செல்மே !

இன்ப வள்ளலே ! ஒ ! எம்மை ஈன்ற நீ
உன் குழந்தைகள் உய்ய நோக்குவாய்.

ஒ கிருபாம்புதே ! உத்த மோத்தமா !
எகனுமுனை யேற்றி போத்துவாம்.

திக்கு வேறில்லை ஒ ! தீந ரக்ஷகா !
மிக்க வாடி.யாம் மேவினோ முனை.

பக்த வத்ஸலா ! ஒ ! பரம பூருஷா !
பத்தி தந்தெமை பாது காத்திடும்.

சர்வ வல்லபா ! ஒ ! சத்குணாகரா !
தர்ம மென்றுன்றன் தாள் வணங்குவாம்.

ஆதி மூலமே ! ஓ ! அருளின் கோலமே !
தீதிலாதெம்மைத் தேற்று சீலமே.
எந்தையே ! யுனை எற்றி நின் கழல்,
வந்தடைந்தனம் மன வன்மை தந்தருள்.
பக்தி யாலுனை பத்திஞேமினி,
முத்தி தாதிருப் பணி முடித்த பின்.

---

கமாசுராகம்—ஆதிதாளம்.

பல்லவி.

ரூ பரஹித குண கணநிதியே சகலவித கொடிய
பா பசமனநலமிகுமதியே.

அனுபல்லவி.

தாபமகலவெகு சோபையுடையதயா
தீபசோதிதந்து மாபலனளித்தருள். (ரூபர)

சரணங்கள்.

நியதபருவங்களில் மழைபனிமுதலிய தழைத்து, பிரமா
நாடுமுழுமையுலும் க்ஷேமம்நிலைக்க உன்னருளால்
வயல்கள் சோலைகளிள் மலர்களும் கனிகளும்
மாதந்தோறுமிக வாகப்பலிக்கச்செய்க. (ரூபர)

கடலில்திரியுகிற தரணிகள்தினந்தோரும்வெகுவாய்,பிரமா
விலையிற்சிறந்தபல விதநவமணிகளைச்சொரிய
அபரிமிதவணிகம் தினந்தோறும் பெருகவே
நாடுவாழ்வுற மஹாபயனளித்தருள். (ரூபர)

பரதகண்டந்ரனி லரசியல்நெறியுடன் ஓங்க பிரமா
பாமரவறிவுடனே நிலையாமலேயொழிய
சகலகலைகளிலும் விளங்குமுன் கருத்துகள்
நாழிதோருமிக வாகவளரச்செய்க. (ரூபர)

---

நீலாம்புரிராகம்—ஆதிதாளம்.

பல்லவி,

மெய்யா ! நின்திரு சரணத்தை நத்திஞேம்
மேல்பத மீந்தருளே.

அநுபல்லவி.

பொய்யராம் நரங்கள் போற்றித் துதித்திடப்
பொருந்தாதோ ? மனம்வருந்தாதோ ? (மெய்யா)

சரணங்கள்.

பாரையும் வானையும் பருத்த இரவியையும்
படைப்போனே ! பாபந்துடைப்போனே ! (மெய்யா)

ஊனிலு முயிருலு முயிர்க்குள் ளுணர்விலும்
உறைந்தோனே ! எங்கும் நிறைந்தோனே ! (மெய்யா)

ஆணுகாப பெண்ணுகா அரிய வலியுமாகா
ஆண்டவனே ! அருள் பூண்டவனே ! (மெய்யா)

அண்டங்களனைத்தையும் அடுக்காகவமைத்திட்ட
அரியவனே ! யார்க்குரு பெரியவனே ! (மெய்யா)

பிரம்ஹ ஞானத்திற் பேரின்ப மளித்திடும்
பிராணேசனே ! பெரும் பேருனநேசனே ! (மெய்யா)

---

## பொது.

---

காம்போதிராகம்.—ஆதிதாளம்.

பல்லவி.

அப்பன் நீ இருக்கையில் மக்கட் கென்ன குறை
அய்யா எங்கட்கு நீ உரை.

அனுபல்லவி.

எப்புவியோரும் போற்றும் எகமேவா த்விதீய
எந்தாய் எங்கள் இதயத் திலங்கும் நற்றுணே ஆய. (அப்பன்)

சரணங்கள்.

சஞ்சலம் என்னும் கடல் தன்னில் ஆழ்ந்து நாளும்
தத்தளித் துழல் கின்ருேம் தயவாய் எம் முறை கேளும்
தஞ்சம் என்றும்மைகூவித் தயிரியம் கொள்வோம்மீளும்
துன்மை இல்லாத மோக்ஷ சாம்பிராச்சியம் தந்தேஆளும் (அப்பன்)

வெம்புங் கானல் நீரை வேட்டலை கலைக் கொப்பா
வீணே அஞ்ஞான இச்சை மேவித் திரிந்தோம் இப்பால்
நம்பும் பக்தர்க் கருள் நயந்துதவும் உகப்பால்
நாடிக் கதறுகின்றோம் நாங்கள் சொல்வதும் தப்பா (அப்பன்)

மனத்தொன்று வாயிலொன்று செய்கையில் வேறொன்றாக
வஞ்சக மூடராய் வதறுவோம் குன்றாக
கனத்த உன் திருவுள்ளம் எப்படி அன்றாகக்
கருதி இருக்கின்றாயோ காவலா நன்றாக (அப்பன்)

---

இராகமாலிகை—ரூபகதாளம்.

பல்லவி.

நலமாயருளிந்நாட்டை பிரமாவுன் றன்
நலமாரபிமானத்தால்.

அனுபல்லவி.

உலகமோகனவுன் றன் னலகிலாவருளினால்,
புலவராளியேயிங்கு சிலைபெரும்படியாக.

சரணங்கள்.

நம்மைக்காம்போதினில் ஜன்மலபலமான,
தன்மப்பயிற்சியாலே மேன்மையளிக்குஞ்ஸ்ரீயை,
பன்முறையும் மேவி வன்மனத்தோடிங்கு,
கன்மப்பயிரவித்து ஸன்மதங்கொண்டாட. (நல)

அஞ்சிவிலகரிய பஞ்சமாபாவமெம்,
நெஞ்சினையெப்போதும் நஞ்சாஹரிக்காதெம்,
வஞ்சகனவழுன் அஞ்செழுத்தைப்பாடி,
உன்சீர்தருபாரில் கொஞ்சிமகிழ்ச்சியுற. (நல

எங்குங்கலியாணம் பொங்கிதழைபவே,
சங்கராபரண யெங்கட்குநீதந்து,
கன்குவசந்தமோ ருங்கசிலைக்கவே,
புங்கானுபுங்கசாரங்கா த்துமென்மேலும். (நல)

அன்பியாக்கடையோரு மின்பமடையவென,
முன்புதனியாசி யெம்போல்வர்க்கியவுன்,

கம்பீரக்காப்பினில் கம்பமின்றிவாழ,
நின்பந்துவராளி தம்பமாய்வேரூன்றி. (நல)

துன்பவிளைவினை முன்புசுருட்டிக்கொன்று,
நின்பதமத னீலாம்பரிவுள்ளவுன்
அன்புவுதயமாகி நம்பினபக்தர்கள்,
இம்பர்மத்தியமாவதில் சம்பிரவமாய்மூழ்க. (நல).

---

## விவாஹகாலங் களிற் பாடத்தக்க,

### நலுங்காதிப் பாட்டுகள்.

### இராகம். சங்கரா பணரம்.

---

நலுங்கிட வாருங்கள் - நங்கையரே - இங்கித மாய்
கலங்கமில்லா கடவுளைநங் கருத்திலென்று நினைந்து
அண்டசரா சரம் படைத்த, ஆதி தே வனைப் பாடி
மண்டலத்தில் மணக்கோலம், மகிழ்ந்துநாம் செய்திடவே (ந.)

எங்கும்நிறைந்தோனே, யாவையும் படைத்தோனே
மங்களம் உற்றோனே, மணவாளா நினைப் பாடி (ந.)

அண்ணன் மாணமகனும், அண்ணிமாணமகளாம்
பண்ணவர் போற்றிடவே, பாடும்பதங்கள்பாடி (ந)

சந்தானம் பன்னீருஞ், சலவைக் காலவை சேர்ந்து
சுந்தராக் கைகளுக்கு, சந்ததம் பூசியே நீர் (ந.)

கஸ்தூரி திலகமிட்டு, கண்களுக்கு மைதீட்டி
விஸ்தாரம் நகைப்பூட்டி, விதம் விதம் சேலைகள் கூட்டி (ந.)

மகிழு மல்லிகை முல்லை- மருகும் ஜாஜியுஞ் சேர்த்து
புகழும் பூமாலை சூட்டி, புனிதமுட னின்று (ந)

ஜகந்தன்னில் இல்லறமே, மிகு சிறந்த தென்னும்
பகடால நரசிம்மன், பகரும் நாலுங்கு பாடி (ந.)

---

### இராகம் - ஆநந்பைரவி.

நலுங்கிட வாருங்கள் நங்கையாரே நீங்கள்
துலங்கிடுந்தேவனைப்பாடித் துதித்துக்கொண்டாடி (ந.)

கோய முத்தூர்வாழும் குல மாதரே நீங்கள்
நேயர்கள் நிதம்புகழும், நிறை கல்வி மாரே (ந.)

அண்ட கோடிகள் பாடைத் தாதி தேவனுக்கு
தொண்டர்கள் தினந்தேடுந் தேவர்தேவனுக்கு (ந.)

ஆன்மகோடிகள்பா டைத் தாளும் மெய்யனுக்கு
மான்விழி மகளீர்காள் மானமுடநின்று (ந.)

குங்குமுங் கலவைச் சாந்தை குணமாகக் கொண்டு
திங்கள் நிகர்ப்பாவையரே, திலகமிட்டின்று (ந.)

ஒது மல்லிகைமுல்லை ஒப்பற்றமகிழும்
பாதிரீ பன்னீர்ரோஜா, பகர்புஷ்பங்கள் கொண்டு (ந.)

வித்தை மிகக் கற்று, பூர்வ வீணை தனைமீட்டி
எத்தரை யோர் புகழும், எதிராஜ னுக்கு (ந.)

உச்சி தன்னில் கொண்டையும, ஒப்பற்ற பார்வை
மெச்சும் நகைகளணிந்த, மேன்மக்களே வாரீர் (ந.)

மலர்மாலை தனில் வண்டுகள், மதுவுண்டிசைபாட
தளர்வில்லா பொன் பூண் களைத் தரித்த கோதையரே (ந.)

மயி லன்னம் புறுக்கள், மகிழ்ந்து நடித்தாட
ஒயில்செய் பக்ஷிகள்பாட, விலங்கினங்கள்கூட (ந.)

மாஞ்சோலையின் கோகிலங்கள், மகிழ்ந்து யிசையாட
பூஞ்சோலையின் மாதர்களே, புனிதமுட நின்று (ந.)

சரசக்கவி சேலம் நகர் சாற்றும் பகடால
நரசிம்மன் நிதம்பாடும் நாராயணனுக்கு (ந.)

---

## இராகம்-கனடா.

### பல்லவி

ஆடுவோம் வாரீர்-பூச்செண்டுகள்
ஆடுவோம்வாரீர்-அரிவையரே

### அநுபல்லவி.

அண்டர்கள் போற்றிடு - மாதிமூலந்தன்னை
தொண்டர்கள் போற்றிட - தேடித்தேடி இன்று (ஆ)

**சரணங்கள்.**

மல்லிகை மகிழம், மெச்சும் வர்ண
முல்லையு மருவும்—மோகிக்கவே.
அல்லியும் அரிவியும் அழகான சண்பகம்
மெல்லியரே சூடி மேன்மையாகவே யாம் (ஆ)

பேசும் பன்னீர்பூ - பாரிஜாதம்
பூசை புன்னைபூ - பாதரியும்
வாசனை ஜாஜியும் - வளமான ரோஜாவும்
நேசமாந் துளசி - நித்தியங்கொண்டுயாம் (ஆ

இம்மலர்கட்கு - இத்தனை வர்ணம்
எம்மகான் தந்தான் - சுவாசனை
சந்ததமே தந்து - சந்தோஷ ம்கொள்ளவே
எந்த நாதன் தந்தானோ - அந்த நாதனைப்பாடி (ஆ)

---

இராகம்—இங்கிலீஷ் நோட்டு.

**பல்லவி**

இன்ன மேன் தாமதம் - ஈசனை யாம் - பாடுவோம் வாரீர்

**அனுபல்லவி.**

சொன்னேனிது சத்தியம் - சுகமாய் வாழ விருப்புவோ ரெல்லாம்

**சரணங்கள்.**

ஆதியந்தமற்றவன் - அன்னைத்தையு படைத்தவன்
சோதி ரூபமுற்றவன் - சுயம்பெனும் பேர் பெற்றவன்
ஆதார வவனைவிட - யாதரிப் பாராருமில்லை (இ)

உலகவாழ்வுஞ் சதமல்ல - உற்றார் பெற்றார் சதமல்ல
உலகப் பொருள்கள் சதமல்ல - உத்தியோகங்களுஞ் சதமல்ல
கலகம் யாவும் விட்டு விட்டு - கர்த்தனை யாங் காண்பதற்கு (இ)

நன்மைசெய் தீமைவி டென்னு - நற்பிரமாணங்கொண்டு
தன்மையான சத்தியஞ் - சாந்த குணத்தையும் பெற்று
என்னேரமு மெம்பெருமானை-யேற்றிப் போற் றெங்கும் பார்க்க(இ)

---

171315
சென்னை-600 008
04:414
N12

## சோபனப் பாட்டு

பல்லவி,

சோபனமே, சோபனமே – சுபசோபனம் பாடுவோமே

1 தினகரனைப் படைத்த சுவாமிக்கு
திங்கள் தன்னை படைத்த சுவாமிக்கு
மனமறியவே மன்ருடி
மனக்களிப்புட னெல்லோரும் (சோ.)

2. நக்ஷத்திரங்களைப் படைத்தசுவாமிக்கு
நாளுகிரஹங்கள் படைத்த சுவாமிக்கு
பக்ஷமுடனந்தரத்தி லவற்றை
பாதுகாக்கும் பெருஞ்சாமிக்கு (சோ.)

3. இந்த உலகம் படைத்தவனுக்
இதை யந்தரத்தில் வைத்தவற்கு
சந்தத மவற்றை காக்கும் சுவாமிக்கு
சிந்தையில் கொண்டு சந்தோஷமாய் (சோ.)

4. பெருங் கடல்களை படைத்த சுவாமிக்கு
பெரும் பர்வதங்கள் படைத்தசுவாமிக்கு
பெரும் நதிகளை படைத்த சுவாமிக்கு
பெரும் விருக்ஷங்களை படைத்த சுவாமிக்கு (சோ.)

5. சகல பிருணிகளைப் படைத்து
சாஸ்வித சுகமுமே கொடுத்து
அகில விநோத னுமப்பனுக்கு
அன்பாகவே யாவருங் கூடி (சோ.)

---

இராகம் - எதுகுலகாம்போதி சாப்பு - தாளம்.

பல்லவி.

இந்த ஜன்மத்திலே யன்னைத் துதியாவிட்டால்
இருந்துஞ் சுகமென்ன !

[library stamp]

### அநுபல்லவி.

சந்ததமன்னைப்போல் சாந்தத்தை தந்திடும்
சுந்தர நாதனே சுரர்போற்றுந் தேவனே இந்த

### சரணங்கள்.

நின்னடியை வணங்கா நீண்ட்சிரசேனோ
நின்பெருமையை நோக்கா நேத்திரங்களேனோ
நின்கீர்த்தங்களைக்கேளா நீண்ட செவிகளேனோ
நின்மேனிவாசனை முகராத மூக்கேனோ இந்த

உன்னைப்புகழாத வாயிருந்து மென்ன
உன்னைவிரும்பாத ஹிருதயமிருந்தென்ன
உன்னைக்கும்பிடாத கரங்களிருந்தென்ன
உன்னைதேடிநடக்கா கால்களிருந்தென்ன இந்த

பாருக்குள் வீடுகள் பணமிருந்தாலென்ன
பலரும்புகழும்படி பெருமைப் பெற்றாலென்ன
ஆருக்கு மதிபரா யரசரானாலுமென்ன
அஷ்டைசுவரியத்தோ டனுபவித்தாலென்ன இந்த

பாவதாபங்களால் பரதவிக்குமெம்மை
பாவனாக்கியே பாதுகாப்பாய்செம்மை
கோவே குணநிதியே குன்றாவருளாலெம்மை
கூவியழைக்கின்றோம் கிருபையுள்ள எமதம்மை இந்த

---

இராகம் இந்துஸ்தானி - சாப்புதாளம்.

### பல்லவி.

வாரும், வாருமெம் அன்பர்களே நாம் - வனத்திலே விளையாடலாம்

### அநுப்ல்லவி.

காடிடும் நாலாபக்கத்தில் மலைகள் - நதிகளுமோடுவதைப்பாரீர்..

**சரணங்கள்.**

1 புகழும் பாரி ஜாதமும் பன்னீர்
பெரிஷிய ரோஜாப் பாரி பெருமை
மகிழு மந்தாரம் சம்பகந் தாழை
மலர்ரு ஏரங்களின் சோலைகள் பார்த்திட (வா.)

2. மாமரஞ் சோலைகள் தெங்குங் கமுகும்
மதிக்கும் விளா பெலா வாழை வனங்களும்
சந்தண மரசு ஆலமுந் தேக்கு
சுந்தர தேவர்கள்ப் பார்த்திட (வா.)

3. மல்லிகை முல்லை மர சம்பங்கி
மருக் கொழுத்தங் கதம்பமு மங்கே
அல்லியு மரளிசெவந்தி அழகு
அருமைத் தாமரை அமைதியுங்காண (வா.)

4 கோகிலல் வண்டுகள் கீதங்கள் பாட
கிளிகளும் மயில்களும் குதித் தங்காட
பேசும் புருக்கள் புதுமையாய்க் கூட
புகழ் பல பக்ஷிகள் பெருமையாய் நாட (வா.)

5. தாமரை குளங்களில் செங்கழி னீரோடு
தத்தித்த வென் றன்னங்க ளாட
தேவ ருலகோவன் வென் றெவருங் கூட
தென்றல் காற்றுந் தெவிட்டா தாட (வா.)

6 மலர்களைக் கொய்து மாலையாய்த் தொடுத்து
மனமது மகிழ முடிப்போ மங்கே
பழங்களைக் கொய்து பண் பாகுண்டு
பாடி யாடி விளை யாடவே (வா.)

7 எண்டிசை போற்று மண்டப மங்கே
யதி நரசிம்மனுஞ் சேரிடவே
அண்டர் முனிவர்கள் போற்றுடுந் தேவனை
அனைவருங் கூடி பாடிடயின்று (வா.)

இராகம்-கலியாணி. ஆதிதாளம்

பல்லவி.

இங்கார கந்தா வனந் தன்னைப் பாரீ - ரம்மா - இங்கு
சங்கீத சம்பிரங் கொண்டாநந் திக்கலா மம்மா.

அநுபல்லவி.

சங்கம் புகழ் சண்பகப் பாரி ஜாதமும்
ஜாஜி மல்லிகை முல்லை மருவமும்
மங்காத மகிழ்முந் தாழையு மரளி
அங்க மாகக் கொண்டா நந்த புஷ்பமுள்ள (இ.)

சரணங்கள்.

மாமரஞ் சோலையில் மாங்குயில் கூவுது - கேளீ ரிதோ
மாடப் புறாக்களும் மயில்களு மாடுது - பாரீர்
தேமஞ் சோலையில் தென்றல் கூடுதிதோ - தேரீங்கே
திவ்ய தடாகத்தி லல்லிகள் தழைப்பதைப் பாரீர்
எம்மாகா னிப்பொருள்களைப் படைத்து
மம்மா யிப்பொருள்களை யாதரித்து பின்னுஞ்
சும்மா யிராமல் யாமுஞ் சுகப்பெற
செம்மையாகெங்குஞ் செழிப்பாக தோன்றும் (இ.)

சாமரங்கள்போல் கமுகின் சோலைகளைப் பாரீரிதோ
சாதுகளிடமான் குட்டிகள் சேர்வதைக் காணீர்
பாமகள் போற்றும் பலா தென்னஞ்சோலைகள் பாரீரிதோ
பற்பல வண்டுகள் பாடும் ரீங்காரத்தைக் கேளீர்
தாமரைத் தடாகத்திலன்னப் பக்ஷிகள்
தத்திமித்தோமென தாளததோடாடிட
நாமகளாதியர் நாடியிங்கேவாழ
நயம்பெற கலியாணி ராகமும் யாம்பாட (இ.)

இந்த வனத்தில் யாவருங் கைகளைக் கோர்த்து - சதா
சந்ததஞ் சரிகம பதநிச சுரத்தையுஞ் சேர்த்து
வந்தனப் பாட்டுகள் விந்தையாகவே யாம்பாடி - யருள்
நந்தனை நாடி நடித்தாடுவோ மிப்போ வாரீர்

செந்தமிழ் போற்றுஞ் சேலம் பகடால
சந்ததி நரசிம்ம னிங்குஞ் சேர
சுந்திரத்தேவனை சிந்தித்து யவருஞ்
சந்துஷ்டியுடனே சகலருமேபாட (ஜ.)

---

## எச்சரிக்கை.

இராகம் - சவுராஷ்டகம்.

1. அண்டக்கோடிகள்பாடைத் - தர்த ரங்கத்தி லாட்டும்
எண்டிசையு நிறைந்தோனை - யேற்றுவாய் எச்சரிக்கை.
2. ஆதியா யனத்தையு மாக்கி - யாவைகளை யாதரிக்கும்
சோதியாய் நிற்கும் பொருளை - துதிப்பாய் எச்சரிக்கை.
3. இன்பமே வடிவாகி யெங்கு - மியங்கும் பொருள் தன்னை
துன்டம் நீக்கிட - வேண்டி துதிப்பாய் எச்சரிக்கை.
4. ஈசனுகி யாவற்றிலு மியல் வோனை போற்றாய்
மோசம் போகாதே சொன்னேன் மகளீர் எச்சரிக்கை.
5. எங்குமா யேகமுமாய் யாவற்றையும் பார்க்கும்
மங்கள சுரூபந் தன்னை மென்றுடாய் எச்சரிக்கை.
6. ஏதோ யின்னுந் துதியாதினி - யெம்பெரு மான் றன்னை
நாதா வென் றோத நற்சமய மெச்சரிக்கை.
7. ஒருவனு யெங்குந் தோன்றி - யோங்கிய உலகாளு
மருமையா மெம்மரசை யண்டா யெச்சரிக்கை.
8. ஓகோ வாரீர் நீங்கள் - உத்தமனைப்பாடீர்
ஓகோ நரசிம்மன் சொல்வுறுதி யெச்சரிக்கை.

---

## லாலிப் பாட்டு.

இராகம் - கேதாரம் அல்லது ஆனந்தபைரவி.

1. அண்டகோடிகள் படைத்த - அப்பனே
ஆதியாய் நிற்குந் தேவே
தொண்டர்கள் போற்றும் நேயா - உதவிசெய்
தோகையர் லாலி பாட - லாலி லாலய்யா லாலி உனக்கு நல்லாலி
லாலய்ய லாலி.

பொது

## மங்களம்.

மசாளம் - சுருட்டி — தாளம் - ரூபகம்.

1 அண்டகோளம் பல மண்டலங்களுக்கு
மங்களஞ் - சுப - மங்களம்
தொண்டர் போற்று மெங்க ளிந்து தேசத்திற்கு
மங்களம் - ஜய - மங்களம்

2. சகலவேத பூராணநூல்களுக்கும்
மங்களஞ் - சுப - மங்களம்
அகிலம்போற்றுந் தத்வ சாத்திரங்களுக்கும்
மங்களம் - ஜய - மங்களம்

3. கல்விசாலை கட்குங் கற்பிப்போர் கற்போர்க்கும்
மங்களஞ் - சுப - மங்களம்
செல்வர்சுதேச கலெக்டர் ஜட்ஜிகட்கும்
மங்களம் - ஜய - மங்களம்

4. அக்கரமங்களைப் போக்கு மரசர் பலருக்கும்
மங்களம் - ஜய - மங்களம்
சக்கரவர்த்தியாகும் ஜார்ஜுபிரபுவுக்கு
மங்களம் - ஜய - மங்களம்

5. நீலவயல்சூழுங் தேசங்களுக்கும்
மங்களம் - சுப - மங்களம்
சீலராகும் பெண்கள் கல்வி யறிவிற்கு
மங்களம் - ஜய - மங்களம்

6. ஞாலம் புகழ்ந்திடுஞ் சாதுக்கள் யாவர்க்கும்
மங்களம் - சுப - மங்களம்
சேலம் ப நரசிம்மன் சொல்லுமி - தேவருக்கு
மங்களம் - ஜய - மங்களம்

---

இங்கிலீஷ்ராகம்.

பல்லவி.

மங்களம் - ஜயமங்களம் - சுப மங்கள மென்னுங்கள்
மங்களந்தேவா - மங்களம்சதா - மங்களமென்னுங்கள்

**அநுபல்லவி.**

எங்குநிறைந்த எம்பிரானைப் சுக்குலற்றவற்கும்
இங்கிதமாய் சங்கிதம்பாடி யிப்போதுநாடி (மங்களம்.)

**சரணம்.**

முனிகளெதிசள் முறையைப்பாடி முதல்வனேஎன்று
தனியேநிற்கும்தற்பரனை தகுந்தபாட்டுகளால்
தங்கக்கிண்ணியி லாரத்தைக்கொண்டு தருக்களைப்பாடி
திங்கள் வதன மங்கைமார்களே தினந்தினங்கூடி
நேசர்நாடும் நேமிநாதனை நித்தியமும்பாடி
பேசும்நரசிம்மன் மங்களம் பெருமையாய்ப் பாடி (மங்களம்)

கவிகள், பாட்டுகளைப் பாடி பிரார்த்தனைகளைச் செய்ய சக்தி யற்ற வர்களுக்கு உபயோகமான வசனகாவ்விய

# ஸ்தோத்திர பாடங்கள்.

## தேவ ஸ்துதி.

### காலை வந்தனம்.

ஓம் பரபிரம்ஹணே நமஃ.

அப்பனே ! யாமிக்காலையில் சயனத்தினின்று எழுந்து நன்றி யறிவுடன் நினைத் துதிக்கும்படி யருளியநின் கருணையை என்னென் போம். இந்நாளிலும் யாங்களனுபவிக்கப் போகிறவை இன்னவை யென்றுமுன்பறியோமல்லவா? எமை மருட்டுகின்ற அஞ்ஞானயா கிய இருள் எவ்வளவு கொடியது. இவ்விருள் இம்மயக்கம் எமக்கேன் ஜனித்தோ? முற்றும் ஒளியாகி, நித்தியமான ஒளியிற்றானே வசிக்கி ன்ற உன் மக்களாயிருந்தும் எமக்குப் பயமென்னை. அப்பனே ! உ னைவிட்டு வேறெங்கு அறிவையும் அபயமும் தேடுவோம்? சிரத்தை யோடும் நின்மேல் என்றும் பூர்ண விஸ்வாசம் வைத்து நடந்து வாழ் வோமாக. கண்ணுக்கு புலப்படாத நீ யெம் கண் முன் நின்று வெகு தொல்லை யுள்ளவன் போல் சகல காரியங்களையும் நடத்திவருவ

தைக்கண்டு களித்து சுகதுக்கங்களைக் கருதாது எமது பிரதி தினக் கடமைகளையும் சீராய் செலுத்த முயல்வோமாக. எவ்வழியிலும் நினையே பற்றி, எக்காரியங்களிலும் விஸ்வாஸத்தோடு நின் கட்டளைக் கிணங்க நடக்க நீ எமக்கென்றும் வழி காட்டுவாயாக. நித்திய சங்கீர்த்தனங்களும் சத்திய வந்தனுதிகளும் நினக்கர்ப்பிதமாவதாக. இக்கணந் தொடங்கி பாசமெமைப் பற்றாமலும், எவ்விதத்திலுமெமை யாட்கொள்ளாமலிருக்கப் பெறுவோமாக. அப்பனே! எமது கடமையைச்செலுத்துவதிலும், நின் திருவுளத்தை நிறைவேற்றுவதிலும் எவ்வளவுஹிம்ஸையும், துன்பமும் நேரிட்டபோதிலும், சஹித்து நினது பரம பதமடைவது உலகத்திலடையக் கூடிய சகல பொருளுள்ளும் சிறந்ததென்பதை மறவாதிருப்போமாக. மனசாக்ஷிக்கும் நினது திருவுள்ளத்துக்கும் இசைந்த நற்றொழிலைச் செய்யுங் கால் எமக்குள்ள முழுவன்மையோடு முயல்வோமாக. எமது ஆத்ம உஜ்ஜீவனத்தின் பொருட்டு என்றும் சிரத்தையுடையோமாய் இருப்போமாக. நினதடியார்களாகி என்றும் நினது திருவுள்ளத்தையே நாடுவோமாக. நினதடியாரும் நினதரிய புதல்வருமாகிய எல்லா மனிதரும் எமது சோதரரென பாவித் தொழுகுவோமாக. எச்சம்பத்திலும், எந்தசமயத்திலும், எந்த காரியத்திலும் எமக்குபிறர் எவ்வாறு நடத்த வேண்டுமென விரும்புகிறோமோ அவ்வாறே பிறரிடத்து யாம் பிசகாதொழுக முயல்வோமாக. யாமின்று செய்யும் காரியங்களெல்லாம் எமது நித்தியமான பரலோக வாழ்வுக்கனுகூலமான வன்மையளிப்பனவாக. யாமின்றுபுரியும் நின் திருக்கயிங்கரியங்கள் எமை நித்தியாநந்தத்திலாழ்த்துவதாக. அப்பனே! நினது மகிமை யெங்கும் பிரகாசிக்கக் கடவது. ஓம் தத்ஸத்.

---

### ௧-வது காயத்திரி ஸ்துதி.

ஓம் பரபிரம்ஹணேநமஃ.

சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார கர்த்திருக, மோக்ஷப்பிரத, ஸர்வக்ஞிய, ஸர்வ சக்த, ஆனந்தமய, ஸத்ஸ்வரூப, அதிருசிய, அத்விதீய, ஏக, பரம புருஷனுகிய கடவுளே! நினையன்பாலும் நின் பொருட்டுச் செய்யப்படுஞ் ஸத்கர்மங்களாலும் வணங்குகின்றோம்.

சிருஷ்டி ஸ்திதி லயகாரணபூதனுய் திரிலோக வியாபியாய், எமது மனோவிருத்திகளைப் பிரேரேபிக்காநின்ற ஓ பரமாத்மாவே! உனைத் தியானிப்போமாக.

எவன் யாவற்றையும் விளங்கச் செய்கின்றானோ, எவன் எல்லாவற்றையும் ரக்ஷிக்கிறானோ, எவனிடத்தின்று யாவும் ஜனிக்கின்றனவோ, எவனிடத்து யாவும் மீண்டு லயிக்கின்றனவோ, மோக்ஷத்தின் பொருட்டு எம்மனோவிருத்திகளைச் சன்மார்க்கத்தில் பிரவர்த்திக்கும்படி எவன் உதவுகின்றானோ, அப்படிப்பட்ட திவ்விய சவிதாவாகிய பரமோத்தமனே ! உன்னை யென்மேலும் கொண்டாடித் தொழுவோமாக.

மகானாகியும், அஞ்ஞானத்துக்குப் புறம்பாக்கியும், சூரியனைப்போல் ஜ்வலித்துக்கொண்டும் இருக்கின்ற மஹாபுருஷனாகிய உன்னைத் தியானமார்க்கத்திலறிந்தன்றோ மனிதன் அமிருதானாகக் கடவான். பரமபதப் பிராப்திக்கு வேறு வழியுமுண்டோ.?

ஓ புருஷோத்தமா ! மஹா புரிஷனாகிய உன்னை ஒருவனையே என்றும் மறவாமலுஞ், சிருஷ்டியிலடங்கியபூதங்களைத் தொழாமலுஞ் சத்திய மார்க்கத்தில் தானேபிரவர்த்திக் கும்படி கடாக்ஷிப்பாயாக

சர்வ சங்கேத கருமங்களையும் பரித்தியஜித்து ஏகநாயகனாகிய நினையொருவனையே சரணமடைந்தனம். அடியாரைச் சகலபாபங்களினின்றும் விடுவித்து, அபயம்கொடுத்தருள்வாயாக. ஓம் தத்ஸத்.

---

## உ-வது—உத்தர நாராயண ஸ்துதி.

ஓம் பரபிரம்ஹணே நமஃ.

சகலத்துக்குங் காரணனாய்ச் சர்வவியாபியாய் ஆதித்தன் முதல் அணு பரியந்தம் அந்தரியாமியாய் ஆளாநின்ற ஓ பரமபுருஷனே உனை அன்புடன் சிந்திப்போமாக.

எந்த புருஷன் சகல ரூபங்களையும் விசேஷமாய் உண்டாக்கிப் பெயர்களையுமீந்து அப்பெயர்களால் வியவஹரித்துக்கொண்டிருக்கிறானோ, அப்படிப்பட்ட மகானாகியும் சூரியனைப்போல் ஜ்வலித்துக்கொண்டும் அஞ்ஞானத்துக்குப் புறம்பாகியும் விளங்குகிற புருஷோத்தமனே! நினைத் தியான மார்க்கத்தால் தொழுது கரையேறுவோமாக.

ஓ ஜகத்ரக்ஷகா ! சர்வக்கியனும், புராதனனும், சகல பிரபஞ்சங்களை ஆளுவோனும், அணுவிலும் அணுவாகி யாவற்றையும் தக்கிகி

ன் றவனுங்கிர்திக்ககூடாத சுவரூபமுள்ளவனும், அந்தகாரத்தைக் கடந்த சூரியபிரகாசனும், புருஷோத்தமனும் ஆகிய உன்னுடைய திவ்விய சுவரூபத்தையேமுயற்சி யோகத்தைக் கொண்டுணர்ந்துவேறொன்றையும் பற்றாது நின் திருவடிபற்றி நினையே அடைவோமாக.

எதை வேதார்த்தமுணர்ந்தவர்கள் நாச ரஹிதமான தென்று சொல்லுகிறார்களோ, எதைப்பற்றற்று இந்திரிய நிக்கிரகம் பண்ணினவர்கள் அடைகின்றனரோ. எதையறியவிரும்பி சேதனர் பிரமசாரிகளாகிறார்களோ அப்படிப்பட்ட பரமபதத்தை அடியோம் அடையும் வழி யீதென விளக்கி யருள்வாய்,

ஓ பகவானே! நீ சராசரங்களடங்கிய இந்தலோகத்திற்குத் தகப்பனும், பூஜிக்கப்படத் தக்கவனும், உத்தமனான குருவுமா யிருக்கின்றனையாகலின், மூன்று லோகங்களிலும் உனக்குச் சமானமில்லை; உனக்கு மேலானவனுமில்லை. ஆகவே எம் சரீரத்தைக்கீழ்ப்படுத்தி நினை வணங்கி, நியாமகனும், பூஜநீயனுமாகிய நின்னையேபிரசன்னமாகக்கொண்டோம். கர்த்தனே! புத்திரனைப்பிதாவும், சினேகிதனைச்சினேகிதனும், நாயகியை நாயகனும் க்ஷமிப்பதுபோல எம்மையும் எமதபராதங்களைக் கருதாது க்ஷமித்துக் காத்தருள்வாய். ஓம் தத்ஸத்.

---

## ௯-வது-பாகவதத்தின் ஸ்துதி,

### ஓம் பரபிரம்ஹணேநமஃ.

சர்வக்ஞியனாய், சர்வசக்தனாய், சர்வாந்தரியாமியாய், நிர்மலாகாரனாய், ஆதிமத்தியாந்த ரஹிதனாய் அநந்த கலியாணகுண விகிதனாய் அநிர்வாச்சியனாய், ஆநந்த சுவரூபனுமாய் விளங்கும் எம்மப்பனே! உனைத் தியானிப்போமாக.

புத்திமான்கள் எந்த பரமேசுவரனைத் தொழுது தமது இருதயத்தில் இருபற்றுகளையும் விட்டு பிரமோபாஸநா மார்க்கத்தில் யாதொரு சிரமமின்றி சரிக்கின்றார்களோ, அந்த பாப நிவாரகனும் சுகதாயியுமா யிருக்கிற பரமாத்மனே! உனை ஆசிரயிப்போமாக.

தபங்கள் செய்தும், தானங்களியற்றியும், ஜபங்கள் பண்ணியும், அதின் பலத்தை யெவருக்கர்ப்பிதஞ் செய்யாவிடில் மஹத்தான

தோஷங்களும் விபத்துகளுஞ் சம்பவிக்குமோ? அந்த பாப நிவாரகனும் சுகதாயியும் ஆகிய மஹாபுருஷனே! நினையண்டி யாவற்றையும் உனக்கே யர்ப்பிதம் செய்வோமாக.

ஓ அற்புத புருஷா! எதை அடைந்தபின் பிறப்படையார்களோ, அதுவன்றோ நின் பரமபதம்; உன்னிடத்தில் சர்வபூதங்களுந் தங்குகின்றன. ஓ கர்த்தனே! வேறுபற்றில்லாத பக்தியோடு நின்னை யடைவோமாக.

ஜனன மரணங்களற்ற நின்னை இவ்வுலகத்தில் யார்தான் அறியக்கூடும். ஆதியந்த ரஹிதனாகிய உன்னை யார் இப்போது அறியவிரும்புகின்றனரோ அவர்கள் பிரயாண காலத்திலும் யுக்தமான மனதுடன் நின்னை அடைவர். ஆகையால், ஓ இந்திரியாகோசரா! ஓ சர்வ தயாபர மூர்த்தி! உனையன்றி யாரைச் சரணமடைவோம். உனது கருணை கிரணங்கள் எமது அஞ்ஞான விருளையகற்றி நின் பாதார விந்தம் பற்றும்படி வழிகாட்டி எம்மைக்கரை எற்றச்செய்வனவாக. ஓம் தத்ஸத்.

---

## ஈ-வது—பாகவதம், தைையின்ஸ்துதி.

## ஓம் பரபிரம்ஹணேநமஃ.

அணுவோ, அல்லது மகாவிபுஸ்வரூபியோ, சின்னனோ, அசின்னனோ; குணியோ, நிர்க்குணியோ என்று ஞானிகள் ஆத்மதத்துவ விசாரிகளாய் சத்தியமறிந்து எந்தப் பிரபுவின்திருவடி சேவையினால் தத்துவ தர்சனம் செய்கின்றனரோ, அப்படிப்பட்ட அநிர்வாச்சியனான ஓ பரமாத்மாவே! உனைத்தொழுதேற்றுவோமாக.

தபங்கள் செய்வதினாலோ, மனோநியமத்தினாலோ, தான விரதங்களில் பிரீதி வைப்பதாலோ, ஜபதந்திரங்களினாலோ, சுருதி ஸ்மிருதிபடனாதிகளினாலோ, சத்பக்தியினாலோ, மற்றெவ்வாறவனை யடைத்தக்கதென்று பாகவதர் எவனைச் சேர முயல்வார்களோ அந்தஸர்வேசுவரனாகிய ஆத்மஸ்வரூபனே! நீ எமக்கெப்போதும் சுலபனாகக் கடவாய்

ஓகலியாண குண புஞ்சனே! நின்னினும் சிறந்ததுவேறொன்றுண்டோ! நூலில்மணிகள்போல் நின்னிடத்தில் சர்வாண்டங்களும் த

ங்குகின்றன. சகல. பூதங்களின் ஆதிமூலமும் நீயே. புத்திமான்களின் புத்தியும், ஒளியுள்ளவற்றில் ஒளியுமாகவிரிக்கின்றனே. காணக்கூடாத நின்னை மீதக்கியர் திருசியமென்று நினைக்கின்றனர்.

ஓ அதீந்திரியனே! சத்குணப் பிரேரேபனாகிய நினது ஞானமேளமக்கு நித்தியத்துவமளிப்பது நின்சரணகைங்கரியமே எங்களுக்கு வாழ்க்கைத்துணை. நின்மகத்துவமறியாது அளவிறந்த அபராதங்கள் செய்யுமெங்களை மன்னித்து எமை எவ்விதத் துன்பதினின்றும்காத்து நினை மறவாது நன்னெறியில் செல்லும்படி கடாக்ஷிப்பாயாக. ஓம் தத்ஸத்.

---

ரு-வது—பாகவதம், கீதையின் ஸ்துதி.

ஓம் பரபிரம்ஹணேநம:.

சங்கற்ப மாத்திரத்தாலேயே அகிலாண்டங்களையும் படைத்துக் காத்தழித்து, நித்தியானந்த ஸ்வரூபனாய் எங்கும் நிறைந்திருக்கின்ற ஆஸ்ரீதஜன வாச்சல்லிய! ஓ பரமபுருஷனே! உனை யாவலுடன் மனனம் செய்வோமாக.

ஓ சர்வஜீவ தயாபர மூர்த்தி! சகல தேசங்களிலுமுள்ள சேதன கோடியும் எந்த திவ்வியாத்மஸ்வரூபனைச் சேவித்துப் பாகவத சிரேஷ்டராய் பாவனராக முயல்கின்றனரோ அந்த நிர்விகாரனான சர்வாந்தரியாமி நீயேயாகையால், நினை யெமது மனதில் எப்போதுஞ் சிந்திப்போமாக.

ஓ அருள்வள்ளலே! எமைப் பிரேமையுடன் எடுத்து வளர்த்த பிதாவாயும்,அன்புடன் அணைத்துக் காத்த அன்னையாயும், துன்பந் துடைத்து தவிய எமது நண்பரான சகல ஸுஜனங்களாயும், சர்வமுமாயும், ஒட்டியும் சர்வத்திலும் ஒட்டாதவன் போலுமிருக்கிற ஓ மஹாத்மனே! சஞ்சல சித்தராயிருக்கிற புல்லறிவாளராகிய அடியாருக்கு நின்னருளாலன்றி வேறெந்த வழியால் நினதன்பு உறுதிப்படும்.

ஓ சரணாகதபோஷகா! அவிவேகமென்னும் மேகத்தால் மறைக்கப்பட்டு எவ்வழிகளிலும் துக்கங்கள் சூழ்ந்த உலகமாய மார்க்கத்தினின்றும் எம்மை மீட்பித்து நின்பக்தி யாகிய சத்கதியிற் செலுத்தி ரக்ஷித்தருள்வாயக. ஓம் தத்ஸத்.

---

## ௯-வது—பாகவதம் - ஆளவந்தார் ஸ்துதி.

ஓம் பரபிரம்ஹணே நமః.

அசிந்திய அவ்வியக்தரூபனாகியும், நிர்குணனாகியும், சகல கல்வியாணகுண நிதியாகியும், ஸமஸ்த ஜகத்துக் காதாரனாகியும், ஸகல லோக வர்த்தியாகியும், பக்தவச்சலனாகியும், புலன்களுக்கு விஷயமாகாதவனாகியும், இருக்கின்ற பரமபுருஷனே! நினை மனனம் புரிவோமாக.

ஓ ஜீவதயாபரனே! உன் சர்வ வியாபகத்தாலும், விழிப்பாலுமல்லவோ எல்லாப் பொருள்களும் மாறுதல் பெற்று தத்தம் சுபலக்ஷணங்களுடன் சோபிக்கின்றன. நின் கடாக்ஷ வீக்ஷண விருஷ்டியாலல்லவோ யாவுஞ் செழித்துத்தழைத் தோங்குகின்றன; நின்புத்திரவாச்சல்லியத்தினாலன்றோ பூதங்கள் யாவும் நினையே இச்சித்து அடைந்து ஆநந்திக்கின்றன. உன் அபேத சரணாகத போஷகத்தாலல்லவோ ஜீவகோடிகள் நினையே நம்பி சகோதர விசுவாசத்துடன் அன்னியோந்நியமாய் சுகித்துவாழ்கின்றன.

ஓ சகல பிராணிகளின் பிதாவே! அடியோம் இவ்வற்பமாகிய வாழ்நாளுள் நீப்பதற்கரிய அளவற்றதொல்லைகளாலும், மயக்குகின்ற அநந்தமான மோகங்களாலும் கட்டுண்டு அஞ்ஞான விருட் கடலில் ஆழ்ந்து நினை மறந்து விடாமல் நின் பக்திக்கு ஏதுவும், அடியாராது நன்னெறிக்குத் துணையும் ஆகிய உண்மை, அன்பு முயற்சி, கடைப்பிடி, சாந்தம், வணக்கம், ஸஜ்ஜன ஸங்கம் என்னும் நற்குணங்களை எம்மிற் பெருகச்செய்து, துன்பக்கடலினின்றும் நின் திருவடிக் கரையைப் பற்றும்படி நின்னருள் மரக்கலத்தையும் பிரசாதிப்பாயாக. எவ்வுயிருங்காக்கும் ஓ ஈசனே! அபராதிகளென்று உன் சரணடைந்த எம்மைமன்னித்து அபயங்கொடுத்தருள்வாய். யாமும் எம்முடைய பொருள்களென்றுசொல்லப்படும் யாவும், நின்னுடையதென்று நின்னையே நம்பி யிருக்கின்ற இவ்வெளிய தொண்டர்களை கிருபையுடன் அங்கீகரித்து, பாவத்தினின்றும் விடுவித்து, மோக்ஷ சாம்பிராஜ்ஜியத்தைப் பெறும் வழியையும் காட்டியருள்வாய்.

ஓ நித்திய நிர்மல ஆநந்த சுவரூபனே! நினைவிட உத்தமன் எவ்வுலகத்திலுமில்லை. இது சத்தியம் ஆதலின் தயா நிதியாகிய நீயேயெமைக் கிரகிக்கவேண்டும். வேறுகதியறியோம். நினையொருவனை

அன்றேதலே எமது பேறுகளிலெல்லாம் பெரும்பேறென உணர்த்திர க்ஷிப்பாயாக. ஓம்தத்ஸத்.

---

## எ-வது—வேதவாக்கிய ஸ்துதி.

### ஓம் பரப்பிரம்ஹணே நம:.

அரூபியாய், அமிருதனுய், சர்வத்துக்கும் ஆச்ரயனுய், சத்தியமே உருவாகக் கொண்டவனுய், குற்றமற்றவனுய், சகல ஹிருதயாந்தரியாமியராய், காரணகாரியஹேதுவாய், அவ்வியாஜக ஆனந்தமூர்த்தியாய், விளங்காநின்ற ஒ லோக நயகனே ! நினை தியானமார்க்கத்தால் துதிப்போமாக.

ஆவாங்மனோ கோசரனுகிய ஓ திவ்விய தேஜனே! நின் உருவத்தை அஞ்ஞானத்தால் நிறைத்திருகிற எங்களாலறிவது சாத்தியமோ? அறியக்கூடுமென்று முயலும் ஞானிகளிலும் நின்னை யுண்மையா யுணர்பவர்யாரோ ஒருவர். சிரேஷ்டமான நிம் பிரகிருதியிலுள்ள பதார்த்த பூதாதிகளாலல்லவோ நின் ஆஸ்தி கத்துவத்தை யுணர்ந்து நினை பூஜிக்கத் தக்கது, ஒ சர்வ சக்தனே! சதா நினது சிருஷ்டியைக் கண்ணூரக் கண்டு களிக்கவும், நின் சர்வ வியாபகத்தை புணர்ந்து சிந்திக்கவும், அச்சம்பந்தமான அற்புதங்களைக் கேட்டுப் பூரிக்கவும், புகழ்ந்து திருப்தியடையவும், அடியாருக்குப் புத்தியளிப்பவன் நீயேயல்லவா? ஓ பந்த விமோசகா! அடியார் இருவினைகட்கும் ஏதுவாகிய காமாதி பாசங்களையும், அவற்றிற்கேதுவான மனஸ்ஸங்கர்ப மாயாவிகாரங்களையும் எம்மினின்று களைந்து நினக்கிதமான சத்கர்மங்களையே புரிந்து நின்மேல் அன்புடன் எவ்வாழ்நாள் கழிக்கும்படி எங்கள் மனதை சன்மார்க்கத்தில் செலுத்தியருள்வாய். திக்கற்றவர்க்குத் திக்காயும், வருத்த முற்றவர்க்குநண்பனுகவும். இருக்கின்ற ஓ ஆபத்பாந்தவா! பலவித துன்பங்களையும் எவ்வளவு கொடியவாயினும் திடசித்தத்தோடு சகிக்கவும், எல்லாக் குறைகளையும் கஷ்டங்களையும் பொறுமையுடன் தாங்கவும் உறுதியளித்து அவற்றினின்றும் காத்தருள்வாயாக.

நின் கருணாரசமாகிய அமிருதத்தையே மருந்தி நித்தியத்துவமடைந்து வாழ ஆவல் கொண்டவராய், நின் சரணடைந்த தாசவார்க்கசாதகபக்ஷிகளாகிய அடியாரைக் கைவிடாது இரக்ஷித்தருள்வாயாக ஓம் தத்ஸத்.

---

## ௮-வது ஸ்துதி.

### செல்வத்தில்.

ஓம் பரபிரம்மஹணே நம:.

கிருபாநிதியாகிய அப்பனே! அபாரகருணையுடன் அடியேமுக்கீந்த செல்வங்கள் எமை இவ்வுலக ஜாலத்தில் அகப்படுத்தாமல் அவைகளை யனுப விக்கும் வழியை யுணர்த்தி யருள்வாய். இச்செல்வத்தால் கர்வமும், பெருமையும் அடையாமல்; நின் அளவிறந்த நன்மையின்பொருட்டு நன்றியறிதலும், பணிவும் எம்மனதில் கொள்ளும்படி கிருபைசெய்வாய்.

உலக வியாபாரத்தில் மூழ்க வேண்டுமென்னும் உத்தேசித்துடன் செல்லப் பேறடியேனுக் களிக்கப் படவில்லையென்றும், மற்று அதை யளித்த எம் பெருமானாகிய நின்னை உகந்துகந்து உள மகிழ்ந்து உச்சாகத்தோடு நின் பொருட்டாய கைங்கரியங்களைச் செய்வதற் களிக்க பட்டதென்றும் யாம் என்றும் மறவாதிருப்போமாக. இச்செல்வச்செறுக்கானது மனஸ்ஸாக்ஷியை மழுங்கச்செய்யாமலிருக்க அனுக்கிரஹிப்பாயாக.

இவ்வைசுவரியத்தை அனுபவிப்பதிலும், அபேக்ஷிப்பதிலும், நினை மறந்திடாமலிருப்போமாக. இச்செல்வத்தை இப்போது எவ்வளவு களிப்புடன் அனுபவிக்கிறோமோ அவ்வளவு களிப்புடனே, அதை மீண்டுங்கை விடத் துணிந்து, எந்நிலையிலும் சமசித்தராய் வாழக்கற்பித்தருள்வாய். உலகத்தின் மாயை யானது எம்ஹிருதயத்தைச் சூழாமல் செய்து இவ்வாழ்க்கையில் மிகவும் உயர்ந்த பெருமைகளும் சிறந்த இன்பங்களும் க்ஷணகாலத்தினவேன்றும் எப்பொழுது மறிந் தொழுக உதவி செய்வாயாக. அழிவில்லாததும், ஆத்மப்பேறானதும், நீதிமான்ஹிருதய நீதியு மாகிய சத்திய சன்மார்க்கத்தை என்றம் அவாவக்கட வோமாக, ஓம் தத்ஸத்.

---

## கூ-வது ஸ்துதி.

### வறுமையில்.

ஒம் பரபிரம்ஹணே நம:.

ஆபத்து சம்பத்துகளிலும், சுகதுக்கங்களிலும், ஆத்மகோடிகளோடு இடைவிடாது கூடிவசிக்கின்ற எம்மப்பனே ! பாக்கியவா

ன்கள்மீது போலவே எளியோர் மீதும் அளாவும் ரக்ஷகத்துவமு டைய ஆண்டவனே! எம்மையும் ரக்ஷிப்பாயாக. எம் விதியைப் பொறுமையுடனும், உற்சாகத்துடனுஞ் சகிக்கும்படி எமக்குத்துணை செய்வாய். தாழ்வுற்ற எம் ஸ்திதியைக் குறித்துப் பரிதபிக்காமல், உலகத்தின் செல்வங்கள் பொய்யான தென்றும், அநித்தியமான தென்றும், அறியும்படியாகிய சிக்ஷையிலும், குறைவிலும் எம்மையி ருத்தி எம் கண்களைத் திறந்தீரென்று நினக்கு வந்தனம் செய்கின் றோம். ஓ தீன ரக்ஷகா! இந்த துர்த்தசையிலும் நின் புத்திர வாச் சல்லியம் எம்பேரில் இருப்பதைக் கண்டு விசேஷமாய் ஆனந்திக்கி றோம். எமக்கு தவவும் எமைத்தேற்றவும் ஒருவரும் இன்றி, உகைத் தார் எமைக் கைவிட்ட போதிலும்; நின் அபய ஹஸ்தம் எம்மை விட்டகன்றதன்று. துன்பமாவது, துக்கமாவது எமை யுனது கட மை செலுத்துவதினின்றும் தடுக்காதிருக்க வருள்வாய். ஓ தீன தயாபர மூர்த்தி! நாங்கள் எவ்வளவு தாழ்ந்த ஸ்திதியிலிருந்தாலும் நினை மறவாதிருக்கக் கடவோமாக. அதிருப்தி, மனச்சோர்வு, கவ லை, இத்தியாதிகளினின்றும் எமை ரக்ஷிப்பாய். நினது அளவற்ற வாச்சல்லியம் எம் மீதிருந்து கின்றனை யென்கிற நம்பிக்கையால் எம்மனதைத் திருடப்படுத்திச் சந்தோஷிக்கச் செய்வாய். எம்மை நின் கிருபையாகிய நிதியினால் பாக்கியவானாக்குவாய். அடியேமு க்குச் சகலமும் நீதான். தரித்திரராயினும், தனவான்களாயினும் அன்புடனும் பக்தியுடனும் எம் கடமைகளை யுண்மையாய்ச் செலுத் துவோமாக. ஓம் தத்ஸத்.

---

சஓ-வது ஸ்துதி.

தைரியத்தின் பொருட்டு.

ஓம் பரபிரம்ஹணே நம:.

சர்வ வல்லமை யுள்ள கர்த்தனே! உனதருளால் எமைப் பி ரேரேபிக்கச்செய்து இம்மாய வாழ்க்கையைப்பற்றிய மாமோகங் களை வெல்லும் பொருட்டு உனது பாத கமலங்களையே என்றென் றுந் தவிராது நாடும்படி உதவி செய்வாய். மனுஷிய பற்றினின் றும், நீச சேவையினின்றும், எம்மை ரக்ஷிப்பாயாக. இவ்வுலகவா டம் பரங்களிலேயே எமது புத்தியைச் செலுத்திப் பக்தப்படுத்து கிற யாதொன்று மெம்மை யணுகாதிருக்கவருள்வாய். யாம் செலு

த்த வேண்டிய கடமைகள் யாவற்றிலுஞ் சிறந்த தெய்வீகக் கடமை யொன்றுள தென்பதை யாமென்று மறவாதிருக்க வருள்வாய். எமது வாழ்க்கை யெல்லா முனது திருக் கைங்கிரியத்தின் பொருட்டு அர்ப்பிதஞ் செய்வதே கடமை யென்றுணர்த்துவாய். இக்கடமையைச் செலுத்தும் வழியில் யாம் தவிராதும், புறளாதும், நெரே செல்லும்படி எழுச்சியும், ஊக்கமும், உறுதியும், தந்தருள்வாய். எம்பொருளுக்கும் எமது கடமையே மேம் பாட்டுடையதென்றும், தனகனுதி வுலகவின்பங்களைப் பார்க்கிலும், சத்தியமே சிறந்ததென்றும், மனிதருடைய அங்கிகார அபிமதங்களைப் பார்க்கிலும், உனது கடாக்ஷ வீக்ஷண்ணியமே அதியுசித மென்றும், புல்லறிவினராகிய அடியோம் உணர்ந் தொழுகக் கடாக்ஷிப்பாய். உனது கருணையின் பொருட்டும், பிரியமான யாவற்றுள்ளும், அதிபிரியமான நின் பொருட்டும், இவ்வுலக வைபவங்களை யெல்லாம் உச்சாகத்தோடுந் தியஜிக்க அடியோருக்கு நின்னிடத்து நிலையான நட்பும், பக்தி வைராக்கியமும் உண்டாகக்கடவது ஓ பரம கிருபாளு, இவ்வுலக மெல்லாம் ஒருங்கே எதிர்த்து வரினும் உனைவிட்ட கலாதன்றோ? சகல நிப்பந்தத்துள்ளும், ஹிம்ஸைகளுக்குள்ளும் உனது திருக்கைங்கரியங்களை விடாது உனது திருவருள் விலாசத்தை ஸ்தாபித்து, நிலை நிறுத்த அஞ்சாத நெஞ்சமும், ஆறாத ஆவலும் தந்தருள்வாய். உண்மையின் பொருட்டு ஆண்மையோடு பொருத்து ஒன்றுக்கு மிணங்காத தைரியத்துடன் உன்கட்டளை நிறைவேற்றி, பக்தி மார்க்கத்தைப்பற்றி அதற்கும் குறைவு வரின் வேண்டுமான பொழுது எம்முயிரையும் உன் பாதாரவிந்தங்களில் அர்ப்பிதஞ் செய்வோமாக. ஓ ஜகதீசுவரா! நின் திருநாமப்பிரபாவ மெங்கும் பிரவர்த்திப்பதாக. ஓம் தத்ஸத்.

---

கக-வ துஸ்துதி.

இரக்ஷணார்த்தம்.

ஓம் பரபிரம்ஹணேநம:.

பரிசுத்தனுகிய அப்பனே! இந்த லோகத்தில் மோகாதி துன்பங்களுக்குப் பயந்து அடைக்கலம் புகுந்த அடியாருக்கு உனது பாதார விந்தங்களே புக்கிடம். உனதபய ஹஸ்தமே கடைத்தேறச் செய்யு முதவி. ஜீவ தயாபரா! பாவமும, பழியும் நெஞ்சறி

யச்செய்த அடியாராது சஞ்சலப் படுகின்ற மனோபிரமரத்தைச் சற்றேனும் சுகிக்கச்செய்ய அநந்த கருணைதளங்களோடும் விகசிக்கா நின்ற நின்பாத தாமரைகளன்றி வேறு சாதனமுண்டோ? யாம் நின்னுடைமையே. என்றும் நின்னவரே. நினைநோக்கி யன்றோ எமது கர்த்தனே யென்றலருவோம். எங் கொடிய பாவப்பிணியின் பொருட்டெம்மை உபேக்ஷியாமல் எமதுக்கத்தைப்பரிகரித்து ஹிருதயத்தைக் கவ்விய கொடுமைகளை வேருடனறுப்பாய்? அடியாருக்கு நின்னுட னெவ்வளவு சமீப பாந்தவ்வி" மருளினை. அவ்வாறிருந்தும், அய்யோ! எம் கொடிய வினைகளை என்னேன்றுசொல்வோம். நின் பிள்ளையும் சேவகருமாயிருந்தும் நின் கட்டளைக்கிணங்கினோமில்லை. நினது வரையற்ற அன்பினுக்கு இடையற்ற பொருளா யிருந்தும், நன்றியில்லாது நினைவிட்டு அகன்றோம். நின் சன்மார்க்கத்தைப் பற்றும் படி மீண்டு மீண்டு மழைத்தும் நினது கட்டளையை லக்ஷியஞ் செய்தோ மில்லை எம்மீதுன்க்குள்ள நட்போ அளவற்றது. எமது நட்பெல்லாம் உலகத்தோடு பந்தப்பட்டிருக்கின்றது. யாம் செய்தகொடுமை அளவற்றதாதலின் உனது திருமுகத்தின் முன்நிற்க வெமதுடல் நடுங்குகின்றன. ஓ கருணாநிதியே! ஓ மோக்ஷதாயகா? அனுதாப ஜலத்தால் எமதுள்ளத்தை பரிசுத்தப்படுத்தி இரக்ஷிப்பாய், கொடிய வெண்ணங்களும், கொடிய வினைகளும் அறச்செய்வாய். ஹேயமனம், துற்சங்கம், துற்புத்தி, கபடம், சாஞ்சல்லியம், அருளின்மை முதலியவற்றை ஒழிக்கச்செய்வாயாக. எமது நட்புன்னை விட்டகலும்படி செய்யத்தக்க உலகவாஞ்சை முதலிய கொடுமை யனைத்தையும் வெறுக்கும்படி யருளுவாய். எமது உள்ள மெங்கும் சோதித்து அதிலுள்ள பொய்மையெல்லாம் அகற்றுவாய. அயோக்கியமான ஆசாபாசங்கள் எம்மிலுண்டாகுந் தீமையை ஆமோதிக்கச் செய்யுமாயின் உடனே உன்னைச் சரணமடைந்து உனது கருணைக வசத்தினு லெமதான்மாவைப் போற்றிக் காப்போமாக. எமதாத்ம உஜ்ஜீவனார்த்தம் யாம்செய்யு முயற்சிகளனைத்திலும் நின்னையே எமது பற்றுக்கோலாகவும் ஒளியாகவும் கொள்வோமாக, ஓ கருணாகரா! எமக்கெல்லாம் நீயே. ஓம் தத்ஸத்.

---

## ௧௨-வது ஸ்துதி.

### அருளடக்கம்.

### ஓம் பரபிரம்ஹணே நமஃ.

ஓ அன்புள்ள பகவானே! எமது வாழ்நாள் வீணாகாமல் உன் ஏவலிற் செலுத்தும் படி மன்றாடுகிறோம். உனது கட்பென்னு மினிய பாசத்தால் எமமை நின்னோடு பந்தித்து எதனாலு மெம்மனம் நினை விட்டு வேறுபடாதிருக்க வருள்வாய். துன்பத்திலும், இன்பத்திலும், சுகத்திலும், பிணியிலும், உழைப்பிலும், உல்லாசத்திலும், நித்திய கிருத்தியங்களிலும், இதர வியாபாரங்களிலும், எச்சமயத்தும், என்றும் நினைவிடாது பற்றும்படி எம்மை நின்னவராக்கிக் கொள்வாயாக. எங்கு எத்தொழிலில் பிரவேசித்திருந்தாலும் நினையே ஆச்சரித்து உன்னையே தொடர்வோமாக. சிருஷ்டிப் பொருளொன்றையும், வணங்காமலும் இவ்வுலக சிற்றின்பங்களை, அவாவும்படி ஏவுகிற மனோபாவனையாகிய பிம்பங்களைத் தோழாமலும் பொருளவா, பேரவா, ஆணவம், சிற்றின்பம், கொலை, பாதகம் முதலிய துர்க்குணங்களுள்ள விக்கிரகங்களை தொழுதேற்றும்படி செய்யும் விஷயாபேக்ஷையாகிய விக்கிராகாராதனம் செய்யாமலும், எமது கர்த்தனாகவும் அருள் வள்ளலாகவு முள்ள நினையே பற்ற உபதேசித்தருள்வாய். எமது ஜன்ம ஸாபல்லியமெல்லாம் நின்னை யறிவ தென்றே எப்போதும் மறவாதிருப்போமாக. எமது மனோ வாக்குகளை நின் சத்கீர்த்தனப் பிரபாவத்தில்தானே செலுத்துவோமாக. எமது வாழ்க்கை யெல்லாம் நின் சிந்தையால் மேம்பாடடையச்செய்வாய். எமது செய்கை யனைத்துக்கும் நினது கட்பே அகப்பற்றுப் புறப்பற்றுமாகக் கடவது. எமதுள்ளத்தின் எந்த மூலையிலாவது நின்னின்றும் வேறுபட்ட ஆசாபாச மொன்று கரந்துறையுமாயின் அதை வேருடன் களைந்திடுவாய். ஆநந்த கரமாகிய நினது சான்னித்தியமன்றி வேறொன்றையும் விரும்பாத வண்ணம் எமது பாசங்களெல்லாம் உலகத்தினின்றும் வேறுபட்டு உன்னிடத்தே வேரூன்றிசெழிக்கும்படி யருள்வாய். ஓ கருணை கூர்ந்த கர்த்தனே! யாம் எமதென்னும் இரு பற்றுகளு மற்று நின்னையேபற்றி சுத்தசைதன்னிய நிலையாகிய ஆனந்தத்தில் வாழ்ந்துய்க்க அருள்புரிவாய். ஓம் தத்ஸத்.

## கஅ-வது ஸ்துதி.

### வைதீகபாடசாலைகட்கேற்றது.

### ஓம் பரபிரம்ஹணேநமஃ.

என்றும் எங்கட் கறிவூட்டும் எம்பெருமானே! உனது அற்புதமறிவதற்கும், எமது ஆத்ம உஜ்ஜீவனத்துக்கும், மோக்ஷத்துக்கு மேதுவாகிய அருமையான தத்துவங்களையும் விசாரிக்கும் பொருட்டும் யாம் மீண்டும் சேரும்படி அனுக்கிரகித்தனை. எமது கருத்தீடேறும்படி உனது திருஞான சம்பந்த சகாயத்தைக் கொடுத்தருள்வாய். எமது மனதை மருட்டாநின்றகு தருக்கங்களினின்றும் பிசகான் கொள்கைகளினின்றும் எம்மை ரக்ஷிப்பாய். எமது பிதாவுங் குருவுமாகிய நீ மெய்யான நெறியில் எமது ஆன்மாக்களைச் செலுத்திக்காப்பாய். எங்கள் மனசாக்ஷியை தீக்ஷண்யப்படுத்தி கடமையினின்றும் உதத்ரவாதத்தினின்றும் பிசகாதிருக்கச் செய்வாய் எல்லாவற்றிலும் உன்னிடத்து நம்பிக்கையே இன்றியமையாப்பொருளென உணர்த்துவாய். சத்திய ஞானத்தால் எமது புத்தியை விகாஸப்படுத்துவது போலவே, எமது அந்தரங்கமும் நின்னை நேசிக்கும்படி செய்து எங்கள் மூவகை கரணத்தோடு நின் கட்டளைக்கிசைந்து நடக்ககிருபை செய்வாய். நினது நியமனத்துக் கிசைந்தொழுகாமற் போவோமாயின் எமது விசுவாசத்தால் ஆகும்பயன் என்ன? உனதருளினல் நாங்கள் அறியும் பிரதியுண்மையும் எமது வாழ்க்கைத்துணையாக்கிக் கொள்வோமாக. எமது கடமை யென்றறிகிற யாவற்றையும் உடனுக்குடன் செய்யமுயல்வோமாக. சத்தியத்தைக்கிரகிப்பதில் சோர்வடையா வூக்கத்தோடு முடன்று எமதுவழியில் நேர்ப்படுகிற உபகரணங்களை யாவலோடு கைக்கொள்வோமாக. பரமபக்தாளுடைய கிரந்தங்களாலே எமதறிவை வளர்ப்போமாக. சன்மார்க்கர்களுடைய சஹவாசத்தால் எமது வைராக்கியத்தைத் தீக்ஷணியப்படுத்தி எமது மனோதாருட்டியத்தைப் பலப்படுத்துவோமாக. சர்வதா நினது சிந்தையால் எமது ஆன்மக்கள் பரிசுத்தமாகி, எமது வாழ்நாள் சிறிதென்பதையு முன்னி யுலக ஆடம்பரங்களை வெருக்கச் செய்வோம். இச்சங்கம்வாழிய. போதகரும் போதிக்கப்படுபவர்களும்வாழிய. பிரதி புருஷனுடைய ஞானக்கண் முன்பாக நின்ஞானஒளி யெனுரும் பிரகாசித்து பக்தியிலும் சன்மார்க்கதிலும் மென்மேலும் பெருகும்படி அனுகிரகிப்பதாக. ஓம் தத்ஸத்.

௧௪-வது ஸ்துதி.

## குடும்பவந்தனம்

### ஓம் பரபிரம்ஹணே நமஃ.

இல்லின்பங்களோடு ஆசாபாசங்களோடு மெமை இக்குடும்பத்தி
லொன்றாகச் சேரவிருத்திய கடவுளே! நின்னை அணுகி துதிசெலு
த்துகின்றோம் எமதுயிர்த்துணை நீயே. அளவற்ற நன்மை சொரியுந்
தாயாளுவும் நீயே. உன்னை எமது பிதாவென்றழைத்து புத்திரவாச
சல்லியத்தோடும் வணங்க வருளியதே யாம்பெற்ற பேறுகளிலெல்
லாம் பெறிதென்று கருதுகிறோம். நினதநந்தகருணையை யாங்கள்
என்றும் மறவாதிருப்போமாக இப்பிரபஞ்சாதிபதியும் பரம பதத்து
க்கு நாயகனுமாகிய நீ எமது இருதயமாகிய இந்தச்சிறு வாலயத்தி
லும் வந்து நின்று யாங்கள் செய்யும் வந்தனங்க ளனைத்தையுங் கைக்
கொள்ளுகின்றனை என்பதை யுன்னி யாங்களென்றும் சந்தோஷிப்
போமாக. எம்மில் ஒவ்வொருவரது ஆசாபாசங்களுங் நினது திருவடி
யுற்று,எமது பரஸ்பரசம்மந்தமானது இனிமையும்வன்மையு முடைய
தாகும்படி யருள்வாய். எங்களுக்குள் பரஸ்பரநேயத்தை விருத்தி
செய்து ஸ்வப்பிரயோஜனம், பொறாமை, துஷ்ட சிந்தை இவைகளை
யுண்டாக்கத் தக்க துர்க்குணங்களெல்லா மகற்றுவாய். எமது இல்
லற வின்பங்களனைத்திலும் நினை நன்றியோடு நினைப்போமாக. எம
து இல்லறத்துன்பங்களிலும் எமது நலமெல்லாம் நீயே எனக்கருதி
நின்னையே நம்புவோமாக. எமைப்பெற்ற அன்னைபோல் அன்போடு
ஊட்டி வளர்க்கும் நட்புள்ள கடவுளே! நினது பிள்ளைகளின் ஆன்மா
க்களை என்றும் ரக்ஷிப்பாய் யாங்கள் பிசகிய காலத்தில் எம்மை தண்
டிப்பாய். யாங்கள் வழிதப்பிப் போவோமானால் மீண்டுமெம்மை சீர்
படுத்துவாய், எமது மனம் அசுத்த மனாகாமலும், எமது கரணங்கள்
அனிருதங்களைச் செய்யாமலு மிருக்க வுதவுவாய். சாந்தமும், அடக்
கமு மருளி பல விசித்திரமாகிய மாய வழ்க்கைக் காயத்தப்படுத்து
வாய். யாங்களுனது அருமையுள்ள பிள்ளைகளாயும், நேர்மையுள்ள
சேவகராயும், வாழ்வோமாக. இக்குடும்பத்துக்கு நாயகன் நீயே. இந்த
வீடு பெருநட்பும், சுத்தமும், சுகமும், அமைதியும், பரஸ்பரநேய
மும்,என்றும் வாழும் இடமாகும்படி ஆசீர்வதிப்பாய். இக்குடும்பம்வா
ழிய. ஓ கர்த்தனே இது உன்குடும்பமல்லவோ? பூமி மீது எல்லாக்
குடும்பங்களுக்கும் தந்தையே! எங்கும் உனது பிரபாவம் நிறைந்து
நினது பிள்ளைகளனைவரும் உன்கிருபையடைந் துனக்குள் ஐக்கிய
மடைய வருள்வாய். நாங்களென்றும் சின்னவராகையால் எமது

மனதையும் ஆன்மாவையும் உனக் கற்பிதமாக்கு கின்றனம். ஓம் தத்ஸத்.

---

## ௧௫-வது ஸ்துதி.

### ஸமாஜ வந்தனம்.

### ஓம் பரபிரம்ஹணே நம:.

ஓ அருள் நிறைந்த கடவுளே! நின்னை யன்போடு தொழுதேற்றும்படி இத்திருச்சபையில் யாங்கள் மீண்டும் கூடியது நினதனுக்கிரகமே. எமை யுற்ற தொல்லையாலும், கவலையாலும், மிக வருந்திய நாங்கள் நின்னை யணுகித் துதி செலுத்தும் நற்சமயம் என்று வருங்கொலென ஆவலோடு எதிர் பார்த்திருந்தோம். நினை யணுகி நினது சாந்நித்திய வைபவத்தை யுணர அருள்புரிவாய். ஓ பேரொளியே! பெருநட்பே! எங்கும் நிறைகின்ற பொருளே! நீ எமது கண்ணுக்குப் புலப்படுகிற யாவற்றிலும் வியாபித்து எமதுள்ளத்துங் குடிகொண்டனை. நினதருள் விலாசமுகார விந்தம் எங்கும் ஒளிவீச, நின் கருணாஹஸ்தங்கள் எவற்றையும் சூழ்கின்றன. நினது ஸர்வவியாபக சித்விலாஸத்தில் எமதான்மாக்கள் லயமாகி நின் தெய்வீகத்தையும், பாரிசுத்தியத்தையும், உணர்ந்திடவும், பிரதி துராசையும். உலகவாஞ்சையும், ஒழிய எமதுணர்வும், கருத்தும், உன்பாதார விந்தங்களையே பற்றும் படிக்கும் உதவி செய்வாய். உனது சன்னதியில் யாங்களடையுமானந்தம் க்ஷணமாத்திரையுடையதாகாமல் எமது வாழ்நாள் முழுதையும் இனியதாக்கி என்றும் நினை எங்களுக்குப்பிரியப்படுவதாக. என்று எம்மை நின் ரக்ஷணச்சாயையிலிருத்தி முள் நிறைந்த உலக வழியில் எமை தீமை யணுகாது நடாத்துவாய். துக்கமும், துன்பமும், உற்றுழி எமக்கு உற்சாகமாவாய். இவ்வுலக இருள் தன்னில் எமதொளியாய் நிர்பாய். இவ்வுலக மோகங்களினின்றும் எம்மைக் காக்கும் கவசமும் நீயே. எமக்குள் பரஸ்பர நேயத்தையும் அன்பையும் வளர்த்தி, எமது வியவகாரங்களனைத்தையும் உசிதப்படுத்தி யாங்கள் நிஷ்களங்க சோதர வாஞ்சையை அடையவருள்வாய். நின் திருவுள்ளத்திற்கிசைந்த நன்மையைச் செய்வதில் யாங்கள் ஒருவரை யொருவர் நேசித்து உதவுவோமாக. சத்தியத்திலேயே எமது வாழ்நாள் செலுத்தி பரலோக நித்திய நிர்மல ஆனந்தங்களை யடைய முயல்வோமாக. ஓ அன்புள்ள பிதாவே! என்று மெம்முடனிருந்து

எமது நட்பு கோடாது வளரும்படி கிருபை செய்வாயாக. யாவரும் சமயாதீதஸத்திய மார்க்கரக்ஷணையைப் பெறுவாராக. உன்திரு நாமாமிருதம் ஒவ்வொரு நாவும்தெவிட்டாது நுகர அவ்வவரகத்தில் நீ குடிகொள்வாயாக. சர்வசாம்பிராச்சிய நித்திய பிரபுத்துவம் நின்னுடையதாவதாக. ஓம் தத்ஸத்.

---

## திவ்யதேசதீர்த்தப் பிரார்த்தனைகள்.

இந்த கிரந்தகர்த்தாவட நாட்டில் யாத்திரைச் செய்தபோது சிலதிவ்ய தேசதீர்த்தக் கரையோரங்களிற் செய்தபிரார்த்தனைகளாவன,

அலகாபாத்தென்னும் பிரயாகையில் கங்கை யமுனைநதிகளுக்கிடையில் செய்த,

## பிரம்ம பிரார்த்தனை.

ஓ பரமாத்துமாவே! நின்னை இன்று இந்தப் பிரயாகையென்னும் பிடத்தில் கங்கையமுனையாகிய நதிகளுக்கிடையில் உட்கார்ந்து பிரார்த்தனை செய்ய என்ன புண்ணியஞ் செய்தேன். நினது அற்புதமான படைப்புகளாகிய இந்தப் பிரம்மாண்டமான கங்கை யமுனை நதிகள் கூடும் சங்கமத்தில் நினது அற்புத விலாசத்தைக் கொண்டாட எத்தனையோ வருஷங்களாகவும், மாதங்களாகவும், தினங்களாகவும், காத்துக்கொண்டிருந்து, இன்று வாய்த்ததற்கு ஹிருதய பூர்வகமான வந்தனம் செய்கிறேன். இப்படிப்பட்ட அற்புத காக்ஷியான விடத்திலல்லவா ஆதி ஆரியர்களும், எதிகளும், தபோநிதிகளும், முனிகளும் நின்னைத் துதித்துக்கொண்டாடி குதூஹலமடைந்தார்கள். இப்படிப்பட்ட புண்ணிய ஸ்தலத்தில், பாப பந்தங்களினால் பரதவிக்கும் அடியேனும் வந்து நின்னைப் பிரார்த்தனை செய்ய அருள் பொழிந்ததற்கு என்ன விதமாகத் துதித்துக் கொண்டாடுவேன். பிரயாகையாகிய இந்த விடத்தில் என் பாதங்கள் வைத்தநாள் முதல் என் பாபதாபங்கள் பரந்தோடத் தொடங்கின. இது சத்தியம் சத்தியமென்று சங்கநாதமும், பம், பம்,

என்று கோஷமிடுகின்றது. ஆகவே, தயாளுவாகிய எமதப்பனே! இனிமேலாகிலும் இந்த உடலைச் சார்ந்த கண், காது, மூக்கு, வாய் முதலானதுகளால் எவ்வித பாவங்களும் செய்யாத விதமாகக் கடாக்ஷித்து அடியேனது ஜனனத்தை சிரேஷ்டமாக்கி. சதா சாதுவாகவும், நினது பரம பக்தனாகவும், செய்து கொள்வாய்.— ஓம் சச்சிதானந்தஹரி.

---

## காசிக்ஷேத்திரத்தில்செய்த
## பிரம்ம பிரார்த்தனை.

---

ஓ! பாவதாபங்களைப்போக்கும் புருஷோத்தமனே! நின்னை இந்தக் காசி க்ஷேத்திரத்தை யடுத்த கங்கைக் கரையாகிய பிரம்மகட்டத்தில் ஸ்துதிக்கப் பாக்கியனானேன்! கம்பீரம் பொருந்திய கங்கை நதியின் கரைதுரையாகிய இந்தக் காசி க்ஷேத்திரமும், இதில் இதோ என்முன் நிற்கும் பிரம்மாண்டமான கோயில்கள், கோபுரங்கள், மண்டபங்கள், மந்திரங்கள், மாளிகைகள் பற்பலவித மாடங்களாலும், மகுத்துவமுள்ள சுவர்ண கலசங்களாலும்; பலவித விநோதங்களாகப் பிரகாசிக்கின்றன. சுந்திர வடிவும், சுகிர்த உல்லாசமுமான ஸ்திரீகளும், பிரஹம் தேஜசும், பிரஹ்மபாராயணமு முடைய புருஷ சாதுக்களும்,பரபரப்புடன் வந்துக்கொண்டும் போயிக் கொண்டுமிருக்கிறார்கள். பஞ்சவர்ணமுள்ள பலவிதக் கிளிகளும், பார்க்கப் பார்க்க பாசங் கொள்ளத்தக்க புறாக்களும் படிக்குப் படி குதித்து கூடி நாடி பாடி பறந்து வருகின்றன. பால சூரியன் தனது பலகலைக்களால் பார்க்கும் பல பதார்த்தங்களின் மீது படச்செய்து அப்படிப் படும் பிரகாசத்தினால் பதார்த்தங்கள் யாவும் பலகோடி சூரியர்களைப்போல பிரதி பிம்பித்துப் பகட்டுகின்றன. அருகில் நிற்கும் விருக்ஷங்கள் யாவும் விகசித்மான நறுமலர்களால் நடிக்கின்றன. இப்படி இந்தப் பிரபஞ்சப் பொருள்கள் யாவும் பலவிதமாகப் பாடி யாடி நாடி நடித்தாலும் அவைகளால் எனது பாவதாபங்கள் போகுமென்று தோற்றவில்லை. யாதோ ஒரு வஸ்துவினால் கிஞ்சித்து பாவம் போகுமென்றெண்ணினால்மற்றோர் வஸ்துவினால்அதிகம் ஜனிக்குமோவென்று பயம் ஜனிக்கின்ற

துஆகவே,எந்தவஸ்துவாகியஒருவஸ்துவை அண்டினேருக்கு எவ்வித பயமும் ஜனிக்காதோ!எந்த வஸ்துவாகிய ஒரு வஸ்துவை நாடினேருக்கு எவ்வித பாவதாபங்கள் நாடாதோ,அந்த வஸ்து நீயே யாகையால் தான் உன்னைநாடினேன்! உன்னையான் எப்போது நாடினேனே, அப்போதுநான் நின்னவன் : நீ என்னவன், ஆகவே! என்னை நாடிய என்குல தெய்வமே! என் மனம், வாக்குக் காயத்தால் தெரிந்து செய்த பாவங்களையும்,தெரியாமல் செய்த பாவங்களையும்,போக்கிப்பாவனமாக்கி, பரமஞானிகளுடையவும், பரம பக்தர்களுடையவும்,சுகாநந்த நிலை யெப்படிப்பட்டதோ, அப்படிப்பட்ட சுகாநந்த நிலையைத் தரும்படி பக்தி பூர்வகமாகப் பிரார்த்தித்து, இந்தப் பிரம்மாண்டமான கங்கையே நினது ஸ்வரூபமாகப் பாவித்து நினக்குள்முழுக அருள் புரிவாய்! எப்படி பிரபஞ்ச கங்கையில் மூழ்கினேருக்குத் தேக சம்பந்தமான மல மூத்திராதி அழுக்குகள் நீங்கி சுத்தியாகுமோ, அப்படியே பரலோக கங்கையாகிய நின்னில் மூழ்குவோருக்கு மனோ சம்பந்தமான பாவ தாபாதி அழுக்குகள் நீங்கிப் பரிசுத்தமான பொன் மயமாவது உண்மையல்லவா! ஆகவே, இதோ நின்னில் மூழ்குகிறேன், ஓம்! ஜெ கெங்கா! ஓம்! ஜெ காவலி! ஓம்! ஜெ சச்சிதாநந்த ஹரிஃ! ஓம் பிரம்ம கிருபாஹி கேவலம். ஓம் தத்சத்.

---

## கயாக்ஷேத்திரத்திற்செய்த பிரார்த்தனை.

---

மகத்தேசத்திற் சிரந்தப்பட்டணமாகவும், ஜனகாதிமஹரிஷிகருக்கு இருப்பிடமாகவும், சீதைக்கு பிறப்பிடமாகவும், பூலோக பெரிய மதஸ்தாபகராகிய புத்தருக்கு பிறப்பிடமாகவும், சம்பகாரணியம் என்ற சிறந்தப் பெயரைப்பெற்றதாகவும், அசோகாதி அரசர்களால் ஆளப்பட்டதாகவும், பிரபோத சந்திரோதயம், பஞ்ச தந்திர முதலான கிரந்தங்களின் கர்த்தர்களுக்கு உரைவிடமாகவும் பல்குணி நதிதீரமாகவும், விருத்தாபபியமான வடவிருக்ஷத்தையுடையதாகவும்,பதின் மூன்று பிதுர்கர்மங்களைச் செய்வதற்கு சிறந்த விடமாகவும், பிரேதபருவதத்தைப் பெற்றதாகவும், இருக்கிற இந்த கயாக்ஷேத்திரத்தில் ஓ! ஜகதீசனே நின்னை இன்று பிரார்த்தனை செய்ய பாக்கியம் பெற்றேன். பிதாபக்தி, மாதாபக்தி, ஆசாரிய

பக்தியினால் பீடிக்கப்பட்ட பற்பல நாட்டின் பற்பல ஜனங்கள் இங்கு சதாவந்து தம்மைபெற்றோரையும், பெரியோரையும், கருதி சதா சிரார்த்தங்களைச்செய்தும், பல்குணி முதலானதீர்த்தங்களில் மூழ்கியும், வடவிருக்ஷத்தின் அடியில் பிண்டங்கொடுத்து வணங்கியும் வருகிறார்கள். ஆ! என்ன பிதுர்வாஸ்சலியம், பெற்றோருக் கெல்லாம் பெற்றவனாகவும், பெரியோருக் கெல்லாம் பெரியவனாகவும், ஆசாரியருக்கெல்லாம் ஆசாரியனாகவும், இருக்கும் உன்னை இந்தபரிசுத்தமான ஸ்தலத்தில் இன்று வணங்குகின்றேன். அநேக மஹான்களுக்கெல்லாம் ஜனனபூமியாகிய இந்த திவ்வியதேசத்தில் வந்து நின்னை வணங்கும் அடியேனுக்கு அம்மஹான்களுக்கு கொடுத்த மனஉருதியையும், பரிசுத்த எண்ணத்தையும், பக்திஞானத்தையும், கொடுத்து அவற்றால் உன்னை உண்மையாக வணங்கி உசிதமான வாழ்வையடையச் செய்வாய்! ஓம் தத்சத்.

## ஐயோத்தியாவில் சரயு நதி தீரம் கேதார கட்டத்தில் ஓர் அசோக மரத்தடியில்

## செய்தபிரம்மப் பிரார்த்தனை.

ஓ! ஆநந்த ஸ்வரூபனே! நினது ஆஸ்தீகத்துவத்தை ஆக்ஷேபிக்கும் நாஸ்திகர்களும் நினது இருப்பை நம்பும்படி சிருஷ்டிக்கப்பட்ட இந்த சரயுநதியின் அற்புத காக்ஷியை யென்னென்று சொல்லுவேன். இந்த சரயுநதிக்கு வடபாகம் பிரபஞ்சத்திலேல்லாம் பெரிய பருவதமாகிய ஹிமாசலம் மலை எவ்வளவு பயங்கரவாகவும், பிரம்மாண்டமான பனிக்கட்டிகளால் பல பிரபாகர தேஜஸ்ஸுகளாகவும், பிரகாசிக்கின்றது. தெற்கெல்லையோ, கவிகளால் புகழத்தக்க கோசல தேசமென்னும் அயோத்தியா நகரம் அலங்காரமாகத் தோற்றுகின்றது. இவ்வெல்லைகளுக் கிடையில் சமுத்திரத்தைப்போல விரிவும் பலசூரிய குஞ்சுகளைப்போல் பிரகாசிக்கும் சிறு மணற்படர்ந்த சிறந்த மேடு பள்ளங்களுடனும், சிலுசிலுப்பான சீத ஜலத்துடனும், ஜாஜ்வலிக்கும் இந்த பிரம்மாண்டமான சரயு நதி ஓடுகின்றது. இந்த நதியின் இந்த கட்டத்தில் தான் ஸ்ரீராமர் வைகுண்டத்

துக்கெழுந்தருளியதாக சாஸ்திரோக்தமாகச் சொல்லப்பட்டு அந்த உண்மையை நிலை நாட்டும்பொருட்டு அதிக ரமணீயமும், விசாலமும், விநோதமுமான ஆவி கூப தாமரை தடாகங்கள், படிகள், ஜப மேடைகளும், யோகிகளுக்கேற்ற குகைகளுங் கட்டப்பட்டிருக்கின்றன. இப்படி அநேக விதங்களில் சிறந்த இந்த கட்டத்திலிருக்கும் அழகிய அசோக விருக்ஷத்தின் அடியில் அடியேனும் அடியேனை சார்ந்த சகோதிரர்களும் கூடி நின்னை பிரார்த்தனைச் செய்யும்படியான பாக்கியம் பெற்றதற்கு நின்னை எவ்விதமாகத் துதித்துக் கொண்டாடுவேன், என்னுடைய அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம், என்னுடைய பாக்கியமே பாக்கியம். எனது ஜனனமே ஜனனம்! இனி இப்படிப்பட்ட காக்ஷி எங்கு கிடைக்கும்! எப்போது கிடைக்கும்! எவருக்குக் கிடைக்கும்! எந்த சுத்தவீரன் கொடிய துஷ்டையாகிய தாடகையை வதைத்தானோ? எந்த சுத்த சாமர்த்தியவாதி வில்லை யொடித்து சீதையை மணஞ் செய்தானோ? எந்த உத்தம புத்திர சிகாமணி பிதுர் வாக்கியத்தை நிறைவேற்ற பாலிய தசையையும், பிரபஞ்ச சுகத்தையும், வெறுத்து, கேவலம் மரஉரி, சடாதாரியாகி காட்டில் பதினான்கு வருஷங்களை கழித்தானோ? எந்த நீதி துரந்தரன் சகோதிர வஞ்சனை வழக்குகளைத் தீர்த்து குறைந்த பலத்தையுடைய சுக்ரீவனை யாதரித்தானோ? எந்த உத்தம கணவன் சீதைக்காகவும், துஷ்டத்தன த்துக்காகவும் இராவணாதி கொடிய இராக்ஷஸர்களைக் கொன்று கொடுமைநீக்கினனோ! எந்த கருணாநிதி பகைவன் தம்பியென்று பாராட்டாமல் அபய மென்று வந்த விபீஷணனுக்கு அடைக்கலம் கொடுத்து ஆதரித்தானோ! எந்த தருமராஜன் குடிகளுடைய சுகதுக்கம் தனது சுகதுக்கமாகப் பாவித்து ஒற்றிலன்றி தானும், ஓர் ஏழைபோல் இராக்காலங்களில் வீதிகடோறும் திரிந்து, குடிகளுடைய அபிப்பிராயங்களை யறிந்து செங்கோல் செலுத்தி வந்தானோ? எந்த அடிமை உலகத்துக்குப் பயந்து மஹா பதிவிரதையாகிய சீதையைக் காட்டுக் கனுப்பினனோ? எந்த நீதி போதகன் 'ஏகபத்னி விரதமாக" சீதை யென்னும் தனது ஒரு ஸ்திரீயை விட வேறு ஸ்திரீகளை மாதாவைப்போல வெண்ணி வேறு விவாக மற்று சுத்த ஏகபதிவிரதா தரும சாதனனாகி விருந்தானோ? எந்த குல சிரேஷ்டன் முனிகள், எதிகள், தபோநிதிகள் முதலான பெரியோர்களைப் பாது காத்து யாக யக்கிய கர்மங்களையும், பிரம்ம பாராயணாதிகள் விசேஷித் தோங்கச் செய்தானோ! எந்த உத்தமனை சாக்ஷாத் மஹா விஷ்ணுவின் அவதார மென்று நாளது வரை

யில் இந்த இந்து தேசமெக்கும் வணங்கப்பட்டு வருகின்றானே! எந்த உத்தம புருஷனுடைய சரித்திரத்தை சீர்திருத்தமுள்ள உலகத்தின் எல்லா தேசத்தார்களும் கொண்டாடி வருகிறார்களோ! அப்படிப்பட்ட ஸ்ரீராமனுடைய ஜனன ஸ்தானமும், இராஜாங்க ஸ்தானமுமாகிய இந்த ஐயோத்திக்கு வந்ததில், சரித்திர சங்கதி உண்மையானதன்றியில், சாக்ஷாத் ஜகதீசுவரனாகிய நினது சிருஷ்டியின் அற்புத காக்ஷியைக் கண்டு ஆநந்தமடைகிறேன் இதோ எனக்கு முன்னாகத் தோன்றும் இந்த ஹிமவத்கிரியில் அல்லவா வியாசர், சுகர், பராசரர் முதலான பிரம்ம ரிஷிகள் சதா தபோநிதிகளாகி நின்னை நேரில் கண்டு பேசிக் குலாவினார்கள்? ஆம்! பெருமை பெற்ற புத்தரும் அன்று இப்படிப்பட்ட அஸோக விருக்ஷத்தினடியில் உட்கார்ந்து பூரண பிரம்மத் தியானத்தால் நிர்வாண தசையை யடைந்தார். அப்படிப்பட்ட மஹாத்துமாக்களுக்கெல்லாம் நீ சர்வ சிரேஷ்டனாகவும், சிநேகிதனாகவும் இருக்க அடியேனிடத்தில் மாத்திரமுனக்கு உபேக்ஷையேன்? அடியேன் கல்வி கேள்வி யற்ற ஏழை! இது நீ யறிந்த விஷயம்? என்னைப்போன்ற ஏழையை யாதரித்தல் உனக்குப் பெருமை. இனி தாமதமேன்! உன்னை நேரில் கண்டு பேசி என் பாபதாபங்களைப் போக்கிக்கொண்டு சதா ஸாதுக்களுடைய ஸமாஜத்திலிருந்து நின்னை ஸ்துதி செய்யவேணுமென்றே எத்தனையோ மலைகளையும், எத்தனையோ நதிகளையும், எத்தனையோ தேசங்களையும், எத்தனையோ சங்கடங்களையும், சகித்துக்கொண்டு ஹிமாசல பர்வத அடிவாரமாகிய இங்கு வந்தேன். இனி இந்த விடத்தை விட்டுப்போனால் உலக ஆசாபாசங்கள் பீடித்து வருத்தும்; ஆகவே எனக்கு பிரத்தியக்ஷமாகியும், பிரம்மாண்டமாகியும், பலகோடிபிரபாகர பிரகாசமாகியும் இருக்கும்சுத்த சைதன்யபிரம்மாநந்தமே! யான் நின்னை அடைக்கலம் புகுந்தேன். என்னை அங்கீகரித்துக் கொள்வாய்! எனது கண்ணீரைத் துடைத்து உமது மகவைப்போல் ஆதரிப்பாய்! இனி யான் இந்த ஹிமாசலப் பருவவத்துக்கு சீக்கிரம் வந்து நினது பக்த வைராகிகள் கோஷ்டியில் சேர்ந்து சாதா ஓம் சச்சிதாநந்த ஹரியாகிய நின்னைப் பாடி ஆநந்த கூத்தாடச் செய்வாய்! ஓ! சரயு நதியே, உனக்கு மங்களம்! ஓ! ஐயோத்தியா நகரமே நினக்கு மங்களம்; ஓ! அஸோக விருக்ஷமே நினக்கு மங்களம்.—ஓம் தத்சத்.

---

# ஹிமாசலமலையின் அடிவாரத்திற்செய்த பிரார்த்தனை.

ஓ ஹிமாசலமே! நீ இவ்வுலகத்திலுள்ள எல்லாபருவதங்களிலும் உயர்ந்த சிறந்தபருவதம். பத்திரிகாசரமும் கேதாரகட்டம், நைமிசாரணியம், கைலை, முதலான திவ்ய ஸ்தலங்களுக்கெல்லாம் நீ பிறப்பிடம், மானச்சரோவரம், சிந்து, கங்கை பிரம்மபுத்திராதிகளுக்கும் நீ ஆதாரஸ்தானம், உலகத்திலுயர்ந்த டியோரடங்கா, கிஞ்சின் கங்கா, எவரெஸ்டுமுதலான உன்னத சிகரங்களால் விண்ணுலுலகை நாடிப்போகும் உத்கிருஷ்டமானமலை— பயங்கரமாக பெருத்து வளரும் விருக்ஷங்களாலும், இரமணீயமான புஷ்பச்செடிகளாலும், கணக்கற்ற கந்தமூலங்களினாலும், மகிமையுள்ள மூலிகைகளினாலும், மகுத்துவம் பெற்றபருவதம், நின்னிடம் வசிக்கும் கிருமி கீடகங்கள், பற்பலவித பக்ஷிகள் மிருகங்களுக்கு கணககே இல்லை. நின்னிடம் அடைக்கலம் புகுத்துதவம்செய்து சதா பிராமபராயணம் செய்யும் யோகிகள் அநேகர்நின்னை மூடி நிசைகுச்சதாகுளிர்ச்சியைத்தரும் பனிக்கட்டிகள் பிரபாகருனுடைய பிரகாசத்தினால் பற்பலவித வருணங்களோடு பிரகாசித்து ஜகஜ்ஜோதியாக பிரகாசிக்கின்றாய். ஆசியா கண்டத்தின் தேசங்களுக்கும் இந்து தேசத்திற்கும் இடையில் ஒரு அற்புதமவுனயோகியைப்போல சண்டமாருதத்திற்கும் சற்றும் சலிக்காமல் விண்ணுலகநாதனையே நாடிக்கொண்டிருக்கிறாய்! ஆனதுபற்றியே அன்று வசிஷ்டர், பராசரர், வியாசர், அகர், முதலான மஹாரிஷிகள் நின்னிடம் வந்து தபோதனுராகி தயாசார சிந்துவாகிய சர்வேசுவரனை யடைந்து பரிபூரணாநந்தத்தைப் பெற்றார்கள். ஓ இணையற்ற ஹிமாசலமே! இத்தியாதிகளைக்கேட்டு இன்று நானும் நின்னிடம் வந்தேன். வந்தாலுமென்ன? தேகதாருட்டியமும், மனவுருதியும், பக்திவைராகியமுமற்று பாவதாபங்களால் பீடிப்பட்டயான் நமது பரமபிதாவை எப்படி யடையக்கூடும். ஓ அற்புத சிருஷ்டியே! உன்னைப்போல் திடமான மனதையும், உயரமான பக்தியையும், பெற உதவிசெய்வாய்! உனக்கு சகிரதமுண்டாகும்ஓர்அற்புதபுருஷா! உன்னை இந்த இமயமலையில் வந்து பிரார்த்தனை செய்ய எத்தனையோ வருஷங்களாக எண்ணி யெண்ணி யேக்கங்கொண்டிருந்தும், எத்தனையோ தூரத்

திலிருந்து, எத்தனையோ கஷ்டங்களை சகித்துக் கொண்டும் இன்று இங்குவந்தேன். அங்கம் பரவசமடைந்தேன். பாதரசம்போல பல பக்ஷமும் பரவும் எனது மனதை இம்மலையைப்போல திடம் பெறவும், தாழ்ந்து குறைந்திருக்கும் எனது பக்தியை இம் மலையைப் போல உயர்ந் தோங்கச்செய்தும் நின்பேரானந்த பக்திரசத்தை சதாபருகும்படி செய்வாயாக. ஓ ஹிமாசலமே உனக்குமங்களம். ஓம் தத்சத்.

---

## கல்கத்தாவில் செய்த பிரார்த்தனை.

---

சக்தியாகிய ஓ! சச்சிதாநந்தமே! ஜகத்திலிருக்கும் ஜன சமூகத்தார் நின்னை இவ்விதமாகவணங்கி தங்குறைகளை நீக்கிக்கொள்ளுகிற பெருமையை என்னென்பேன்! ஆண் பெண் அலி முதலான ஜாதி றபேதமும், செகப்பு, கருப்பு முதலான ரூபபேதமு மற்றதாய் விளங்கும், அபாரசக்தியாகிய நின்னை ஜனங்கள் புருஷ ரூபமாக பாவித்து வணங்கி புருஷார்த்தத்தையும், பெண் தெய்வமாகி பாவித்து பேதமை, பொருமையாதிகளை பெற்று பிரகாசிப்பதைப்போலவே, சத்தியத்தை ஸ்தாபிப்பதில் சர்வசக்தியை யடைய விரும்பி நின்னை பயங்கரமான சக்தி ரூபமாக்கி வணங்குகிறார்கள். இப்படிப் பட்ட வணக்கங்கள் ஒரு வகையில் மூடபக்திக்குரியனவாக விருக்கினும், உண்மையில் மானவஜாதியாரின் புத்தியானது பூரண ஸ்திதியை யடையாததனால் இவ்விதமான குச்சிதகொள்கையையனுசரிக்க வேண்டி வந்தது. இவ்வித வணக்கம கேவலம் மூடபக்தியாக விருக்கினும், கேவலம் பசுபாலியப்ரகிருதியினால் ஞானமற்றவர்களாகி இவ்வித பக்தியினால் நின்னை எவ்விதமாக வணங்கினாலும் நீ அங்கீகரிப்பாயன்றோ? ஆகவே, நின்னை ஓ சர்வசக்தியே! என்று அழைத்து வந்தனம் செய்கின்றேன். அன்புடன் அங்கீகரித்து அடியேனுடைய பாவ எண்ணங்களையும், பாவச் செயல்களையும், நினது சர்வ சக்தியினால் கண்டித்து க்ஷமித்து நினது சர்வ சக்தியினால் பாது காப்பாய். ஓம் தத்சத்!

---

# மதுரா பிருந்தாவனத்தில் சில அன்பர்களோடுக் கூடிச்செய்த பிரார்த்தனை.

---

ஓ! பிரியமான சகோதிரர்களே! இந்த போக பூமியாகிய பிருந்தாவனத்தைப் பார்க்க என்ன புண்ணியஞ் செய்தவர்களானோம்! இந்த பிருந்தாவனத்தில் ஓடும் யமுனை நதியின் பரப்பும், பிரகாசமும் அழகும், அமைப்பும் என்னவென்று சொல்லுவோம்! இந்த பிருந்தாவனத்திலிருக்கும் புஷ்பாதி செடிகள் குப்பெனப் பூத்து நேத்திரோற்சவ மடையச் செய்வதன்றியில்; அவற்றின், தேனை உண்ணும் வண்டுகள் ரீம், ரீம், என்று இனிய கீதங்களைப் பாடி செவிக் கானந்த மூட்டுகின்றன. பார்க்கும் பிரதி வீடும் பெருமையுள்ள கோயிலாக இருப்பதன்றியில், பிரம்மாண்டமான பெரிய கோயில்களனேகம் தமது உயரமும் உத்கிருஷ்டமுமான கோபுரங்களினாலும், மாட மாளிகையாதிகளாலும் மகிழ்ச்சியைத் தருகின்றன. அம்மாட மாளிகை கூட கொபுரங்களிலும், மரப்பொந்துகளிலும் மாடப்புறாக்களும், மதிக்கும் பல வருண கிளிகளும் மைல்களும் மந்திகளாதிகளும் புகுந்து நடமாடுகின்றன. கோயில்களின் கண்டா மணி யோசையொங்கி சப்தித்து யாவரையும் அழைக்கின்றன. மாந்தருடைய மனதை மருட்டி வருந்தச் செய்யும் மாரனுடைய வில்லடியை மல்லரைப்போல் நின்று தடுக்க வல்லமார்களென்னும் தார்போற்றும் கொங்கைகளையுடைய கோகுலத்தின் ஸ்திரீகள் கீதங்கள் பாடி நடிக்கின்றனர். உலக நடனங்களை வெறுத்து அலகிலா விளையாட்டுடையானையே இரவும் பகலும் தியானிப்பதே உத்தமமெனக் கண்டு தெளிந்த எதிகள், சந்நியாசிகள், பைராகிகள், தபோநிதிகள் முதலானவர்கள் பிரும்மதண்டத்திற் சாய்ந்து சதா சர்வேசுவரனை ஸ்மரணை செய்துக்கொண்டிருக்கின்றனர். ஆ! இது என்ன விசேஷமான இடம்! ஆ! இது என்ன பக்திக்கு உகந்த உற்சவ ஸ்தலம்! இப்படிப்பட்ட ஸ்தலத்திலன்றோ அன்று ஸ்ரீகிருஷ்ணா கோபிகா ஸ்திரீகளுடன் இராஜ கிரீடை செய்ததாகச் சொன்னதை நம்பி இன்றும் அநேக புருஷ பக்தர்கள் ஸ்திரீகளைப்போல வேடந்தரித்து ஸ்ரீ கிருஷ்ணருடன் சேர வந்திருக்கின்றனர். இது உலகார்த்தம். ஆம்! இது சாதாரணமுட ஜனங்க

னின் கருத்து. சகல புவன சராசரங்களை படைத்தாதரித்து வரும் ஜகதீசுவரன் கேவலமான கோகுல ஸ்திரீகளுடன் காமக் கூத்தாடி னரென்று சாதாரண ஜனங்களும், கிறிஸ்தாதி ஏனைய மதஸ்தர்களும் சொல்லி நிந்திப்பது உண்மை யறியாத உலகார்த்தமே! உண்மையும், தத்துவார்த்தமும் விசாரிப்பவர்களுக்கு இதன்கருத்து விசிதமாகும். அதாவது. பரமாத்துமாவாகிய புருஷன், ஜீவாத்துமாக்களாகிய ஸ்திரீ கூட்டங்களுடன் கூடி இரமித்து ஆநந்த நடனமாடியதே அதன் உண்மையானகருத்து; சாக்ஷாத் ஜகதீசுவரனை தந்தையாகவும், தாயாகவும், தமயனாகவும், சினேகிதனாகவும், இராஜனாகவும், இரக்ஷகனாகவும், கடைசியாக நாயகனாகவும் இன்னும் பலவிதமாகப் பாவித்து அந்தப் பரமாத்துமாவை யடைவதற்குப் பலவித சாதனங்களை பூர்வம் ஆரியர் ஸ்தாபித்தார்கள். இவ்வித வழக்கம் இந்த ஹிந்து தேசத்தாருக்கு மாத்திரமல்ல. கிரேக தேசத்தில் ஜகதீசுவரனை சிறப் விஞ்ஞான சாஸ்திரோக்தமாக வழங்குவது வழக்கம்; ரோமகர் தேசத்தில் ஈசுவரனை புஜபலகாத்திர பலாஸ்டிகனை வணங்குவது பிரத்தியக்ஷம். இப்படி ஈசுவரனை வணங்குவதில் அந்தந்த தேசத்து ஜனங்களுடைய மனோவிசாலத்தின்படி நடந்துவருவதாக உலக சரித்திரம் முறையிடுகின்றது. ஆகவே, இந்த பிரபஞ்ச சுகத்திலெல்லாம் சிறந்த சுகம் ஸ்திரீயின் சுகமென்று கண்ட இத்தேசத்தின் ஒரு சார்பார். ஜீவாத்துமாக்களாகிய தம்மை நாயகிகளாகவும், பரமாத்துமாவை நாயகனாகவும் பாவித்துக் கூடிக் குலாவி ஆநந்தமடைய இது ஓர் வழியாக வைத்துக்கொண்டனர். இப்படி வைத்துக்கொண்டதில் பாதகமுமில்லை. சாதகமு முண்டு. ஆ! சகோதிரர்களே! இது அனுபோகசாலிகளுக்கு மாத்திரம் விளங்கும். அனுபவமற்றவருக்கு அர்த்தமாகாது. அர்த்தம் தெரியாமையால் அடியேனை பிரம்மோபாசி அல்லவென்றும், அஞ்ஞானிகளென்றும், பைத்தியக்காரரெனன்றும் அண்டத்தார் சொல்லி பரிகாசிப்பார்கள். அந்தோ! அண்டத்தாருக்கு எனது பாஷை விளங்கவில்லை. எனது கருத்து அரத்தமாகவில்லை. ஆகவே அவர்கள் என்னை பக்தி பயித்தியம் பிடித்தவன் என்று பேசுவார்கள். அப்படி பேசுவதினால் பாதகமில்லை, பக்த சிரேஷ்டர்களாகிய பிரம்மோபாசிகளே! இதோ இந்த பிருந்தாவனத்தின் கமல சரோவரம் என்னும் ஆவி கூப தாமரை தடாக உத்தியாவனத்தில் சாக்ஷாத் பரமாத்துமா வேணு=(பக்தர்களை யழைக்கும் தேவ கட்டளை) நாதத்துடன் கடிககின்றனர். அவரைச் சுற்றிலும் வியா

சர், பராசுரர், நாரதர், கின்னரர், கிம்புருஷர், ஆஹா ஊஹூ நாக சரணியர் தத்திலா முதலானவர்களும், சைதன்னியர், அப்பர், சுந்திரர், மாணிக்கவாசகர், திருப்பான் ஆழவார், சங்கரர், இராமாநுஜர், ஆநந்ததீர்த்தாசாரியர், வல்லபாசாரியர், இராமநாதர், இராமதாசர், துகாராம், துளசிதாஸ், நந்தனர், கபீர்தாஸ், குருகோவிந்தர், தாயுமானவர், கேசவர் முதலான இத்தேசத்து மஹாத்துமாக்கள். கோபிகளைப்போல வேணு, மிருதங்கம், முரளி, வீணை, தம்பூர், முதலான வாத்தியங்களைக்கொண்டு வாசித்து ஆநந்த நடனமாடி வருகிறார்கள்! பாருங்கள்! ஆம், அதோ பாருங்கள்! அந்த மங்கள வடிவுள்ள பரமாத்துமாவைச் சுற்றிலும் அரிஸ்டாட்டல், சோகிரடஸ், பிலேடோ, சிசிரோ, பிதாகரசு, காணிபியூசஸ், ஜோராஷடர், ஏசுநாதர், மோசே, சாலோமான் முதலான ஏனைய தேசத்து மஹாத்துமாக்களும் தம் தம் வாத்தியங்களைக் கொண்டு வாசித்து அங்கம் பரவசமாகி இரு கண்களிலும் நீர் பெருக, இசைந்து மன மாடுருகக் குதித்துக் குதித்துக் கொண்டாடி நடித்து எம் பெருமானைச் சுற்றியாடி வருகின்றனர். பாருங்கள் இவ்விடம் வைகுண்டம் எல்லாருக்கும் பொதுவாகி விட்டது. பரமண்டலம் பலருக்கும் பொதுவாகிவிட்டது. கைலாசம் கடஞ்ஞாலத்தாரின் கைக்குள் ளகப்பட்டு விட்டது. ஆகவே, ஓ உலகத்தாரே! வாருங்கள்! உலக காமிய வஸ்துக்களின் பேரில் இனி எத்தனைக் காலம் தான் பிரியப்பட்டு காலத்தை வீண் காலமாக்குவீர்கள்! இந்தப் பிருந்தாவன நடனத்தைப் பார்த்து ஆநந்தித்து உலக ஊஷ்ணத்தைப் போக்கிக்கொண்டு சாந்தியை யடைந்து விடாய் தீர்த்துக் கொள்ளுங்கள். இந்தப்பேரின்ப நடனவிடம் ஒரு தேசத்தாருக்காவது, ஒரு ஜாதியாருக்காவது, ஒரு பாஷைக்காரருக்காவது, ஒரு மதஸ்தருக்காவது சொந்தமென்று சந்தேகிக்க வேண்டாம். இந்த பிருந்தாவனம் எல்லா தேசத்தாருக்கும், எல்லா ஜாதியாருக்கும், எல்லா மதஸ்தர்களுக்கும் பொதுவான விடம். இப்போது இங்கு நடனமாடும் எம்பெருமான் எல்லாருக்கும் பொதுவான ஏகமேவாத்துவிதீயன். எல்லா மதாதிபதிகளும், எல்லா மதாசாரியர்களும், எல்லா தத்துவ ஞானிகளும், எல்லா பக்திமான்களும் இங்கு ஆகமசுவரூபிகளாகப் பரமாத்துமாவைச் சுற்றி நடித்து பிரும்மாநந்தமடைகின்றனர். ஆகவே! ஜகத்தாரே! வாருங்கள், நாமும் பலவித வாத்தியக் கருவிகளுடன் இன்னிசைகளைப்பாடி எம்பெரு

மானைச் சுற்றி ஆநந்த நடனமாடி அங்கம் பரவசமாக்கி சுகாநந்த போகத்தை யடைந்து நித்திய சூரியர்களைப்போல பிரகாசிப்போம். ஓம் தத் சத்து.

---

## டில்லியிற்செய்த பிரார்த்தனை.

ஓ! கிருபாநிதியே, சுயம்பு மனுமுதல் பரதாதி மஹாபுருஷர்களும், பஞ்சபாண்டவராதி தருமராஜர்களும் பிரயத்தோடு வதிந்து வந்த பாஞ்சாலதேசத்தின் திலகமான (அஸ்திநபுரம்) டில்லியாகிய இந்த பட்டணத்தை தரிசிக்க பாக்கியனானேன். எனது தேகஸ்திதியை அறிந்து இப்படிப்பட்ட ஸ்தலத்தையும், தரிசிக்க என்னால் முடியுமோவென்று பலவருஷங்கள் ஏக்கமுற்று, ஏதேது என்னால் முடியாதென்றிருந்தேன். அந்த ஏக்கத்தை இன்று விட்டேன். பெருமைபெற்ற இந்த டில்லி பட்டணம் மகாதருமராஜருடைய பாதங்கள்பட்ட விடமல்லவா? அப்படிப்பட்ட இந்த இடத்தை எனது பாதமும்பட அந்த தருமநந்தருடைய பாதம்பட்ட அணுக்களான மண்ணாவது என்மீது விழுந்து அதனால் அந்த தருமநந்தருடைய தருமகுணத்தில் கிஞ்சிற்றாவது எனக்குண்டாக வேண்டுமென்று வேண்டுகிறேன். அடியேனுக்கு அந்த ஆசை தீரும்படி தருமகுணத்தை தந்தருள்வாயாக. ஓம் தத் சத்து.

---

## (ஜெயபூர்) அம்பரில் செய்தப் பிரார்த்தனை.

ஓ! அப்பனே! எப்பக்கங்களிலும் மலைகள்சூழ, மத்தியில் ஒப்பற்றதடாகமும், நந்தவனங்களும் நிறைந்த இந்த அம்பர் என்னும் உன்னதமலைக்கொட்டை எவ்வளவு சிறப்பாக விருக்கின்றது! இந்தச் சிறந்தவிடத்தைப் பார்க்க எத்தனையோ விதங்களாக கஷ்டப்பட்டு யானையின்மீது வந்தேன். வருந்திவந்த வருத்தம் ஒருபக்கமிருக்க, இந்த தடாகத்தையும், நந்தவனங்களையும், சுற்றுப்பக்கங்களிலிருக்கும் அற்புதக் கட்டடங்களையும், பருவதக்காக்ஷிகளையும், பக்ஷிகளின் நடனங்களையும், பாரக்குந்தோறும் எனது கண்ணுங்கருத்தும், நின்னை நாடிவருகின்றன. இப்படிப்பட்ட அற்புத படைப்புகளுக்குமுன் யான் என்ன யோக்கியதையுடையேன். எனது ஜனமும், எனது சாதியும், எதிற்கொப்பிடக்கூடும்? அற்பமாகிய

யான் நினது குன்றுவளம் பொருந்திய மகுத்துவத்தைப்பற்றி எப்படி வர்ணிப்பேன்? இந்தக் காக்ஷியைக் கருதி அபராசக்தியைக் கொண்டாடி ஆநந்திக்க அருள்புரிவாய் சுவாமி.—ஓம் தத் சத்து.

## புஷ்கரம் அன்னசரோவரத்தில் செய்தப் பிரார்த்தனே.

அருள்வேந்தே! அருணோதயமான இந்தக் காலையில் இந்த அன்னசாகரத்தில் நின்னே தியானிக்கிறேன். நின்னை தியானிப்பதற்கு பல சிறந்த விடங்களிருக்கினும், நதிதீரங்களும், சரோவர்ங்களும், சிறந்த விடங்களாக விருக்கின்றன. ஏனெனில் நீர் சகல ஜீவகோடிகளுக்கும் பிராணுதாரமென்பது பட்டப்பகலாகத் தெரிந்த விஷயம். நீரின் முக்காலே மூன்று பாகம் பிராணிகோடிகளாக விருக்கிறதன்றியில், நீர் சேர்ந்தமாத்திரத்தில் அநேக பிராணி கோடிகள் அதில் வசிக்கவும், உண்ணவும், அதில் வசிக்கும் ஜந்துகளே பக்ஷிக்க அநேக பக்ஷி முதலான மிருகங்களும், வந்து சேருகின்றன. அதுபோலவே பரமாத்துமாவாகிய நினது இருப்பிடம் சகல ஜீவகோடிகள் வந்து கூடி தமது விடாய் தீர்த்துக்கொள்ளும் படியாக விருப்பதால், பூர்வ கவிகள் நின்னே ஜலமயமாகவும், விஷ்ணு ரூபமாகவும், வர்னித்தவர்கள். எப்படி ஜலமில்லாவிட்டால் யாதொரு பிராணியும் ஜீவிக்காதோ, அப்படியே நீ இல்லாவிட்டால் இந்த மண்ணுலகமேது? இந்த விண்ணுலகமேது. எல்லாம் நின்னையே பற்றிக்கொண்டு பிரகாசிக்கின்றன. நீ எல்லா ஜீவிகளுக்கும் அன்னமயமாக விருக்கின்றாய். ஆகையால் அடியேனுடைய ஆசை தீரும்படி நினது அன்னமயத்தின் தத்துவார்த்தத்தை, யறிவித்து ஆசீர்வதித்தருள்வாய் ஒம்—தத் சத்து.

## அவந்திகா உஜ்ஜினிபட்டணத்தில் செய்தப் பிரார்த்தனே.

ஓ! அன்பர்களே! அவந்திகமென்னும் இந்த உஜ்ஜினிபட்டணம் மோக்ஷசாதகங்களால் சப்தபுரிகளிளொன்று. மேலும் விக்கிரமார்க்கன, போஜன முதலான மஹாராஜாக்களாலும், காளிதாஸ், பவ‍பூதி, தண்டி முதலான ஸமஸ்கிருத கவிகளாலும் பண்டிதர்க

ளும் சிறந்துவாழ்ந்து வந்த விடமன்ரோ? இந்தவிடத்தில்தான் ஆரியர் பரப்பிரம்மத்தை பராசக்தியாகவும், பெண்பாலாகவும், வர்ணித்து வழுங்கிவந்தார்கள். ஆகையால் இப்படிப்பட்ட திவியஸ்தலத்தில் பிரார்த்தனை செய்வோம்! இந்தரூபிரா நதிதீரத்தி லுட்காருங்கள். ஒபராசக்தியே! உன்னைவணங்குகின்ரோம். பரபிரம்மாகிய உனனை உலகத்தார்பெண்பாலாகவும், பத்திரகாளியாகவும், பராசக்தியாகவும், வர்ணின்றும் அலியென்றும் பாவித்துபோர்புரியாமல், கேவலம் சர்வசக்தியே என்று வணங்கி எமது அகங்காரமாகிய இராக்ஷதனைக் கொன்று ஞானவானகனாக்கி நின்னையறிந்தானந்தப்படச் செய்வாய்! மிதசக்தியையுடைய நாங்கள் நின்னையன்றி யாதுகாரியம் செய்யவல்லோம்! நினது அருள்சக்தியை பிரசாதிப்பாயாக.—ஓம் தத் சத்து.

---

## நாசிக் (பஞ்சவடியில்) செய்தப் பிரார்த்தனே.

எநாதா? கோதாவரி தீர்த்தமாகிய இந்தத் தபோவனத்தில் நின்னை தியானிக்க பாக்கியசாலியானேன். இந்த வனமன்ரோ அன்று ஐயோத்திக்கு அரசராகிய உத்தமபுஷரும் ஏகபத்தினி விரதத்தைக் கொண்டவரு மாகிய ஸ்ரீராமர் தபசு செய்தவிடம். இந்தவிடத்திலன்ரோ சூர்ப்பனகை ஸ்ரீராமர் மீது காமங் கொண்டுவர, அவர் அந்த காமதத்துக்கு இடங்கொடாமல் கண்டித்து பரிசுத்தத்தை ஸ்தபிகதவிடம். இப்படிப்பட்ட இடத்தில் நினனைப் பக்திபூர்வகமாக பிரார்த்திக்கின்றனன் ஸ்ரீராமருக்கிருந்த பரிசுத்த எண்ணத்தை எனக்கும் கொடுத்து பாதுகாப்பாய். சுவாமி.—ஓம் தத் சத்து.

---

## பண்டரிபுரத்தின் பீமாநதிச்கரையில் செய்தப்பிரார்த்தனே.

ஓ! பரமதயாளுவே! உலகத்தார், இலக்கிய இலக்கண தத்துவசாஸ்திரங்களை யறிந்தவர்கள் மாத்திரம் நின்னை யறிந்து ஆனந்தமடையக்கூடுமேன்று சொல்லுகிரூர்கள். இது கேவலம் உலகநியாயம். இலக்கண இலக்கிய தத்துவ சாஸ்திரங்களை யறிந்து நூலகளை யடித்து கொள்வதைப் பார்க்கிலும். நின்னையே நம்பி நினது பக்தியில் மூழ்கி பேரானந்தம் பெறறவாகள் பலர், அப்படிப்பட்ட பந்த சிகாமணிகளாகிய துக்காராம், நாமதேவர், பிராண

தேவர், துளசிதாஸர், முதலானவர்கள் ஒருகாலத்தில் இந்த பீமாந திக்கரையில் நின்னிடத்தில பூரண பத்திரசமெனனும் பெருவெள் ளத்தில் மூழ்கி ஆசை தீர உண்டு அங்கம் பரவசமாகி ஆநந்த கூத் தாடி ஏனையோரையும் அவ்வித சுகாந்தத்தை யடையும்படி அழைத் தார்களன்றோ! அவர்களது அன்பான அழைப்பை அசட்டைசெ ய்து அலைந்து இன்று வந்தேன் அடியோம் மீது அருள் மழைபெ ய்து அகங்காரத்தைக் கழுவி, நினது பக்தி ரசமென்னும் பெரு வெள்ளத்தையுண்டு ஆநந்தமடையச்செய்வாய் சுவாமி ஓம்-தத்சத்.

---

## கிருஷ்ணா நதிதீரத்தில் செய்தப் பிரார்த்தனை.

---

கம்பீரம் பொருந்திய ஓ கிருஷ்ணாநதியே! இன்று நின்னை காண்பதற்கு வந்தேன். உன்னைக் காணவேண்டுமென்று எத்த னையோ நாட்களாக ஆவலோடு காத்துக் கொண்டிருந்தேன். இன்று கண்குளிரகண்டு மகிழ்ந்தேன். நீ ஜீவநதி!! சதா சர்வேசுவரனைப் பாடிக்கொண்டு சமுத்திரத்திற் சேருகின்றாய், நீ மஹாபுண்ணிய நதி என்று அநேகர்வந்து ஸ்நானம் செய்து வணங் குகிறார்கள். நானும் வந்து நினது அழகிய கரைமீதிருந்து உன் னையும், என்னையும், படைத்த பரமேசுவரனை வணங்குகின்றேன். ஓ பரிசுத்தனான பரமேசுவரனே இந்த ஜீவநதிக்கு கொடுத்த சக்தி யும், சுத்தமும், கொடுத்து ஆதரிப்பாய், கேவலமான பிராகிருதிஸ்வ ரூப முள்ளவைகளி பருவதங்களுக்கும், நதிகளுக்கும், கொடுத்த வன்மையையும், சக்தியையும், எனக்கேன் இன்னமும் கொடா திருக்கிறாய்? பாவதாபங்களால் நிறைந்தவனாகையால் கொடுக்க வில்லை போலும், அப்பாவதாபங்களை நீக்கிக்கொள்ளவே இன்று இங்குவந்து துதிக்கின்றேன். ஓ கிருபாகடாக்ஷா! அப்பாவதாபங் களை நீக்கி என்னை புனிதனாக்குவாயாக. ஓம் தத் சத்து.

---

# பொதுஜனசமாஜ பிரார்த்தனை.

---

1. இந்தப் பொதுஸமாஜ பிரார்த்தனைக்கு நியமிக்கப்படும் இடம் விசாலமுள்ளதாயும், ஈரமில்லாமல் காய்ந்தவிடமாயும், நல்ல

காற்று தாராளமாக புகுந்து உலாவக்கூடியதாயும், அக்கம் பக்கங் களில் அழுதல், கூதல், முதலான சந்தடி சச்சரவுகளற்ற நிஸ்ஸபத மான இடமாயும், இருக்கவேண்டும்.

2. அந்த இடத்தில் தேசாசாரத்தை யனுசரித்து அடிக்கடி கூட்டி சுத்திசெய்தும், பாய் சமுக்காளம், முதலானதுகளைப் போட்டாகிலும், அல்லது நவீன வழக்கப்படி நாற்காலி, பெஞ்சு, முதலானதுகளைப்போட்டு உபாசனைக்கு வருபவர்களில் புருஷர் களை ஒரு பக்கமும், ஸ்திரீகளை ஒரு பக்கமும், தனித்தனியாக உட் காரும்படி செய்யவேண்டும்.

3. இந்த சமாஜ பிரார்த்தனையை அச்சமாஜ ஆசாரியர் நடத் தவேண்டும். தகுந்த ஆசாரியரை நியமிக்கப்படாதிருந்தால், அந்த ஸமாஜத்தில் தகுந்த பெரிய வயதும், படிப்பும், பக்தியுமுடைய ஒருவரை நியமித்து; அவரை முன்சொன்ன ஸ்திரீ புருஷர்கள் கூடிய கோஷ்டியின் சிரோமத்தியில் என்றால் இருபாலாரையும் பார்க்கும்படியான முதல் இடத்தில் சற்று உயர்ந்த ஆசனத்தின் மீதிருத்தி பிரார்த்தனையை நடத்தும்படி செய்யவேண்டும்.

4. பிரார்த்தனைகாலத்தில் பிரம்ம கீதங்கள் இன்றியமையா தவைகளாகையால், தேசாசாரத்தைத் தழுவி, தம்பூர், வீணை, பிடில், மிருதங்கம், ஜாலரா, முதலான வாத்திய கருவிகளையும், வாத்தியக் காரரையும், ஆசாரியருக்கருகில் இருக்கும்படி செய்து பிரம்ம பஜனைசெய்ய வேண்டும்.

5. பிரம்ம கீதங்களையும், பிரம்மபஜனையையும், பாட, பெரும் பாலார்க்கு பிரியமிருக்கலாம்; ஆனால், ஒருவர் கண்டத்துவனியைப் போல எல்லாருடைய கண்டத்துவனி இராதாகையால், பாடும் போது சில சமயங்களில் சுவரங்கள் கெட்டு ஆபாசமாகவிருக்கச் சம்பவிக்கும். ஆகையால்,

6. கோஷ்டியாருக்குள் யாருடைய துவனி அல்லது சுவரம் பாட்டுகளுக்கு இசைந்து சுகமாகத் தோன்றுகிறதோ அப்படிப்பட் டவர்களையும், முக்கியமாய் ஸ்திரீகளில் பாடத்தகுந்தவர்களாகத் தெரிந்தெடுத்து முன்னாடியாகத் தக்கபடி பாடம் செய்வித்தும் பிறகு இசை பொருந்தும்படி சமாஜ பிரார்த்தனை காலங்களில் பாடும்படி செய்யவேண்டும்.

7. பிராமோபாசன காலத்தில் எல்லாரும் பயபக்தியுடனும், கைகளைக்கட்டிக்கொண்டும், சாக்ஷாத் ஜகதீசுவரருக்குமுன் பிரத்தியக்ஷமாக பக்தி சிரத்தையோடு இருப்பவரைப்போல் இருக்க வேண்டும்.

8. சிலர் பிரமோபாசன காலத்தில் அசட்டையாகவும், சாய்ந்துக்கொண்டும், படுத்துக்கொண்டும், சிரித்துக்கொண்டும், உலக சம்பந்தமான பலவார்த்தைகளைப் பேசிக்கொண்டும், இருப்பார்கள். சிலர் மூக்குத்தூள் போடடல், தாம்பூலம் போடல், புகைச் சுருட்டுப் பிடித்தல், உக்காப்பிடித்தல் முதலான காரியங்களைச் செய்வார்கள். அந்தோ! பாவம்! பரமேசுவரருடைய பிரத்தியக்ஷ சன்னதியில் இப்படி செய்யப்பட்டவர்கள் இனி வேறு இடத்தில் என்ன செய்யமாட்டார்கள். இப்படிப்பட்டவர்கள் உபாசனைக்கு வராமலிருத்தல் உத்தமம்.

9. சிலர் தமக்கிருக்கும் பசியினாலும், தூக்கத்தினாலும், சோம்பலினாலும், உபாசனையை துரிதமாக நடத்த விரும்புவார்கள். ஓ இல்லறத்தாரே! இப்படிப்பட்டவருடைய வார்த்தைகளுக்குட்பட்டு உபாஸனையின் பரிசுத்தத்தைச் கெடுக்காதேயுங்கள். இப்படிப்பட்டவர்கள் உபாசனகோஷ்டிக்கு வீராமலிருக்கச்செய்தல் உத்தமம்.

---

## உபாஸனாரம்பம் அல்லது உத்போதநம்.

காலையில் இந்த பிராமோபாசனை நடந்தால் அப்போது ஆசாரியராவது அல்லது உபாஸர்களில் ஒருவராவது அல்லது எல்லோருமாவது இதனடியில் காணும் பிரம்மகீதத்தைப்பாடிய பின்பு உபாஸனையை ஆரம்பித்தல் வேண்டும்.

இராகம்—பூபாளம் தாளம் - சாபுதாளம்.

பல்லவி.

மனமே! எழுந்திராய்!

அனுபல்லவி.

எழுந்திராய் மனமே—ஏறுதந்தோ வேளை
எழுந்திராய் மனமே—எழுந்திராய்!

### சரணங்கள்.

சகலலோகங்கட்கு சுவாமியொருவனென்று
சப்திக்குங்காலமிதோ எழுந்திராய்!
அகிலவிநோதனை யாத்மாவிலேயறிய
அக்காலம் வந்ததிதோ எழுந்திராய்!
ஏகமே வாத்வீ தீய மெனச்சேவல்
எங்குங் கூவுதந்தோ எழுந்திராய்!
சோகங்களைவிட்டு துதிப்பதற்கிதுவேளை
சீக்கிரமாக நீ எழுந்திராய்!
பிரம்மகிருபாவுறி கேவலமேனபல
பக்ஷிகள் பாடுதே எழுந்திராய்!
கர்வங்களைவிட்டு கர்மத்தைத்தழுவென
காற்றும் வீசுதிதோ எழுந்திராய்!
மூடபக்தியென்று முதிர்ந்தபனித்துளிகள்
முழுதும் நீங்குதந்தோ எழுந்திராய்!
காடாந்தகாரமா மஞ்ஞானங்கடந்தது
கடுகிகண்டு நீ எழுந்திராய்!
நானுமதங்களாம் நக்ஷத்திரங்கள்யாவும்
கலிந்து வெளுத்தன எழுந்திராய்!
நானே பிரம்மமென்னும் நானுமதங்கூட
நசித்துப்போகுதிதோ எழுந்திராய்!
இகபரஞ்சுகந்தர இதோ பிரம்மதருமம்
இனியாகிலும் பார்த்து எழுந்திராய்!
சகல கலைகளுடன் சூரியன்போலுதித்தது
சந்துஷ்டியுட நீ எழுந்திராய்!

இந்த கீதம் பாடிய பிறகு ஆசாரியர் அல்லது உபாசனை செய்பவர்:—

யார் இவ்வுலகத்தைப் படைத்தாண்டு வருகிறாரோ, யார் இதிலுள்ள எண்ணிறந்த உயிர்களையும் அபார கருணையுடன்காத்து வருகின்றாரோ, யார் ஒருவரே பாபிகளாகிய நம்மைப் பாவனராக்க வல்லவரோ, அவரே ஒன்றான அப்பிரமேயரான பிரும்மம். அவர் இந்த உபாஸநா ஸ்தலத்திலும் வீற்றிருக்கிறபடியால் அவர் நம்முள்ளத்தில் பவித்திரமான சிரத்தையும், அன்பும், உண்டாகும்படி கிருபைசெய்து நமது பிரார்த்தனையை ஈடேற்றுவாராக.

[என்று சொல்லி இதனடியில்காணும் உத்போதன ரூபமான கீதத்தைப்பாடல் வேண்டும்.]

## திரு அங்கமாலை.

### இராகம் - பண் சரதாரி.

சிரசே நீ வணங்காய்-சீர்-
போற்றுஞ் சிறந்தோனை
சிருட்டி திதி லயமாக்கும் பிரான் றன்னை-
சிரசே நீ வணங்காய். (1)

விழிகாள் நோக்குங்களே-விண்ணோர்-
வித்தகனுமெங் ளத்தன் றனை
வழியெங்கு மற்புத நடன மாடுவதை-
விழிகாள் நோக்குங்களே. (2)

காதுகாள் கேட்டறிவீர்-கடல்-
ஞாலம்படைத்திட்டகாதன் றனை
கீதங்கள் பாடிடும் ஞானநந்தன் தனை-
காதுகாள் கேட்டறிவீர். (3)

நாசியே நீ முகராய்-நரர்
நாடும் கிரந்தரனை
நேசமாய் மாமலர் வாசனைத் தந்தோனை
நாசியே நீ முகராய். (4)

வாயே வாழ்த்தவாராய்-வரந்-
தந்திடும் வள்ளம் தன்னை
வானோர் போற்றிடு மாதியனாதியை-
வாயே வாழ்த்தவாராய். (5)

மனதே மனனஞ் செய்வாய்-
மன்னர் மன்னவர் மன்னன் றன்னை
மண்டலத் தார்புகழ் மங்களமூர்த்தியை-
மனதே மனனஞ்செய்வாய். (6)

கரங்காள் கும்பிடுவீர்-ககனத்தவர்-
கர்த்தன் றன்னை

குரங்கெனுமனதை யடக்கி நிதம்-நிதம்
கரங்காள் கும்பிடுவீர். (7)

கால்கள் நடந்துவாரீர்-
கலை வல்லோரிடஞ் சென்று
பால்போலறிந்து பரமன்றனைத்தொழ-
கால்காள் நடந்துவாரீர். (8)

அண்ணன் தம்பிகள் வாரீர்
ஆதி எம்மிறை தேவன்றனை
பண்ணோர்பாடிடப் பெண்களும் வாருங்கள்
பாசங்களற்றுதொழ. (9)

பிரம்ம சமாஜம்சேரீர் - பாரிற் -
போற்றும் பெரியோர்கள்
நிர்மலனாகிய நித்தியாநந்தனை -
நிஷ்டையாலறிந்துய்யலாம். (10)

பிறகு ஆசாரியர் பின் வருகிறதைப்போன்ற ஸ்தோத்திரஞ் செய்ய வேண்டும்.

---

## (க) ஸ்தோத்திரம்.

ஓம் ஸதயம்க்யானமநந்தம் பிரம்ஹ, ஆநந்தரூபம்,

அமிர்தம்யத்விபாதி, சாந்தம் சிவமத்வைதம், சுத்தமபாபவித்தம்.

நித்தியனாய், ஸத்தியமே உருவாகக்கொண்டவனாய், இவ்விசித்ரமான பிரபஞ்சத்திற்குக் காரண பூதனாய், ஆதிலுள்ள சகல உயிர்களுக்குயிராய், எமதுள்ளும் புறமும் வியாபித்திருக்கின்றவனாய், இராநின்ற ஒ லோக நாயகனே! உன்னை விட்டு ஒரு க்ஷணமும் யாம் நிலைபெற்றிறுக்க வல்லோமல்லம். ஆகையால், நினையே சரணம் புகுந்து நமஸ்கரிக்கின்றோம்.

எவனுடைய அபரிமித ஞானத்தையும், வல்லமையையும், இந்த பிரபஞ்சம் உத்கோஷிக்கின்றதோ, எவன் ஸரவ வியாபியாய் எம்முன் வீற்றிருக்கின்றானோ, எவன் தனது சாவககியத்துவத்தால்

எமதுவெளி நிலைமை மாத்திரமேயன்றி உள்ளத்தில் ஆழ்ந்து மறைந்திருக்கின்ற சசல பாவங்களையும் பார்க்கின்றானே, எவனிடத்திலிருந்து ஒன்றையும் மறைக்க யாம் அசக்தரா இருக்கின்றனமோ, அப்படிப்பட்ட எம்முள்ளத்தில் குடிகொண்டிருக்கிற ஸர்வக்கியனாகிய உருவிலாக்கடவுளே! நினையே தோத்திரஞ் சேய்து நமஸ்கரிக்கின்றோம், பிரீதியோடு அங்கீகரிப்பாயாக.

நிர்மலனாகியும், எப்பொழுதும் எவ்விடத்தும் நன்மை செய்பவனாகியும், ஆதி மத்தியாந்த ரஹிதனாகியும், அனந்தகல்யாண குணவிஹிதனாகியும், மகிமையுள்ளவனாகியும், எம்மனதுக்கும் வாக்குக்கு மெட்டாதவனாகியும், ஸர்வ வியாபியாகியும். பரிபூரண னாகியும், இருக்கின்ற ஒ! ஆனந்த ரூபனே! இம்மானிட உள்ளத்தால் உன்னை எப்படி அறியக்கூடும்' ஓ அபரிமித கியான ஸ்வரூபனே! உனக்குத் தண்டம் சமர்பபிக்குன்றோம். அன்புடன் அங்கீகரிப்பாயாக.

[என்று ஸ்தொத்திரம் செய்த பிறகு இதனடியில் காணும் ஸ்தோத்திர ரூபமான கீதத்தைப்பாடல் வேண்டும்.

இராகம்—எதுகுலகாம்போதி - சாபுதாளம்.

### பல்லவி.

இந்த ஜன்மத்திலே உன்னைத் துதியாவிட்டால்

இருந்தும் சுகமென்ன !

### அனுபல்லவி.

சந்ததம் அன்னைபோல் சாந்தத்தைத் தந்திடும்
சுந்தர நாதனே சுரர்போற்றுந்தேமனே — இந்த

### சரணங்கள்.

நின்னடியை வணங்கா நீண்ட சிரசேனோ
நின்பெருமையை நோக்கா நேத்திரங்க ளேனோ
நின்கீதங்களைங்கேளா நெடிய செவிகளேனோ
நின்மேனி வாசனை முகராத மூக்கேனோ — இந்த

உன்னைப்புகழாத வாயிருந்து மென்ன
உன்னைவிரும்பாத ஹிருதய மிருந்தென்ன

உன்னைகும்பிடாத கரங்க ளிருந்தென்ன
உன்னைத்தேடிநடக்கா கால்க ளிருந்தென்ன இந்த

பாருக்குள்வீடுகள் பணமிருந்தாலென்ன
பலரும்புகழும்படி பெருமைய் பெற்றுலென்ன
ஆருக்கும் அதிபராய் அரசராளுலுமென்ன
அஷ்டைசுவரியத்தோ டனுபவித்தாலென்ன இந்த

பாவதாபங்களால் பரிதவிக்குமெம்மை
பாவனுராக்கியே பாதுகாப்பாய்செம்மை
கோவே குணநிதியே குன்று அருளாலெம்மை
கூவியழைக்கின்றோம் கிருபையுள்ளஎமதம்மே இந்த

[ஆசாரியர் பிறகு பின் வருகிறதைப்போன்ற வந்தனம் செய்ய வேண்டும்.]

(உ) வந்தனம்.

ஓ அநந்த ரூபனே ! நீ சகல ஜந்துக்களின் உயிர்ப்புக்கும், மகிழ்ச்சிக்கும் சவிக்கியத்துக்கும், காரணபூதனுயிருத்தலி னுலல்லவோ சிருஷ்டிக்கப்பட்ட எல்லா உயிர்களும் துயரம் நீங்கி ஆனந்தத்தையடைகின்றன; துக்க ஸாகரத்தில் மூழ்கியிருக்கும் எமது ஒவ்வோருள்ளமும் உன்னிடத்தில் லயித்து சவுக்கியத்தையும், திருப்தியையும் பெருகின்றது; உன்னைஆராதிப்பவர்களெல்லோரும் உனது திருநாம அமிர்தத்தைத் தெவிட்டாதுண்டு சாந்தியைப் பெருகின்றனர். உன்னை விட எங்களுக்கு உண் மையான வேறோராநந்தமுமில்லை. ஓ ஆனந்தக் கடவுளே ! நினக்கு வந்தனம் பண்ணுகிறோம். கருணை செய்து கைக்கொள்வாயாக.

ஓ பகவானே ! நின் கிருபா சமுத்திரத்துக்கு அணையில்லை; நீ பிதுரு வாஸ்சல்லியத்துடன் அடியாரைப் போஷித்துப் பாதுகாப்பதுமல்லாமல், தைரியத்தை உண்டுபண்ணி ஆபத்து, பிணி, மூப்பு, முதலியவற் றினின்றும் மீட்டு, யாதாமொரு பாபமும் எங்களை வந்தணுகாது பலவிதத்தாலும் ரக்ஷிக்கின்றாய்; ஓ ! கதியற்றவர்களுக்குத்துணையாயும், பாபக்கடலைக்கடக்க ஓர் மரக்கலமாயும், விளங்குகின்ற அருள் நிறைந்த அருமைத்தந்தையே! உனக்கு வந்தனம் செய்கின்றோம். எங்களை ரக்ஷிக்க மறவாதிருப்பாயாக.

ஓ பாப ரஹிதனாகிய பசுசித்தக் கடவுளே! நினது தூய்மையாகிய மகிமா ஒளியினால் எங்கள் பாபமாகிய இருளை நீக்குகிறாய் மேலும், ஒளியினால் எங்கள் பாபமாகிய இருளை நீக்குகிறாய்; ஓ பாபமற்ற துய்யனே! உன்னைவிட அடியாருக்கு கதியில்லையாகையால், நீயே கதியென்றும், தாய் தந்தையென்றும், இரக்ஷகனென்றும் பாபத்தினின்று மீட்பவனென்றும் அறிந்துனது அபார பிரேமையை மிதக்கியர்களாகிய எங்கள் பாஷைவர்ணிக்கச் சக்தியற்றது என்று நிஷ்கபடமாய் உள்ளூற நினைத்து நின்முன் சாஷ்டாங்கமாகத் தரையிற் பணிந்து வந்தனம் செய்கின்றோம் என்று சொல்லி இதனடியில் காணும் வந்தன ரூபமான கீதத்தைப் பாடல் வேண்டும்.

வந்தனம்.

இராகம்—சுருட்டி - ஆதிதாளம்.

பல்லவி.

வந்தனம் செய்வதன்றி வேறொன்றுனக்குச்செய்ய
வகையற்றிருக்கிறோமே—ஓ! வள்ளலே,

அனுபல்லவி.

சந்ததமெமது சொந்தமாசி நிஜ
பந்துவாய் போஷிக்கும் பரமனேயுனக்கு — வந்த

சரணம்.

அண்டசராசரமனைத்தும் படைத்தோனே
அவைகளந்தரத்திலாட தொடுத்தோனே
எண்டிசை நிறைந்து ஏகமாய் நின்றோனே
தொண்டர் பாவம்போக்கி தூய்மைமையைத் தந்தோனே
புகழும் பிராணிகட்கு உயிர்ப்பையுமகிழ்ச்சியும்
பேரன்புடனே தரும் பிரபுவே உந்தனுக்கு — வந்த

## தியானம்.

[ஆசாரியர் முதலில் இந்த காயத்திரியைச் சொல்லல்வேண்டும்.]

**காயத்திரி.**

ஓம் பூர்புவஸுவ: தத்ஸவிதுர்வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி தியோயோநः ப்ரசோதயாத்

பிறகு ஆசாரியர் கீழ் வாக்கியங்களை வாசித்து உபாசகர்களை தியானத்திற்கு தூண்டல் வேண்டும்.

சர்வ சாக்ஷியாயும், சர்வ காருண்யராயும், நமதுள்ளும் புறமும் வியாபித்திருக்கின்றவராயும், நமது தந்தையும் நண்பராயும், வழி காட்டும் துணைவராயும் இருக்கின்ற கடவுளைச் சற்றுநேரம் சஞ்சல மற்ற மனதுடன் மனனம் செய்வோமாக. அவர் கருணை கூர்ந்து நம்முள் பிரசன்னராகி அவரது தூய்மையான ஸாந்நித்தியத்தை நாமனுபவிக்கும்படி அனுக்கிரகஞ்செய்வாராக.

இங்கு உபாசகர்களெல்லாம் சிறிது நேரம் மௌனமாயிருந்து கடவுளுடைய லக்ஷணங்களையும், ஆஸ்திகத்துவத்தையும் உன்னித் தியானித்து இதன்டியில் காணும் தியான ரூபமான கீதத்தைப் பாடல் வேண்டும்,

## விருத்தம்

அகண்ட பூரணமாயாகி யனைத்தினும் நிறைந்ததாகி
இகபரமிரண்டினுக்கு மீசனுயிருந்து பின்னும்
ஜகமதிலாத்மகோடி ஜனிப்பிந்து மாதரிக்கும்
அகமதில் வாழுமெங்கள் அப்பனை தியானஞ்செய்வாம்.

இராகம் - தோடி - ஆதிதாளம்.

### பல்லவி.

ஈசனை தியானிக்க இதுவே சமயம்
இனி தாமதமேனோ!

### அனுபல்லவி.

ஆசாபாசங்களை அடியோடேவிட்டு
நேசானுசாரியாய் நித்யானந்தனும் இசனை

### சரணம்.

எங்குமாய் ஏகமாய் யாவையும் படைத்து
அங்கெங்கினுதபடி அன்னைபோல் பாதுகாத்து
தங்குமகிமையால் தாசர்களை காத்து
பொங்குபலபாவங்கள் போக்கடிக்கும் சதா இசனை

[பிறகு ஆசாரியர் பின் வருகிறபடி பிரார்த்தனை செய்யல் வேண்டும்.]

## (ச) பிரார்த்தனை.

ஓ சர்வ வியாபியாகிய பரமாத்துமாவே! பாபிகளாகிய எம்மைப் பாவனராக்கி எமக்கு சாந்தியையும், தூய்மையையும், தந்தருள்வாய். எம்முள்ளே குடிகொண்டிருக்கும் துராசை மிகுந்த வன்மை யுடையதாயும், எம்மைச் சுற்றிலுமுள்ள இச்சாகாஷக விஷயங்கள் எண்ணிறந்தனவாயும் இருக்கின்றமையால் அவற்றை உன் கிருபையாலன்றி எமது துர்பலமான முயற்சிகளால் தடுக்க சக்தியற்றவர்களாயிருக்கின்றோம். ஆகையால் உனது சந்நதியில் சரணம் புகுகின்றனம். ஓ இறைவனே! யாம் முற்றும் கதியற்று, நினது பச்சாதாதித்திற்குப் பாத்திர ராயிருக்கிறோமென்பது நினக்குத் தெரிந்த விஷயமாதலால் எம்மைக்காக்க வேண்டியபாரம் நின்னைப் பொறுத்ததாகிறது. பொய், கொலை, களவு முதலியபாவங்கள் ஒன்றும் எமையணுகாது காத்தருள்வாய். ஓ அபாரகருணாநிதியே! உன்னை எமது அருமைத் தந்தையென்றும், பிரபுவென்றும் அறிந்து சிரத்தையுடன் தொழுதேற்றும் படிக்கும், ஒவ்வொரு மனிதனையும் எமது ஸோதரனாகவும், ஒவ்வொரு ஸ்திரீயையும் எமது ஸோதரியாகவும் மதித்து அன்பு பாராட்டும் படிக்கும்; எம்முள்ளத்தைத் திருத்தி யருள்வாய்; நினது அன்பும் தூய்மையும் ஒவ்வொருள்ளத்திலும், ஒவ்வொரு குடும்பத்திலும் மாத்திரமேயன்றி இவ்வுலக முழுமையும் அரசு செய்வதாக. ஓ அன்புள்ள பிதாவே! உனது உண்மையான பரிசுத்த மதம் எங்கும் பரவும்படி அநுக்கிரகஞ் செய்து உனது குழந்தைகள் ஒவ்வொன்றும் தூய்மை, சாந்தி முதலிய சுகங்களை அடைய அருள்வாயாக.

[பிறகு இதனடியில் காணும் பிரார்த்தனை ரூபமான பிரம்ம கீதம் பாடல் வேண்டும்.]

---

## சமாஜிகப் பிரார்த்தனை.

### மஹாநிர்வாண தந்திரம்.

(உபாசகர்களெல்லாரும் எழுந்து நின்று அடியில் வரும் பிரார்த்தனையை உறத்த சத்தத்துடன் சொல்லல் வேண்டும்.)

ஓம் நமஸ்தே ஸததே ஜகத்காரணாய,
நமஸ்தே சதே ஸர்வ லோகாச்ராயாய,
நமோத்வைத தத்வாய முக்தி ப்ராதாய,
நமோ பிரஹ்மணே வ்யாபினே சாச்வதாய.

த்வமேகம் சரண்யம் த்வமேகம் வரேண்யம்,
த்வமேகம் ஜகத்பாலகம் ஸ்வ ப்ரகாசம்,
த்வமேகம் ஜகத் கர்த்ருபாத்ருப்ர ஹத்ரு,
த்வமேகம் பரம் நிச்சலம் நிர்விகல்பம்.

பயாநாம் பயம் பீஷணம் பீஷணாநாம்,
கதிஹி ப்ராணிநாம் பாவனம் பாவநாநாம்,
மஹோச்சைஹ பதாநாம் நியந்த்ருத்வ மேகம்,
பரேஷாம் பரம் ரக்ஷணம் ரக்ஷணாநாம்.

வயம் த்வாம் ஸ்மராமோ வயம் த்வாம் பஜாமோ,
வயம் த்வாம் ஜகத் ஸாக்ஷி ரூபம் நமாமஃ,
ஸதேகம் நிதானம் நிராலம்ப மீசம்,
பவாம்போதி போதம் சரண்யம் வ்ரஜாமஃ.

அஸதோமா ஸத்கமய தமஸோமாஜ்யோதிர்கமய,
ம்ருத்யோர்மா அம்ருதங்கமய ஆவிராவீர்மஎதி ருத்ர
யத்தே தக்ஷணம் முகம் தேநமாம் பாஹி நித்யம்.
ஓம் பிரும்ம கிருபாஹி கேவலம்.

---

[பிறகு இதனடியில் காணும் பிரார்த்தனை ரூபமானகீதம் பாடல் வேண்டும்.]

[பிறகு ஆசாரியர் பிரும்ம தருமத்தில் ஞானகண்டத்திலாவது கருமகண்டத்திலாவது கொஞ்ச பாகம் படித்து உபந்நியாசஞ் செய்யல் வேண்டும்.]

---

## அனுதாபம்.

[பிறகு இந்த அனுதாப ரூபமான கீதமும் வசனமும் படிக்க வேண்டும்.]

### அநுதாபம்.

இராகம்—புன்னாகவராளி அடதாள சாப்பு.

### பல்லவி.

ஏதோ ஏழைகள்மீது இத்தனை கோபம்
ஏதுசெய்வோம் ஐயானே

### அனுபல்லவி.

நாதனே நீ இந்த வர்மஞ்செய்தாலினி
ஆதரவினி எமகார்தான் சொல்லும்மய்யா ஏதோ

### சரணங்கள்.

அஞ்ஞானமேனுமரச்சை யாசாரங்களைநாடி
அந்தகராஞேமென்ருே !
மெய்ஞ்ஞானமென்னும்நின் மேன்மையாமதந்தன்னை
மேதினியில்மறந்து மூடராஞேமென்ருே ஏதோ

காமக்குரோதலோப மோஹாதிகளிற்சிக்கி
கசடர்களாஞேமென்ருே!
நேமிதனில்நல்ல நீதிகளைவிட்டு
தாமதகுணங்களிற்தவித்துத்திரிவோரென்ருே ஏதோ

கல்விகேள்வி தன கர்வத்தினல் சுத்த
கசடர்களாஞேமென்ருே
செல்வசெறுக்கினல் சுவாமி நினைமறந்து
சாதுக்களைச்சினந்து சீர்கெட்டவரென்ருே ஏதோ

சத்தியம் சாந்தம் பரிசுத்தந்தனைவிட்டு
சண்டாளராஞேமென்ருே
நித்தியமெங்கடமையை நினகற்பிதஞ்செய்யாமல்
நிஷ்டூரங்கள்செய்து நினைமறந்தோமென்ருே ஏதோ

அன்னையே என்றுந்தன் அடைக்கலம் புகுந்தோமே
ஆதரித்திடுமெய்யனே
இன்னம்யாருலகினில் எம்மை ரக்ஷித்திட
ஈசனே தர்ம சமாஜத்தார்நேசனே. ஏதோ

அத்தியந்த கருணையுடையவரான பரமாத்துமாவே! பாவான்மிகளும், பாபசம்பவிகளுமாகிய நாங்கள் உனது அனந்தகருணா மகிமையைச் சற்றும் அறியாதவர்களாய் அநித்தியமான இப்பிரபஞ்சத்தை நித்தியமானதென்று பிரமித்து ஞான நேத்திரங்களை இழந்து குருடர்களாயும், கர்விகளாயும் கேவலம் பிராகிருதேந்திரியங்களை திருப்தி செய்விக்கும் பொருட்டு மூடத்தன்மையான காரியங்களிலேயே அலைந்து உழல்கின்றோம். எங்கள் இருதயங்கள் பாபங்களினால் மூடப்பட்டிருக்கின்றன, உனது திவ்விய தேஜஸாகிய ஞானசூரியன் காமக்குரோதிகளாகிய மேகங்களினால் எங்களுக்கு மறைக்கப்பட்டிருக்கின்றான். நாங்கள் அதி தீன தசையிலிருக்கின்றோம். எங்களது தசை மிகுந்த நிர்ப்பாக்கியகரமானது. எங்களது இவ்வுலக வாழ்க்கையோ க்ஷணபங்குரமானது. எங்களது பாபசமூகமோ அனந்தமானது. நாங்களோ அற்பஞ்ஞர்களாகியும், அற்ப சக்தியுடையவாளாயும் இருக்கின்றோம். நீயோ சாவஞ்ஞனாயும், சர்வ வல்லமையுடையவனாயுமிருக்கின்றாய். ஆகையால் உனது கருணையொன்று தவிர நாங்கள் வேறுகதியொன்றும் காணோம். ஒபிரியமான தந்தையே! இவ்வித தசையில் நாங்கள் என்ன செய்யமாட்டுவோம். உனது சரணத்தையடைந்தோம். ஆகையால் தீன சரண்யா! எங்களைச் சூழ்ந்துகொண்டிருக்கும் பயங்கரமான பாபமிருகங்களைத் துரத்தியடித்து எங்கள் பயத்தைத் தீர்த்து அடியார்களருகிலென்னாளும் நின்று கருணையுடன்இரக்ஷிப்பாயாக.

இங்கு இதனடியில் காணும் தேவாரத்தைப் பாடவேண்டும்.

ஆதியே போற்றி போற்றி அப்பனே போற்றி போற்றி
சோதியே போற்றி போற்றி சுத்தனே போற்றி போற்றி
நீதியே போற்றி போற்றி சுத்தனே போற்றி போற்றி
ஓதியே உதவிசெய்வா உத்தமா போற்றி போற்றி.

ஆசாரியர் பிறகு அடியில் காணும் சாந்தி பாடத்தைப் படித்தல் வேண்டும்.

சாந்தி பாடம்.

நமது பிரார்த்தனையைக் கேட்டு அங்கீகரித்து நம்முன் விளங்காநின்ற கருணா நிதியாகிய கடவுள் நம்மை ஆசீர்வதிப்பாராக. இந்த

உபாஸனாஸ்தலத்தில் கூடும் உபாசகர் எல்லோரையும் தனது பரிசுத்தமான பாதத்தில் என்றென்றைக்கும் நிலைநிறுத்திஜகத் ரக்ஷகனாகிய நமதப்பன் நம்முடைய பிரார்த்தனையை ஈடேற்றி, சாந்தியும் பரிசுத்தமுமான உள்ளத்துடன் நாம் என்றென்றும் அவரது திவ்விய ஸாந்நித்தியத்தை அனுபவிக்கும்படி கடாக்ஷிப்பாராக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! ஹரி: ஓம்.

பிறகு இந்த மங்களத்தைப்பாடலாம்.

இராகம்—சுருட்டி—சாபு தாளம்.

### மங்களம்.

மங்களம், மங்களம், மங்களம், நித்தியசுப
மங்களம், மங்களம், மங்களம்

### அநுபல்லவி.

எங்கும் நிறைந்தோனுக்கும்
எவையும் படைத்தோனுக்கும்
சங்கம் துதிப்போனுக்கும்
சாஸ்விதா நந்தனுக்கும் (மங்களம்)

### சரணங்கள்.

நிரு நாமவய்யனுக்கும்— நிரஞ்சன
நிரந்தர நிமலனுக்கும்
அருள்கோடை யோனுக்கும்
அநந்தன் அனாதிக்கும்
அருளாழி வேந்தனுக்கும்
அகண்டாகண்டனுக்கும்
அருவாகி திருவாகி அசதனச்சுதனாகி
அருலிக்குமெங்களத்தன் அமலனுக்கும் (மங்களம்)

இந்த வாழி விருத்தத்தை எல்லாரும் சொல்லவேண்டியது.

### வாழி விருத்தம்.

வாழிபரன் வாழிமறை வாழியுலகங்கள்
வாழி தருமங்கள் பல வந்தணர்கள் வாழி
வாழி சத்தியம் நீதிவளர் கல்வி தத்வம்
வாழி பிரம்மசமாஜம் வண்ணமுடன் வாழ்.

பிரம்மோபாஸனா பத்ததி முற்றிற்று.

# வருஷ உற்சவ காலங்களில் செய்யத்தக்கப் பிரார்த்தனை.

இகபரசுகத்திற்கு இன்றியமையாதவனாகிய எமதப்பனே! அடியேம், நின்னைப் பிரார்த்தனைசெய்து அறிந்து ஆனந்தப்பட ஆரம்பித்ததுமுதல் இன்றோடு வருடம்பூரணமாயிற்று. சென்ற வருடத்தில், எங்கெங்குபோனோம், என்னென்ன செய்தோம், மனோவாக்குக்காயத்தால் எண்ணிச் செய்த பாவங்களெத்தனை ! எண்ணாதுசெய்தபாவங்களெத்தனை ! தத்துவ சாத்திரங்களை ச்சத்தியமாய் போதாமல் வீண்காலம் போக்கிய நாள்களெத்தனை. பெற்றோரையும் பெரியோரையும் தொண்டு செய்யாமல் தூஷித்த நாள்களெத்தனை; இல்லற தருமங்களை மறந்தநாள்க ளெத்தனை; எமது சோதரரையும், தேசத்தாரையும் நேசியாதநாள்க ளெத்தனை ; திக்கற்ற கூன் குருடு மொண்டி முடவருக்கு எம்மாலான உதவிசெய்யாமல் இருந்தநாள் எத்தனை ; சத்தியத்தைமறந்து அசத்தியத்தை யனுசரித்த நாள்களெத்தனை ; பொய்கொலை, களவு, பொறாமை, சூது, வாது, மதுபான, விபசாரமுதலான துஷ்கிருத்தியங்களைச்செய்த நாள்களெத்தனை.

மண் பெண் பொன் ஆசைகளால் மனதைப் பாழாக்கியநாள் எத்தனை ; எமது தேசத்தையும் எமது தேசத்தாரையும் நேசித்து எம்மாலான உதவிசெய்யாமல் தேசத்துரோகஞ் செய்தநாள்கள் எத்தனை ; எமது அஞ்ஞானத்தையோட்டி யறிவை யூட்டிடும் ஆசாரியர்களாகிய வேதபுருஷர், சங்கரர், மாத்துவர், இராமானுஜர், ஏசுகிறஸ்து, மகமது நபி முதலான மஹாத்துமாக்களையும், அவர்களுடைய போதகர்களையும் அனியாயமாகத் தூஷித்த நாள்களெத்தனை ; கடைசியாக நின்னைப் பிரார்த்தனை மூலமாக ஸ்துதிக்க ஸ்தாபித்த ரவாரத்திற்கு ஓர் தரமாகிலும் கூடித் தோத்திரம் செய்யாமல் அசட்டைசெய்த வாரங்களெத்தனை ; எமதப்பனே இவைகளை யெல்லாம் (எம்மைப்பார்க்கிலும்) நீ நன்றாய் அறிந்துக்கிறாயல்லவா? இத்தன்மையான நாங்கள் நினது திவ்யபரிசுத்தத் தலத்தில் வந்து நிற்க பயந்து அடங்கி, ஒடுங்கி, ஓ! கிருபாநிதியே!

எமது அபராதங்களை க்ஷமித்தருளவேண்டுமென்று இத்திருநாளில் கரங்கூப்பி ஹிருதய பூர்வமாகப் பிரார்த்தனை செய்கிறோம்.

எமது பிழைகளைப் பொறுப்பாய்—எமது பாப கிருத்தியங்களைப் பாராட்டாமல் பாதுகாப்பாய், பிள்ளைகள் செய்யும் பிழையைப்பெற்றோர் பொறுத்துக் கொள்வதைப்போல—அடியார் செய்தபிழைகளைச் சர்வலோக பரமபிதாவாகிய நீ பொறுத்து ரக்ஷிக்காவிட்டால் இனியார் பொறுப்பார்? நினது காருண்யத்திற்கோ கரையில்லை. அடியோம் அநந்த பாவங்களைச் செய்திருந்தும் அவைகளைச் க்ஷமித்து அடியாருக்கு மீண்டுமிதோ புதுவருஷ ஜனிப்பத்திருக்கிறாய். அடியாருடைய பாவங்களைப் போக்கும் பாவனையாகப் பல கலைகளோடு கூடிய பிரபாகரனை ஆகாசவீதியில் பிரகாசிக்கச் செய்திருக்கிறாய். சாந்தமும், சந்தோஷமு முண்டாக்கும் பாவனையாக சந்திரனைச் சிருஷ்டித்திருக்கிறாய்.

ஆ! நினது அன்பு என்னே? நினது புகழ்ச்சி யென்னே? பிரதாப மென்னே? எங்களால் சொல்லி முடியுமோ? எமக்கருகிலிருக்கும் பொருளிலும் பொருளாய், வெளியிலும் வெளியாய், ஒளியிலும் ஒளியாய், சுவையிலும் சுவையாய், மருவிலு மருவாய், அணுவிலும் அணுவாய், அறிவிலும் அறிவாய், எம்மிலும், எமக்கு புரம்பிலும், எமக்குமேலும், எமக்குக்கீழும், மற்றும் சராசர தராதல அண்ட பிண்டங்களிலும் எங்குமாய், ஏகமாய், நான், நான், என்று நீயே பிரசன்னமாகி யிருந்தும், எமது அஞ்ஞானத்தால் அறிந்து உய்ய அசக்தராகித் தவிக்கிறோம்.

ஐயோ! எமது அஞ்ஞானமாகிய மடமையை என்னென்போம். மகத்தான மலைகளும் நின்னை நோக்கிமன்றாடுகின்றன. சலசல வென்றோடும் ஆற்றின் சலமும் நின்னைத் துதிக்கின்றன. ஓங்கி வளரும் விருக்ஷங்களும் நின்னை ஓதி ஓலமிடுகின்றன. தழைத்து வரிந்து தோன்றும் இலைகளும் நின்னை இரைந்து தேடுகின்றன. புஷ்பிக்கும் ஒவ்வொரு புஷ்பமும் நின்னை வாசனையோடு விழித்து நோக்குகின்றன. காய்க்குங்காய் கனிகளும் நின்னையே நினைத்து அசைகின்றன. பாடும் பக்ஷிகளெல்லாம் நின்னை இனியராகங்களால் பஜிக்கின்றன. மிருகாதி கிருமிகீடங்கள் நினது மஹிமாகிர்த்தியங்களை எண்ணி மதித்தாடுகின்றன. அப்ரமேயனாகிய ஒ! தும் நினது மகிமையை யறிந்து ஆனந்தப்படாமல் மதிமோசம்

அருட்பிரகாசவள்ளலே! அடியோம் மானிடரென்ற உடம்பெடுத்தோம். எமது தசையோ நிர்பாக்கியமாகிவிட்டது. யாம்பிறந்தும் பிரயோசன மற்றவரானோம். ஆம், நினக்குப் பெரிய அபராதிகர்களானோம்.

ஆனதுபற்றியே யல்லவா இந்த பிரம்ம சமாஜம் விருத்தியாகத் தடையாகிவிட்டது. ஆயினும், புத்ரவாச்சலியத்தினால் அடியாருடைய பிழைகளைப் பொறுத்து எமக்கு மறுபடியும் நவீனமான திரு வருடத்தை ஈன்றருளினாய். ஓ! கிருபாநிதியேநின்னை யன்போடு ஏகசோதர வாஞ்சையால் கட்டுண்டு கூடித்துதிசெய்யும்படியாய் ஜனிப்பித்த இத்திரு நாளின் பெருமையென்னே! எம் ஆண்டவனே, இந்தத் திருநாள் முதற்கொண்டாவது சத்திய மங்கள சுவரூபனாகிய நின்னை, யாமெங்கிருக்கினும், எங்கு செல்லினும், எந்நிலையிலும், எக்காரியத்திலும், சத்தியமாகத்தியானித்து நின்னை ஞானக்கண்ணாலறிந்து ஹிருதய மூலியமாய் நின்னோடணுகி, நீவிரும்பும் சத்காரியங்களைச் சீராகவுஞ், சிறப்பாகவுஞ், சத்தியமாகவுஞ் செய்யும்படியான வரம்தந்தருளுவாய்சுவாமி. இத்திருநாளும் வாழிய, நின்திருகடாஷமும் வாழிய.

இத்திருவடத்தில் யாஞ்செய்யுங் கைங்கரியங்கள் வாழிய, இனிவருந் திருவருடங்களும் வாழிய, அத்திருவடங்களில் யாம் செய்யப் புகும்திருக்கைங்கரியங்களும வாழிய, எமதுதேசம் வாழிய, எமது தேசம் ஆள்வோர் வாழிய, கல்விவாழிய, சாதுக்கள் வாழிய, சற்ஜனர் வாழிய சோதார் வாழிய, சமாஜம் வாழிய, நினதுகுன்றுவளம் பொருந்திய மகிமாப்பிரதாபமும் வாழிய—ஓம்தத்சத்.

## தேவாரம்.

அப்பாவென் னீன்றதாயே யாரமுதே யினியதேனே
முப்பாரும்போற்றுமிந்த முலகமெலாம்வாழும்
இப்பாரி லுன்னை நோக்கி யின்பமாய் போற்றி வாழத்
தப்பாமல் வரமளிக்கத் தாமத மேனோ தேவே.

---

## ஏகாந்த சேவை.

ஈசுவரனுடைய கருணை நியமனமான இல்லறத்தைத் தழுவி வருபவன் சில சமயங்களில் சோம்பலினாலும், தக்க ஜாக்கிரதை

யின்மையினுலும், சகிக்கும் சக்தியின்மையினுலும், உலக மாயமோகீ மேதங்களால் மூடப்பட்டு தன் இல்லறத்தை திருப்திகரமாக நடத்த வகையற்று தவிக்கக் கூடும். அப்படிப்பட்ட தருணத்தில், எப்படி பிதா மாதாக்களால் நியமிக்கப்பட்ட விதிகளின்படி நடக்க சக்தியற்ற மக்கள், மதி மயங்கி தவித்து தம் குறைவுகளை தம் பிதா மாதாக்களிடம் தனித்துப் போய்ச்சொல்லி முறையிட்டு நீக்கிக்கொள்வதைப் போலவும்; எப்படி நாயகன் கட்டளைகளின்படி நடக்கத் தவறிய நாயகி தன் குறைவுகளைப் பற்றி பரிதபித்து தன் நாயகர்களிடமே அந்தரங்கத்தில் போய் முறையிட்டு நீக்கிக்கொள்வது போலவும்; எப்படி சேவகன் தன் எஜமானனுல் ஆக்ஞாபிக்கப்பட்ட கடமைகளை திர்ப்தீகரமாகச் செய்யத் தவறிய காலத்தில் தத்தளித்து அந்த எஜமானனிடமே ஏகாந்தமாகப் போய்ச்சொல்லி தம் கஷ்டநிஷ்ரே குறைவுகளை நீக்கிக்கொள்வதைப்போலவும் இல்லறத்தான் பிரபஞ்ச ஆசாபாச வலைகளில் சிக்கி, தவிக்கும்போதும், உலகதாபத்தினுல் ஈசுவர பக்தியாகிய திவ்யாசம் சுண்டி ஹிருதயம் கல்லானதுபோல காய்ந்து, தர்மநிஷ்டையாகிய கற்பக விருக்ஷத்தின் அபிவிர்த்தி குரைந்தும், அங்கு பாவ எண்ணங்களென்னும் களைகள் வளருந்தருணத்தில், அக்களைகளைக்களைந்து பக்திரசம் ஊரவேண்டிய காலத்திலும், இல்லறத்தானுடைய சொந்த ஆத்மோன்னத விருத்திக்கும் தடங்கலாகவும், பொது ஜனசமுஹத்தாருடைய ஆத்மோன்னதத்தை விருத்திக்கு பாடுபடுங்காலத்தில் தடங்கலாகவும் இடைக்கிடை வந்து மதிமயக்கும் இவ்வுலக மாய்கைகளாகிய மிருகங்களை துரத்தியடித்தும் அவைகளால் பின்னும் வருந்தாமல் ஈசுவரசக்தியாகிய கவசத்தைப் பெறுவதற்கும் ஏகாந்த சேவை இன்றியமையாததா யிருக்கிறது.

இந்த ஏகாந்தசேவைக்குப் பற்பல தொழில்களாலும், தொல்லைகளாலும், கவலைகளாலும், பிரபஞ்ச ஆசாபாச சஞ்சலங்களாலும், சூழப்பட்ட நாடுநகரங்கள் மாடமாளிகைகளைப் பார்க்கிலும், நிர்மலமான ஹிருதயத்தோடு ஈசுவரனை யாராதிப்பதற்கு அசோக வனங்களும், நிஸாஸ்பதமான உன்னத பருவத பிரதேசங்களும், திவ்விய நதி தீரங்களும் சிரேஷ்டமானவை என்று திடமாகச் சொல்லலாம்.

நமது சரீரசவுக்கியத்திற்கு கூட பர்வதாதி நூதன பிரதேசங்களுக்கு சிலகாலம் போயிருந்தால் உத்தமமென வைத்திய நூல்கள் முறையிடுகின்றதல்லவா?

அதாவது: நமது சரீரத்திலிருக்கும் இரத்தம் கெட்டு அதன் சத்துக்கள் க்ஷீணதசையடைய கொடிய வியாதிகள் சம்பவித்து நொந்து பலஹீனமடையும் போது நாமிருக்கும் பழய விடங்களை விட்டு நூதன ஸ்தலங்களுக்குப் போகும்படி ஆயுள்வேதம் ஆக்ஞாபிக்கிறது.

தீராத வியாதிஸ்தர்களாகி இனி பிழைக்கமாட்டோமென்று எண்ணியவர்களும், நல்ல பூசாரமும், சுத்தகாற்றும், சுத்த ஜலமும் உள்ளவிடங்களுக்குப் போய் அங்கு சிலகாலந் தங்கி, வியாதிகள் நீங்கி மறுஜெனனம் பெற்றுவந்தவர்களைப் போலாகி வீடுவந்து சேர்ந்தவர்களை நாம்பிரதியக்ஷத்தில் கண்ட உண்மையல்லவா?

இவ்வண்ணமாகவே பக்திரசமென்னும் சுத்த இரத்தங்கெட்டு, பாவமென்னும் வியாதியினால் பீடிக்கப்பட்ட ஆன்மாக்களும், பாவான்மிகளின் கூட்டத்தையும் இடத்தையம் விட்டு பரிசுத்தமான நூதன பர்வத பிரதேசங்களுக்குப் போய் தம் தாபத்தை தீர்த்துக்கொண்டு தன்னியராகலாமென்பது திண்ணம்.

அங்கு ஆத்துமாவை பாவ பந்தங்களுக்காதாரமான சிற்றின்ப எண்ணங்களை விட்டு பேரின்பத்தையடையச் செய்யும் சாதனங்களனந்த மிருக்கின்றன. அவைகள் நமது பிரயத்தனமில்லால், தாமாக பிரம்மாநந்தத்தில் ஆழ்கத்தூண்டும்.

அங்கு தோன்றும் பிரமாண்டமும், பயங்கரமுமான பர்வதங்களும், அவற்றின்மேலிருக்கும் பிரம்மாண்ட குன்றுகளும் சஞ்சலமும் சலனமுமற்று, சர்வேசுரரைக் காண்பதற்கு விண்ணுலகை நோக்கி (மௌனயோகிகளைப்போல் அசைவற்று) நிரந்தரமாகநிற்க அந்த மலைகளாகிய மௌனயோகிகளின் சலனமும் சஞ்சலமுமற்ற தபசை, சர்வேசுவரரானவர் கண்டு கொண்டாடி, விண்ணுலகத்திலிருந்து தேவாமிர்தத்தை தாம் வாரி வாரி கொடுப்பதைப்போல: அப்பர்வதங்களின் சிகரங்களில் பெய்த விண்ணுலகின் பனித்துளிகள் உறைந்து, வெய்யோனைப்போல் வெளுத்து பெரும் பனிக்கட்டிகளாகி, பிரபாகரனுடைய பிரகாசம் அவற்றின்மேல்பட பற்பலவித நவரத்தினங்களினால் செய்யப்பட்ட பொன்மணி கிரீடங்களைப்போல் அவைகளுக்கு சடகோபுரங்கள் வைத்திருப்பதுபோல் பிரதி விம்பிக்கின்றன. அந்த உன்னதமான பர்வத தேசங்களை

அலங்கரிக்க விநோதமான தேக்கு, தேவதாரம், தெங்கு, மா, பலா,
கதலி, கமுகு, கொன்றை, கொய்யா, புன்னை, பாதரி, பன்னீர்,
பாரிஜாதம், சந்தனம், அகில், மகிழ், வன்னி, அசோகம், அத்தி,
அரசு, ஆலம், சம்பகம், மதனகாமம் முதலான விருக்ஷ ஜாதிகள்
கொப்புக்கிளைகளுமாய் பருத்து, நெரித்து, படர்ந்து, அடர்ந்து
அவற்றின் அழகிய இலைகள் தென்றலால் நடிக்கவும், அவற்றின்
புஷ்பங்கள் விதம் விதமான வர்ணங்களோடும், வாசனைகளோடும்
விகஸித்தும், அவற்றின் விதம் விதமான காய்கனிகள் வான்வெள்
ளிகளைப்போல பிரகாஸித்தும், அவைகள் பானுவின் உஷ்ணத்தி
னால் பழுத்து, வெடித்து, அதன் தேனை வண்டுகளுண்டு: ரீம், ரீம்
என்று மந்தகீதம் பாடி யாடவும், அவ்விருக்ஷங்கள் தங்களைப்படை
த்து ஆதரிக்கும் அகிலவிநோதனுடைய ஆயாசத்தை தீர்ப்பதைப்
போலவும், அவ்வள்ளல் விண்ணுலகத்திலிருப்பதாகவும் எண்ணி,
தம் குன்றுவளம் பொருந்திய அழகிய குளிர்ந்த இலைகள், பூக்கள்,
கனிகளோடு கூடி வெண்சாமரம் வீச, விண்ணுலகை நோக்கி வளர்
ந்துக் கொண்டிருப்பதுபோலு மிருக்கின்றன. இப்படி வளர்ச்சியையு
ம், வன்மையையுமுடைய விருக்ஷங்களான நாயகர்களுக்கு உதவிசெ
ய்ய வந்த நாயகிகளைப்போல, மல்லிகை, முல்லை, ஜாஜி, சம்பங்கி
முதலான கொடிச் செடிகள் அவ்விருக்ஷங்களுக்கடியில் முளைத்து
வளர்ந்து, அவ்விருக்ஷங்களின் மீதி உத்தம நாயகிமார் தம் உத்தம
நாயகரை எப்போதும் தழுவிச் சேர்வதுபோலவும், அந்த விருக்ஷங்
களின்மீது ஜம்பு சரங்களைப்போலவும், மரகத மாணிக்க மலர் மாலை
களைபோலவும் படர்ந்து அவ்விருக்ஷங்களை அலங்கரித்தும், தமது
ஒப்பற்ற புஷ்பங்கள் குப்பென புஷ்பிக்க, தம் நாயகராகிய அவ்விரு
க்ஷங்களையும், அவ்விருக்ஷங்களுக்கிருப்பிடமான பர்வதங்களையும், அ
ப்பர்வதங்களைகளுக்காதாரமான பரமேசுவரரையும் பரமளிக்கச்செ
ய்கின்றன அப்பர்வதங்களையடுத்த பள்ளத்தாக்குகளில் புஞ்சை நஞ்
சை பயிர்கள் வளர்ந்து அவற்றின் தானிய இளங்கதிர்கள் பொன்
மணிகளைப்போல் பிரகாசித்து, இப்பொன்போன்ற மணிகளை யுண்
டாக்கும் பயிர்களைப் படைத்த ஜகதீசுவரரின்பொற் கரங்களுக்கு
முத்தமிட மேல்நோக்கிப் போவதைப்போல் ஆடுகின்றன. அதன்
முதிர்ந்த கதிர்களோவெனில், பராபரவஸ்துவின் அபார பெருமை
யையுணர்ந்த பெரியோர், அப்பரமேஸ்வரருடைய பாதங்களின்
மீதே தன் சிரம் சாய்க்கும் வண்ணமாக அப்பயிர்களின் முதிர்ந்த
தானிய பொன்மணிகள் குச்சு குச்சுகளாகி தலைவணங்கி தம்மை

படைத்த ஜகதீசுவரனுடைய அடிகளை நாடிக்கொண்டு சாய்வதைப்போல் பிரகாசிக்கின்றன. அப்பர்வத பிரதேசங்களெங்கும் பர்பலவித புஷ்பச்செடிகளாலும், அவற்றின் ஆபரணங்களாக அப்புஷ்பங்களின்மீது பெய்த முத்துகளைப்போன்ற பனித்துளிகளாலும், பெரன் செடிகளாலும், பச்சைப்பசேரெனத்தோன்றும் பசும் புல்லுகளாலும் நிறைந்து அப்பர்வத பிரதேசங்களிடம் வரப்பட்டவர்களுக்கு பட்டு மகம்மல் ஜமக்காள மிட்டழைப்பது போல நின்று கிலக்காற்றால் நடிக்கின்றன, பர்வதங்களின் பல சிகரங்களில் பரமேசுவரருடைய காருணியத்தைக் காட்டுவதைப்போல அநேக ஊற்றுக்கண்களும் ஜல சுரங்கங்களும் உற்பத்தியாகி அவற்றிலிருந்து சுத்த ஜலம் பீறிட்டெழுந்து வந்து, ஜகதீசுவ்ரனை நம்பினோருக்கு அவனருள் இப்படித்தான் எதேஷ்டமாக வருமென்று உத்கோஷிப்பதைப் போல அடுத்த பள்ளத்தாக்குகளில் குபீர் குபீரென்று வெள்ளிரசம் போல்விழுந்து, பேரருவிகளாகவும் சிற்றருவிகளாகவும் பாய்ந்து, பல கற்களிலும் செடிகளிலும் தாக்கி, சர்வேசுவரரின் சக்தியைப்பற்றி சல சலவென்று பாடுகின்றன. அப்படிப்பாயும் அருவிகளின் அழகிய கரையோரங்களிலும், அதனுதகத்தினாலாகிய ஆவி கூப தடாகங்களிலும், கரை தீரங்களிலும் ஆடு, மாடு, பசு, புலி, யானை, நரி, நாய், மான், மந்தி முதலான மிருகங்கள் அங்கு எதேஷ்டமாகவிருக்கும். அநேக உணவுகளை கௌவியும் வௌவியும் தின்று தேக்கெறிந்து மனோபீஷ்டத்தின்படி திரிந்து விளையாடி விண்ணுலகிற் கொப்பான இப்பர்வத வனங்களை மானிடர் வந்து மிதமிஞ்சிக் கொடுக்கா வண்ணம் இயற்கைக் காவலாளிகளைப்போல காக்கின்றன. அருகில் நிற்கும் விருக்ஷங்களிலும், செடிகொடிகளிலும் பச்சை, நாகம், சாரை விரியன் முதலான அழகிய பாம்பினங்கள் மணிமாலைகளைப்போல அம்மரங்களில் தொங்கி, அவ்வனங்களை அன்னியற் புகுந்து கெடுக்காத வண்ணம் வேலிகளைப்போலிருந்து காப்பதாக ஊஞ்சலாடிக்கொண்டிருக்கின்றன. அடியிலிருக்கும் அழகிய பிரன்ஸ் புல்லுகளை மனுஷர் கெடுக்கா வண்ணம் அழகிய அட்டைகள் நீள நீண்டு எச்சரிக்கை யிடுகின்றன. அங்கு அருணோதயகாலத்தில் ஆநந்த பரவசமாகி அப்பனிடத்தில் அன்பையும் நன்றியறிதலையும் காட்டி, அவர் மகிமையை தாமறிந்தாற்போலும், அவரது சிருஷ்டிசெய்த கஷ்டமாகிய ஆயாசத்தை தீர்ப்பதுபோலும் கோகிலும், கிளி நாகணவாய், சக்கிரவாகம், செம்பூத்து, வானம்பாடி முதலான பட்சி

கள் தமக்கு தெரிந்த பாஷைகளில் இனிய கீதங்களைப்பாடியும் ஆநந்தமுண்டாக்கியும் ; அவற்றில் சிலபட்சிகள் குதித்து கிளைகளில் விளையாடியும் (உத்தம கன்னிகைகள் கொம்மியடித்தாடுவது போல) விருக்ஷங்களிலிருக்கும் கனிகளை த்தாவித் தாவி உண்டு உல்லாசமாக ஆடுகின்றன. அப்படி விருக்ஷங்களின்மேல் பாடும் பட்சிகளின் கீதங்களுக்கேற்க அடியில் மயில், அன்னம், புரு முதலான பட்சிகள் தம் பலவித வருண அலங்காரமான இரக்கைகளை விரித்து(கற்புடைய மாதர் தம் கணவர் மெச்ச நடித்து நடப்பதுபோல) தம் சிருஷ்டி கர்த்தாவாகிய கடவுளின் ஆநந்த அழகைக் கொண்டாடி நடிக்கின்றன. மீளவும் இப்பர்வத பிரதேசங்களை நாடிவரும் தபோநிதிகள், எதிந்திரியர்கள் ஜிதேந்திரியர்களாகிய மஹான்கள் சுகமாக தங்கியிருப்பதற்கு இயற்கையான குகைகளும், பல்வித புஷ்பக்கொடிகளாலாகிய சிங்கார லதகிரஹங்களும், அங்கு வந்து தங்கப்பட்டவர்களுக்கு பலவித கனிகளும், கிழங்குகளும் காமதேனுவைப் போன்ற காட்டுப்பசுக்கள் தமது தித்திப்பான பாலில் பாதி பாகத்தைத் தம்மோடு குதித்து குதித்து துள்ளி விளையாடும் தம் கண்மணிகளான கன்றுகள் குடிக்கக்கொடுத்தது போக, மீதியைக் குடிப்பதற்கு யாருமில்லையே என்று ஏங்கி மஹாத்துமாக்களான வனசஞ்சாரிகளுக்காவது உபயோகமாகும்படி பர்வத குகைகளுக்கும், லத கிரஹங்களுக்கும் அருகில் போய், அங்கு கிடக்கும் பாரை கற்களின்மீது படுத்து தம் மடிகளை அழுத்த, அமிர்தத்துக்கொப்பான அவற்றின் பால் தாரைக வடித்து வெண்ணாறுகளாகப் பெருகிப் பாய்ந்தோடியபிறகு, பிரபாகரனுடைய உஷ்ணத்தினால் காய்ந்து வெடித்து ஸ்படிக பிள்ளைகளைப்போலவும், பத்தாசுகட்டிகளைப்போலவும் பிரகாசிக்கும் பாற்கட்டிகளையும் ; குளிர் சீதள முதலானதுகளால் வருந்தாதபடி, ஏலம், இஞ்சி, சுக்கு, மிளகு, கிராம்பு முதலான மலைதரும் பொருட்களையும், புலித்தோல், மரவுரி முதலான சர்மங்களையும் மந்திகள் கொண்டுவந்து சேர்த்து வைக்கின்றன. ஏகாந்த வாசிகளுக்கு "ஏகமே வாத்வதீயம், பிரம்ம கிருபாஹி கேவலம்" என்ற ருதி சுருதிகளை அப்பர்வத ரிஷிகள் பாடுவதை கிளிகள் பழக்கத்தால் பாடஞ்செய்து அங்கு பாடுகின்றன. மற்ற சில வண்டுகளனைத்தும் "ஓம் தத்சத்" என்று ஒரே ராகமாக பாடியானந்த மூட்டுகின்றன. இப்படிப்பட்ட விடத்தில் பிரபஞ்சஸம்பந்தமான பாபதாபங்கள் பிரவேசிக்க உத்திரவில்லை. இவ்விடத்தில் உலக ஆசாபாசங்கள் வந்து அணுகுவதற்கு அதிகார

யில்லை; உலகதாபத்திரியங்களால் வருந்தும் மானுஷிக ஹிருதயங்களை கிருபாநிதியாகிய கடவுள் தம் கருணைக்கரங்களால் தடவிக் கொடுத்து அழைப்பதுபோல், குளிர்ந்த காற்று தேகத்தின்மீது வீசி சாந்தியை அடையச் செய்கின்றது. மேலும், பர்வத பிரதேசங்களில் அடிக்கடி மழைபெய்வது சஹஜமாகையால், அவ்விடத்திற்குப்போகும் பக்திமான்களுக்கு அப்பரமேஸ்வரருடைய இருப்பைகாட்டும்படி மேக கர்ச்சனைகள் கிடு, கிடு, தாம், தாம், தீம், தீம், என்று அடிக்கடி கர்ஜித்து நான் எங்கும் இருக்கிறேன். என்று அடிக்கடி நினைப்பூட்ட, அவரது மஹிமா சக்தியை மின்னற்கொடிகள் மோஹன சுந்தரிகளைப்போல ஜ்வலித்து நடித்து காட்ட, இத்தியாதிகளை கண்டும் கேட்டும் அறிந்த பக்திமான்களுக்கு கடவுள் கருணாரசம் பொழிவதைப்போல அடிக்கடி பாட்டம் பாட்டமாக மழைகள்பெய்து மனதைச் சாந்தப்படுத்தும். இம்மட்டோ? இந்தப் பர்வத பிரதேசங்களிற்கண்ணுறும் பற்பல பதார்த்தங்களும் பரமேசுவரருடைய மஹிமையைப் பிரதிஷ்டையாக்கி அவ்வுள்ளலை சிந்திக்கச்செய்யும்; ஆம்! அவைகள் நமது பிரயத்தனமில்லாமலும், நம்மையறியாமலும், மனதை பகவத் தியானத்தில் மூழ்கி சதாநந்த யோக சமாதியை அடையச் செய்யும். இப்படிப் பட்டவிடங்கள் இந்த பூலோகத்தில் சுவர்க்கலோக மென்றும் சொல்வதற் காக்ஷேபமென்ன? இதனாலே யல்லவா பகவத் தியானபராளாகிய வியாசர், சுகர், பராசராதி மதாசாரியர்களும், தத்துவ சாஸ்திராதி கிரந்தகர்த்தர்களும் ஹிமாசலம் பத்திரிகாசிரமம் நைமிசரண்யம், கைலாசம், முதலான பர்வத பிரதேசங்களை சுவர்க்கலோகங்களைப் போலபாவித்து கிரந்தங்களில் வர்ணித்திருப்பதன்றியில். இப்படிப்பட்ட நிர்மலமான விடங்களுக்கு அவர்கள் அடிக்கடிவந்து வசித்தும், தங்கள் ஆத்மோன்னத ஸ்திதியை விருத்தியாக்கிக்கொண்டும், பிரபஞ்சத்தாருடைய பொது நலத்துக்கு வேண்டிய கிரந்தங்களையியற்றி கிருதார்த்தர்களானார்கள். இக்கருத்தையறிந்தல்லவா ஏனையநாட்டு ஏசுநாதரும் பர்வத பிரதேசங்களில்போய், "உன்னத பர்வதங்களின்மேலிருக்கும் பிதாவே" என்று அடிக்கடி பிரார்த்தனை செய்தார். இப்படியே மஹம்மது நபி முதலானவர்களும், உலக ஆசாபாசதாபத்திரயங்களினால் தம் ஆத்மோன்னத ஸ்திதியும் பக்திரசமும் குறைந்துக்கொண்டு வந்தபோதும், உலகத்தார் உஜ்ஜீவனத்துக்கேற்ற உத்தம மதாசாரங்களைப் போதிக்க உத்தேசித்தபோதும், அடிக்கடி ஏகாந்தமான பர்வத பிரதேசங்களுக்குப்

போய் வந்ததாக உலக சரித்திரம் முறையிடுகின்றது. இத்தியாதிகளால் ஏகாந்த சேவையை நம்முன்னோரும் ஏனைய நாட்டாரும் நாடியதற்குக் காரணம் பட்டப்பகல் போலாகிறதல்லவா? ஆகவே, சதா உலகதாபத்திரயங்களால் பக்திரசம் என்னும் தடாகம் காய்ந்து, நமது ஆத்மோன்னத ஸ்திதி அபி விருத்தியடைய வழியற்று, தவித்து நிற்கும் நாமும், நம்முன்னோர்களாகிய ரிஷிகளுடையவும் ஆசாரியர்களுடையவும் வழிகளையனுசரித்து, அடிக்கடி இவ்வித ஏகாந்தமான பர்வத பிரதேசங்களுக்கு வந்து நமது அப்பனை அந்தரங்கத்தில் கண்டு முறையிட்டால் நமது பாவதாபங்கள் நீங்கி பரமேசுவர பக்தியில் மூழ்கி ஆநந்தமடையலாம். ஆதலின், அன்பர்களே வாருங்கள்! இந்த தக்ஷணதேசத்தில் சிறந்து பிரகாசிக்கும் பர்வத பிரதேசங்களாகும் திருபதி, சேர்வகிரி, நீலகிரி, மருதமலை முதலான பருவத பிரதேசங்களுக்குப்போய் அனைவரும் நமது அப்பனைப்பாடியாடி ஆநந்தமடையலாம்.

---

## ஏகாந்த பிரார்த்தனை.

அற்புத புருஷனாகிய அப்பனே! அடியேன் இந்த ஆநந்த வனத்தில் நினது அற்புத் சக்தியைக் கண்டு ஆநந்தமடையச் செய்ததற்கு அநேக வந்தனம். உலக ஆசாபாசங்களை வெல்வதற்கு சக்தியற்றும், உலக தாபதிரியங்களால் வருந்தியும் இங்கு நின்னிடம் அடைக்கலம் புகுந்தோம். இதோ நிற்கு மிப்பிரம்மாண்ட பருவதங்களுக்குமுன் யாமெவ்வளவு அற்பமானவர்கள். இங்கு வளர்ந்தோங்கும் உன்னத விருக்ஷங்களுக்குமுன் எவ்வளவு கேவலமானவர்கள். அம்மரங்களிற் படர்ந்து பூத்து காய்த்து கொஞ்சும் கொடிகளுக்குமுன் எவ்வளவு குறைவுற்றவர்கள் இங்கு எதேச்சையாகவோடி யாடித்திரியும் யானைப் புலிக் கரடி மான் முதலான மிருகங்களுக்குமுன் எவ்வளவு மங்கினவர்கள். இங்கு தம் மனோபீஷ்டத்துடன் யாடிபாடும் மயில் புறா குயில் மைனா முதலான அழகிய பக்ஷிகளுக்கு முன் எவ்வளவு அசங்கியர்கள். இப்பருவத பிரதேசங்களிலிருந்து பீறிக்கொண்டு வெள்ளிகளைப்போல ஜ்வலித்து குதித்தோடும் மலையறவிகளுக்குமுன் யாமெத்தன்மையானவர்கள்.

இப்படிக் கேவலரூபமும், கேவலசக்தியு முடையவர்களாகவிருந்தும், உலக ஆசாபாசங்களாலுண்டாகிய பாவ எண்ணங்களும்

பாவச்செயல்களும் தினேதினேத் திரண்டு பெருமூட்டைகளாகி இங்கிருக்கும் எல்லாப் பொருள்களிலும் பெரியவைகளாக விருக்கின்றன. இப்படிப்பட்ட பாவிகள் பாவனராவ தெப்படி? உலக வாழ்க்கையில் சங்கற்பமென்னும் மனதின்விதை உள்ளத்தில் ஊன்றி விருக்ஷமாகி அதன் கிளைகள் பருத்துப் பெருத்து வளர்ந்து நாலா பக்கங்களில் பரந்து பூத்துக் காய்த்து கனியாகி எம்மைச் சுற்றிக் கொண்டதனால் அக்காற்றில் அகப்பட்டத் துரும்பைப்போல தத்தளிக்கின்றனம். உலக ஆசாபாசங்களுக்கு வீடாகியமனமென்னும் விருக்ஷத்தை வேரோ டறுத்துத் தள்ளிப் புனிதராக கருதியே இந்த ஏகாந்தமான திவ்யஸ்தலத்திற்கு வந்து நினது திருபாதகமலங்களுக்கு அடைக்கலமானோம். இந்த அருணோதயகாலத்திற் பாலசூரியன் உஜ்வலரூபமுடன் வந்து இப்பருவத பிரதேசங்களையும், அழகிய அருவிகளையும், விருக்ஷங்களையும், விலங்குகளையும் பக்ஷிகளையும் புஷ்பங்களையும் மற்ற பொருள்களையும் பிரகாசிக்கச் செய்வதனால் காணும் காக்ஷிகள் யாவும் அற்புத காக்ஷிகளாகவும் பரம்ம தேஜசுகளோடு பிரகாசிக்கின்றன. இப்படிப்பட்ட ஸ்தலங்களிலன்றோ அன்று வியாச பராசரர் சுகசவுனகாதி மஹாரிஷிகள் நிர்விகல்ப சமாதியில் நின்று நின்னை சேவித்தார்கள். ஆம்! இப்படிப்பட்ட திவ்யதேசங்களிலேயே யனேக ஞானிகளும், தபோதனரும் யதிகளும், பக்திமான்களும், பக்தியோகத்தினாலும், ஞானயோகத்தினாலும் நின்னை நேரில்கண்டு நிர்மலாநந்தத்தைப் பெற்றனர். ஓ! நிரதிசயாநந்தனே! இப்படிப்பட்ட ஏகாந்தஸ்தலமன்றோ காமகுரோதங்களை கரைக்கும் உண்மையான காசி, கயா, காஞ்சி முதலான ஸ்தளங்களிற் சிறந்ததாகும். இப்படிப்பட்ட ஸ்தல மன்றோ ஆசாபாசங்களைய கற்றும் ஹரித்துவார அவந்திகாய அயோதியாதி ஸ்தலங்களிலும் சிறந்ததாகும், இப்படிப்பட்ட ஸ்தலமன்றோ பாவப்பிணிகளைப்போக்கும் பத்திரிகாச்சிரம் பிருந்தாவன முதலான ஸ்தலங்களிலும் சிறந்ததாகும். ஆம்! இதுவே பூலோக வைகுண்டமாகும். ஆ! ஹா! இந்தியதேசத்தின் பெருமை என்னை? இப்படிப்பட்ட ஏகாந்த ஸ்லத்திற்குவந்தோம். எம்பெருமானே! உலக ஆசாபாசங்களுக்கு வித்தாகிய மனமென்னும் விருக்ஷத்தை வேரோடறுக்கும்வன்மை தந்தருள்வாய்! பாலிப பிணிகளை பற்றற்றுப்போக பலத்தை பிரசாதிப்பாய்? ஓ! பக்தவஸ்சலா சரணாகத போஷகா? இந்த ஏகாந்தமான ஸ்தலத்தில் யாம் ஏகாந்தமாகவந்து நின்முன் அஞ்சலிசெய்து அழுகின்றனம். அன்பே யவதாரமாகும்

அரசே கருணையே உருவாகநிற்கும் கர்த்தனே, பிரயமெல்லாந்திர. ண்டுருடை பிதாவே! அருமையே யுருவான அன்னையே, சொந்தம் பாராடடும் சோதரனே! சுக ரளிக்கும் சிநேகனே! ஓ தாசபோஷகா? திவியரசம்யாவும் திரண்டொடுகும்பாகே! தொவிட்டாத தென்னமுதே! தீனதயாளர்? எமக்கு எல்லாம் நீயே யலல்வா! ஓ கிருபாசாகரா? எமது அநுதாபக கண்ணீரைத்துடைத்து பாவப்பிணிகளைப்போக்கி நினது பக்தி என்னும் பேராநந்த பெருங்கடலின் திவியரசத்தையுண்டு எமது விடாய்தீர்த்துக்கொள்ள அருள்வாய். இந்தபரிசுத்த பக்தி என்னும் அமிர்தபான த்தினல் பரிசுத்தராகி நினது சமீபத்தில் சதாபேராநந்தம் பெற்று யயச்செய்வாய்! இந்த ஏகாந்தபக்தி யோகம் எங்கும் எப்போதும் பிரகாசிக்கச்செய்வாய்? நினது ஏகாந்ததரிசிகள் எங்கும் எப்போதும் பிரகாசிப்பதாக! இந்த ஏகாந்த ஸ்தானம் எல்லா உயிர்களுக்கும் உத்தம உஜ்ஜீவனம் கொடுத்து காப்பதாகவும் ஓம் பிரம்ம கிருபாஹி கேவலம்.

---

பரமபொருள்பேரில்,

## தேவாரப்பதிகம்.

1. அரனயன் றிருமாலென்னு - மாதிமுச்செயற்கோனகிப்,
புரம்விரிசுடருமாகிப் - பொருளெவைக்காண்பதாகித்,
திரமிகவுற்றதாகித் - தீதிலாதவையுமற்ற,
அரியதோர்பொருளேயெம்மை - ஆண்டருளபயமின்றே.

2. முத்தொழில்வல்லாய்நாளும் - முடிவிலாப் பொருளே, யென்றன்,
சுத்தனேயருள்நிறைந்த - காரணக்கடலேசுத்த,
வித்தகாசரணமின்றி - விதேயனின்பிழையைத்தீர்த்தும்,
அத்தநல்லுய்யவெம்மை - ஆண்டருளபயமின்றே.

3. தொண்டர்கள்போற்றுநேயா - தப்பிலாவாதிமூலா,
அண்டர்களறியாரூபா - ஆணொடுபெண்ணுமல்லாய்,
பெண்டிருமற்றதேவா - பிணியோடுபெருமையில்லாய்,
அண்டினேனின்றுநாதா - ஆண்டருளபயமின்றே.

4. ஒப்பிலாப்பொருளேவல்ல - ஒருவனே வுருவிலானே,
தப்பிலாமுதலேஞானத் - தாதையேபயின்றேற்ற,

துப்புள்ளவருளேகாளும் - துணையிலாவமாதியோனே,
அப்புசூழ்புவியிலெம்மை - ஆண்டருளபயமின்றே.

5. எதுயாம்சொல்வோம்பாரீர் - ஏழையாம் விளைத்தசெய்கை,
ஒதினால்பெருகுமையோ - உரைக்குமுன்னறியும் வல்லாயப்,
பாதகன்றுயரைத்தீர்க்கப் - பார்தனிலுன்னையன்றி,
ஆத்மைக்காணேன்மூதே - ஆண்டருளபயமின்றே.

6. பிறந்தநாள் முதலாயுன்றன் - பெருமையையறியாகின்றம்,
உறம்பெருமர்ச்சாதி - புருக்களை நணுகியென்றன்.
மறமறுத்தாளு மென்று - மௌலினேன் மடையர்போல,
அறந்திகள்நாதாவேதா - ஆண்டருளபயமின்றே.

7. சரணமேயொத்துநின்னைக் - கனவிலுந்துதிக்காப்பாவி,
மரணமுமேலானதையோ! திருமனுவாகி நின்றம்,
பிரணமேவருமுன்சற்று - மதித்திடுஞ் செயல்கட்கெல்லாம்,
அரணமாய்நின்றேயெம்மை ஆண்டருளபயமின்றே.

8. பொய்யொடுகாமஞ்சூது - பொருந்தியவயனுதியோர்,
உய்வழி யவர்களென்றே - புறப்பெலாங் கோலமிட்டேன்,
செய்வழியறியாமூடன் - செய்பெரும் பிழைகள் போக்கி,
அய்வழிதன்னிலுய்ய - ஆண்டருளபயமின்றே.

9. கன்னிலின் சுவையைவிட்டு - கைப்புறுவேம்பைநண்ணும்,
அன்னவராயநும்மின் - அருளின்பம் விட்டுப்பாரில்,
துன்னினேனையோ! பாவி, துகளிலாப்பொருளே! நீதி,
அன்னலே! முதலே! யெம்மை - ஆண்டருள பயமின்றே.

10. பஞ்சமாபாதகத்தைப் - பகர்ந்துணராதமூடன்,
வஞ்சகங்கோபங்கர்வம் - வளவாகக்கொண்டசேடன்,
தஞ்சமோடஞ்சாப்பேயன் - தாஸரைமதியாக்கேடன்,
அஞ்சலாயடைக்தேன்பாரீர் - ஆண்டருளபயமின்றே.

## Morning Prayer.

O Merciful Father, whose benevolent providence has protected me during the defenceless hours of sleep, accept my morning tribute of prayer and praise. I thank thee that thy loving-kindness has enabled me to enter upon the duties of another day with renewed energies and spirits. All things proclaim thy glorious providence, and thine infinite goodness unto us. Before I go forth to the labours and enjoyments of the day, I would place my whole trust in thy guidance, and consecrate the energies of my body and mind to thee. Strengthen and prepare me for the trials which await me this day. May thy counsel regulate my mind, may thy love warm my heart, and may thy sacred presence go with me as the light in my paths. Curb each impure desire, restrain each worldly craving, and sanctify all my aspirations and feelings by leading them to thee. Make me prompt and faithful in the discharge of my various duties, and in all my intercourses with the world keep my conscience void of uncleanness. Grant that temptations may not shake my fidelity to thee; grant that amidst all the vicissitudes of life I may cleave to thee firmly. Teach me to remember that to attain thee is the sole destiny of life, and help me to spend the precious hours of this day and all days accordingly. Do thou, O Everlasting Father and Friend, enable me to grow continually in purity and faith that each day may find me nearer to thee.

## Evening Prayer.

I approach thee, O Lord my God, with humble thanksgivings for the manifold mercies which thou hast showered on me this day. Each joy that I have experienced, each desire that has been gratified, each breath I have inhaled, speaks of thy goodness and calls forth my gratitude. Thy fatherly care has been with me all day, and protected my body and mind. I praise thee for the opportunities and means of good, which thou hast given me—for each holy thought and aspiration thou hast enabled me to indulge, each virtuous deed thou hast enabled me to perform.

Thou knowest, O thou Omniscient God, what sins I have committed this day: thou knowest how far I have fallen short in that strict fidelity to thy law, which thou dost require from us. With deep penitence now I implore thy mercy. Chasten and purify my soul by inflicting due retribution, and arm me with resolution not to fall in to my sins again. Without thine invigorating spirit, we cannot subdue the temptations which assail us. Fill me therefore, Gracious Lord, with strength and constancy and faith, and help me to turn away from all that is evil and impure. May every day of my life be spend according to thy will Permit me now, O Lord, to retire to my bed with a heart full of trust in thee, and grant that if I live to rise from this sleep I may consecrate my renewed energies to thee. But if this night be my last night on earth, and my waking be in the regions of eternity, may I be carried on the wings of thy mercy to the blessed mansions of purity and joy everlasting.

## Congregational Prayer.

We thank thee, O Beneficient God, that thou hast gathered us again in this sacred place of worship to glorify and adore thee. The blessed hour to which we were earnestly looking forward amid the anxieties and troubles of the week has now arrived. Permit us to approach thee, and prepare our hearts that we may feel thy sacred presence. O thou light and Love, thou art everywhere ; thou art before our eyes in all the objects we behold, thou dwellest in the inmost recesses of the heart. Everywhere is thy benignant face, and thy loving arms are around us all. Help us so to consecrate our souls in thy all-pervading spirit, so to feel thy holiness and purity that each corrupt desire, each wordly craving may perish, and all the sentiments and feelings of the soul; may be brought at thy feet. May not the pleasures which we now enjoy in thy company be transitory, may they sweeten our whole lives and continue to endear thee to us everlastingly. Vouchsafe to keep us always under the shadow of thy protection and guide our steps in the thorny paths of the world. Amidst the woes and sufferings of the world be thou our joy ; amidst its darkness be thou our light ; amidst its temptations and persecutions be thou our shield and armour. Promote amongst us good-will and affection, sanctify our dealings with each other, and bind us into a holy brotherhood. May we aid each other in doing and loving that which is good in thy sight. Teach us, O Lord, to spend all our days

171315



in thy service, and aspire to be partakers of the rich blessings and lasting joys of the next world. Be with us always, thou Affectionate Father, and enable us to grow steadily in thylove. Bring all men under the protection of true faith. May thy dear name be chanted by every lip and mayst thou find a temple in every breast. And unto thee we ascribe everlasting glory and praise.

Om! Santi! Santi!! Santi!!! Hari!! Om!!!

---

## DIRECTIONS FOR SPENDING THE DAY.

(1) Being the day with God. (2) Be conscientious and diligent in the business of the day. (3) Be moderate and innocent in the recreations of the day. (4) Carefully remark, and wisely improve, all providential dispensations. (5) Guard against the temptations of the day. (6) Govern your thoughts when alone. (7) Guard your tongue well in company. (8) In everything depend on the assisting grace of God. Whatever be the work in hand, whether sacred or civil, whether temple work, domestic work, public work, or closet work, seek divine assistance. (9) Close the day with self-examination and prayer.

இப்புத்தகத்தின் முதற்பாகமாகிய பிரம்மலக்ஷணம்,
பிரபஞ்சலக்ஷணம், ஆத்மலக்ஷணம், பாவலக்ஷணம்,
பக்திலக்ஷணம், பிரார்த்தனை லக்ஷணம்,
ஆறுகாண்டங்கள் முற்றிற்று,

---

☞ இனி பதிப்பிக்கும் இரண்டாம்பாக புத்தகத்தில் யோககாண்டம், ஞானகாண்டம், பிராயஸ் சித்தகாண்டம், ஜாதிகாண்டம், ஆசிரமகாண்டம், விவாஹாதிகாண்டங்கள் வெளியாகும்.

6A
1-30

# கோயம்புத்தூர்
## கலாநிதி அச்சாபீசில் விலைக்கு கிடைக்கும்
## புஸ்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| இந்து பைபில் என்னும் ஆரியர் சத்தியவேதம் இரண்டாம் பதிப்பு நல்ல கடிதம் நல்ல துணி பயிண்டு விலை ரூபாய் ... ... ... | 2 | 0 | 0 |
| ஷை இரண்டாம் பாகம் ... ... ... | 1 | 12 | 0 |
| ஆஸ்தீகமதசித்தாந்த மென்னும் மதவிருக்ஷமும். இரண்டாம் பதிப்பு. [illegible] கில்ட் பயிண்டு | 2 | 0 | 0 |
| பகவத்கீதையின் தத்துவார்த்தம் ... ... | 0 | 4 | 0 |
| பலிஜவாரி புராணம் இரண்டாம் பதிப்பு முழு கலிகா துணி பயிண்டு புத்தகம் ... ... | 2 | 8 | 0 |
| மேற்படி சாதா அரை பயிண்டு புத்தகம் ... | 2 | 0 | 0 |
| ஷை பலிஜவாரி புராண சங்கிரகம் ... ... | 0 | 12 | 0 |
| ஷை தெலுங்கு பாஷையில் ... ... | 1 | 0 | 0 |
| காசியாத்திரை (அச்சில் இருக்கிறது.) | | | |
| பிருந்தாவன மஹத்துவம் ... ... ... | 0 | 6 | 0 |
| விவசாயநூல் முதல் பாகம் ... ... ... | 0 | 10 | 0 |
| விவசாயநூல் இரண்டாம் பாகம் ... ... | 0 | 12 | 0 |
| ஷை இரசாயனம் ... ... ... | 0 | 6 | 0 |
| பிரம்மசமாஜ சரித்திரம் ... ... ... | 0 | 8 | 0 |
| பிரம்மசமாஜ சித்தாந்தம் ... ... ... | 1 | 8 | 0 |
| ஸ்ரீ ரங்கமகத்துவம் ... ... ... | 0 | 8 | 0 |
| ஷை படம் ... ... ... ... | 0 | 4 | 0 |

இப்படிக்கு,
சே. ப. நரசிம்மலு நாயுடு.